உ

ப்ரமபதி துணை.

பஞ்சலக்ஷணத்

# திருமுக விலாசம்.

சிவகெங்கை சமஸ்தானம்
மகாகனம் பொருந்திய மகா-ா-ா-ஸ்ரீ
ஸ்ரீமது முத்து விஜய ரெகுநாத கெவுரி வல்லவ
துரைசிங்க தேவ மகாராஜா அவர்கள் பேரில்
ஷை சமஸ்தான வித்வான் பிரமணார் மிராசுக்கணக்கு
**வில்லியப்ப பிள்ளை யவர்களால்**
இயற்றியதை

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்,
எஸ் முத்தையபிள்ளையவர்கள் விருப்பத்தின்படி

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்,

இ. ராம.

**குருசாமிக்கோனார்**

அவர்களாற் றமது

மதுரை வடக்குமாசிவீதி, குருசாமிக்கோனார் தெரு
ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது.

1932

இதன் விலை (ரிஜிஸ்டர் காபிரைட்) ரூ 1—8—0

23639

இல. பக்கம்.


27. புலவன் சரித்திரம் 63
28. சோதிடன் சரித்திரம் 69
29. வேசியர்களியல்பு 73
30. ஜவுளிக்கடைக்காரன் சரித்திரம் 79
31. தீபாவளிபண்டிகை வருதலைப்பற்றி நாயகிநாயகனிடங்கூறல் 85
32. நாயகன்நாயகியைக் கோபித்தல் 87
33. நாயகனுக்குநாயகி ஒருசிறுதேட்டுக்காரி சங்கதிகூறல் 88
34. சிறுதேட்டுக்காரி வைத்திருந்த முதலைநகைசெய்ய யோசித்தல். 89
35. அவள் தட்டானையழைத்துச் சொல்லுதல் "
36. தன்புருஷன் தட்டார்கள்மோசக்காரரென்று முந்தி சொல்லியிருப்பதாய்த் தட்டானிடஞ்சொல்லுதல் "
37. தட்டானுக்குத் தன் தகப்பன் போதித்த புத்தியும் அவன் தகப்பன் முன் தங்கக்குடங் கவர்ந்த சங்கதியுங் கூறுதல். 90
38. தட்டாருக்குஞ் செட்டிகளுக்குமுள்ள கட்டுப்பாடு கூறல் 94
39. இன்னபேர்கள் சொத்தில் இவ்வளவுபாக மெடுக்கலாமென்பது 96
40. பர்ராவைத்திருந்த சேவகரையேமாத்தித் தங்கத்தை விழுங்குதல் 97
41. தட்டார்களில் மூவர்கள்நல்லநாணயமுள்ளவர் என்பது 98
42. தட்டான் சிறுதேட்டுக்காரிக்குத் தான் சத்தியமுள்ளவனென்றுஞ் சீக்கிரத்தில் நகை முடித்துக் கொடுப்பதாயும் உறுதிமொழி கூறல் 99
43. சிறுதேட்டுக்காரி தன்கையிலிருந்த ரொக்கத்தையுந் தான் பூண்டிருந்த நகையையுந் தட்டானிடங் கொடுத்தல் 101
44. தட்டானந்தப்பொருளைத் தன்பெண்சாதி பிள்ளைகளுக்குந் தனக்கும் சொந்தவுபயோகப் படுத்தல். "
45. தட்டான்தாயார் தன்மகனிடத்தில் சலிகைபேசல் "
46. தட்டான்தாயார் தன்மருமகள்பேரில் சாடிசொல்லல் 103
47. மாமிக்கும், மருமகளுக்குஞ் சண்டை 104
48. கிழவி மருமகளைக்கீழேதள்ளிக் குதிரையேறுதல் 105
49. தட்டான் தன் தாயாரைக் கோபித்தல் "

| நிர். | | பக்கம். |
|---|---|---|
| 50. | நகைக்காரி தட்டானை துபர்த்துகேட்குதல் | 106 |
| 51. | தட்டான் ஊரைவிட்டோடுதல் | 108 |
| 52. | நகைக்காரி புலம்பியழுதல் | " |
| 53. | நாயகன்நாயகிக்கு லேவாதேவி விஷயங்கூறல் | 111 |
| 54. | குடியானவர்களுக்கு கடன் கொடுத்தல் | " |
| 55. | பாளையப்பட்டு ஜமீந்தார்களுக்கு கடன்கொடுத்தல் | 112 |
| 56. | மதாருசிக்கந்தரால் வேறெபத்திரம் எழுதப்படுதல் | 114 |
| 57. | ஜமீந்தார் பேரில் வழக்கிட்டுத்தீர்ப்பாக்குதல் | " |
| 58. | ஒருமுதலாளியை யொருவன் எத்திக்கடன்வாங்கல் | 115 |
| 59. | முதலாளியைத் தூஷித்துத்திட்டுதல் | 116 |
| 60. | முதலாளி மனம்வருந்துதல் | 118 |
| 61. | முதலாளி தெய்வபிரார்த்தனை பண்ணுதல் | 119 |
| 62. | முதலாளிகோர்ட்டில் வழக்கிடுதல் | " |
| 63. | பிரதிவாதி சாட்சியேற்படுத்தல் | 120 |
| 64. | சாட்சிகளுக்குக் குலதெய்வ சங்கதிகூறல் | 121 |
| 65. | சாட்சிகளிலொருவன் கூடாதெனல் | 122 |
| 66. | மறுத்துஞ் சம்மதித்தல் | 123 |
| 67. | கோர்ட்டாரவர்கள் தீர்மானம் | " |
| 68. | தெண்டனைபெற்ற சாட்சிகள் வருந்தல் | 124 |
| 69. | பிரதிவாதி சொத்துக்களை மறைத்தல் | 126 |
| 70. | வாதியின் சங்கதி | 127 |
| 71. | வாதிவாரண்டெழுப்பல் | " |
| 72. | பிரதிவாதி சேவகனை உறவுகொண்டாடல் | " |
| 73. | சேவகனைவீட்டுக்கழைத்து வருதல் | 129 |
| 74. | மனைவியிடத்திற் சொல்லுதல் | 130 |
| 75. | பலகாரவர்க்கங் கூறுதல் | " |
| 76. | விருந்துவளப்பங் கூறுதல் | 131 |
| 77. | பிரதிவாதிசேவகனுக்குத் தப்பியோடுதல் | 133 |
| 78. | சேவகன் மனம்வருந்தல் | " |
| 79 | முதலாளிகள் ஒப்பந்தம்செய்தல் | 135 |
| 80. | மகாநாட்டார் சங்கங்கூடுதல் | 136 |
| 81. | சோமசுந்தரக்கடவுளிடம் முறையிடு | " |
| 82. | சோமசுந்தரக்கடவுள் திருவாய்மலர்தல் | 138 |

| நிர். | | பக்கம். |
|---|---|---|
| 83. | சோமசுந்தரக்கடவுள் தமதுசரித்திரங்கூறல் | 140 |
| 84. | மகாவிஷ்ணுவின் சரித்திரங்கூறல் | 143 |
| 85. | பிர்மாவின் சரித்திரங்கூறல் | 145 |
| 86. | குமரவேல் சரித்திரங்கூறல் | 146 |
| 87. | விநாயகர் சரித்திரங்கூறல் | 147 |
| 88. | சிவபெருமான் பாட்டுடைத்தலைவரை யறிவித்தல் | 148 |
| 89. | சிவபெருமான் திருமுகங்கொடுத்தல் | 150 |
| 90 | திருமுகம்பெற்றுப் பிரபுவின் சமுகமேகுதல் | " |
| 91. | சிவகங்கை நகரச்சிறப்பு | " |
| 92. | அரண்மனைச்சிறப்பு | 151 |
| 93. | பிரபுவின்கொலுச்சிறப்பு | 153 |
| 94. | மகாநாட்டார் திருமுகத்தைக்கொடுத்தல் | 157 |
| 95 | நாட்டார்களுக்கு வெகுமதிசெய்தல் | 159 |
| 96. | வித்வானுக்குச் சன்மானஞ்செய்தல். | 159 |
| 97. | நாட்டார்கள் தங்களூர்சேர்ந்து வாழ்தல் | 161 |
| 98. | மழைவருஷித்துப் பஞ்சம்நீங்குதல் | 162 |
| 99. | செல்வம்பெற்று வாழ்தல் | 163 |
| 100 | வாழி. | 164 |


திருமுகவிலாச அட்டவணை

முற்றிற்று.

உ

கணபதி துணை.

# சிறப்புப்பாயிரம்.

## சாத்துக்கவிகள்.

இராமநாதபுரஞ்சமஸ்தான வித்துவான் துவாத்ரிம்
சதாவதானி மகா-௱-௱-ஸ்ரீ,

1888

**சரவணப்பெருமாட் கவிராயரவர்க ளியற்றிய**
அறுசீர்க் கழில் நெடி லாசிரியவிருத்தம்.

திருவிருந்தைச் சுவரியமீந் தருள்குளந்தை மேவுதுரைச்
சிங்க மீதில்
உருவிருந்தைப் பொருவுமிராக் கதர்குலத்தைத் தடிந்தமரர்க்
குறுக ணீத்தோன்
மருவிருந்தைப் புயனருளாற் திருமுக விலாசமணி
மாலை வேய்ந்தான்
வருவிருந்தைக் கனிந்தியற்றுங் குலநலத்தான் வில்லியப்ப
மாவ லோனே.

வேம்பத்தூர் மகா-௱-௱-ஸ்ரீ, பிச்சுவய்யரென்னும்
**முத்துவெங்கிட சுப்பய்ய ரவர்களியற்றிய**
வெண்பா.

சீராருந் தெய்வத் திருமுகவி லாசமதை
யோராரு மால்துரைச்சிங் கேந்திரன்மேற்—காராள
வில்லியப்பன் சொன்ன விதம்போலார் சொல்வரவன்
றல்லியப்ப னேதவஞ்செய் தார்.

சிவகங்கைமஹாராஜா ஹைஸ்கூல் தமிழ்பண்டிதர் மகா-௱-௱-ஸ்ரீ
**தெய்வசிகாமணி அய்யரவர்க ளியற்றிய**
அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீர்த்திநிகழ் சிவகங்கைப் பதிப்புரக்குந் துரைச்சிங்கச்
செவ்வேள் மீதிற்
பார்த்திபர்க ளிதுவியப்பென் றேதவுல கத்தினியல்
புலவுங் காட்டி

யார்த்திடுபா சரமெனப்பே ரார்ந்தகவி வெண்பாவை
யருள் வெண்பாவை
பூர்த்தியுற வளர்நாவா னமிர்தகவி வில்லியப்பன்
புகன்றுன் மாதோ.

மாஞகுடி விஸ்வக்ஞ மகா-௱-௱-ஸ்ரீ
மு. முத்துகிருஷ்ண உபாத்தியாயரவர்கள்
இயற்றியது.

மதியனந்தம் முகமளகங் களமடவார் மடலெழுதும்
வடிவ னென்னுர்
பதியனந்தங் கவர்திறலான் துரைச்சிங்க பதிமீது
பலரும் பார்த்துக்
கதியனந்தந் திடுமிதுநன் னூலென்ருேர்ந் திடவுரைத்தான்
கழனி தோறும்
வதியனந்தண் கமலமுறும் பிரமனகர் வில்லியப்ப
வள்ளல் மாதோ

கோட்டாம்பட்டி மகா-௱-௱-ஸ்ரீ
எம். கருப்பையா பாவலரவர்க ளியற்றியது.

சிலைவில்லி யப்படர்செஞ் சடிலனடிப் பத்திமனச்
செறிவி லென்று
மூலைவில்லி யப்பரக்கண் ணூர்மதனன் மருவலர்க
ளுளமுந் தேங்க
மலைவில்லி யப்பணமர் குழக்தைநகர்த் துரைச்சிங்க
மன்னன் மீது
கலைவில்லி யப்பமுயில் சொற்றிரு முகவிலாசங்
கண்டு தானே

பிரமனூர் மகாஜனம்
மகா-௱-௱-ஸ்ரீ வெங்கிட்டரமண அய்யரவர்கள் குமாரர்
வெங்கிடபதி அய்யரவர்க ளியற்றிய
கலித்துறை.

காவிற்சிறந்தன கற்பகக் காநலங் காட்டுமெழிற்
பூவிற்சிறந்தன செந்தா மரைகதி பூண்டெழுந்த
மாவிற்சிறந்தன வுச்சைச் சிரவ முகித்தலத்திற்
பாவிற்சிறந்தன வில்லியப்பன் றிருப் பாசுரமே.

பிரமனூர் மகா-ா-ா-ஸ்ரீ. பா. குமாரசாமித[illegible]வரவர்கள் குமாரர்

**மீனாக்ஷி சுந்தரத்தேவரவர்களியற்றிய**

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

மருமுகப்பார்க் குறுடிணம்போற் புகழ்மணஞ்சேர் துரைச்சிங்கம்
வரைத்தோண் மீது
திருமுகப்பா வெனுந்தெரிய னன்கணிந்தான் றென்பிரமா
புரியிற் சேராய்
வருமுகப்பா ரியனய்யம் பெருமாட்டேகோர் மாமகவாய்
வந்தே யொண்மை
தருமுகப்பாற் குணசீலன் முத்தமிழ்தேர் வில்லியப்ப
தமிழ்ச்சிங் கேறே

---

இப்பிரபந்த வித்துவானவர்கள் கனிஷ்ட சகோதரர்

**தெய்வசிகாமணிப்பிள்ளை யவர்க ளியற்றியது.**

நீர்பூத்த சடிலர்திரு வுளமகிழ்ந்து சிவகங்கை
நிருபற் கீந்த
சீர்பூத்த திருமுகப்பா சுரமெனவோர் பனுவலையுட்
டெளிதி னுய்த்து
பார்பூத்த முடியரசர் கவியரசர் மனங்களிக்கப்
பகர லுற்றான்
தார்பூத்த குவளைமணி மார்பன்வில்லி யப்பனெங்கள்
தமிழ்வல் லோனே

---

மேலூர்த்தாலூகா சொக்கம்பட்டி ஸ்கூல்மாஸ்டர் மகா-ா-ா-ஸ்ரீ

**மா. கந்தசாமி பிள்ளையவர்க ளியற்றியது.**

திருமதுரைப் பரமனரு டிருமுகவி லாசமெனுஞ் சிறந்த நூலை
யருமதுரை யரிவையர்வேள் வளம்பெருகுங் குழந்தைநகரரசு செய்யுந்
தருமதுரைச் சிங்கரா திபதிமிக மனமகிழச் சாற்றி னானல்
மருமதுரைத் தொடைமருமன் பிரமனூர்வில்லியப்ப வலவன்மாதோ

---

**மதுரை, மகா-ா-ா-ஸ்ரீ நீ. இராமலிங்கம்பிள்ளை**

அவர்களியற்றியது.

உலவியவி காரியிற்றை மதியிருபத் தாதிரவி
னுலக மெல்லாம்

நிலைபெயர வெருவி யரணையிறு கப்பிடித்தி
நிகழ்வென னென்றாள்
மலைமகளே வில்லியப்பன் திருமுகவி லாசமதை
வழுத்தச் சேடன்
தலையசைத்தா னுலகமதிர்ந் தனதளரே லெனப்பரமன்
சாற்றி னானே

கண்டிப்பட்டி மகா-ள-ள-ஸ்ரீ

## மு. முத்துராக்குசேர்வைகாரரவர்க ளிபற்றியது.

செந்திருவாழ் சிவகங்கைப் பதியரசா ளுடையணவேள்
சிங்க மீன்ற
மைந்தனுயர் துரைச்சிங்க மகராஜன் மாந்தர்களின்
வறுமை மாந்த
வைந்துமுகன் றிருமுகத்திற் களித்ததனை யரியகவி
வெண்பாப் பாவாற்
சுந்தரஞ்சேர் வில்லியப்ப சுகுணனமு திரதமெனச்
சொற்றான் மாதோ

இப்பிரபந்த மியற்றிய வித்துவான்
வில்லியப்பபிள்ளை அவர்கள் குமாரன்

## காசிவிஸ்வநாத பிள்ளை அவர்களியற்றிய

வெண்பா.

திருமுக விலாசந் திகழ்துரைச் சிங்கேந்திரன்
திருமுக விலாசஞ் சிறப்பா—யுரைமலர்ந்தான்
அப்பணியுஞ் செஞ்சடிலர்க் கன்பனய மேவுவில்லி
யப்பனெனு மென்னப்ப னும்.

சாத்துக்கவிகள் முற்றும்.

க ள. 9702
தேவ

உ

கணபதிதுணை.

உலக ரகசிய வெளிப்படை யென்னும்

# பஞ்சலட்சணத்

# திருமுகவிலாசம்.

### விநாயகர் துதி.

வெண்பா.

பொருள்மருவு செல்வப் புகழ்துரைச் சிங்கேந்த்ரன்
திருமுக விலாசமதைச் செப்பக்—கருணைதரு
மானத்தா னத்தான் வழிவார்க் தொழுகியமுத்
தானத்தா னத்தான் சரண்.

### சிவபெருமான் கொலுச்சிறப்பு.

பூமேவுநான்முகனும் பொங்குதிருப்பாற்கடலின்
மாமேவுமாலும் வணங்கிநிற்பக் காமேவு 1
தேவேந்த்ரசங்கமொடு சித்தர்முனிவோரியக்கர்
பூவேந்தர்சூழ்ந்து புடைநெருங்க மாவேந்து 2
பார்பூத்தபச்சைப் பசுங்கிளியோர்பாகமுற
நீர்பூத்தவேணி நிலவெறிப்பக் கார்பூத்த 3
கண்டமுரந்தோள் கரந்தாள்சிரமுழுதும்
பண்டையரவா பரணமின்ன வுண்டிறந்த 4
மால்சுதர்களாற்பலகால் வாய்த்தசிரமாலைகளும்
சாலெருக்கார்மாலைகளுந் தானலங்க நூலுணர்ந்த 5
நற்றவத்தோரேவுகய நன்குரியேகாசமுட
னுற்றபுவித்தோ லுடையிலங்கக் கொற்றவட 6
லேரம்பன்றுரையயி லேந்துகரன்வீரனென்னு
மாரியகுமார ரருகுநிற்ப மாரசமாய்த் 7
தும்புருவுநாரதருஞ் சொன்னயங்கள்பாராட்டித்
தம்புருவைமீட்டியிசை சாதிக்கப் பம்புகன 8

தெய்வரம்பையூர்வசிதி லோத்தமைமின்னார்களிரு
கைவரிசை காட்டிநடங் காட்ட மொய்யமரர் 9

துந்துமிகளார்ப்பச் சுரிமுகடமானவிய
முந்துகடல்போ லொலிகிளர்ப்ப முந்துபுக 10

ழோங்குநிதியி னுயர்ந்ததனதனெனும்
பாங்கனருகுற்றுப் பணிபுரிய வாங்குசப்த 11

மாதவருமெண்டிசைக்கு வாய்ந்தகனபாலர்களு
மோதருமேகாதச வுருத்திரர்களும் பூதகண 12

நாதர்களுங்கீதர்களு நள்ளியகலாமதியுஞ்
சேதகதுவாதசா தித்தர்களும் மீதலரும் 13

பாதலருஞ்சூழ்ந்து பணியவிடங்கிடையா
தாதரமுற்றேங்கி யரகரசம் போதேவ 14

தேவாநின்செம்பொற் றிருத்தாள்சரணமென்று
நாவாரவாழ்த்தி நலம்பெருகத் தேவாரம் 15

ஆர்ந்தசிவபத்தர்கள்பே ரானந்தம்பூண்டுகளி
கூர்ந்துமிக்ப்பாடிக் குதுகுலிப்பச் சார்ந்தவுள்ளத் 16

தன்குலவுகுண்டோ தரன்பானுகம்பன்முத
லன்புறுபூதப்படைக ளார்ப்பரிக்கத் தென்குளந்தை 17

யூர்க்காதிபன்றுரைச்சிங் கேந்த்ரனுளநேர்ந்துவிட்ட
மாற்கானபண்ணுறுத்தி வாவிசிற்பத் தீர்க்கமுட 18

னந்திபிரான்செங்கையினி னல்வேத்திரம்பிடித்துச்
சந்திகண்டுதான்சந் தடிவிலக்க முந்தவிளை 19

யாடலறுபன்னூன் கமைந்துமலர்ச்சோலையெலா
மேடலருங்கூட லெனுந்தலத்தில் நீடவளைந் 20

தட்டகஜந்தாங்க வழகார்விமானமிசை
மட்டுயர்விலாச வனநீழ 21

லிஷ்டவிச

யார்த்தமீதென்ன வமர்ந்துகொலுவிருக்குந்
தீர்த்தனருள்மேவுஞ் செகதீசன் ஆர்த்தவியா 22

ந்ப்பேரிருமுனிவர்க் கன்புற்றிரசிதமன்
றொப்பாணிகாட்டி யருள்புரிந்தோன் ஒப்பருமார்க் 23

கண்டனைமுன் காக்கக் கருத்துற்றடல்விளைத்த
சண்டனையந்நாளுதைத்த தாளினான் விண்டயனோ 24

டாரணமுநாடரியா னன்றெழுந்தவாலால
பாரணன்யாவர்க்கும் பரமபிதா காரமணர் 25

அப்பர்தனைப்பிணித்தங் காழ்கடலிலிட்டகல்லைத்
தெப்பமெனமிதக்கச் செய்தபிரா னெப்பொருட்கு 26

நாதனைகண்டாகார ஞானசுந்தரேசர்செய
லோதவுநம்போல்வா ருரியரோ ஆதிசிவன் 27

## மகடூ முன்னிலை.

வாமவிலோசனத்தை மானுந்திருமுகமாய்
மாமுடிமேலூர்தல் வளைநுதலாய்க் காமரிடச் 28

செங்கையினிலேந்தியதே சேந்தவரிவிழியா
யங்களத்தின் சாய லளகமாய்த் தங்கியவோர் 29

மாதிரம்போல்மின்னு மணிக்கச்சணிந்துசிலைப்
பூதரமீதென்னப் புடைபரந்து வாதிட் 30

டடர்ந்துபடர்ந்திடங்கொண் டண்ணார்ந்தகொங்கைக்
குடந்தாங்குசொர்ணக் கொடிபோ னடர்ந்துமலர்ப் 31

போதார்ந்தநாமகள்போற் பொற்புலவுபாற்கடலின்
சீதாம்புயத்துலவு செல்விபோற் சோதிரத்ன 32

மாலையொளிகாட்ட மணிமேகலையொலிக்கக்
காலணிசிலம்புகள் கலீரென்னக் கோல 33

பயிற்சாயல்பெற்று மனைவாழ்க்கைதங்குங்
குயிற்பேடனைய குலக்கொம்பே பயிர்ப்புணர்ந்த 34

மானேகனியே மடவார்க்கணிகலமே
தேனேமதனகலைத் தீபமே தானே 35

சமைந்துசுழலாலையினிற் சாரார்துநாளுங்
கமழ்ந்திரதமூறுங் கரும்பே யமைந்தமலர் 36

மாதனையன்மாதனையாய் மண்ணுலகோர்பட்டதுன்ப
வேதனைசற்றுன்பால் விளம்பக்கேள் பூதலத்தோர் 37

மன்னோர்மைச்செல்வமுடன் வாழ்ந்திருக்குங்காலமதிற்
பின்னோர்வருடம் பிறந்ததுவு நன்னோர்மை 38

மண்டுநவக்கோள்கணிலை மாறித்திரிந்ததுவுங்
கொண்டல்பொழிமாரிவளங் குன்றினது மிண்டுபஞ்ச 39

மீறித்தலையெடுக்க மேதினியோர்வெம்பசியாற்
சோறுசோறென்றே சுணங்கினதும் பாறிவர்கோ 40

பாலனயனன்பாற் பணியும்பிரான்மதுரைப்
பாலநயனன்பாற் பகர்ந்ததுவுங் கோலமெலாம் 41

பண்ணிவைக்குங்கூத்தன் பரிந்தடியார்மீதுவகைத்
தண்ணளிகொண்டுள்ளத் தயையுற்றுக் கண்யமுடன் 42

மண்ணுலகெலாம்புரக்கு மால்துரைச்சிங்கேந்த்ரனெனு
மண்ணல்சமுகத்துக் கனுப்பினதும் நண்ணுபுவி 43

ராசாதிராசர்பணி ராசகோலாகலனை
ராசபரமேஸ்வர நராதிபனைப் பூசிப்போர் 44

சிந்தாகுலந்தவிர் திருக்கோஷ்டிநாதனிரு
செந்தாமரைச்சரண சேகரனை யிந்திதழிக் 45

கங்கையணிகாளீசர் காரியதுரந்தரனைத்
துங்கனகளங்கச் சுயாதிபனைப் பொங்குபுகழ் 46

மாமண்டலேசனை மகாயோகவானையுயர்
பூமண்டலம்பரவு பூசிதனை மாமேரைச் 47

செண்டாலடித்ததிறற் றென்னவனைத்துன்னுமொலிக்
கண்டாமணிசேர் கழலானைத் தெண்டிரையார் 48

சிந்துமிசையேவுதொட்ட சேரமச்சந்த்ரனைக்கற்
கந்தடுதிண்கோட்டுக் களிற்றானைச் சிந்தைகொடு 49

புண்படுத்தநெஞ்சினனைப் போற்றும்புலையனுக்கோர்
கண்கொடுத்துக்கீர்த்திபெற்ற காரணனை வண்புகழைத் 50

தோய்ந்தவிஜயரகு நாததுரைச்சிங்கமென
வேய்ந்தகௌரிவல்ல வேந்திரனைச் சாந்தமொடு 51

நன்னருறக்கண்டரனார் நல்குந்திருமுகத்தை
மன்னவன்பாலீந்து வழுத்தியது மன்னவனு 52

நல்வரிசையாகநிதி நல்கவதிபாக்யமொடு
செல்வம்பெருகிச் செழித்ததுவும் பல்குநலம் 53

பெற்றுயர்குபேரனைப்போற் பேருலகிற்சீர்பொருந்தி
யுற்றசரிதத்தையுன்பா லோதுவேன் — நற்றலத்தில் 54

## பாட்டுடைத்தலைவன் புகழ்ச்சி.

நேர்மைதருவேதமனு நீதிப்ராகாரநலங்
கூரிங்கிலீஷின் கொடிநாட்டிப் — பார்முழுதும் 55

ஆக்கினாசக்கரத்தா லாளும்விக்டோரிமஹா
ராக்கினியார்மெச்சு நரபாலன் — கோக்கமல 56

மாதுபதிகொண்டமரு மன்முத்துராமலிங்கச்
சேதுபதிகொண்டகுலச் சேர்க்கையினான் — வேதவடி 57

## மலை.

வார்ந்தகலைமகளுக் கன்னையெனப்பொன்னருவி
வார்ந்தொழுகுதென்பொதிகை மால்வரையான் — தேர்ந்ததமிழ்ச் 58

## நதி.

சம்பந்தரேடுறவே தாவவெதிரேற்றியெதிர்
வம்பர்கழுவேற்றும்வையை மாநதியான் — மன்பதைகள் 59

## நாடு.

வாட்டந்தவிர்த்துதவு மண்மகளுக்கொண்மைதிகழ்
நாட்டமெனுந்தென்பாண்டி நாட்டினான் — சேட்டுடைத்தாற் 60

## நகர்.

கும்பிட்டுவானுலகுங் கோலவளகைப்பதியுங்
கும்பிட்டுவாழ்த்துகுளந் தாபுரியான் — பப்புசுவைக் 61

## மாலை.

கண்டிணங்குஞ்சொல்லார் கதித்துமதர்த்தவிழி
வண்டினங்கள்மொய்க்குமுல்லை மாலையான் — பண்டும் 62

## குதிரை.

விலையுயர்ந்தபணியணிந்து வெரிநிவந்தபரமுகந்து
சுல்வுபஞ்சகதிமிகுந்து சுழிசிறந்து — மலைவலஞ்செய் 63

ரவிகொடிஞ்சிகதுவுபைம்ப ரிகளைநிந்தைதரவிகழ்ந்து
வவிர்சிலம்பினொலிமுழங்க வமரடர்ந்து — பவுரிகொண்டு 64

பாடிருளுங்கவதுசுமந்த பணிபயந்துமிகநடுங்க
முடிபொருந்துககனவண்ட முகடதிர்ந்து இடுடெடென்று 65

வடவையுந்துகடல்கலங்கி மளமளென்றுகொதிகிளம்ப
வடைபர்நெஞ்சுபடபடென்று ளகமலங்க மடலுறுங்கண் 66
மண்டமுற்கொழுந்துகுக்க வஞ்சனைச்சிரந்தகர்த்து
மிண்டடற்ப்ரசண்டவுக்ர வெண்பரியான் தண்டமென 67

## யானை.

வாய்ந்தவடிக்கைகனத்து வாங்கிமடிக்கினுமண்
டோய்ந்துவருகின்றதுதிக் கையவா யாய்ந்தமதி 68
தன்னைவகிர்ந்துட்செறித்த தன்மையெனவொன்னலர்கள்
மன்னரணைத்தாக்கு மருப்பினவாய்ச் செங்கிறத்த 69
வாயினவாய்ப்புன்னை மலர்போல்விழியினவாய்
தூயுரத்தில்மூன்று சுழியினவாய் வாயுவுருத் 70
தீண்டுசெவியினவா யேந்தனகர்மத்தகமொத்
தியாண்டுமுடல்திண்ணென் றெழிலுடைத்தாய் நீண்டவுரற் 71
றுள்வலிகற்றூணெனலாய்த் தன்னுயரமேழ்முழமா
யாளரிகண்ணுற்றிடனு மஞ்சிலவாய் வாள்மதர்த்து 72
மேயபுகர்முகத்தில் வீசியபடாம்பொதிந்து
வாயவிருகோட்டில் மகரிகையோ டாயதங்கக் 73
கிம்புரியாத்தொன்னூர் கிளருமுதிரத்துளிபோற்
பம்பியசெந்தூரநுதற் பட்டமணிக் தம்பூவல் 74
மேவுசெழும்பட்டால் விளங்குபுறம்போர்த்துத்
தாவுறுதிண்காலின் றளைநெகிழ்த்து மாவீர 75
வெண்டயமுஞ்சித்ர வியன்பொற்கொலுசணிந்து
மண்டுமிதானிக்கண்டா மணிபூட்டிக் கண்டமட்டு 76
நெய்க்கவளமூட்டி நெடியவிருப்புலக்கை
கைக்கொடுத்துவெய்ய கடமூட்டி மிக்கசினந் 77
தூண்டிவிடுத்தேவத் தொடருநிழலைச்சுளித்துக்
கீண்டனல்கட்காலக் கிரிபாய்ந்து மூண்டவடி 78

வாள்சிலைக்கைவேல்பிடித்த வாகைவெற்றியாளரைத்த
னீள்துதிக்கையாலிழுத்து நேரடர்த்தி மாள்சிரத்தை 79

வானிலேற்றியேசுழற்றி வாரியுப்புநீர்கலக்கி
நீனிறப்பயோதரத்தி னீரருத்தி மேன்மையுற்ற 80

திக்கயத்தினுக்குவெட்க முற்றிடச்சினத்தசத்த
மைக்கனக்குராற்கடுப்ப வற்புறுத்தி யக்ரமித்த 81

பற்றலர்க்கிருக்கையுற்ற பட்டணத்தைமுற்றுயர்த்த
சுற்றினைத்தகர்த்தறத் துகட்படுத்தி வெற்றிபெற்று 82

நாடொறுங்குமேகலங்க நாகர்கெஞ்சவேதிரும்பி
நீடரங்கவீதிசென்று நேருகந்து கூடமென்ற 83

தந்தாவளத்திற் றருபாகர்கைக்கடங்கி
வந்தீருநீதந்தா வளத்தினன் முந்திமந்தன் 84

## கொடி.

னெல்கைவிதுவாமென் றிமயமலைமேனாட்டிப்
பல்குங்கருடப் பதாகையினன் சொல்லரிய 85

## முரசு.

வெற்றிகொடைமன்றலென மேவுபெயர்பெற்றுநித
முற்றமிசையார்க்குமணி மும்முரசான் சற்றேனும் 86

## ஆணை.

துற்குணத்தைச்சிந்தையினிற் சொப்பனத்துற்றோர்களையு
மக்கணந்துண்டித்துவிடு மாணையான் சக்கரத்திற் 87

றோன்றுமனுக்கூழனலச் சோகமுறுதோம்புகிழல்
கான்றுசக்ரவட்டக் கவிகையான் ஆன்ற 88

கடல்போற்கருணையினன் காமுற்றுமாதர்
மடல்தீட்டுமோக மதவே ளடல்வீர 89

சிங்கேறனையான் செகமண்டலேசர்பணி
பங்கேருகநேர் பதத்தினன் அங்கதையு 90

மொய்ம்பிற்றகர்த்துவிடும் முப்பமதத்தமால்யானைத்
தும்பிக்கைபோலுந் தொடையினன் செம்புலத்தி 91

லொட்டலர்தன்னுயிரை யுண்டிடுகட்டாரிமணி
யிட்டமுத்திக்கட்டு மிடையினன் நிஷ்டைபுரி 92

நன்னினைவுதெய்வபத்தி நற்றவமவாவறுத்தல்
மன்னியறஞ்சாலு மலத்தினன் சொன்னயஞ்சே 93

ரற்புதகவீசுரர வாவடங்கச்சொர்னமள்ளிக்
கற்பகத்தைப்போலுதவுங் கையினன் பொற்புயர்ந்த 94

மேருவெனத்தேர்ந்து வியந்தஷ்டலெட்சுமியும்
பூரித்துலாவும் புயத்தினன் சீருலவு 95

தாமரைத்தண் போதமிர்தந் தானொழுகல்போன்வசன
மாமதுரத்தேன்பொழியும் வாயினன் பூமலிந்த 96

செம்பவளக்கிண்ணமதிற் சேர்ந்திலகுநித்திலஃபோற்
பம்பிநிலாமேவுதந்த பந்தியினன் அம்புலிமீ 97

தேறுங்களங்கநிக ரென்னத்திரண்டுநல
மீறியமைக்கோடனைய மீசையான் வீறி 98

யருணன்வரவுகண்ட வம்போருகம்போற்
கருணைகுடியிருக்குங் கண்ணன் றருணமதி 99

லஞ்சலெனவந்துதவு மஞ்செழுத்தைச்சந்ததமும்
நெஞ்சில்வைத்துநீறணியு நெற்றியினன் செஞ்சடா 100

னீள்கலைகுன்றாத நிறைபூரணமதியெங்
நாளிருப்பபோலு நகைமுகத்தான் றாள்மலர்ப்பூங் 101

காவடிவாய்ச்சூழ்ந்ததிருக் காணைக்காளீசரிரு
சேவடியைத்தாங்குமணிச் சென்னியான் தேவ 102

சௌமியநாராயணனைச் சந்ததமும்போற்றுஞ்
சௌமியமிகுத்தகுண சாந்தன் கவியுமதி 103

வட்டக்குடைநிழற்கீழ் மன்குளந்தையாதினஞ்
சட்டஞ்செலுத்திவருஞ் சக்ரவர்த்தி சிட்டர்புகழ் 104

சுந்தரகெம்பீர சுகுணனுடையணவேள்
மைந்தனெனவந்துதித்த மார்க்கண்டன் சந்தமணி 105

வாசமுலைமடவார் மையல்கொடுதொடர்ந்துங்
காசையுளமேற்று மதிரூபன் ஈசன்மேற் 106

கொம்பியிரதிபுறங் கூறுதிருவழுட
னம்புவியிற்றோன்று மழுதமதன் வெம்பியபோர் 107

மல்லுக்குவிமனுயர் வாழ்விற்குபேரனுணர்
நல்விற்பனத்தி னனிசேட்டன் சொல்லுக்குச் 108

சத்யவரிச்சந்திரன் றருங்கொடையினிற்குமுணன்
றத்துபரிவீரன் றனுராமன் மொய்த்தமலர்க் 109

கையான்பொருடரவுட் கையான்பகைவரைப்பூ
வையானிலங்கு மதிமுகத்தான் கொய்யுளைமெய்த் 110

தோலானெதிரிகட்குத் தோலானுறுதிவச்ர
மேலானரசருக்கு மேலானோன் காலருந்து 111

வெற்றிப்படையான் மிகுகாற்படையான்வெண்
கொற்றக்குடையான் கொடைக்குடையான் கற்றுணர்மெய்ச் 112

சொல்லான்கடுமையுறச் சொல்லானெவர்களுக்கு
நல்லான்குளந்தை நகர்க்கதிபன் கல்வி 113

மதுரநவரசவசன வனசமுகலளித்தனு
விதுரதுரகதநகுல விறல்விஜய னதுலனய 114

சுகுணகுணகணகவிதரண சுமுகசமுகசிறை
மகுடமுடியரசர்பணி வனசரண னிகழ்விகட 115

களிறுதயவருணதின கரனுறுதிமுழுதுமுணர்
தெளியகுறுமுனியனைய திறனிபுண னிளமைமட 116

வனிதையர்களுருகுமெழில் மதனவசிகரனகில
தனியரசுபுரிசதுர சமரவரி யனகனுறு 117

தொந்தமுணர்ந்து சுயம்புபதந்தொழு
சுந்தரனின்ப சுதந்தர னுய்ந்தமர் 118

செந்திருவுந்தள வுந்திகழ்திண்புய
மந்தரதுங்கன் மணங்கமழ் சந்தன 119

குங்குமமும்புனு கும்பணியும்புனை
யங்கனிலங்கு மலங்கிர்த  னங்கையர் 120

பாரபடீர பயோதரமாவொடு
போர்புரிதீர புயாசல  னேரலர் 121

பூசிதயோக புராதனரரீஜவு
லாசவுதார னராதிப  னேசர்கள் 122

மஞ்சுறும்பதம்பணிந்து மங்களம்புகழ்ந்துநின்று
கொஞ்சவுங்கனிந்துசிந்தை யுங்குளிர்ந்து  மிஞ்சமந்த்ர 123

சங்கமுந்திகழ்ந்திடும்ப்ர சங்கசம்ப்ரமஞ்சிறந்த
துங்கனிங்கிதம்பொருந்து சுந்தரமால்  தங்குகொடிச் 124

செல்மதனன்போலுமெழில் சேருடையணேந்த்ரனருள்
மால்துரைச்சிங்கேந்த்ர மகராஜன்  எல்லையினில் 125

மூலமென்றுகூவுகய முன்வந்திடர்தொலைத்த
மால்துரைச்சிங்கேந்த்ர மகராஜன்  சோலையென 126

மேலுலகவைந்தருவை மேதினியினுட்டிவைத்த
பால்துரைச்சிங்கேந்த்ர மகராஜன்  வேலையெழுங் 127

காலைச்சுடரனையான் கற்பணிந்தபொற்புயவேள்
மால்துரைச்சிங்கேந்த்ர மகராஜன்  மாலுகத்தார் 128

மீனவன்போற்சங்கமிசை மேவிச்சிறந்தகல்வி
மான்துரைச்சிங்கேந்த்ர மகராஜன்  கோன்மைவளர் 129

மேன்மைமகாராணி விறல்கவர்னர்மெச்சுகன
வான்துரைச்சிங்கேந்த்ர மகராஜன்  வான்மரபிற் 130

றாநலங்கொள்தேவர்குழாஞ் சூழ்தருபூலோகமக
வான்துரைச்சிங்கேந்த்ர மகராஜன்  நான்மறைதேர் 131

ஞானபரமேசனடி நாண்மலரைச்சிந்தைபுரி
வான்துரைச்சிங்கேந்த்ர மகராஜன்  நோன்மையொடு 132

சிங்காதனத்திருந்து செங்கோனடாத்திநல
மங்காதகீர்த்தி வளமுடையான்  பொங்குபுயல் 133

மாதங்கடோறு மலிந்துமழைபொழிய
வேதங்கள்வேள்வி விளைவோங்க  மாதரும 134

தானந்தவம்பொறுமை தண்ணளியோடுண்மைகல்வி
மேனலங்கள்யாவு மிகவோங்க வினமுறு 135

வஞ்சங்கொலையொதுங்க மானனையார்கற்புடைமை
நெஞ்சங்கனிந்து நிறையோங்கக் கஞ்சமலர்ப் 136

பூமாதுசெல்வம் பொலிந்துகளிகூரக்
கோமானரசுங் குடியுயர மாமாற 137

னெங்கோன் துரைச்சிங்க வேந்தல்மனுநீதியுடன்
செங்கோலுலகிற் செலுத்துக ளிங்கிலீ 138

## புதுவருடப் பிறப்புக் கொண்டாடுதல்.

ஷாயிரத்தெண்ணூற்றெழுபத் தாறெனவும்பேர்திகழ்நன்
னேயமுள்ளவாண்டு நிகழ்காலை ஆயதமி 139

ழுச்சிதமாநல்ல யுவவருடநீங்கியபின்
லெச்சைகெட்டதாதுலகி லெய்தினவே இச்சகத்தோர் 140

மங்களகல்யாண வருஷோற்சவப்புதுமைப்
பொங்கல்மிகவைத்துப் புனிதர்களாய்த் தங்கள்குல 141

தெய்வம்பராவிச் சிறந்திடுதபோதனர்க
னெய்துசுற்றத்தாரோ டினிதிருந்து துய்யமுத 142

முண்டுகளிப்பா யுகந்துபுதுவருடப்
பண்டிகைகொண்டாடிப் பரிசுபெற்றுத் தொண்டுபுரிந் 143

தில்லறமேநல்லறமென் றின்புற்றதிலிருந்து
செல்வமதிலாழ்ந்திச் செருக்குறுங்கால் நல்வழிநீத் 144

கிரகதோசத்தால்

## மழையின்மை.

தாதியெனுந்தெய்வபத்தி யண்ணுதிகழ்ந்துகொடு
வேதனையுஞ்சூது மிகப்படித்து வேதமதை 145

யோதுமறையோ ரொழுக்கந்தவிர்ந்துதத்தஞ்
சாதிவருணாச்ரமங்கள் தப்பியே. [illegible]குன்றிக் 145

கோரமுனைவாகா மியங்கொடுமையஞ்சாது
பாருள்ளோர்செய்துவரும் பாவத்தால் சீருதவு 147

மாதித்தனேமுதலா யற்புதநவக்ரகங்கள்
வாதித்தொன்றோடொன்று மாறுபட்டே யாதித்தன் 148

தொன்னீர்மையாமழைக்கோட் சுக்ரனைப்பின்னுகவிட்டு
முன்னேறிச்செல்லு முறையாலும் பின்னமுற 149

வெம்புகரும்பாந்தளொடு வெய்யசனியுங்கலந்து
கும்பசம்பந்தமுற்ற கோளாலு மம்புவிக்கு 150

மானல்குரும்பூண்டேழ் வலியுறுப்பெற்றுமெனவும்
பானுமத்ஸதோஷ பலத்தாலுஞ் சூன்முதிர்ந்து 151

விண்ணிற்படர்ந்தொலித்து வீரியகோதண்டமுற்றுக்
கண்ணனைப்போலீண்டிவந்த கார்க்குலங்கள் நண்ணியவெட் 152

டாமவதாரத்தினவ னண்ணலெழில்போன்வெளிறி
மாமழைபெய்யாமல்வெளி வாங்கினவே பூமிசையில் 153

## சீவராசிகள் வருந்தல்.

வர்னம்வழங்காததினல் வாவிதடாகங்களெல்லாம்
கானல்பரந்து கமர்வெடித்தல் மேனோக்கி 154

மைமுகில்கரணீரமது வாட்டமறவேபுனலைப்
பெய்மினென்றுவாயைப் பிளந்ததொக்கு மொய்வனத்தில் 155

பூந்தருக்களோடும் பொலிந்திடுபுற்பூடுகளு
மேந்தல்துரைச்சிங்கமரு ளெய்தார்போற் காந்தலுற்று 156

மண்ணிற்பசைவறந்து மல்குந்தளிர்முதலாய்க்
கண்ணிற்றட்டாமற் கருகினவே திண்மைமதம் 157

பொங்குகளிற்றினங்களும் போந்தபிடியினமு
மங்கதங்கிட்டாம லறமெலிந்து மங்கிவிழுந் 158

தூங்கலாயத்தியாய்த் தோலாய்முழுக்கரியா
யாங்குரியபேர்போலு மாயினவே தீங்குபுரி 159

மாற்றலர்கள்சென்னி மகுடந்தனையிடறிக்
காற்றினிலும்வேகக் கடுப்பினவாய்க் கூற்றடங்கப் 160

பஞ்சகதியாலும்விண்ணிற் பாய்ந்தபரிகளெல்லாம்
பஞ்சகதியாலுமண்ணிற் பாய்ந்தவே கொஞ்சியங்கல் 161

## சீவராசிகள் வருந்தல்.

லானிரைகள்யாவு மயர்ந்துபசிவெதுப்பத்
தீனிரைசிக்காமற் றியங்கியே தானுலர்வா 162

யாவென்றங்காய்ந்தோ ரதற்கிசைத்தநாமம்பூ
லாவென்றங்காப்புற் றலைந்ததே தாவுழுழற் 163

கானலைநீரென்னக் கருதிவிலங்கினங்க
ளீனர்பாலெய்து மிரவலர்போற் றுன்டர்ந்து 164

ஞாலோய்ந்துநாவுலர்ந்தக் கானடைகள்பட்டதுன்பம்
மால்சாய்ந்தவர்க்கும் வழுத்தரிதே மேலேறிப் 165

பாய்ந்துபறக்கும் பறவைக்குலங்கள்விசை
யோய்ந்துசிறகற்றிங் குறுநிலத்தி லேய்ந்துதிரி 166

குக்குடத்தையொப்பக் குருவித்தரையூர்ந்து
சிக்கடத்திற்பட்டவெனத் தேய்ந்தனவே முற்குலத்தோர் 167

வேதமயர்ந்தாரரசர் வேட்டமயர்ந்தார்சிறுவ
ரோதலயர்ந்தா ருழுங்குடிகள் தீதில்விவ 168

சாயமயர்ந்தார்சகல சாதியருமவ்வவரா
லாயதொழிலெல்லா மயர்ந்துவிட்டார் தூயபுக 169

## மழைவேண்டித் தெய்வம் பராவுதல்.

ழுந்தொளியுல்லாவணிக ளுணயர்ந்துகோல்தூக்குந்
தந்தொழிலைச்சற்றுமயர்ந் தாரிலையே இந்திரனு 170

லேவுமுகிலேன்பொழித லில்லையிதுநங்க்ரம
தேவதைகள்சீற்றமெனச் சிந்தித்தே . யாவலுடன் 171

பூசனைநைவேத்யம் புரவியெடுப்புமுத
லாசரணையாட லதுபுரிந்துஞ் . சோசியரை 172

யாசரித்துக்கேட்கவவ ரஞ்சேல்நவக்ரகத்தின்
தோஷமுமின்றேடே துலைந்ததுகாண் காசினிக்கு 173

நாளைமுதல்யோக நடக்குதினியஞ்சாறு
வேளைக்குள்ளாக மிகுந்தமழை கோளமெங்கும் 174

பூர்த்தியுடன்பெய்யுமிது பொய்யாதுபொய்த்திடிலிச்
சாஸ்திரத்தைக்கைதொடோஞ் சத்தியமென் றூர்த்தகணி 175

யோர்ந்தவிவர்சொன்ன வுறுதியினால்வானினையண்
ணூர்ந்துயரப்பார்த்ததுவே நாட்டமாய்ச் சோர்ந்து 176

கடற்கடரைமேகங்கிளம்பல் காற்றடித்துமின்ன
றெடக்குமழைக்குறிக டோன்று தொடுக்கமுற்று 177

நெஞ்சமயர்காலையினி னீள்வான்முகட்டினிலோர்
பஞ்சணையமேகம் பரவியே தொஞ்சு 178

பசையில்லாருள்ளமெனப் பற்றின்றியூழற்
கொசுகுபறந்த குணம்போற் பொசுபொசென்று 179

தூசிபடியாமல்விழுந் தூறல்கண்டுபஞ்சாங்கப்
பூசுரர்கள்சொற்றதும் பொய்யிலைகால் வீசிமழைச் 180

## விதை விதைத்தல்.

சுந்தற்பமாச்சுதினித் தாழ்விலையென்றேநிலத்தில்
முந்தற்பவித்து முழுவதையுஞ் சிந்திவிட 181

மற்றுமொருதூற்றல் வழங்காததால்விதைகள்
முற்றும்பொடிந்து முளைகருகிச் சற்றுவெளி 182

தோன்றுமலாழ்ந்து தொடர்பற்றுரமலிந்த
வான்றுருளம்போ லடங்கினவே யேன்றவிதில் 183

நீண்டபதக்கா னிலத்திற்சிலமுளைத்துக்
கீண்டிமிகச்சற்றே கிளர்ந்தபயிர் வேண்டினவர்க் 184

குய்த்துதவார்செல்வமென வொல்கிச்சிதைந்தூணங்கி
*யத்திறவுகோல்மறுபே ராயினவே கொத்தியமண் 185

மீதில்விதைத்த விதையிருந்தாலிவ்வருடப்
போதையொருவாறுகப் போக்குவமென் றேதமுறச் 186

* திறவுகோல் சாவி.

சானித்தியமுந் தனியாக்கவலைகொண்டு
வானத்தைப்பார்த்து வருந்தினரே பானமுறுந் 187
தண்ணீரில்லாவருத்தத் தாலேஜனங்களெல்லாங்
கண்ணீர்விட்டேங்கிக் கவலையுற்றே யுண்ணீருக் 188
காதாரந்தேடியருப் பார்முறித்துவெட்டிப்
பாதாளமட்டப் பறித்ததிலும் மீதுஜலங் 189
காணார்களாகியதைக் கண்டாலுமப்புனலைத்
தோணாமல்வெப்பஞ் சுவற்றிவிடும் மாணீர் 190
நெடுங்கடலுந்தன்னீர்மை குன்றுந்தடிந்தெழிலி
தானல்காதாகி விடினென் றிடும்பைதவிர் 191
வள்ளுவனாரன் றுரைத்த வான்சிறப்புமுற்றுமவை
யுள்ளதுதானென்றே யுணர்வுற்றோங் கொள்ளுமட்டுஞ் 192

## அகவிலைத்தாழ்வு.

சூழுங்களஞ்சியங்க டொம்பரைகடோறுமுன்னுட்
டாழ்வின்றிவைத்திடுநெற் றூன்யமதைப் பார்தான 193
காலம்வருமென்றுசற்றுங் கண்ணுக்குத்தோன்றாமல்
மாலாஞ்செருக்கின் வலிமையால் ஏலவொரு 194
நேரத்துக்கோர்தினிசாய் நேர்த்தியுளவங்கியென்றுஞ்
சூரத்துக்கண்டையிட்ட சோமனென்றும் யாருமங்கு 195
மூச்சுவிடவொட்டாமல் மும்முரமாய்விற்றுவிற்றுக்
கீச்சென்றதெல்லாங் கிணுக்காகத் தேய்ச்சதனை 196
வீண்விறையமாக்கிவிட மேலோனுதற்கணுற்ற
வாண்மைமதன்றன்னுடலொப் பாயினவே பூணுறுநென் 197
னுடிமிகக்காணரிதாய் நாடாத்தவசமுதற்
கூடியயாவற்றுங் குறைவாகித் தேடவுநிற் 198
பந்தமொருரூபாய்க்குப் பட்டணங்கள்தன்னில்மட்டு
மைந்துபடிநெல்லாச் சகவிலைகள் இந்தவிலை 199
நன்விலையென்றெண்ணி நயந்துபெருங்கூச்சலிட்டு
மென்மேற்ஜனங்கள் மிகநெருங்கிக் கன்மனதாய் 200

மூர்த்தின்றிகையல்லாது மோதுஜனத்தாலிடைந்து
பிந்தினர்க்கில்லாமற் பிணங்கினரே நொந்துசிறு 201

பட்டியிலுஞ்சுற்றுப் படாகையிலுள்ளோர்பணத்தை
வட்டுவத்திற்கட்டி மடியில்வைத்துப் . பெட்டிகளைத் 202

தன்றலைமேற்கொண்டுபுன்செய்த் தானியங்கடாரீரோ
வென்றலைந்துகெஞ்சினவ ரெண்ணிலரே கன்றுடனே 203

மாடாடுகள்கொடுபோய் வாங்குமெனவலியத்
தேடிவிலைகூறித் திரிந்ததிலும் நாடிவிலை 204

கேட்பாரில்லாமற் கிரக்கமுடனூர்புகுந்துஞ்
சகப்பாடிலாமற் றயங்கினரே வார்ப்பான 205

வட்டிலைச்செம்புகுண்டான் வடிதட்டுடன்சருவச்
சட்டிகொட்டுக்கூடை தளவாடம் மட்டில்லாப் 206

பாத்திரங்கள்கொண்டு பஜாரில்விலைகூறி
யாத்திரமுற்றோடி யலைந்தனரால் தாத்திரிய 207

ரில்லங்கடோறு மியன்றமடைப்பள்ளிகளில்
மெல்லக்கவாம்பி மிகப்பூத்துப் பல்சிலம்பி 208

நூலர்ப்படையடர்ந்து நொய்யரணைபல்லிகளுஞ்
சூலார்ந்துமுட்டையிட்டுச் சூழ்கிடக்கு மேலுமில்லா 209

## ஜனங்கள் பஞ்சத்தால் வருந்தல்.

ரானபசிக்காற்று தயலார்மனைச்சோற்றுப்
பானைதிருடிப் பசியாற்றி மேனுதலிற் 210

கண்ணாடிப்பூச்சுங் கனத்தகிருதாவொதுக்கி
விண்ணாணம்பேசினவர் மிச்சமே திண்ணியதன் 211

தக்கவயிற்றைச் சதமென்றுநம்பிமற்றோ
ரெக்கேடுற்றாலுநமக் கென்னவென்றே மக்களுடன் 212

வேண்டுமனையாட்டையும் விட்டோடிப்பஞ்சத்துக்
காண்டிபுகுந்தா ரநேகரே தேண்டியதன் 213

மெல்லியரைமாரியம்மை வேடமெடுத்தாடவிட்டு
வல்லபறைதானடித்து வாழ்த்தியே தொல்லையிவள் 214

கைகண்டதேவியெனக் காட்டியபிதேசிவனமாய்ச்
செய்துபிழைத்தார் சிலபேர்கள் தையலவ 215

ளொப்பியபலரோ டுறவாடக்கண்டுரியோன்
குப்புற்றுச்சற்றுமனங் கோணும லெப்படியுங் 216

காரியமாகட்டுமென் றீகாதலியைத்தூண்டியபின்
வாரிகண்டுசிந்தை மகிழ்வர்சிலர் பூர்வீக 217

நல்லமுசல்மான்களில்னு மேயுயர்ந்தசெல்வரெனச்
சொல்லியபட்டாணி துருக்கர்களுந் தொல்லையினு 218

லக்கூறல்லாமவுலா யாமவுலாவென்றலறிப்
பக்கிர்களாகிப் பறந்தனரே முக்கண்டைச் 219

சோமனுடுத்திச் சொருசாய்ப்பணியணிந்து
க்ஷேமமுடன்வாழ்ந்த செயலினரும் க்ஷாமத்தாற் 220

குண்டித்துணியுங் குடிக்கத்தெளிவுமின்றித்
கண்டிக்குச்சென்று கவலைகொண்டார் கண்டிக்குச் 221

சென்றவரும்பிண்டமின்றித் திண்டாட்டமுற்றனரா
மின்றதனுக்கேகுவதா லென்பயனு மென்றுகன 222

பேறியவிரங்கூன் பினுங்குமுதலாயகப்ப
லேறியதிற்சென்றவர்க ளெண்ணிலரே ஊறலுறு 223

தப்பறுவான்கோடையிலு மத்திரியின்சார்வுபற்றி
மைப்படிவான்சாரல் வளமுடைத்தா லெப்பொழுதுந் 224

தீர்க்கமலையாளஞ் செழிப்பென்றசொல்லைநம்பி
மேற்குவழிகொண்டார் வெகுஜனங்கள் ஏற்கையுள்ள 225

நாகபட்டணத்தி னலஞ்சேர்புகழுடையான்
மாகவிலாசத்தின வளர்நிதியான் யோகனுயர் 226

மாணிக்கவேள்புரிந்த மாதவத்தில்வந்தமணி
யாணிப்பொன் னாரமணிமார்பன் பாணிகுல 227

நல்விற்பனவேள் நளினகலைமா துமகிழ்
கல்வித்திறவான் கணபதிமால் பல்குபண்ட 228

சாலைதனைச்சார்ந்துநிதந் தக்கபடிகூலிபெற்றுக்
காலசுகம்பெற்றார் கனபேர்கள் மேலையாற் 229

சாசுவதமாகமுன்னந் தர்மாசனங்கள்பெற்று
மாசுகமாய்வாழ்ந்திடு மகாஜனங்கள் போஜனத்துக் 230

கானவழியில்லா தயர்ந்துவறுமையினு
லீனர்கள்பின்பற்றி யிதமுவைத்து மேனலமாந் 231

தங்கப்பணிதிவிற்றுஞ் சாமான்பலவும்விற்றும்
பங்குமனையெல்லாம் பதறிவிற்று மங்கங்கே 232

யாசகத்துக்கோடி யலைந்துலவ்வோலவ்வோவென்
றாசமிலெனச்சுற்றி யுழன்றவராய் வேசாறித் 233

தத்தங்குடும்ப சகிதத்துடனெழுந்து
மெய்த்தசிவகங்கை விறல்வேந்தன் சத்திரங்க 234

டோறும்புகுந்து சுவையமுதமாந்தியிடை
யூறுகடந்தா ருயர்மறையோர் மாறின்றி 235

ஞாலமதிற்செங்கோ னடாத்துந்துரைத்தனத்தார்
காலமிதிலேதிருடுங் கள்வர்களை வேலைசெய்யத் 236

தீர்க்கமொடுகண்டிப்பாய்த் தெண்டித்தல்கண்டிருந்தும்
மூர்க்கர்பசிநோயால் முனைந்தெழும்பிப் பார்ப்புமுதற் 237

பள்ளுப்பறைநடுங்கப் பட்டப்பகலூரைக்
கொள்ளையடித்துக் கொணர்ந்துவரத் துள்ளரிபோல் 238

பொட்டெனவங்கேவளைந்த போலீசார்கையிலகப்
பட்டனத்தமுற்றார் பலபேர்கள் பட்டுழன்றுங் 239

தாழ்வுற்மிச்சோர்வையின்னஞ் சாதிப்போங்கண்டுபிடித்
தேழ்விலங்கிட்டாலு மெழும்பசிக்குக் கூழேனு 240

மூட்டுவர்கள்தப்பா துறுதியிதுவாமெனவு
மீட்டுந்துணிந்தனர்கள் வெய்யவரோ தேட்டுதவுந் 241

தங்தொழிற்குவேலையின்றித் தாவுபசிக்காற்றாமற்
செந்தவிட்டைக்கிண்டியதைத் தின்றதினாற் றெந்தித்து 242

ரூலக்கடுப்பெடுத்து முக்கிக்கவினழிந்து
வாலற்றமந்தி வடிவானார் — தோலுற்ற 243

வாழைக்கிழங்குதனை மாவாக்கிக்கிண்டியவக்
கூழைக்குடித்துக் குடல்பெருத்துப் — பேழையெனக் 244

கால்முகமும்வீங்கிக் கடுங்கழிச்சலாய்க்கழிந்து
மேலுலகஞ்சென்றார் வெகுபேர்கள் — சாலைகளி 245

லத்திப்பழமா லரசம்பழமருந்தி
யத்தியிலேபற்றி யனலெழும்பிச் — சத்தியெடுத் 246

தாதாளிகொண்டங் கலறிமயமிட்டுப்
பாதாளஞ்சென்றார் பலருளரே — மோதியடர் 247

கற்றாழைமாமடலைக் கண்ணுற்றுவகையுடன்
பெற்றாளைக்கண்ட பெருமிதம்போ — லுற்றருந்தி 248

மேகரணங்கொண்டு வெடித்துமுடைநாறலஞ்சித்
தேகரணங்கொண்டார் சிலபேர்கள் — வாகைநெல்லி 249

பூவரசார்முன்னை புளிமாதளைஇலுப்பை
மாவிரசாலத்தி மருதோன்றி — மேவுகுழை 250

முற்றுஞ்ஜனங்களதை மொய்த்துணலாலத்தருக்க
ணற்றளிரில்லாதடைந்த நல்குரவே — தொற்றுவிப 251

சாரத்தொழில்புரிந்து சந்ததமுந்தேடியுண்ட
சோரஸ்திரிகடனைத் துய்ப்பவர்க — ளாருமிலா 252

ராதலினாலன்றோ வரியவடமீனிகர்ப்ப
மேதகையகற்புடைமை மேவினரால் — காதலிற்றுப் 253

பத்தாபிசிந்தகலப் பாங்குடையமைந்தர்களை
வைத்தாதரிக்க வழியிலராய்க் — கஸ்தியுட 254

னாற்றுரிமைமைந்தரையொவ் வொன்றாய்விலைகூறி
விற்றுத்திரிந்தார் வெகுமாதர் — சிற்றறிவிற் 255

பட்சிமிருகங்களுந்தன் பார்ப்புமிசைவைத்திருக்கும்
பட்சமதைக்கண்டுமித்தப் பாவியர்க — ளிச்சையுறத் 256

தானீன்றபுன்சிசுவைச் சற்றுமபிமானமின்றிக்
கானீந்துசென்றார் கனமாதர் — மாநலிவாற் 257

கைக்குழந்தைரெண்டலறக் கால்வளைந்தஞ்சா றுபிள்ளை
யெக்கியன்னமென்றே யிரைந்தழுக மக்கள்துன்பம் 258
பார்த்துமுடியாதவராய்ப் பாழ்ந்துரவில்லைமைந்தரையுஞ்
சேர்த்துமடிந்தார் சிலமாதர் வாய்த்துமுனக் 259

## பழையதன்மை.

கையிற்பசையிருந்த காலமதில்ஞாலமிசை
யெய்தரியயாருநிக ரின்றியே செய்யளவிப் 260
பாலோதயிரோ பரிந்தசட்டவர்க்கமதோ
மேலானபொங்கல் விதம்விதமோ பாலுடனே 261
பாசிப்பயறுடைத்துப் பாயசங்கள்செய்ததுவோ
தோசைக்குழுந்தரைத்த துப்புரவோ மாசுவையி 262
லற்புதமிட்டாயிலட்டோ டானபலபட்சணமோ
மற்படுதேனூற்றுகனி வர்க்கமோ நற்பசுவிற் 263
பாட்டுச்சொலிக்கறந்த பாலிலேசர்க்கரையைப்
போட்டுவெற்றக்காய்ச்சும் புனிதமோ யீட்டுமதி 264
லேதேனுந்தாழ்வுகண்டா லில்லில்மனையாளுடனே
கோதாய்ப்பிணங்கிநின்ற கோபமோ மாதுரிய 265
பானரசவர்க்கமோ பன்னுபலவாசனைகள்
தானமைத்துச்சேர்வையிட்ட சந்தனமோ பானுவெயில் 266
காட்டும்வயிரக்கடுக்கன் கற்பதித்தமோதிரங்கள்
போட்டலைத்துப்பேசுநின்ற பூரிப்போ ஆட்டியர்கள் 267
சொர்னமணிப்பூடணங்கள் சோடனையாய்ப்பூட்டியிள
வன்னநடைகாட்டு மதிசயமோ மின்னுசெக 268
சோதிவடிவாஞ்சரிகைச் சோமன்றனையுடுத்தி
மீதுயர்ந்தகோட்டு மிகவணிந்து சாதரா 269
மேலிலங்கச்சென்னி மிசையோர்கயாப்பிலக்கக்
காவிலங்குஞ்ஜோடு கறகறென்க் கோலமலர்ப் 270
போதுலவுவாசம் பொலிந்துபரிமளிக்க
வீதிவிலாசங்கள்வந்த மேன்மையோ ஓதுமந்த 271

உல்லாசமென்னசொல்வே னுற்றிருந்தைதகட்பசைக
ளெல்லாஞ்சரியா யிறங்கினபின் னுல்லாசம் 272

நாளுக்குநாட்டணிந்து நங்கையர்கள்மூர்க்கவிழி
வாளுக்கடங்கி மருண்டனவே வேளனையார் 273

வாய்ப்பானசட்டரச வர்க்கத்துட னுகர்ந்த
சாப்பாடுமெல்லமெல்லத் தட்டழிந்து சாப்பாடு 274

மூக்காற்றரமாய் மூணாங்கியரைத்தரமாய்
அக்காற்றரமா யசந்ததே யிக்கவளங் 275

துய்க்கப்பசியடங்காச் சோகத்தாற்றன்வயிற்றை
யெக்கியெக்கிக்காட்டி யெழும்பாம லக்கலத்தைச் 276

சுற்றிவழித்துநக்கித் தொண்ணூந்தெதிர்முகநோக்
குற்றிடுவரின்னமுமென் றன்னியே யெற்றி 277

யடித்தமுளைபோ லசையாதிருந்த
மடத்தகைமைகண்டு மடவார் பொடுப்பொடுத்துச் 278

சண்டிமுழுப்பூதமென் றுஞ் சாப்பாட்டுராமனென் றும்
விண்டுபழித்தார்சொலவாய் வெட்குதன்றே அண்டையிற்கும்

மேற்றரமீதென்ன மெலுக்காய்நடந்திடுமிக்
காற்றரமுமெள்ளக் கடையழிந்து காற்றறைந்த 280

பஞ்சுபோலாகிப் பரிந்துழலும்போதுசுடு
கஞ்சியப்பர்வந்து கலந்தனரே கஞ்சியப்பர் 281

வெஞ்சினமிலாரெனவும் மேல்வெறுப்பிலாரெனவுஞ்
செஞ்சுருதியின்சொற் றிறங்காட்டிக் கொஞ்சியவர் 282

நீவுங்கலந்தனிலே நீச்சானதண்ணீரில்
வாவிப்புகுந்ததே மறைந்திடுவர் தாவிமெல்லக் 283

கண்டுபிடிக்கக் கருத்துற்றொருகரத்தால்
மண்டியிட்டுச்சுற்றி வளைத்தாலும் முண்டிவல 284

சாரியிடசாரியில்மச் சான்முறைகொண்டாடியுந்தெண்
ணீருகள்சேலென்ன கெடிதொளிப்பார் நேருறவே 285

துன்றலையினீடுசுழி யூடெழுந்துமெல்லத்
தன்றலையைநீட்டியுள்ளிற் றாழ்ந்திடுவா ரன்றனமுஞ் 286

செங்கட்படுகிரியுந் தேடச்சிக்காப்பொருள்நம்
மங்கைப்படுவரென்ப தாச்சரியம் யெங்கும் 287

கருவிளையாட்டொன் றவலி காட்டுகஞ்சியப்பர்
திருவிளையாட்டென்சொல்வேன் சேடி மருவுகையிற் 288

றுங்கிவசமாக்குதலென் தந்திரமென்றுய்ந்துதமிழ்
ஓங்கல்முனிமந்திரத்தை யுச்சரித்தே யாங்கவரைக் 289

கைப்பிடியாகப்பிடித்துக் கீவலனுஞ்சீவகற்கு
நட்புறுத்திவைத்தார் நலமுறவே யப்பனிக்கு 290

நீளித்திராமல் நிலைகெட்டுழன்றேசின்
னாளிற்குருவி நழுவினரால் மாளிகைவிட் 291

## பலவித புஞ்சைத்தானியம்.

டங்கவருநீங்கவனு தாபமுற்றிடுங்கால்
நங்கைபுணர்§கேழ்வரகு நாதன் பொங்கியபே 292

ரன்பாவிராமாய ணப்ரபந்தமாக்கதையை
நன்பாரியற்றுகவி நாவலவன் பொன்பாலித் 293

தப்ரபந்தகர்த்தாவை யாதரித்துக்கீர்த்திபெற்ற
சுப்ரநந்தூர்பொன்னித்‡துறையுடையான் செப்பிவனை 294

வென்றுபழிநீத்து வியந்தசிவலோகமதை
நன்றுறக்கண்டேத்து நரபாலன் வென்றிவிடை 295

மேவுவானற்கிரியை வேரோடெடுத்தவனைத்
தாவிவாலிற்பிணித்த தாட்டிகன் காவலர்க்கு 296

நானாவிதமாய் நலமிடராய்ந்தோதுகின்ற
தானாபதியான சாமரா வேனற் 297

றலைவனுடனுவிற் றளராதடங்கி
யிலகுநரவாகனத்தி லேறி யுலைமுகத்துக் 298

கென்றுவருவாரென் றெதிர்பார்த்தமக்களுள
மொன்றிமகிழ்வெய்தமனை யுற்றனரால் துன்று 299

§ கேள்-கேழ். ‡ பொன்னித்துறையான்-சோளம்.

புவிச்சக்ரவர்த்திகளைப் போதமிகவாய்ந்த
கவிச்சக்ரவர்த்திகளைக் கண்டு செவிக்கூர்ந்த 300

## தானியங்கள் ஆகாரப்படுத்தல்.

மாவாக்கியத்தை மதித்துநிலைக்கோட்டைக்
‡ கோவாக்கியாருங் குடியராய் மேவுபுகழ் 301

துன்னுமன்னதான துரையிருந்தசத்திரத்தை
யன்னவர்க்குநன்விடுதி யாக்கியே பின்னிவரை 302

புட்புகுத்துங்காலை யுரோமபுரியார்களுக்கும்
இப்புதியபேர்க்கு மிழுபறியாய்த் தப்பிவயின் 303

## வயிற்றுக்கு ஒத்துக்கொள்ளாமை.

தாவளமாஞ்சத்திரத்தைச் சார்ந்திடவுஞ்சிவகனங்
காவியெதிர்சென்றுற் றளாவியே பாவியான் 304

விம்மாநெடிதுயிர்த்து மெய்சோர்ந்தகாலையினி
லும்மாலலவா வுயிர்பெற்றேன் கைம்மாறென் 305

செய்குவனென்னன்பீர் தினமுமிதுபோலவுநான்
உய்தலுறநீர்வந் துதவுவீர் ஐயவெனத் 306

தம்மில்மகிழ்போதிலந்தச் சத்ரமகுதாரென்னு
மம்மருளமுள்ளான் வயித்தியய்யன் மெய்மறைநூற் 307

சொற்காட்டறிஞ்ஞரையுந் துன்புறுத்தியாரிடமும்
பற்காட்டவிட்ட பழிகாரன் முற்கூற்றில் 308

கண்ணிற்பொறியுலவக் காந்திவடவானலம்போல்
விண்ணதிரச்சீறி விரைந்தெழும்பி அண்ணலன்ன 309

தாதாவசிக்கத் தகுந்தவிடமாகுமற்றே
ராதாரமாக்கற் கடாதுகாண் . ஈதுணர்ந்தும் 310

அஞ்சாமலெந்த னனுமதியுமில்லாதே
லஞ்சகொடுகு லகாமாரோ மிஞ்சவுமைச் 311

சத்திரத்தில்விட்டவரார் சல்திநாம்க்யாப்போலோ
அத்தெரிமாதர்ச்சோதென் றுக்ரமித்துத் தத்திமிகப் 312

‡ கூழ்-கூளப்பன்.

போர்க்கோலங்கொண்டு பொருதுந்தனுவளைத்துக்
கூக்குரலிட்டார்த்துக் குழப்பியே மூர்க்கமுள்ள 313

‡ காற்றவராயன்சேர்வை காரனுமங்கூடாடி
யேற்றுக்கலக்கி யிரைச்சலிட ஊற்றுதிரங் 314

தோய்ந்துமொடுமொடுத்துச் சூழ்ந்தவுளைக்குடியார்
காய்ந்துசினந்து கடுகடுக்க வாந்தி 315

யடுக்கமறுக்குற் றலமலக்கத்தள்ளி
முடுக்கங்குளத்தார் முடுக்கத் துடிப்புறவும் 316

மிக்கவயித்தியய்யன் வெஞ்சேனைமேலாடி
லெக்கைகட்டியேறி நெறுநெறெனப் புக்கிவரும் 317

## வயிற்றுக்கழிச்சல்.

அத்தருணந்தன்னி லலமலந்துகூழேந்த்ரன்
மொய்த்தளங்கள்யாவு முதுகிட்டுச் சத்திரத்தின் 318

கட்டுளகீழ்வாயற் கடவையுடைத்துவெளிப்
பட்டுமுடைநாற்றம் பரந்துலவ வட்டமிட்டுச் 319

சாரிகொண்டுமேனிமிர்ந்து தாவிமண்டியூடெழுந்து
போர்வைபொன்றுபாயலம்பி பேரன்மிதந்து வாருகின்ற 320

சொந்தபந்தினங்கசிந்து துன்பமுந்தவும்பயந்த
மைந்தர்பெண்டிருந்தளர்ந்து வந்தரங்க இந்தவிந்தை 321

யாகவுமொன்னார்கைக் கடங்காமலேதிரண்டு
வேகமுடனோடிவெற்றி மேவினரே ஓகையுடன் 322

அஞ்சாயல்பெற்றுடலுக் காதாரமாயிருந்த
பஞ்சாயத்தாரும் பலமிழந்தே யெஞ்சுகையில் 323

இவ்வருடப்பேர்சிறிது மில்லாநிலையுணர்ந்து
செவ்வையுறச்சீவகனுஞ் சிந்தனையா யெவ்விதத்து 324

மீறிவிமனேஸ்வரத்துக் கெய்தல்நிசமேயெனினுந்
தேறியினுங்கண்டறிந்து செல்வமெனக் கோறுதலும் 325

‡ காற்றவராயன்-காத்தவராயன்.

ருங்கவன்கையாண்டபொருள் யாவுந்துறந்துமருள்
தாங்குதொண்டைமண்டலத்திற் றங்கலுற்றான் பாங்குள்ளார்
வேந்தனிந்தக்கோட்டைதனை விட்டுவெளியேறிவிட்டா
லாய்ந்துதிருப்பகம்மா லாமோவென் றோர்ந்து 327
மருத்துவரைக்கூவியிடர் மாற்றுமதிகாரக்
கருக்குவகையெல்லாங் கருக்கா யருத்திவைத்து 328
வாதவூரான்முதலாய் வாதுகொண்டமூவரையுந்
தீதில்சமணாகத் திருத்தியே மோதுகின்ற 329
சத்ரமகுதார்தனையுஞ் சாந்தப்படுத்தியந்தச்
சத்திரங்கீழ்வாயிலையுந் தானடைத்துக் கத்தனெனுஞ் 330
சிவகனைமுன்போற் சிறந்திடுகாயாபுரிக்கு
மூவுலகுமெய்க்க முடிசூட்டிக் காவலனாய் 3·31
வந்தரசுசெய்தான் மறுத்தும்வயித்தியய்யன்
முந்தினவர்மேலே மொறுமொறுப்பாய்த் தொந்தித் 332

## ஜனங்களிளைத்தல்.

தமிழும்படியாயு றுந்தனக்குத்தானே
தமிழுந்தெலுங்குமுறச் சாடி யமரிற் 333
கருவித்துநாளுங் கலந்திடுநல்லாண்டி
லிருபத்துமூன்று யிருந்தான் பருகுதற்குச் 334
சீனியிட்டுக்காச்சியபால் தித்திப்பாயில்லையென
மேனலம்பாராட்டிவந்த மேலோர்கள் தானொடுங்கி 335
வெப்புசுடுகூழருந்தி மேன்மீசைதாடிகளி
லப்பியென்னசொல்வே னலங்கோலம் திப்பியமா 336
நல்லபலகாரவர்க்க நாமருந்தோமென்றுசொல்லிச்
செல்லஞ்செருக்கினின்ற சீருடையார் செல்லரித்த 337
தூவற்புளிவிதைக்குஞ் சோளத்தவிட்டினுக்கும்
ஆவல்கொண்டுங்கிட்டா தலமலந்தார் தேவரன்ன 338
தென்புலத்தார்தன்றிவசஞ் செய்யாதுகண்டினத்தார்
நன்குறநிந்திப்பரென்று நாணுளராய் முன்பகலே 339

வேற்றார்சென்றுங்குதிதி மேன்மையாய்ச்செய்தனென்று
சாற்றிப்புளுகினவர் தானனந்தம் போற்று 340

முடையவர்தன்பூசை யுருக்கமுடன்செய்தோர்
சடைவுகொண்டுநேமகத்தைத் தள்ளித் தொடரவிதோ 341

யெக்கசக்கவேளைநம்மா லேலாதென்றன்னவரைப்
பொக்கணமாய்க்கட்டிப் புறத்திலிட்டா ரெக்காலுஞ் 342

செல்விருந்தோம்பி வருவிருந்துபார்த்திருந்த
வில்வளத்தாரில்லா வியற்கையால் நல்விருந்தாய் 343

வந்தவரைக்கண்டிவனேன் வந்தானெனக்கறுவிப்
பந்தயம்வைத்தோடிப் பதுங்கினரே குந்தியொரு 344

சாண்வயிறுதான்வளர்க்கச் சார்ந்தபிறர்ச்சிதநற்
காணிவிற்றும்பூண்ட கலன்கள்விற்றும் பேணுநல்லோர் 345

மாடுகளைவிற்றும் வலியமந்தையாடுவிற்றுந்
தேடியபண்டமெல்லாந் தேடிவிற்று மோடிப் 346

படாதகடும்பாடு பட்டும்பாழிலலைந்தே
யடாதவரைச்சென்றங் கடுத்தும் விடாதவர்க்குக் 347

குற்றேவல்செய்துநொந்துங் கூழுங்கிடைக்காமல்
வற்றிமெலிந்தார் மனிதரெல்லாம் வெற்றிமதன் 348

கோடியவிற்பூட்டிக் குறித்துமலர்ச்சாயகத்தை
மீடுகட்டிக்கூடியமட் டெய்ததிலு மாடவர்கள் 349

மங்கையரைத்தேடுதற்கும் மங்கையர்களாடவரின்
சங்கமத்தைநாடுதற்குஞ் சத்துவிட்டுப் பொங்கியெழுங் 350

காமயநாயக்கர் கனகுதிப்பெல்லாமொடுங்கி
யாமையப்பர்போலா யடங்கினரே மாமகிழ்வாய்க் 351

கொண்டைகட்டிப்பூமுடித்த கோதைநல்லார்கூந்தலிலுந்
திண்டிறலாண்பாலார் சிகையினிலும் பண்டுதொட்டங் 352

கெண்ணெய்ப்பிறப்பொழிந்தங் கீரோடுபேன்மலிந்து
வண்ணச்சடைபிடித்து மல்கினவே பண்ணளியுஞ் 353

சேற்கண்டைபோலுஞ் சிறந்தகண்ணிற்பீளைகட்டி
நாற்கண்டைப்போலெழுந்த நோக்கமதை மேற்கண்டங் 354

வியுங்கொசுரு மெறும்புமிடைநீங்காமற்
பேய்போலரிச்சுப் பிடுங்கினவே மேயபுகழ்ச் 355

செந்திருமாலுந்திநிகர் செந்தாமரைமலருஞ்
சந்திரனுமொவ்வாத் தணிவதலஞ் சுந்தரஞ்சேர் 356

காந்தியெல்லாங்குன்றியிரு கன்னஞ்சுரிச்சுவற்றிக்
கோந்திமுகமாகிக் குருவினவே சாந்து 357

மருத்தங்குசந்தனசவ் வாதுநிதம்பூசித்
திருத்தங்கம்போலிருந்த தேகங் கரிக்குளிச்சு 358

வங்குஞ்சிரங்கு மலியவிருகைழுறுக்கிப்
பங்குபங்கென்றேசொரியப் பண்ணினவே யங்கங்கே 359

தன்னிச்சையோடுந் தரிசூலக்காளைகள்போன்
மின்னிப்பருப்பமுற்ற மேனியெல்லாம் பின்னமுற்றுத் 360

தேவாங்குபோலுமிகத் தேய்ந்துதசையுலர்ந்து
மாவாங்குபோலும் வளைந்ததே பாவைநல்லார் 361

சாந்தணிந்துகச்சைத் தடாரித்துவீங்கியிரு
மாந்துபூரித்த வனமுலைகள் தேய்ந்துவற்றிப் 362

பட்டமரப்பொந்தினிலும் பாழ்மண்டபத்தினிலு
மொட்டியவவ்வாற்போ லுறங்கினவே கட்டுமுடை 363

முக்கலச்சிக்கும்படிந்து மோதும்வஸ்திரக்குட்டியப்பர்
குக்கலிச்சிக்கும்படி குலாவினவே வக்ரமிருக் 364

துஷ்டமதயானைத் துதிக்கையெனத்திரண்டு
கட்டழகுவாய்ந்த கழலிரண்டுஞ் சட்டைவிட்டு 365

முட்டிக்கால்தட்டி முழங்காற்கடுப்பெடுத்துப்
பட்டடைத்தூண்போலாய்ப் பருத்ததே கொட்டும் 366

அரைமணித்தியாலமதி லைங்காதஞ்சுற்றி
வருதுரிதமுள்ளார் வருந்திக் காமீதில் 367

வீசுமொருகோலுன்றி வீடிருந்துவாசல்வரக்
காசிராமேஸ்வரம்போற் காணுமே மூசியமூல் 368

வெம்பசியினுற்குழந்தை வீரிட்டமுகவன்னை
தம்பரிவினோடணைத்துத் தாலாட்டிக் கும்பமுலை 369

வாயில்வைக்கப்பீர்சுரந்து வாராதாலச்சிசுவுந்
தாய்முகத்தைப்பார்த்துத் தவித்ததே    தூயனவாம் 370

மானங்குலங்கல்வி வண்மையறிவுடைமை
தானந்தவம்பொறுண்ம தாடாண்மை    தேனின் 371
கசிவந்தமென்மொழியார்க் காமுறுதல்பத்தும்
பசிவந்திடப் பறந்துபோமென்    றிசைமொழிபோற் 372

றன்னலுறுநால்வகையின் றேற்றத்தினாலாய
மன்னுயிர்களெல்லாம் வருந்தினவே    இந்நிலத்தில் 373

கவர்ன்மெண்டார்

## கஞ்சித்தொட்டி ஸ்தாபித்தல்.

மாந்தர்படுந்துன்பமதை மாற்றவருள்கூர்ந்துநய
சாந்தகுணமேவுந் தகைமையினா    ராய்ந்துலகிற் 374

க்ஷேமகாருண்யமொடு செங்கோல்நடாத்துமிந்தி
யாமகாராணி யனுமதியால்    நேமகமாய் 375

முத்தலமும்போற்றுதிரி மூர்த்திகளொப்பாய்விளங்கு
கர்த்தர்களாமூன்று கவர்னர்களுஞ்    சித்தமுவந் 376

தாங்குதுகையெவ்வளவா னாலுஞ்செலவழிக்கச்
சாங்கிஷன்செய்துத்தரவு தானனுப்ப    வோங்குஜில்லா 377

மேவுகலெக்கட்டர்கள்மென் மேலுமதிலூற்சிதமா
யாவலுற்றப்போதி லகிலமெங்கு    மேவலுறத் 378

தாக்கீதுசெய்ததற்குத் தக்கவுத்தியோகர்தம்மி
னீக்கரியபேரை நியமித்து    நோக்கமுடன் 379

அந்தந்தக்கிராமமுன்சீப் பம்பலநாட்டாரெவர்க்குஞ்
சிந்தையுடனிஸ்தியார் செய்வித்துச்    சந்ததமு 380

மாங்காங்குசோதித் தநேகவிடங்களிலுந்
தாங்குகஞ்சித்தொட்டிபல தாபித்து    வேங்கடுமை 381

மிக்கபசிநோயால் மெலிந்துதளர்வுற்றவரைப்
பக்கமுறக்கூவிப் பறைசாற்றித்    தொக்கமனக் 382

கோட்டமுடன்வந்தடர்ந்த கூட்டப்படைகளுக்குச்
சாட்டுதலிலாமற் றருந்தபடி மீட்டுதலை 383

எவ்வளவானாலுமதற் கேற்றபடிசெலவிட்
டொவ்வியநல்லன்ன முறுசுவையோ டவ்வவர்க்குத் 384

தாழ்ச்சியின்றிவேளைதொறுந் தானீந்துமிக்கமயி
ரூழ்த்ததலைக்கெண்ணெ யுடைமுதலாய் வாழ்க்கைபெற 385

நல்கிரோய்தீர்ப்பதற்கு நல்லவைத்தியர்கள்
மல்குகனவண்ணார் மயிர்களைவோர் அல்கலற 386

ஏற்படுத்தியவ்வுணவி லேற்காவுயர்குலத்தின்
பார்ப்பனர்வேளாளர் பரவணிகர் காற்பெலனற் 387

றேலாவிருத்த ரிழிகூன்குருடர்கள்பெண்
பாலார்பிணியர் பலர்தமையும் சால்புறவே 388

யூரூர்கடோறு முசாவிவிசாரித்துநிதம்
பார்வையிட்டுரொக்கப் படிகொடுத்தும் பார்மீதிற் 389

றீதுரியபஞ்சந் தெளியுமளவுமிதே
மாதிரியாய்நாளும் வழுவாம லாதுலர்கட் 390

கன்னங்குன்றுதளித்த வம்பொற்குவைக்குயர்ந்த
பொன்னங்குன்றீடுரைக்கப் போதாதே யின்னங்கேள் 391

## கண்மாய்கால் மராமத்துசெய்தல்.

தோல்வியின்றிவேலைசெய்யத் தோற்றமுள்ளபேர்களநின்
கூலியிற்சீவிக்குங் குறிப்பினால் ஞாலமெங்கும் 392

தாங்குமயன்கண்மாய் ஜமீன்தரப்புக்கண்மாய்க
ளோங்குநதிக்கால்வாய்க ளூருணிகள் ஆங்கதற்கு 393

வேண்டுதுகையெவ்வளவோ மென்மேலுநல்கிமிக
நீண்டகரைமா நெடுங்கிரிபோற் றோண்டு 394

கயமுரகபாதலத்தைக் காணும்படியாய்
நயமுறநடாத்திநிதி நல்க வியல்புடனே 395

யெல்லையில்லாமாந்த ரிதனால்வயிறுவளர்த்
தல்லல்சிறிதாற்றி யமர்ந்தனராற் றொல்லையுறு 396

மின்னல்பகையச்சமென்ப தில்லாமலேயுலக
மன்னுயிரைத்தன்னுயிர்போல் வாழ்விக்கு மன்னைவிக் 397

டோரிமகாராணிசெங்கோ லூழூழிவாழ்கவெனப்
பார்முழுதும்பல்லாண்டு பாடினவே பார்மீதி 398

லியாதோர்கதியுமில்லா வெண்ணிறந்தவேழைகளே
திதோய்ந்தார்மற்றவரென் செய்குவார் ஆதரங்கூர் 399

## காசுக்கடைக்காரர் செய்கையும் நகை விற்றலும்.

இல்லாச்ரமத்தர் றியன்றபடிநடத்த
வில்லாச்சிரமத்தா விகழ்ந்தவராய் வில்லாதை 400

விற்பதற்காயெண்ணி மெலியாவிலைமதியாக்
கற்பிணிகளெல்லாங் கடிதினிற்கொண் டற்பகலாய்க் 401

காசுக்கடைத்தொழிலைக் கைக்கொண்டுலகைமுழு
மோசப்படுத்தி முதல்பறிப்போர் முசுமிராத் 402

தீவட்டிக்கொள்ளைத் திருடரினுந்தேர்ந்தபகற்
தீவட்டிக்கொள்ளைச் சிரோமணிகள் மேவுற்ற 403

சோதிவயிரத்தைவழுத் தோய்ந்ததரிப்பென்றுமந்த
மாதரிப்பைவச்ர மணியென்றும் மோதுகறைப் 404

போக்குகளோத்னப் பொடியென்றுஞ்செம்மணியை
வீக்குகறைப்போக்கு விதமென்றுந் தீர்க்கமிகு 405

நல்லமுத்தைச்சொத்தையென்றுஞ் சொத்தைமுத்தைநல்லதென்றும்
பல்குபச்சையூனம் படிந்ததென்றும் மல்கியசாம் 406

பூனதத்தைமாற்றுரைபோ தாதென்றுந்தங்களிட
மானதங்கமாற்றுநய மாமென்றும் மேனலஞ்சேர் 407

கெம்புமுதலானதையுங் கீழ்ப்படுத்தியெப்பொழுதுந்
தம்பொருளேமேலெனவுஞ் சாதிப்பார் பம்புபல 408

கற்பணிகளைக்கொணர்ந்து காவலர்பாற்காட்டியிவை
நற்பணியாமென்று நயந்துரைப்பார் பொற்புறவே 409

யீதிற்குயிற்றியவி ரத்தினங்களெவ்வொன்றுங்
கோதில்லாநல்ல குணமென்பார் போதுபடு 410

வாணெழுக்குசெக்கர்வண்ண மாற்றுயர்ந்ததங்கமிட்டுத்
தானழுத்தமாகச் சமைத்ததென்பார் மேனலத்த 411

தானைமன்னர்பூணத் தருமன்றிக்கேவலரா
மேனையர்கள்பூணவிய லாதென்பார் ஞானமிகத் 412

தெள்ளுசமுகந்தனக்குத் தேவையிருந்தாற்கணக்குங்
கொள்முதற்கைச்சாத்துங் கொடுக்கிறோம் உள்ளஃபடி 413

சூதறக்கண்பார்த்தெமக்குச் சொற்பலாபங்கொடுத்தாற்
போதுமென்றுசொல்லிப் புளுகுவார் காதலுடன் 414

வென்றிதிகழ்வேந்தர் விருப்பந்தனையுணர்ந்தங்
கொன்றுபத்துநூறா யுயர்த்துவார் என்றும் 415

அரசர்களைச்சற்று மகலாதுசுற்றிப்
பரவிப்பலித்தமட்டும் பார்ப்பார் பொருள்மிகுத்தும் 416

ஈதலிரக்கத்தயவை யெள்ளளவேனுங்குறியார்
தாதிலெளியார்களென்றுந் தானெண்ணுறார் மோதுபழிக் 417

கஞ்சாவணிகருள்ளு மாய்ந்தெடுத்ததிரன்வசைக்
கொஞ்சானுயர்குளந்தை யூரினன் மஞ்சொருவித் 418

தேசமதிற்பஞ்சஞ் செனித்தோங்கவேண்டுமெனப்
பூசைநிதம்புரியும் புண்ணியவான் மாசுறவிங் 419

கேமாந்தெவன்வருவா னியார்பொருளைக்கொள்வமெனத்
தீமாந்துமுள்ளத் தியானவான் பூமருவும் 420

நாட்டிற்பிறர்பொருளை நஞ்சென்றுரைப்பதல்லா
லீட்டியவையுற்று லெளிதில்விடான் நாட்டமொடு 421

வாய்ந்தபடிக்கல்லோபொன் வாருதற்குங்கூறுதற்கு
மேய்ந்தபடிக்கல்லோ விரண்டுவிதஞ் சாந்தகுணத் 422

தோடுறுசிநேகருக்கு மோர்சமையங்கைக்கடனாய்
நாடியவரைக்காசுகொடா னம்பியே ஈடுநங்கை 423

மாற்றுயர்ந்ததேனுமரை வாசிமதிப்பிட்டெழுதி
மேற்றரங்கால்வாசிக்கு மேலுதவான் நூற்றுக் 424

கிரண்டரையாய்லாபஞ்சேர்த் தேற்றுவான்வட்டி
திரண்டதிலோர்காசுதள்ளாச் சீலன் றெருண்டதமிழ்ப் 425

பாடும்புலவருக்கோர் பைசேனுந்தந்தறியா
மூடனுலோபத்தில் முதற்பாதம் நீடியிவ 426
னித்தகையதேட்ட மியற்றினாலைந்துவரு
டத்திற்பணக்கார னாயினான் மெய்த்தகவு 427
வீய்த்தவவிவேகர்மெச்ச வேதாந்தசாஸ்திரங்க
ளாய்த்துவருவான்போ லபிநயிப்பான் போந்தமடை 428
வாய்க்கொக்காமின்னவனை மாசற்றநல்லானென்
றாக்கியவன்பாற்சென் றுரிமையீர் நீக்கரிய 429

## நகை விற்கப்போதல்.

நற்பணிகொண்டுய்த்தே னகைவிலைபார்த்தீயுமென்ற
சொற்புகுமுன் னுள்ளச் சுவையூங்க வற்புளன்போல் 430

## பழமை கூறல்.

வந்தீரோவென்று வரிசைமுறைபாராட்டித்
தந்திரமாய்ப்பேசித் தழுவியே முந்தையினி 431
லேன்காணும்நாம மிருவருமோரேவகுப்பி
லாங்குகலைபயின்றோ மல்லவா ஊங்கொருநாள் 432
வாத்தியார்கண்ணை மறைத்துவெளியேறியங்கோ
ராத்திமரத்தேறிவிளை யாடினதும் வாத்தியா 433
ரெப்படியோகண்டுபிடித் தேநஞ்சிகைபிணித்துக்
குப்புறவேவீழ்த்திநம்மைக் கொண்டுபோய்க் கைப்பிரம்பாற் 434
றீட்டிவெளுத்ததுவுந் தீயகோதண்டமதிற்
போட்டதுவுநான்மறந்து போகலையே மீட்டொருநாள் 435
உந்தகப்பனார்பெட்டிக் குள்ளிருந்தரூபாயைத்
தந்திரமாய்நீரெடுத்துத் தந்ததைநான் வெந்தநல்ல 436
பட்சணங்கள்வாங்கியுமுப் பங்கிட்டோர்பங்கையுமக்
கச்சணமேநல்கிமற்ற தத்தனையு மிச்சையறத் 437
தின்றுசெருக்கினதுஞ் செல்லவிளையாட்டுகளுங்
கன்றுகள்மேலேற்றிக் களித்ததுவுந் துன்றுபொடிப் 43 8

பூச்சணிந்துபள்ளிக்குப் போய்வந்தபாவனைபோ
லேய்ச்சதுவும் யாதிலிருக்கிறதா நாட்செலினும் 439

பள்ளிச்சினேகமுற்ற பாசமுமைக்கண்டவுட
னுள்ளிற்கசிந்த துருக்கமே தெள்ளியநீ 440

சென்னதொழிற்செய்கின்றீ ரேதுமுகவாட்டமிரு
கன்னம்வற்றிநீர்மெலிந்த காரணமேன் மின்னிமனைக் 441

காரற்றுப்பூமி கனவிளைவற்றுக்குடும்ப
பாரத்தாலோமெலிந்தீர் பாவமே யாரைத்தான் 442

விட்டதந்தையவரையும் விட்டதோவூழ்வலியின்
கட்டையெவரேனுங் கடக்கரிதே யிஷ்டமதி 443

லொத்தவுயிர்போலுமெனக் குள்ளன்பீர்நம்மிருவர்
சித்தமனுப்பேதமுண்டா செப்புங்கா லித்தருணங் 444

கண்டரோகையிலரைக் காசிலைவியாபாரம்
பண்டுபோலில்லைப் பணச்சுணக்கம் அண்டையினுங் 445

கைக்குளிருந்திடுமிக் கற்பணியைப்பத்தினா
லைக்குமுந்திக்கொண்டுவர லாகாதா உட்கலுற்றே 446

நாள்விளம்பஞ்செய்தீர் நறுக்கொன்றெழுதியன்றே
ராள்வசத்திலேவிவிட லாகாதா கேள்வியினு 447

லேற்கனவேயானறிந்தா லெவ்வளவானாலுமுமக்
கேற்கத்தயாரா யிசைத்திருப்பேன் பார்க்கிலிதிற் 448

சூதிலையேகையிற்றுகையிலையே கொள்ளவிற்கத்
தோதிலையேசற்றுஞ் சுகமிலையே யேதுசெய்வேன் 449

யெத்தனையோபொற்பணிக ளெத்தனையோகற்பணிக
ளெத்தனையோவந்ததுகா ணொண்ணில்லை வைத்து 450

மடியிற்றுகையிருந்து வாங்கியதைவிற்றூர்
கிடையாவிலாபங் கிடைக்குஞ் சுடர்விரிந்த 451

பாசிபந்துதோடா பதக்கம்பலகொணர்ந்து
நேசமுளானேற்று நெடுநேரம் பேசிவிலை 452

யாயிரம்பொன்னுகுமிதற் கைம்பதுபொன்றருமென்று
வாயிரந்துகேட்டான் வகையில்லைப் போம்விட்டான் 453

வட்டிக்குஞ்சிக்குதில்லை வர்த்தகருள்ளோரெவர்க்குந்
தட்டுதலையார்க்குஞ் சமயமே யெட்டியெட்டி 454

யூனக்குறமுடவ னோங்கிவளர்ந்தகொம்புத்
தேனுக்கண்ணாந்த செயல்போலுந் தானாய் 455

வலியவரும்நற்பணியில் வாஞ்சைமிகக்கொண்டு
மெலியவருந்துவதும் வீணே கலிகால 456

சஞ்சலமெலார்க்குமுண்டு தாங்கள்வந்தகாரியத்தில்
வஞ்சகந்தானென்று மதித்திடுவீர் செஞ்சுருதி 457

நான்குணர்ததீசியைப்போ னட்டார்க்கென்பிராணனையுந்
தான்கொடுக்கச்சற்றுந் தறுகேனான் வான்கடுக்கை 458

சூடும்பிரானுடைய சோதனையோநீரெம்மை
நாடிவந்தவேளையுமோ நன்கில்லை தேடியினி 459

வேறிடத்தைப்பாருமென்று மெத்தவிசனித்தவன்போற்
கூறியசொற்கேட்டுக் குருவியே பீறியுட 460

லென்பாயுகினு மியல்பிலார்பின்சென்று
தன்பாடுரைப்பரோ தம்முடையார் என்றாயுந் 461

தந்தையருமெய்முதிர்ந்தோர் சந்ததிகளும்பலரும்
நொந்துபசியால்வருந்தி நொய்துற்றார் எந்தவித 462

மாணாலுந்தாங்க ளருள்கூர்ந்திதுசமயம்
தானாய்க்கனிந்துதவல் தர்மமே மானவர்கள் 463

எத்தனையோதர்ம மியற்றியுலவாப்புகழ்பெற்
றத்தனருள்பெற்றா ரளவிலரே மெய்த்த 464

வரிய்நகைகொணர்ந்தே னல்லதுவேறும்பால்
பரிசுபெறவோநினைத்துப் பாரும் பருவரலாற் 465

கைதாழ்ந்தேன்வேறு கதியில்லைநீர்சினந்து
வைதாலுமும்மைவிட மாட்டேனான் உய்தலுறச் 466

செய்யாமற்செய்த வுதவிக்குவையகமும்
வானகமுமாற்ற லரிதென்னும் மெய்மொழிபோற் 467

செட்டியாரேயுமது சித்தமிசைந்தப்டி
வெட்டிப்பேச்சொன்றும் விளம்பாமல் இஷ்டமுற்றுத் 468

தந்தைநீர்தாருமென்று தாழ்மையுடன்கூறவவ
னந்தரங்கந்தன்னி லதிகளிப்பாய் வந்தவற்கு 469

வெந்தமுகங்காட்டி விறகிட்டெழுந்தழலு
மிந்தனம்போற்காய்ந்துமிதற் கென்செயலாம் சொந்தமுசேய் 470

தாயின்முலைநோவறியாத் தன்மைபோனுமிவற்கிங்
காயிரம்போதித்து மறிந்திலனென் றாயிழையைக் 471

கையிலெடுத்தேந்திக் கசிந்துபளாநேர்த்தியிது
பொய்வேலைத்தட்டான் புனைசுருட்டுச் செய்ததிலுக் 472

தங்கமில்லைபொன்னுந் தணிவானமாற்றுநிற
மங்கல்நகாசு வளமுமில்லை யிங்குறுத்தல் 473

ஊமணியொன்றேனுமில்லை யூனப்பழிசுமந்த
பாழ்மணிகள்சுத்நப் பழுதுகாண் கேழ்மணியென் 474

றெத்தியுமையேய்த்தவனை யான்காணிலோசுணக்கு
முத்திரைவைப்பேனுமக்கு முன்பாக இத்தையெல்லாம் 475

ஆழ்ந்துகுற்றம்பார்க்கி லநேகவிதமாமதிலும்
போழ்ந்திடுதரர்சம் புறநிறச்சார் பேழ்ந்தபுள்ளி 476

புள்ளடியுட்கீற்றுப் பொருங்குற்றமைந்துவகைக்
கள்ளடிமிக்காயுறைந்த காரணத்தா லெள்ளியிதை 477

யாரும்விலைகொள்ளா ரணிந்தாலவர்க்குடனே
சாருமரணகண்டந் தப்பாது சேர்வையிட்டுத் 478

தொங்கட்டங்கட்டிச் சுழன்றமணிமுத்துகளை
யெங்கிட்டுச்சொல்வே னிணையாகப் பங்குற்ற 479

கொட்டைமுத்திலேனுங் குணமிருக்குமன்றோயிச்
சொட்டைமுத்திலொன்றுஞ் சுயமில்லையே வெட்டியிது 480

யென்னநகையென்பணிதி யார்க்குமுதவாதிதனை
யன்னியர்க்கீய்ந்தாலு மனர்த்தமே பின்னமுநீர் 481

தூண்டாமற்றாண்டியிதைச் சும்மாகொடுத்தாலும்
வேண்டாமென்றங்கணத்தில் வீசியே தீண்டேனென் 482

றொட்டுதலிலாதவன்போ லோங்கிமிகப்பேசவிவன்
கிட்டிநின்றபின்னுமெத்தக் கெஞ்சவே செட்டியின்னம் 483

காய்ந்துசினங்காட்டிலைய லார்கட்புகுவனெனப்
பாய்ந்துவிரைவிற் பரிந்தெடுத்து வாய்ந்ததனைத் 484

ஈட்டுரைகல்விற்பாதி தேயும்படியுரைத்தான்
நீட்டியதராசில் நிறுத்திட்டான் மீட்டுமவன் 485

என்னென்னமோசால மெல்லாம்பலவியற்றி
யிந்நகையைக்கொள்ளநமக் கிஷ்டமில்லை பின்னுமது 486

தொந்தரவுக்காயிசைந்தேன் தோன்றல்சிறுபையனென
தந்தரங்கமெல்லா மவனறிவான் தந்தைநீர் 487

வாங்கிநடவீரெனவு மாமாலச்செட்டிசொன்ன
தீங்குறுசொற்கேட்டுத் திவள்கொடிபோ லேங்கி 488

மனங்கலக்கமுற்றுமெல்ல வாய்க்குட்சிணுங்கி
முணங்குதலைக்கண்டவனு மோதிச் சினந்துமறு 489

போக்கில்லையென் றுவந்தீர் புண்ணியத்துக்காபலவோ
பார்க்கின்றேன்பட்டும் பலனுண்டோ யார்க்கும் 490

குடலைப்புருவிக் கொடுத்தாலும்வாழை
மடலென்பரீது வழக்கங் தொடர்புன்னி 491

யாதரவாய்நன்மைபுரிந் தாலுமுங்கள்ஜாதிகளுக்
கேதும்விசுவாசமென்ப தில்லையே தோதில்லா 492

விந்நகையா லெமக்குநஷ்டமாகுமன்றிச்
சிந்தையுமக்கேன் சிணுக்காட்டம் வந்துநல்லாய் 493

வாய்ச்சுதெனக்கைமேல் வழங்குமதைப்பெற்றிடுவீ
ராச்சுமக்குச்சம்மதமில் லாதுவிடில் பேச்சிலுமைத் 494

தூங்குவாரில்லையிதோ தந்தநகைகைக்கொண்டு
போங்காணுமென்ன புரிசாலம் பாங்கெனவே 495

நீபார்க்குங்கல்மனத்தான் செப்புகின்றவார்த்தையைக்கேட்
டோயாக்கவலை யுடனழுங்கி யீயுமிதைக் 496

கூடாதெனிலோ குடிகேடனீவெளியே
போடாவென்றேசிப் புறக்கணிப்பான். ஊடே 497

தருவரையுங்காணேந் தருணமிதோபொல்லாக்
கிரிகையற்ற கும்பிகேளாதே. பொருளழிந்து 498

வீறுமுயிரொன்றிருந்தால் மெய்ப்படவுப்பேனுமதை
மாறிப்பிழைத்திடலாம் வையத்தில் வேறுண்டோ 499

யென்செய்வேனுதிசரு வேசாநிகழ்வதுவு
முன்செயலேயென்றுமனத் துள்ளுருகிக் கன்மியவன் 500

தந்தையேபெற்றுமனத் தாபமுடனூர்புகுந்து
சந்தையொறும்போயலைந்து தள்ளாடி முந்துவர்க்கு 501

முந்திமிகமேல்விழுந்து மோதிச்சனநெருங்குஞ்
சந்தடியுட்சிக்கித் தலைப்பெய்திச் சிந்தித் 502

தருகுநின்றபேரை யனுசரித்துத்தான்யஞ்
சிரமமுடன்பெற்றுத் திரும்பிக் கிரகமுவந் 503

தப்பவன்பக்ஷணம்போ லாற்றியுமித்தன்மையவா
யெப்புவனத்தாரு மிடைந்தனரா லீப்புவியிற் 504

றெள்ளியநற்றங்கமிதே தீண்டாநிலைமையுற்றால்
வெள்ளியைமற்றியாரும் விரும்புவரோ விள்ளரிய 505

வெண்கலம்பித்தளை வியன்செப்புப்பாத்திரங்கள்
மண்கலத்துங்கேடாய் மதிப்பிலவே புண்படுத்து 506

## ஜனங்கள் பல வேஷமெடுத்தல்.

மித்தகையபஞ்ச மிடரானகாலமிதி
லெத்திப்பிழைப்ப திதமெனவே நத்திமணி 507

கொண்டுசிலபேர்கள்பல கோலந்தனையெடுத்தங்
குண்டுபிழைத்தாரதையு மோதுவேன் பண்டைத் 508

திருவாரூர்மண்டபத்தைச் செய்யத்துணிந்தேன்
பரிவானசந்தாவைப் பாரு முரிமைவைத்துச் 509

சிந்தைமகிழ்கூர்ந்துமது செங்கையினாலேன்றபொருள்
தந்தருள்வீரென்று தவிப்பர்சிலர் கந்தரத்துங் 510

குங்கரத்துக்குங்கழற்றக் கூடாவிதமிருப்புச்
சங்கிலியாலன்றோ தடிமூடர் . அங்குஅழுந் 511

ஜன்மமதிற்செய்வினையிற் றண்டனைபெறுதாலோ
வின்மையிற்றுனேவிலங்கிட் டெய்தியே · நன்மைதருஞ் 512

செந்தூர்வாழ்சண்முகற்குச் செய்பூஜாகாலமதில்
வந்தோர்களெல்லா மணியாட்ட முந்துதுகை 513

யைநூற்றுக்குள்ளாயோ ரைந்துமணிசெய்துவைக்க
மெய்யாயானிந்த விரதமுற்றே னையவிதைப் 514

பார்த்துதவிசெய்வீர் பகவான்கடம்பனருட்
பூர்த்தியுண்டாமென்று புகல்வர்சிலர் சேர்த்திடுதன் 515

கண்டமதின்மிக்கவரி கண்டமதைமாட்டியவர்
கண்டமட்டும்பொய்யைக் கலந்துரைத்தே யெண்டிசையு 516

மின்னுஞ்சிதம்பரத்தில் மேவுசபாநாயகர்தன்
சன்னிதானத்திற் றளதளப்பாய் பொன்னிற் 517

றிருவாசியொன்றியற்றச் செம்பொனொருநூற்றுக்
கிருவாசிவேண்டுநம்போ லிஷ்டாள் தருபொருளிற் 518

பாதிமுடிந்ததினிப் பாதிநிறைவேற்றுதற்கு
மாதயவாயுங்கள் மனதுகந்திங் கேதேனுஞ் 519

செய்தருள்வீரென்றுபல செப்பியவர்பின்றொடர்ந்து
மெய்தளர்ந்துவாடி மெலிவர்சிலர் மைமலிந்த 520

மாகனஞ்சேர்சோலைமலை மாதவற்குநற்குதிரை
வாகனமொன்றுண்டாக்கி வைத்திட்டேன் ஆகமதிற் 521

றங்கத்தகடழுத்தத் தங்களாலேன்றபொரு
ளிங்குதவுமென்றே யிசைப்பர்சிலர் செங்கமலை 522

மன்னுந்திருப்பதியில் வாழ்வெங்கடேசர்வைகும்
பொன்னின்விமானத்தைப் புதுக்குதற்குச் சொர்னமோ 523

ரெண்ணுயிரரூபா யெல்டமேண்டாகுமதிற்
பண்ணூர்ந்தல்வுசென்ன பட்டணத்தி னண்ணுமனப் 524

பத்தியுள்ளாரத்துகையிற் பாதிசகாயம்புரிந்தார்
சத்தியமேதர்மந் தலைகாக்கு முத்தமரே 525

யோர்சல்லிக்காசேனு முண்மையுடனேயளிப்பீர்
பாருள்ளமட்டும் பலன்கிடைக்கு · மாரங்க 526

கோவிந்தகோவிந்த கோவிந்தமென்றுனே
மாவிந்தையாக வளவர்சிலர் · மேவுநல 527

மானபுகழ்ச்சேதுதல யாத்திரைக்குப்போக்குவரத்
தானஜனங்க ளமர்ந்திருக்கத் தானே 528

வரும்வழியிலங்கோர் மடங்கட்டிநீர்மோர்
பருகுறவும்வேறுதண்ணீர்ப் பந்த லருள்பெறவே 529

செய்தேனதற்குத் திரவியமிலாமையினு
லேயவும்பாலுற்றே னருள்புரிவீர் வையகத்தோர் 530

சென்றுடுந்தீர்த்தப் பலனுமக்குச்சேருமவை
யொன்றுயிரமென் றுரைப்பர்சிலர் நன்றிதுவே 531

பாங்குபழனிக்குரிய பாற்காவடியெனவுந்
தாங்கியூர்தோறுந் தனித்தலைந்து வாங்குமதைக் 532

காலங்கடத்திக் கடம்பனைக்கொண்டாடிநல்ல
வேலையெனக்கொண்டார் வெகுபேர்கள் ஞாலமதிற் 533

## சாமியார்வேடம்.

சாமியார்வேடந் தரித்துவெளியேறிலிங்தப்
பூமியாரிற்சிலரும் போற்றுவர்க ளர்மிதுநல் 534

லங்கமெனக்கோரியதற் கானசடைக்கேற்றமயி
ரெங்கேகிடைக்குமென்த் துருவி யங்கங்கே 535

யம்பட்டன்குப்பைகளை யாழ்ந்துருவக்கிண்டியதிற்
செம்பட்டைநீள்மயிராய்ச் சேகரித்துக் கொம்படிப்பால் 536

பம்மாமலூட்டியிரு பாகஞ்சடைநீட்டிச்
சும்மாடுசுற்றிச் சுமையாக்கிச் செம்மியடர் 537

மென்மீசைதாடியினுல் வெள்வாய்தனைமறைத்து
கொன்மருவுசெப்புக் குழைபூண்டு தன்மதிபோற் 538

காவிக்கலையுடுத்திக் காறலைதோன்றுதடல
மேவுத்தரீய மிகவணிந்து கூவுகண்ட 539

நன்மணிருத்ராக்ஷமிட்டு நாலுமணித்தாழ்வடமுங்
கன்மஷஞ்சேருள்ளக் கரவடமும் மென்கரத்தில் 540

மாத்திரைக்கோலேந்தியிறு மாப்புடனண்ணுந்துநடந்
தேத்துறும்வெண்ணீற்றினையே ராளமாய்க் காத்திரமீ 541

தெல்லையறப்பூசிநயந் தென்னந்தையோபோட்டு
மெல்லுவன்போல்வாயை மினுமினுத்து நல்லகுமிழ்க் 542

கட்டைமேலேறியொரு காவிக்குடைபிடித்து
வட்டவிபூதிப்பை மடியிலங்க முட்டரிரு 543

சிடர்தலைகுனிந்து சேவித்துவாய்புதைத்து
மாடியமீதென்று வழிகாட்டத் தேடரிய 544

நாலாறுமூவாறு நன்குறவுமாய்ந்தவர்போல்
மேலாய்நடித்து வெகுமிடுக்காய்ப் போலியெனும் 545

வேஷமதைப்பூண்டு வெளிவரக்கண்டாடவர்கள்
மோசமறியார்சிவன் முத்தரென்றே நேசமுடன் 546

நின்றங்கடிபணிந்து நேர்மையுள்ளசாமிகா
ளின்றெங்களில்வந் தெளியேற்கு நன்றிதர 547

வேண்டுமெனவழைத்து மெல்லாசனத்திருத்தி
யாண்டகைவந்தாரென் றனைவரையுந் தூண்டியவன் 548

காலில்விழச்செய்து கனிந்தவணக்கமுடன்
மேலுபசார மிகப்புரியச் சாலமுள்ள 549

சாமியார்வாய்மலர்ந்து சாம்பசிவசாம்பசிவ
வோமெனவுமுச்சரித்தங் குற்றவர்க்கு நேமமுடன் 550

வெண்ணீறினிதளித்து மெய்ப்பெரும்பூதங்களைந்து
முண்ணகவும்புன்னகைகொண் டோதுவான் கண்மணிகா 551

ளிந்தநாய்க்குட்டியங்கா ளெங்கெங்கோசுற்றிவட
வீத்தகிரியிற்சிலநாள் வீற்றிருந்து பந்தங் 552

கடந்துமகாமேருவையுங் கண்ணுற்றிறைஞ்சித்
தொடங்குமுனிவோர்கடவச் சூழ லடைந்து 553

பலநாட்சமாதியினிற் பற்றறத்திருந்து
நலனுர்பொதியமலை நண்ணிப் புலனைந்தும் 554

வென்றகுறுமுனிவர் மெய்த்தாளுறவணங்கிப்
பொன்றரியபோகர் புலிப்பாணி தொன்றுவந்த 555

கொங்கணர்புண்ணாக்கீசர் கோரக்கர்சட்டைமுனி
செங்கணேறன்ன திருமூல ரங்கமர்ந்த 556

மச்சமுனிதேரையர்தன் வந்திரிசதானந்த
ரிச்சையிலாரோம ரிஷிமுதலாய் மெச்சுபல 557

சித்தரையுங்கண்டுதரி சித்தவர்களோடுறவாய்த்
தத்துவநூலாய்ந்து தவநீக்கி யத்தா 558

சதுரகிரியிற்சிலநாட் டங்கியதனில்
லதியுமநேக மஹான்க ளிதனுடைய 559

சத்துவசொரூபந் தனையோர்ந்ததுகடம்மோ
டொத்திருக்கச்சொற்றனவீ தொப்பாம லத்தைவிட்டுப் 560

பின்னும்வெளியேறியிந்தப் பேதைநாய்க்குட்டிசெய்த
தென்னென்னவற்புதமோ யார்கண்டார் சுன்னமொடு 561

மூப்பூவைங்கோல முதலாம்ரசகுளிகை
துப்பூர்ந்தபஸ்பசெந் தூரங்க ளெப்பொழுதுஞ் 562

சாவாவமிர்தரச சஞ்சீவினியுடனும்
மூவாவனேக முறைபலவும் பாவகமாய்ச் 563

செய்துமுடித்துளது தேர்ந்தரசவாதமதிற்
கைகண்டதிந்தக் கடுங்கழுதை மெய்சோர்ந்து 564

பிள்ளையில்லையென் றுவந்த பேதைமடவார்பலர்க்கும்
பிள்ளைகொடுத்ததிந்தப் பேய்மாலம் உள்ளபடி 565

மைவசியத்தாலுலக மன்னவர்கள்காரியத்தைக்
கைகூடச்செய்ததுமிக் கட்டையே வெய்யவிழி 566

கூனதிர்ச்சிமூங்கை குருடுபலநோய்களையும்
ஞானதிர்ஷ்டியாலு நலம்புரியும் வான்முகிலை 567

ஐயென்றுறுக்கி யகன்காசினிசெழிக்கப்
பெய்யென்னிற்பெய்யும் பெருமழையே வெய்யகஜ 568

வர்க்கமுறுதிக்குகளை மாருடியெல்மதியைத்
தெற்குவடக்காகத் திருப்பிவிடும் பொற்சுடிகைப் 569

பூவரையர்பார்த்துப் புதுமையீதென்னவொரு
மார்வரையைச்சீவனென மாற்றுமால் தாவிவரு 570

கோழித்தலையிலொரு கொம்புகாட்டிமறைத்
தாழ்சொற்பதிகர்பதி யாக்குமே யேழ்விரிநீ 571

ரூறுகடலைமட்டு முண்டான்முனிவனெழு
நூறுகடலை நொடியிலுண்ணுஞ் மாறரக்கன் 572

வெண்கைலையொன்றெடுத்தான் வீரமலவேயிதுவோர்
வண்கையினாலெட்டு வரையெடுக்கும் பண்பிலிந்த்ர 573

சாலமொடுமோகனமுச் சாடனங்கள்தம்பனங்கள்
மேல்வசியமிக்கவித்து வேடணங்கள் வாலைவடி 574

வக்கரமைம்பத்தொன் றமையவுருவேற்றியந்தச்
சக்கரங்களெல்லாந் தலையாட்டஞ் சக்கரத்தை 575

மாறித்திருப்பிவிடும் வஞ்சகரைச்சாய்த்துவிடும்
வேறுடலிற்பாய்ந்துபின்னர் மீண்டுவரும் பீறுசெல்வ 576

முற்றவரைப்பிச்சையெடுத் துண்ணவிடுங்கையினிதி
யற்றவரைலக்ஷப்பிர பாக்குமே மற்றவர்கைக் 577

கூழால்மதிகுலைந்து கொண்டவனுக்குள்ளடங்கி
வாழாதபெண்களையும் வாழ்விக்கும் பாழான 578

பூதப்பிசாசுகளும் பொய்ப்பில்லிசூனியமும்
ஓதியிதைக்கண்டா லொளியுமே யீதுநிற்கப் 579

பொல்லாதபெண்ணாசை பொன்னாசைமண்ணாசை
யெல்லாந்துறந்துவிட்ட திக்கிற்றி தொல்லுலகிற் 580

கொஞ்சகாட்டானிந்தக் கோலமுடனிருந்து
நெஞ்சில்விட்டதொட்டகுறை நீக்கியே தஞ்சமுற்ற 581

சீடரையுமோர்வாறு சீர்ப்படுத்திவிட்டுநிஷ்டை
கூடியோர்சமாதிக் குழிபுகுதும் நாடுமந்தக் 582

காலம்வரையாதரித்துக் காத்திருக்கும்புண்யகுண
சீலனெவனோவவனே செல்வனாம் மேல்வழிக்கொண் 583

டம்பூரணமுற் றடங்குசமயத்திலவற்
கின்பூர்ந்தவாத வியல்முறையும் ஐம்பூத 584

காயசித்தியோகசித்தி காட்டுமஷ்டசித்திகளோ
டாயதனலாபமுமுண் டாமென்றே யோயாமல் 585

வஞ்சமனச்சாமியார் மாயத்தாற்பேராசைச்
சஞ்சலப்பேய்கொண்டார் தனைமயக்கி விஞ்சுரச 586

வாதஞ்செய்வாமதற்கு மாமலையின்மூலிகையும்
வேதைச்சரக்குகளும் வேண்டுமெனப் போதகிதங் 587

காலரைமுக்காலாய்க் கவர்ந்துரகசியமாய்ச்
சாலவுயர்பொன்னரி தாரத்தையோர் நீலநிறக் 588

குக்குடத்துக்கூட்டிக் குறிப்பிட்டெடுத்தமலத்
துக்குளிரசத்தைத் துழாவியே பைக்குளுற்ற 589

சுன்னம்பணவிடையிற் றாவிச்சிலசரக்கோ
டின்னமொருபச்சிலைச்சா றிட்டரைத்துப் பின்னொருவர் 590

பார்க்கப்படாதெனவும் பாசாங்கடித்ததனைத்
தீர்க்கமுறத்தேய்த்த செழுஞ்செம்பில் மேற்கவசம் 591

பூட்டியிருபக்ஷம் புலர்த்தியுமோரக்ஷரத்தைத்
தீட்டியுருவேற்றிச் செபமுடித்து மீட்டுமொரு 592

மண்குகையிற்பெய்துலையில் மாட்டியழல்மூட்டிநச்சு
வெண்புகையிற்கண்புகைந்து மெய்கருக வெண்கலம்போ 593

லெத்தாம்புடத்திலெடுத் திம்முறையேசெய்துவந்தாற்
பத்தாம்புடத்திற் பசும்பொன்னாஞ் சத்தியமீ 594

தன்பர்காளுங்க ளதிஷ்டானுகூலமென்
றின்பமீதூர வினிதுரைத்து நம்புகுரு 595

நாதன்கடாக்ஷமுண்டு நல்லீரெனப்பிறராற்
கோதங்குறுதவளைக் கொண்டாடிச் சாதங் 596

கறிமீனுலர்ந்த கருவாடுமுட்டை
வெறியோடயக்கு மிகவாய்ப். பொறிமாறத் 597

தின்றுகுடித்துத் தினவெடுத்துமேலேற
மன்றலிளம்பேதையரில் மாலேற நின்றமனச் 598

சோகமுடன்காவித் துணிமறைவிற்செய்கின்ற
யோகமெல்லாந்தன்கைப்ர யோகமே வேகமுள்ள 599

பன்னகத்துக்கின்பால் பருக்கிவளர்த்தாலுமதன்
றன்னியல்பல்லாதுநலஞ் சார்வனவோ பின்னுமிந்தப் 600

பொய்ப்புளுகன்பத்துப் புடமிட்டுமன்றிட்ட
செப்பலதேயன்றியொன்றுஞ் சிக்காதா லிப்படுவான் 601

மோசத்தொழிற்கு முழுச்சாமியாரெனவு
மேசிப்புறமிட் டிகழ்ந்தனரால் தோசியிவன் 602

ஞானவெற்பாமென்ன நடித்தநடலையெல்லாம்
வேனலொப்பாய்க்குட்டு வெளிச்சமுறத் தானந்த 603

வீட்டார்மொறுமொறுத்து வீணுதிவீணனுக்குப்
போட்டுழைத்தோமென்ன பொருள்பெற்றோம் மீட்டுரச 604

வாதமுற்றித்தங்க மலையாய்க்குவிப்பனெனக்
காதுகுற்றிவாயாற் கழறினன் ஓதனத்தைப் 605

பூதம்போல்வாரிமண்டப் பூந்துகற்றானன்றியிந்தப்
பாதகனுலொன்றும் பலிதமில்லை யேதிவனைக் 606

கட்டியழுவதிலென் காரியமென்றேபலரும்
விட்டுரைக்கழுப்பான் வெகுண்டெழுந்து கெட்டிகெட்டி 607

சாமியாரேயிதுநாட் சாதித்தசித்துகளிப்
பூமியிலில்லாத புதுமையே மாமேரு 608

வெற்புமுதலாந்தலங்கள் மேவியுலகெங்குமதி
யற்புதநடாத்தியவென் னப்பனே கற்பமுண்டு 609

மூவாஞ்சைநீங்கி முடிவிற்சதவிகாரத்
தேவாஞ்சைபூண்டெழுந்த செல்வமே நோவின்றிக் 610

கற்போலிருந்தவர்க்குக் கைமருந்தொன்றூட்டிநமன்
பொற்பதியிலேற்றிவிட்ட பூரணமே நொற்பவுல 611

கத்தவர்நோய்தீர்த்துக் கரும்பொனைச்செம்பொன்னுக்கிப்
பக்தர்களுக்கீந்துவிடும் பாக்கியமே புத்தெனுமோ 612

ரள்ளற்படாமே வரியமலடிகட்கும்
பிள்ளைப்பேறீந்த பெருந்தகையே யொள்ளியவாள் 613

மன்னவர்கள்சிந்தை மதிக்கும்படியவர்க்கு
நன்னயமுண்டாக்கிவைத்த நற்றவமே    துன்னியலோ 614

கத்திரசவாதக் கடுங்கழுதையென்றுரைத்தென்
புத்தியைப்பித்தேற்றிவிட்ட பொய்க்கடலே    கைத்துறமென்

றெய்ப்பறயானீந்தசரக் கெத்தனையோவத்தனையும்
மைப்புகையாய்ப்போக்கிவிட்ட மாமணியே    யிப்புடத்திற் 616

பொன்மாற்றுக்காட்டுவனெட் டாமெனப்போதித்துநிதம்
பம்மாற்றுக்காட்டிவந்த பாழ்ம்பதரே    சொன்மாற்ற 617

மாலால்மயக்கி வளர்குடியைத்தேய்க்கநச்சுக்
கோலாய்முளைத்தெழுந்த கோலமே    பாலோடு 618

நாக்குருசியாகவுண்டாய் நான்கடனுக்குள்ளாகித்
தேக்கிலைநீர்போலுந் தியங்கினேன்    போக்கழிஞ்சு 619

போனதுபோகட்டுமெந்தன் புத்திக்குறைச்சலினை
நான்வெறுத்துப்பேசுதற்கு நாவுண்டோ    மாநவத்திற் 620

றேற்றுவொழுக்க மொருவன்கனுண்டாயிற்
றாற்றுதே தூரவிடலென்வுஞ்    சாற்றுகின்ற 621

நாலடியுட்டோற்றமதை நத்திநின்றேன்மற்றவர்கள்
நாலடியிட்டோட்டுவதே ஞாயமென்று    மேலடர்ந்தார் 622

தாட்டுவையுருமுனமே தாமதமிலாதுகம்பி
நீட்டுவையென்றேச நிலைதளர்ந்து    வீட்டைவிட்டுத் 623

தாலோட்டந்தந்தமிகத் தானேவறண்டிடநீள்
காலோட்டங்கொண்டார் கடுங்கதியாய்    ஞாலமதி 624

லீதேதொழிலா யியற்றிப்பலர்கள்குட்சி
வாதைக்குழன்று வருந்தினரால்    கோதனைய 625

## கோட்ங்கி சரித்திரம்.

கோடங்கியோதலினுங் கோடங்கியாதலினுங்
கோடங்கியென்றுலகங் கூறநின்றோ    றொடெங்குஞ் 626

சென்றுபலபேதையர்பாற் றெட்டிப்பொருள்கவர்வா
மென்றுறுதிகொண்டா னெழும்பினன்    அன்றொருவன் 627

வைகுமனைபோந்தெனது வல்லமையினாற்சகல
தெய்வமுமென்னேவல்வழிச் செல்வனவாங் கைமேலே 628

காட்டுங்குறியுரைப்பேன் கஞ்சிக்கோடங்கியென்று
நாட்டார்வைத்தாரெனக்கு நாமமே மேட்டு 629

மலையாளஞ்சென்றுபல மந்திரங்கள்கற்றுத்
தலையானடக்கச் சமர்த்தன் அலையாமற் 630

நீட்டியுள்ளங்கையினிலோர் தேரையெடுப்பேன்கொடிய
காட்டெருமைப்பாலைக் கறந்திடுவேன் பூட்டுடைத்துக் 631

கைத்திருட்டுச்செய்வரையுங் கண்டுபிடிப்பேன்றிருடி
வைத்திருக்குஞ்சொத்தை வரவழைப்பேன் சத்துருக்க 632

ளேவல்வஞ்சப்பில்லி யிடர்சூனியமுதலாய்த்
தீவினைகள்யாவுந் தெரிந்தெடுப்பேன் பூவுலகி 633

லுள்ளவர்களென்குறிகேட் டுள்ளமகிழ்ந்தென்கரத்தில்
வெள்ளிவளைபூண்ட விருதிதுகாண் தெள்ளுமனத் 634

தேர்ச்சியுற்றகம்பளத்தார் செல்வாக்குடனெனக்கங்
கூர்ச்சிதம்வைத்த வுடுக்கிதுகாண் மாச்சரிய 635

மில்லிந்தமூலையினி லேவுநச்சுப்பல்லியொன்று
கல்லென்றுநித்தங் கதறுதுபார் வில்லங்கம் 636

மெத்தயிருக்குதினி மேலிருகாற்சிவனையோர்
சத்துருப்பேய்க்கங்குவைத்துச் சாடுதுபா ரித்தைநீ 637

ராராய்ந்துதேடியுமை யாண்டகுலதெய்வத்தை
நேராயழைத்து நிலையறிந்து பாராமற் 638

சும்மாவிருந்தாற் சுகமுண்டோவென்றிந்த
வெம்மாயக்கார வெறும்புளுகன் செம்மாந்து 639

சொன்னதுகேட்டஞ்சியவன் சொந்தமனையாள்நெடுநாள்
பின்னமுற்றநோயாற் பிதற்றுவது முன்னமதைக் 640

கண்டுகுறிபார்த்துக் கருத்திலறிவோமெனவுட்
கொண்டுமிகவேண்டவிந்தக் கோடங்கி யுண்டிபெற 641

லாமென்றுடுக்கை யருச்சித்ததைவணங்கிப்
பூமலிசாம்பராணிப் புகைமணக்கக் காமுதிர்ந்த 642

வெற்றிலையும்பாக்கும் வெறித்தபுகையிலையு
முற்றியசுண்ணாம்பு முதலில்வைத்துத் தொற்றியவோர் 643

தட்டெருவில்மண்பரப்பித் தாழக்குழிபதித்து
மட்டியெச்சில்துப்ப மருங்கிலிட்டுக் கட்டளையாய்க் 644

காணிக்கைக்கேதேனுங் காசோநெற்றானியமே
பாணிப்பீரென்னப் பசப்புதலாய்ப் பேணியிவன் 645

மற்றுமுடுக்கைமெல்ல வாழ்த்தியெடுத்ததனைச்
சற்றேதொனிகிளம்பத் தட்டியே யொற்றைமருப் 646

பத்திமுகமாய மைந்துவிளையாட்டயருஞ்
சித்திக்கணபதியுன் சீர்பாதம் பத்திவைத்துப் 647

போதரவிந்தத்தாலும் பூசித்தேனாயேனுக்
காதரவாய்நின்றிங் கருள்புரிவாய் மோதுசுட 648

ரான்றவடிவேலா லசுரர்குலமாய்த்தமரர்
கோன்றனைவிண்ணாட்டிற் குடியேற்றித் தேன்றளிர்க்கைத் 649

தெய்வப்பிடிமணந்த தேவேயுமையீன்ற
சைவக்கொழுந்தே சடாக்ஷரா செய்யநிற 650

மின்னிரவிபற்றகர்த்து வெய்யதழல்கையறுத்துத்
தன்னையிகழ்தக்கன் றலையறுத்துப் பின்னரயன் 651

வாள்விபுதரோடுபொன்ற மால்புறமிட்டோடவுந்தி
வேள்விதனையழித்த வீரபத்ரா நீள்குடும்ப 652

முள்ளவர்க்குக்கேடுநினைப் போன்குலத்தைவேரறுக்கும்
வள்ளலெங்கள்கொந்திகுள மாயாண்டி யொள்ளியகூர் 653

முத்தலைவேலேந்தி முடுவற்படைநெருங்க
மைத்துரங்கமூரும் வைரவா தத்தைநிக 654

ராரியப்பூமாலைக் கருங்கழுவிலேற்றிநின்ற
பாரியகாத்தய்யாநீள் பஞ்சவர்னம் ஓர்கலப்புற் 655

கள்ளுடன்சாராயங் கலந்துகுடித்தேப்பமிட்டுத்
தள்ளறவூர்காக்குஞ் சமையணனே யுள்ளடிய 656

ராபத்துவேளைதனி லஞ்சலென்றுவந்துமனச்
சோபத்தைத்தீர்க்குஞ் சுடலைமுத்து கோபத்தி 657

யார்த்தபெரும்பூதமெல்லா மஞ்சிப்பதுங்கவரு
மூர்த்தண்யமுத்து முனியாண்டி கீர்த்தியினு 658
லோசைவிளங்கி யுலகந்தனில் வழங்கும்
பாஷைபதினெட்டாம் படிக்கருப்பா வாசவற்கும் 659
காணக்கிடையாத கட்டிக்கரும்பேயென்
சோணைக்கருப்பா சொரிக்கருப்பா சேனுலவுஞ் 660
சின்னக்கருப்பா செறிந்தகரியமுகில்
வன்னக்கருப்பா மடைக்கருப்பா முன்னேறும் 661
வானிக்கருப்பா வளர்சங்கிலிக்கருப்பா
கூனக்கருப்பா குசக்கருப்பா வூனருந்து 662
மந்தைக்கருப்பா வருதோரடிக்கருப்பா
சந்திக்கருப்பா தடிக்கருப்பா வந்தவனைத் 663
தொட்டுப்பிடித்துவெகு துட்டுப்பறித்திடுமம்
பட்டக்கருப்பா பறைக்கருப்பா துஷ்ட 664
வுருமக்கருப்பாவென் னுள்ளத்தில்மேவு
மருமைப்பெரியகருப் பையா பெருமையுள்ள 665
கத்தரிக்காய்ச்சித்தா கழுவடிமுத்தையாவென்
சத்துருவைக்காய்ந்த சடையாண்டி சித்தனெனுங் 666
கோரக்கநாதா குறையாப்பலிவாங்கி
மூரிக்குலாவிவரு மொட்டையா பேர்பெற்ற 667
தொட்டியத்துச்சின்னு துரைமதுரைவீராசொன்
மட்டுக்கடங்கா வரிப்புலியே கட்டழகி 668
யாதிகம்பையாற்றி லருந்தவஞ்செய்துநிற்குஞ்
சோதிகாமாக்ஷிசிவ சுந்தரியே வேதமுறை 669
யங்காளதேவியெனை யாண்டுகொண்டசோதியருள்
மங்காதஞான மணிவிளக்கே யங்கெனக்கு 670
வாக்குக்கொடுத்தவளே மாதுசக்கதேவிமுத்து
ராக்குமுத்துப்பேச்சி ரணவீரி கோக்குமணிப் 671
பாவாடைக்காரி படுநெருப்பிற்பாய்ந்தவளே
பூவாடைக்காரி புதுமையுள்ளாய் கோவைமுலை 672

வல்லைக்கடாவும் வடபத்ரகாளிதூர்க்கை
யெல்லைப்பிடாரி யிருளாயி நல்லவையம் 673

பட்டிச்சடைச்சி பழிதீர்த்தவீரமல்லு
தொட்டிச்சிநான்ற துணைமுலையாய் கொட்டுங் 674

குறிமுகத்தில்நின்றெனைபாட் சொண்டுவழிகாட்டி
யறிவுறுத்துமாசாணத் தய்யா நிறமார் 675

மணியேமறுவிகந்த மாதவனேகற்றார்க்
கணிகலமேமாசாணத் தய்யா பணியுகந்த 676

கற்பகமேஞானக் கடலேயருணிறைந்த
பொற்பகமேவேதாந்த பூரணமே யற்புக் 677

குகந்தவடியேற் குறுநிகொடுநீங்கா
றகந்தனில்வாழ்மாசாணத் தய்யா திகழ்ந்த 678

பொருளேபொருள்முடிவே போதாந்தமேவு
மருளேயென்மாசாணத் தய்யா தருவிற் 679

குருமூர்த்தமாயென் குறிமுகத்திற்றோன்றி
யருள்பூத்தமாசாணத் தய்யா மருவுபுக 680

மேற்குஞ்சபையோ ரிகழாமலித்தருணம்
வாக்குதவுமாசாண வள்ளலே மூர்க்கனிவன் 681

திட்டுடையானென்றெள்ளித் தெய்வங்காணீவிரெனைக்
காட்டியெல்லைவிட்டுக் கடவாதீர் கூட்டமுடன் 682

நிச்சயமாயென்னெதிரே நின்றாங்களப்பனுக்கு
வைச்சகுறிதன்னை வழுத்துவீர் வைச்சகுறி 683

தேவரோமானிடரோ திண்ணியநாற்காலினமோ
தாவிவரும்புள்ளோநற் றூவரமோ பூவின்மிசை 684

யூர்ந்துதிரிவனவோ வுந்திநீர்வாழ்வனவோ
சோர்ந்தவுடையோநகையோ சொர்னமோ சார்ந்தவிதிற் 685

சோரங்களேதுமுண்டோ தோன்றல்பிறவாக்குறையோ
காரங்கொள்மாற்றார் கலகமோ பூருவத்தின் 686

கன்மவினைப்பயனோ கண்ணேறோநாவேறோ
முன்னவர்கள்திட்டு முறைப்பாடோ பின்னிந்த 687
ஊரார்குழப்பமுண்டோ வுற்றபொருட்சேதமுண்டோ
பாராளும்வேந்தர் பகைவலியோ நேராத 688
தெய்வக்குறைகளுண்டோ செய்வினைக்கோளாறுளதோ
மெய்வைத்தென்னுவில் விளம்புமெனப் பொய்வைத்த 689
சிந்தையினுன்கண்ணீர் சிலிர்க்கவுளமயங்கிக்
குந்தகனுமிந்தக் குறியுடையான் புந்தியினி 690
லென்னநினைந்திட்டானோ யாதோவென்சொல்வோமென்
றுன்னியலமுற் றழலுங்கால் முன்னிருந்து 691
தன்னுடையதுப்பன் சயிக்கினையாய்க்காட்டியவன்
சன்னைசெய்வானென் னுந் தைரியமாய்ப் பின்னிடைந்து 692
மாறிவருந்தும்பொழுதில் மர்சாணத்தெய்வமரு
ளேறியாவேஷ மெழுந்தனபோற் சீறிவிழுந் 693
தூக்கமுடனென்சா னுடலைமிகவளைத்து
மூக்காலழுது முகநோக்கிக் கேட்கிறையோ 694
தத்தரமாயிங்கு சமர்ப்பித்ததக்ஷிணையோ
வைத்ததுவுசீரியாய் வைக்கவில்லை யத்தத்தா 695
வெற்றிலையுஞ்சச்சு வெறும்பாக்கதுவும்வெட்டை
கற்றைப்புகையிலையுங் காரமில்லை மற்றதிருக் 696
கட்டுமப்பாநீயென் கணிப்பறிவான்வைத்தகுறி
மட்டுமதைச்சொல்வேன் வளர்க்காதே பிஷ்டமுள்ள 697
சீவன்றிடமுறுதி சேர்ந்தமனைக்ஷேத்ரமொடு
பூவில்வழங்கும் பொருளாகும் பூவிலது 698
தாவரமேயாமெனவுந் தன்னவனைநோக்கவவன்
மேவியெதிர்நோக்கா விதமறிந்து தாவரமே 699
யில்லையப்பாசொல்லவொட்டா தென்னைமருட்டியிங்கோர்
பில்லிப்பேயூடே பிரட்டுதப்பா மெல்லவதை 700
யாட்டிவைத்துக்கோட்டிகொள்வே னப்புறமாகட்டுமிப்போ
தீட்டுகுறிசொல்லவென்னை யெல்லிர்தீர் தீட்டிமிகக் 701

கம்மாளர்செய்யுங் கனத்தபணியாமெனவுஞ்
சம்மானா னுன்மனதைச் சோதித்தேன் விம்மாதே 702

தேகமுள்ளசிவனப்பா சிவன்பலவிதமே
யாகுமப்பாசோதித் தறிகிறேன் வேகமுள்ள 703

நாலுகாற்சாதி நடமாடுஞ்சிவனென்று
ஞாலமுள்ளோர்சொல்வரதை நம்பாதே மேலான 704

ஆடவலேயாமென் றயர்ந்துமெல்லநோக்கவயல்
மாடிருந்ததுப்பன் மயிர்கோதுஞ் சாடையிவ 705

னுற்றுணர்ந்துகொண்டா னுடுக்கைமுழக்கியிதோ
வெற்றிக்கருப்பன்வந்து விட்டேனென் றெற்றியுதைத் 706

தாக்கிரமித்துவாயா லதட்டிக்கடுகடுத்து
நாக்குளறத்தேக நடுக்கமெழக் கூக்குரலிட் 707

டேண்டாகோடங்கியினைத் தேமைமதிபோயினையே
நீண்டவெனையேனி நினைக்கவில்லைத் தாண்டிமிக 708

மற்றக்கருப்பனுட வண்பெயர்சொன்னுபலது
வெற்றிக்கருப்பனென வேண்டினையா முற்றுகுறிக் 709

காறியென்றமாசாண மாய்ந்ததனைச்சொன்னுறை
சாதிகெட்டமுட்டாட் டடிப்பயலே யேதுனக்குக் 710

கஞ்சாமயக்கமுண்டோ கள்ளுண்டலாகிரியோ
வெஞ்சாடம்போலு மிரளுகின்று யஞ்சாதே 711

நின்றேன்குறிமுகத்தில் நேர்ந்துகுறிவைத்தவனீ
யன்றேநெருங்கி யருகினில்வா வின்றுனது 712

பொன்னுனசிக்ஷையினிற் பூரித்துவைத்தகுறி
சொன்னுலெனக்குவளை சூட்டுவையா யின்னமொரு 713

நல்லவடையாளமிங்கு நல்குவையா னுமதைச்
சொல்லவாசொல்லவா சொல்லவா மல்முடிமே 714

லல்லிருக்குங்கீழே யழகார்பிறைபிருக்கும்
வில்லிருக்குமோர்தா மரைமீதிற் பல்கிமிக 715

வம்பிருக்குமைந்து மலர்பூத்திருக்குமிரு
கொம்பிருக்குமின்னற் கொடிதாங்குந் தம்பிநீ 716

யாராய்ந்துபார்க்கி லவையெளிதிற்றோன் றுமதி
வீராவுனக்கு விளங்கலையா பாரிலவள் 717

கன்னியடாகன்னியடா கைநிறைந்தபொன்னிலையு
மன்னியிருகண்ணிறைந்த மாணிக்கம் மன்னவட்குத் 718

தேகத்திற்பீடையன்னஞ் செல்லா தருவருப்பு
மாகஸ்தியான வயிற்றுவலி சோகந்தா 719

லச்சந்திகிலு மதிரடியுஞ்சொற்பனமும்
மச்சவிழிநித்திரையில் வாய்புலப்பஞ் கொச்சமுங்கேள் 720

முந்தைநாளெல்லி முதற்சாமவேளையினிற்
றெருந்தரவதானவிவள் சொற்பனத்தில் வந்துதப்பா 721

சூலமிட்டகாளையொன்று துள்ளிவெடிவால்முறுக்கி
ஞாலநடுங்க நமன்போலே மேல்விழுந்து 722

மோதியதன்கொம்பால் முடுகிமிகப்பாயவிந்த
மாதுநிடுக்கிட்டெழுந்து வாய்குளறிப் பேதுற் 723

றுடனேமறந்துவிட்டா ளுண்மைநீர்கேட்டால்
மடவார்க்குத்தோன்று மயக்கம் அடேயிதுவு 724

நாட்டுப்பிணியோ நவக்கிரகதோஷமதோ
கோட்டிப்பேய்செய்திடுங்கோட் டாலையோ கேட்டறிந்து 725

கொள்வோமென்றெண்ணியிந்தக் கோடங்கிபக்கலுற்று
யுள்ளபடிசொல்வேனென் றேலமிட்டுத் துள்ளி 726

யுடுக்கைவலக்கையினு லோங்கியுரத்திற்
றிடுக்குறவுமோதித் திடீரென் றிடத்திற் 727

றிருகிவிழுந்து திசைநான்கும்பார்த்துக்
கரிசுடன்முன்கையைக் கடித்துப் பொருவிலெனை 723

யாரென்றிருந்தா யசுரரமராவதியிற்
போர்வென்றுதேவர்சிறை புக்குநாட் கார்கொண்டோன் 729

தையலயிராணியுடன் றப்பிவெளியேறியெம
தையனிடமெய்தி யடைக்கலமாய்த் தையல்தனை 730

வைத்தரன்பாலுற்றானம் மாதவனத்தூடணுகி
மெய்த்தவமேநாடி விழைவுற்றாள் கத்தனிட்ட 731

ஆணைசிரமேற்கொண் டவள்காவலுற்றிடுங்கா
லாணசுரன்றங்கை யசமுகியென் பாணொருங்கி 732

யாங்கவளைப்பற்றி யடர்த்துவலித்தேகலுமப்
பூங்குவளைக்கண்ணாள் புலம்புறல்கேட் டோங்கலென 733

வுற்றிழுத்தகையைவெட்டி யொண்சசியைமீட்டியவள்
நற்றவமீடேற்றினவ னனலவா வெற்றிதிகழ் 734

மாகாளரென்றுமையன் வாசல்ப்ரதானியென்றும்
பாகார்ந்தவாட்கைப் படையனென்றும் ஆகாயத் 735

துன்னிவளர்ந்த வுறங்காப்புளியனென்றும்
பன்னுபதினெட்டாம் படியனென்றும் மன்னியிந்த 736

அட்டாளதேச மடங்கச்சிறைபிடித்துத்
தொட்டாற்பொன்னஞ்சு துலையேற்றும் விட்டேனா 737

ஈற்றுக்காணிக்கைக் கிரண்டுபணஞ்சூதகநீ
ரூற்றுக்காணிக்கைக் கொருபணமாய் நாற்றிசையோர் 738

கப்பமிடவெற்றிக் கருப்பன்கருப்பனென்றே
செப்பமுடனாணை செலுத்தநின்றே னப்பா 739

பிறங்குமெனது பெயர்சொன்னாற்காகங்
கறந்தபாலுண்ணாது கண்டா யறிந்திருந்தும் 740

போனவருடத்திற் புதுமைத்தினத்திலிவள்
தானுமுருமத்திற் றனியாக மேனியினிற் 741

கொஞ்சுநகையணிந்து கோடிப்புடவைகட்டி
மஞ்சட்குளித்து மலர்சூடி யஞ்சாமற் 742

செங்கைவளைமின்னச் சிலம்புபுலம்பவிரு
கொங்கையசையக் குடமெடுத்துக் கங்கைக் 743

கரையோரமாயென் கடியநிலைக்கு
வரலாமாசொல்லிந்த வம்பி சருவிநா 744

னன்றேயோர்போடா யறையவெழுங்கால்மதுரைக்
குன்றநிகருமொட்டைக் கோபுரத்தான் மன்றாடி 745

வேண்டினதினாலுமுயிர் வேதனைசெய்யாதுவிட்டுத்
தூண்டியிந்தமரைத் துயர்ந்தேனா னாண்டுமுதல் 746

மங்கைக்குநேர்ந்த வருத்தமறியாமலுநீ
பங்கப்பாடுற்றுப் பலவிதமா யங்கங்கே 747

பண்டிதனைத்தேடிப் பணச்செலவினால்மருந்து
கொண்டதிலுமென்ன குணமாச்சோ துண்டரிக 748

கொற்றக்கருப்பனுட கோட்டாலையல்லாது
மற்றொன்றுவில்லை மயங்காதே யிற்றேநாட் 749

காவெனக்குநல்கக் கருங்கச்சைகையறுவாள்
கூவும்பறவைபத்துக் கோழிமுட்டை தாவிநுகர் 750

கள்ளுச்சாராயங் கருவாடுகுதூடனே
யுள்ளபணம்பதினொன் றேகாலும் மள்ளியெறி 751

பூசைமயானத்திற் பொழுதஸ்தமானபிற
காசரணையாக வனுஷ்டித்திவ் வாசானால் 752

நல்லனவாய்நீயு நடந்துகொண்டானாலுமிந்த
மெல்லியலைவிட்டு விலகுவேன் றொல்லைவினைத் 753

துன்னுமிடர்மாற்றிக் சுகந்தருவேனப்பாநீ
யின்னமொன்றைக்கோறி யிருக்கிறா யன்னதுகேள் 754

சித்தமதிலின்னமுமோர் செல்வனில்லையென் றுவிம்மி
மெத்தவுமென்மீதில் விசனமுற்றா யித்தனைக்குங் 755

காலாவதியாலிக் கன்னிதுன்பத்தாலுமுன்னா
லேலாதிருந்தானா னென்செய்வேன் லோலாய 756

மானதுமின்றேடொழிந்து தப்பாநீநாளைமுதல்
மேனகையொப்பாமிவளை மேல்நடத்து நானுமிருங் 757

திப்பிறைபோனாலு மினிமேல்வருகிறமா
தப்பிறையைக்கட்டித் தருகிறேன் கர்ப்ப 758

மதுவேகுளியா யருந்திங்கள்முற்றிச்
சுதனைப்பெறுவாள் சுகமா யிதயமதிற் 759

சிந்திக்கவேண்டாநற் செல்வன்பிறந்தபின்பு
வந்திக்கநீயு மனைவியுமாய். வந்தெனது 760

சன்னிதானத்திற் றரும்பூசனைபுரிந்தென்
பொன்னாலயவாசற் பூமரத்திற் பின்னிமலர்த் 761

தார்வைத்ததொட்டில்கட்டித் தாலாட்டிமைந்தனுக்கென்
பேர்வைப்பாயிந்தா பிடிவலக்கை பூரணமாய்த் 762

தந்தேன்விபூதியந்தத் தையலுக்குப்பூசவைநீ
சிந்தையுருநின்னமொன்று செப்புவே னுந்தனுடன் 763

காணிவழக்கிற் கறுவிநெடுநாட்பகையா
யூணுமெதிராளி யுனக்குண்டே வீணிலவன் 764

தீவினையாஞ்சூனியத்திற் றேர்ந்தநூற்காரனிடம்
போய்வருந்திவேண்டும் பொருள்கொடுக்கப் பாவியவன் 765

மாரணத்தினாலுமொரு மாப்பாவைபண்ணிவெகு
காரணத்தைச்செய்து கடைசியா யூரணுகி 766

யுன்செய்த்தலத்தி லொருமூலைப்பாரிசத்தும்
புன்செயிலும்ஸ்தாபித்துப் போய்விட்டா னன்றமுத 767

னற்குடிக்குத்துன்பமடா நாளும்பலயிழவை
பொற்கொடிக்குநேர்ந்த புலையாட்டுத் தூற்கதியாய் 768

நின்றதுநின்றாற்போ னிறைந்துபலுகியசேங்
கன்றாடுமாடு கனசேதந் துன்றுபல 769

பாடுபட்டுப்பூமிமுகம் பாராமற்பூராவாய்
நாடுவிளைய நடுச்சாவி தேடுமினைப் 770

பொல்லாங்குராஜபகை போற்றுபிதிரார்ச்சிதச்சொத்
தெல்லாம்பலவா றிறக்கமே யில்லமதிற் 771

திண்டாட்டமாகத் தினந்தோறும்வாதுபுரி
பெண்டாட்டிமூப்புப் பெருங்கலகங் கண்டிதைமுன் 772

சொல்லுந்துவக்கமெனச் சூதாய்மருட்டினதிப்
பில்லியெனுமேவற் பிசாசன்றோ கல்லல்புரி 773

சூனியத்தைநீக்கிச் சுபசாந்திசெய்யிவில்லந்
தானியத்தைப்பெற்றுத் தழைத்தோங்குந் தானிதனுக் 774

கானசாமான்களுட னற்றைப்புழுக்கரிசி
யீனுப்புருவை யிளஞ்சேவல் மீனிறைச்சி 775

குற்றிச்சாராயங் குடக்கட்கடற்கருவா
டுற்றபணமிருபத் தொன்றேகால் முற்றுமிந்தக் 776

கோடங்கிதன்பாற் குறையாமணிகொடுத்தே
யாடங்கஞ்சற்று மணுகாமற் காடொன்றி 777

வெள்ளிக்கிழமை விடியவொருச்சாமத்துக்
குள்ளிந்தப்பூசை யுகந்தளிப்பாய் தெள்ளியனிப் 778

பூசாரிமேனுன் பொருத்தமுடனிறங்கி
வேசாறும்பில்லி வெளிப்படுத்தி மோசமதாய் 779

செய்தவினைசெய்தவனைச் சேரும்பழமொழிபோ
லைபவிதைமாறி யடிக்கிறேன் வெய்யபயல் 780

பாயோடேயொட்டிப் படர்கொண்டுளம்வருந்திப்
பேயோடேசோறு பிசைந்துண்டு நாய்போலுங் 781

கூவியழச்செய்வேன் குறிப்பைபறிவையெனச்
தாவிமிகச்சீறிச் சளசளத்துக் கோவில்விட்டு 782

வந்துவெகுநேரமப்பா வாவுபலதேவதைகள்
கந்தமலரோடுகந்து காத்திருப்பார் அந்தோநான் 783

தாண்டிமலையேறுகிறேன் தாகவிடாய்மெத்தவெனக்
கீண்டியொருபாலுடுக்கைக் கீழ்வைத்தா னுண்டோர் 784

குடநிறைந்தகள்ளிற் குறுந்துளிவிடாமற்
கடகடெனமண்டிக் கவிழ்த்திக் குடல்பிதுங்க 785

முத்துக்குறியு மொழிந்துமறுபடியும்
எத்தனுடுக்கை யெடுத்தாட்டி வைத்தாரக் 786

கட்டினேன்காவலென்று காணிக்கையத்தனையு
மட்டறவேதன்கை வசப்படுத்தி முட்டர்களை 787

யேமாற்றிநாளு மிதுபிழைப்புற்றேதிரிந்த
காமாட்டியர்கள் கணக்கிலரே பூமாட்டில் 788

## வைத்தியன் சரித்திரம்.

வல்லாருங்கொங்கை மயிலேவைத்தியர்கள் தொல்லாயுள் 789
பல்லாரிற்சில்லோர் பரிசுரைப்பேன்

வேதமென்பதின்ன வித்மென் றுதானுணராப் மேதையுயிர் 790
பேதையரநேகரிந்தப் பேருலகில்

காக்குமருந்திவதென்னக் கால்நோயைத்தான்முழுநோ னூக்கமொடு 791
டாக்குமாசாமிகளி லாமொருவ

தேகமழியாப்பதினெண் சித்தர்திருவாய்மலர்ந்த சேகரமாய்க் 792
வாகடநூலென்ற மறைமுழுதுஞ்

கற்றுணர்ந்தபண்டிதனென் கைமுறைதப்பேனெனவும் முற்றியநோய்ப் 793
வெற்றியுடன்பேசி வெளியேறி

பூராயங்கண்டு புகட்டுமவுடதத்தாற் நாராய்ந்து 794
தீராததுண்டோ திறமறிவீ

கைநாடிபார்த்துக் கருத்திலோராண்டுநிகழ் பைநாகங் 795
மெய்நாடுந்தாது மிகவுரைப்பேன்

தீண்டியிறந்தோர்பிழைக்கச் செய்வேன்றண்ணீரமிழ்ந்தி வேண்டார்செய் 796
மாண்டவரைமீட்கும் வகையறிவேன்

வஞ்சனைகள்பில்லிசூனி மாருட்டமுள்ளவெல்லா வெஞ்சினங்கொண் 797
மஞ்சனத்தாற்கண்டுபிடித் தாற்றுவேன்

டந்தரத்தில்வாவு மலகைமுதலானதையோர் னெந்திறமை 798
மந்திரத்திற்கட்டி மடக்குவே

யெங்கும்ப்ரசித்தமுண்டா மீசன்பொதிகையினிற் பைங்கணுற்று 799
றங்குங்குறுமுனிக்குத் தாசன்ஞன்

நாட்டிலநேகர் நமன்கைப்புகுந்துமென்ற தாட்டிகரா 800
லூட்டுமருந்தா லுயிர்பிழைத்தார்

யெத்தனையோபேர்களிருந் தாலுமெனைப்போலுலகி சித்துமணி 801
லஸ்தநலம்பெற்றவர்க ளாருமிரார்

மாத்திரையானந்த வயிரவனகோரகுண
சாத்தியஞ்சேர்காலாந் தகனெடுசேர் வாய்த்தபுகழ் 802

மாவலியசிந்தா மணிவாதராட்சதனற்
கோவனையபூபதிகோ டாகுளிகை நோவகற்று 803

மக்கினிகுமாரிசுய மக்கினியுகாந்ததிரி
விக்ரமனெனப்பேர் விளங்குரச முக்ர 804

விஜயநாராயணன் விநோதசருவத்ர
வசியகோடாகோடி மாத்ரை யுசிதசண்ட 805

மாருதசெந்தூரமணி வர்ய்ந்தரசசெந்தூரத்
திரமிகுசாதிலிங்கச் செந்தூரங் காரமுள்ள 806

வப்பிரகசெந்தூர மதிவீரசெந்தூரந்
திப்பியமதானவயச் செந்தூர முப்பூவிற் 807

றுளகசெந்தூரந் தளுக்கறவுநீற்றியமெய்ச்
சூள்ஜயகுலாந்தகசெந் தூரமா மாளரிபோல் 808

வீரமிகுங்காள மேகநாராயணசெந்
தூரமடமாதர்கள்செந் தூரமுதற் சாரபற்பஞ் 809

சிங்கபற்பமிக்கநலஞ் சேரும்பவளபற்பம்
வங்கபற்பமீயா மனுடபற்பந் தங்கபற்பந் 810

தாளகபற்பந் தனிநாகபற்பமுயர்
கோளகபாஷாண கொடியபற்பஞ் சூளுரைத்துப் 811

பாரில்விருத்தர்களைப் பாலர்வடிவாக்குநல்ல
பேர்பெற்றுயர்தாம் பிரபற்பம் பாருமிதோ 812

தேந்தமுவுநல்ல திராவகரசாயனங்க
ளேய்ந்தபதங்கமி லேகியங்க ளாந்தயில 813

மாச்சரியமின்னு மடங்காதடங்காதென்
றேய்ச்சலில்லாதிந்த வுழுவாடி பேச்சில்மிக 814

வல்லாமைபேசி மணியும்பிணியுளர்பா
லொல்காமற்சென்றங் குறவாடி மெல்லவவன் 815

மென்கரத்தைப்பற்றி விரனெட்டிவாங்கியிவன்
றன்கரத்தினலுந் தடவியே பின்குறித்த 816

நாடித்தலத்தி னடுமூவிரல்பதித்து
நாடியண்ணுந்து நடுமூகட்டை நேடிப் 817

புருவமெழப்பார்த்துமெலப் புன்சிரிப்புத்தோன்றச்
சிரமசைத்துச்சற்றே சிந்தித்துத் தருமிடக்கைத் 818

தாதுவையும்பார்த்தபின்பு தன்விரற்கீழ்ச்சுண்டியதி
னேதுவைக்கண்டான்போ லியம்புவான் . தீதோவ 819

மாரியுலகுக்காற்றும் வண்மைபோல்யானொருவர்
சீரியகைம்மாறுபெறச் சிந்தியேன் ஆரியர்கள் 820

பைத்தாதுநல்கினும்பற் றாதுப்ற்றாதென்பருங்கள்
கைத்தாதும்பார்த்துக் கணித்தறிந்தேன் உள்த்தர்வி 821

மூலாதாரத்தில் முளைவிட்டிதழ்விரிந்து
காலாந்தகன்போற் கனல்படர்ந்து மேலேறி 822

யெண்சாணுடம்புக் கியன்றபிரதானசிரந்
தண்சார்கபாலமதிற் றாக்கியே யெண்கால் 823

மிகினுங்குறையினு நோய்செய்யுநூலோர்
வளிமுதலாயமூன் றென்னப் பகர்வனபோல் 824

வாதத்திற்பித்தமல்கி மன்னியசிலேற்பனத்திற்
றோதகமாய்வாதம்போய்த் தொந்தித்து மோதியையம் 825

பித்தந்தனிற்கவிழ்ந்து பேதாபேதங்கள்பட்டுச்
சப்ததாதுக்கள்பெலன் றான்கெட்டுத் * துத்தமதிற் 826

தீபாக்கினியவிந்து சீரணமிலாதுமந்தித்
* தாபாதகூட மழற்சியாய்த் தாப்முற்றிக் 827

கண்ணெரிவுகைகாற் கடுப்பூரிடுப்புவலி
யுண்ணெரிவுசூலை யுதரநோய் திண்ணெனலாய் 828

மண்ணீரலுப்பி மடிசோகைபாண்டுமலிந்
துண்ணுவிரண முடலதைப்புப் புண்ணூறல் 829

வாதவிர்த்திமேகவெட்டை வாவுமிந்தவாலிபத்தே
தாதுவிர்த்தியென்பதந்தோ சற்றுமில்லை காதிரைச்சல் 830

---

* துத்தம்-வயிறு, * ஆபாதகூடம்-உச்சிமுதல்

மண்டையிடிபீனிசநீர் மாருதனுதினமுங்.
கண்டகண்டமாதர் கலத்தலாற் றண்டுவலி 831

நீரடைப்புநீரிழிவு நீர்க்கடுப்புநீர்சிறுப்பு
மாரடைப்புநீந்தா மலச்சிக்கல் பேரிளைப்புக் 832

குத்திருமலீளை குலைநோயெரிகுன்மம்
பித்துறுமாலின்னம் பிணிப்லவே தந்தையன்னீர் 833

முன்பிறந்தரோக முழுதுங்கிடக்கவதன்
பின்பிறந்தரோகம் பெரிதாகு மன்பனுட 834

னுடோறுமோயா நலந்துய்த்தழுந்துதலாற்
சூடேறிமூலச் சுழிமுனையுற் றாடாடி 835

மாதவிடாய்குன்றி வளர்சூதகத்திரளால்
மாதவிடாய்த்தேகம் வழுவழுத்துக் கோதுபற்றிக் 836

கெற்பக்கருவுடைந்து * கிழாறெடுத்தகழ்ந்த
கொப்பத்திற்பட்டுழலுங் குஞ்சரம்போ லெப்பொழுதுஞ் 837

சஞ்சலமேயாகிச் சரீரசுகமில்லாமல்
நெஞ்சிலொருவாயுநின்று நீடித்து வெஞ்சினவே 838

லீட்டிகொடுத்தாக்கினபோ லெற்றுங்கிடத்திவிடுங்
கோட்டிபலசெய்யுங் கொடுமையே யீட்டியநோ 839

யாமிருபாலார்க்கு மவுடதமென்றேயமைத்துத்
தோமறவுட்கொண்டாற் சுகமாகும் தாமதித்தால் 840

வெய்யநோற்முற்றியினி மேற்கொஞ்சவேளையினி
லையமின்றியாளை யமிழ்த்திவிடும் பைய 841

நகத்தினுற்கிள்ளுவதை நாடாமற்பின்பு
செகுத்திடக்கோடாரிதன்னைத் தேடித் திகைப்பவர்போல் 842

வந்துமிகநேருமிதற் கானவகைநீர்விரைவாய்
முந்தியதைச்செய்ய முயலுவீர் சிந்தைவைத்துக் 843

காட்டுமருந்துங் கடைமருந்தெல்லாந்தெரிந்திங்
கிட்டநம்மாலொன்றுமியலாது சேட்டிளையிற் 844

---

* கிழாறெடுத்தல் தோன்றுமற் சிதைதல்.

சித்தபுருஷாளுடனுன் சேர்ந்துமலைவாசமுற்றுக்
கொத்தடிமைபூண்டேன் குளிகையினுற் சித்தர் 845

பறந்தார்கள்யானும் பசிக்குளிகையாலும்
பறந்தேனனமிலாப் பாடால்ச் சிறந்தெவரு 846

நம்பிக்கையான ரசவாதவித்தையினுற்
செம்பைப்பொன்னுக்குஞ் செயலறிவே னம்பிபானெனச் 847

சாற்றுபஞ்சலோகமதைத் தானேகுருமுடித்து
நீற்றுமானம்புரியு நேரறிவேன் றேற்றுடலி 848

வின்னபிணிக்கின்னமருந் தின்னமுறையாமெனவு
மன்னவர்பாலாராய்ந் ததைமுடித்துச் சொன்னமருந் 849

தென்னிடமெல்லாமுண் டியல்வகைபொன் றுக்குவிலை
பன்னகரஞ்சேருமெய்யிற் பன்னென்று மின்ன 850

தொகைக்கதிகம்வாங்கே லௌந்துறவோரெற்குப்
பகுத்தவுணர்வின் பயனுல் மிகுத்தகய 851

வாக்கியமுட்கொண்டோர் மதிக்குளியல்பாய்குகவுந்
தேக்குறவையாயிரம்பொன் சேர்ந்தனவா லாக்குநிதி 852

தன்வத்திற்கேயுபயந் தானதிலோர்காசுதொடேன்
கன்மத்தையாருங் கடக்கரிதே சொன்னத்தை 853

முத்திரைவைத்தேவிடுத்து முந்நீருண்டோன்பெயராற்
சித்திதருங்காசி க்ஷேத்திரத்தில் நித்தியமங் 854

கன்னதானந்தா னடைவாய்வழங்குதற்கு
முன்னமடவேலை முடியுதுகாண் பின்றுமது 855

தன்மைதனையோர்ந்து தயாவிஷயமாகவுமுன்
சொன்மொழியிற்பாதித் தொகைகொடுப்பீர் நன்மருந்து 856

நல்குவனிதோவதனை நாவிலிடுங்காலுடனே
பல்கியநோயெல்லாம் பறந்துவிடுஞ் சொல்லரிய 857

மக்கட்பேறுண்டாம் வளமூப்பகன் றுநலந்
தக்கவிளமைப்பருவஞ் சாருமே துய்க்குமிநிற் 858

பத்தியமேயில்லைப் பயோதனமொன்றாகாது
நத்தியசம்போக நடத்தலாஞ் சத்தியமென் 859

றந்தரவிச்சாக வவன்புளுகுங்காலையினி
லிந்தவயித்தியன்போ லெய்தரிதே முந்தியவ 860

ணண்டிக்கைத்தாதா லறிந்துதேகஸ்திதியைக்
கண்டதுகண்டாற்போற் கழறினான் பண்டிதத்தி 861

லின்னவனைப்போலும்வல்லா னில்லையெனக்கூறியவன்
சொன்னதிலும் பாதிநல்கச் சூதனிவன் றன்னிடத்தி 862

லுற்றபலதினுசா யுள்ளபொடியுடனே
சிற்றுண்டைவர்க்கஞ் சிலநல்கி நற்றேனிற் 863

கூட்டியொரேநக்காயுட் கொள்வீரொருமனுஷாள்
வீட்டிலெமக்கு விருந்துசொன்னார் மூட்டியவன் 864

போந்துவருவேனெனவும் போதவிடைபெற்றுமற்று
மேய்ந்தசிலரிடத்து மிப்படியே நேர்ந்தமட்டிற் 865

றெட்டியினிமேலிருந்தாற் சீசீநமக்குரிய
குட்டுவெளியாகிக் குழப்பமுண்டாஞ் சட்டெனவே 866

யிவ்விடம்விட்டேகுவதே யேதுவெனத்தேர்ந்துமன
னைவினையுற்றோடி நகர்தொறும்போ யொவ்வெனக்குக் 867

காலோதலையோ கடுகமருந்திடுமுன்
பாலுறுதிகொண்டோன் பழங்கதைபோற் காலங் 868

கடத்துதற்காயித்தொழிலை கைக்கொண்டுஜாலம்
படைத்துற்றிரிந்தார் பலரே யடக்கமுடன் 869

## புலவன் சரித்திரம்.

முன்ஞூழியற்படையைத் தட்டிக்கவிமுடிப்ப
வன்ஞூழியற்புலவன் வாறுசொல்வேன் பொன்ஞூழிக் 870

கானமயிலாடக் கண்டிருந்தவான்கோழி
தானுமதுபோலாடுந் தன்மைபோல் ஞானகவி 871

வல்லார்போற்பாடி வளம்பெற்றுநல்குரவா
மில்லாமைநீக்குதுமென். றெண்ணியே கல்லாருங் 872

காதிற்றரிப்புக் கடுக்கனொளியிலங்கச்
சோதிமலாம்பூசித் துலக்கியவோர் மோதிரத்தைக் 873

கைவிரலிற்பூண்டு கனவல்லவாட்டுடனே
ஒய்யாரமான வுடையுடுத்தி மையூர்வான் 874

றன்வடிவமன்ன தலைப்பாகின்பிற்றலைக்கா
மன்வடிவமாக்கி வனைந்தியல்பாய் மின்வடிம்புக் 875

கண்ணாடிபார்த்து கவின்றிலகந்திட்டிமகிழ்ந்
தண்ணாந்துகாலை யகட்டிநடந் தொண்ணார்ந்த 876

கையிற்குடைபிடித்துக் காற்சோடுமாட்டியொரு
பையல்கற்றுச்சொல்லிதன்பின் பற்றிவர மெய்புணர்வுற் 877

றேடாய்ந்துசொல்லறியா னெல்லாமறிந்தவன்போற்
றூடாண்மைபேசித் தனைப்புகழ்ந்து நீடுதமிழ் 878

கல்லாதமூடர்களைக் கற்றுயர்ந்தசேடனென்றும்
பொல்லாரைநல்லதர்ம புத்ரனென்று மில்லாருக் 879

கஞ்சிவிழிப்பாரை யதிவீரசூரனென்றுங்
கெஞ்சிவெந்நிட்டோடுவரைக் கிரீடியென்று மிஞ்சிநிதம் 880

பொய்பேசும்வீணர்களைப் போஜனரிச்சந்த்ரனென்றுங்
கைகலமிலாதவரைக் கன்னனென்றும் வெய்துயிர்க்குந் 881

தாரித்ரமுள்ளவரைச் சம்பனகுபேரனென்றும்
பாரித்தமுன்புலவோர் பாடியதைப் பாரா 882

மனப்பாடஞ்செய்தந்த மால்பொன்னுச்சாமி
தனிப்பாடலிற்சிலது சந்தத் தினிப்பான 883

செய்யுள்பலகற்றுச் சிலுக்கியிறுமாந்து
மெய்யணுவிலாமல் மிகப்புளுகி யெய்தரிய 884

ஊரொன்றுப்ச்சுற்றி யுலைந்தங்குளானொருவன்
பேரன்றாய்ந்தவன்பாற் பின்சென்றே யாரென்று 885

கேட்கிரிப்புவியிற் கீர்த்திநிகழ்சேதுவெனுந்
தாக்கணங்குமேவுசமஸ் தானமதில் நோக்கமிகுங் 886

கல்விப்ரசங்கக் கவிராஜர்நாம்நமது
நல்வித்தைகண்டயனு நாணுவான் பலகலைநூ 887

லாசிரியர்நம்மை யதிகப்ரசங்கியெனப்
பேசவுலகெங்கும் பெயர்பெற்றோம் ஆசறுசீர் 888

விஞ்சைத்தமிழிலிவர் மெத்தப்படித்தவரென்
றெஞ்சிப்புலவர்நமக் கோட்டமே கஞ்சனிழி 889

பூதவுடலீவான் புலராப்புகழுடல்நா
மீதலாலன்னவற்கி யாமதிகம் வாதில்மன 890

மாசுறப்பொய்ச்சாக்ஷிசொன்ன மட்டிப்பயல்களெல்லாம்
நாசமுறத்திட்டிவசை நாட்டினோம் வீசுதமிழ்க் 891

கஞ்சாதுதீங்குபுரி வார்களடிமாண்டிலவம்
பஞ்சாய்ப்பரக்கவரம் பாடினோம் விஞ்சலைசூழ் 892

அம்புவியின்ம்மையறி யாரில்லைநம்பெயரோ
செம்பொன்மலைமேலிட்ட தீபமாம் இம்பர்தனில் 893

தீர்க்கநலமேவு சிவகெங்கைவாழ்வுயர்சன்
மார்க்கதுரைச்சிங்க மகராஜன், ஏற்கையுடன் 894

சித்தமகிழ்ந்தஞ்சாறு சீவிதக்கிராமங்கள்விட்டு
மெத்தமரியாதைதந்தான் மேன்மையாய் எத்தலத்துஞ் 895

சந்ததமுமிக்கவுங்கள் சற்புகழ்கேட்டற்புதமாய்ப்
பைந்தமிழ்ப்ரபந்தமொன்று பாடிவந்தோம் சிந்தைவைத்துக் 896

கேட்டருள்வீரென்று கிளத்தும்பொழுதுதலை
கோட்டிமுகம்பாராக் குறிப்பறிந்து நாட்டினுயர் 897

அஷ்டாவதானகவி யாஞ்சரவணப்பெருமாள்
மட்டரமுன்சொன்ன வசைத்தமிழை யொட்டியிவன் 898

தான்பாடினபோற் றடதடென்றுமுட்டமகிழ்
வான்போல்நகைத்திசையில் மாவலீர் யான்கருத்தில் 899

யாதுவேறாயிருந்தே னாகிலும்நீர்நல்லகுண
சாதுவாய்வந்ததுவே சந்தோஷம் மேதையர்க்குத் 900

தானீயுநற்கொடையே தார்க்கியன்காலிற்சலங்கை
மாநாதம்போலுமிசை வாய்க்குமே யானாலும் 901

நஷ்டிவந்தீரிப்போழ்து நல்லசமயமில்லை
யாடிகழித்தாவணியஞ் சாந்தெய்தி யோடி 902

யகத்தியமாய்வாருமுமக் கச்சணமேசெம்பொன்
தகட்டங்கிசால்வைகளுக் தாரேன் விகற்பமின்றிப் 903

போய்வருவீரென்னப் புலவர்படபடத்தின்
றேய்வறநீர்சொன்ன தொழுங்காமோ . ஆபுங்கால் 904

காலையென்பான்கொடையு நம்பிநலமில்லாக்
காலைபின்போன கனங்குழலும் பூளை 905

றிடவிற்குவித்த குவையுமிம்மூன் றும்
கடலிற்கவிழ்ந்த கலமா மிடருழந்த 906

காலத்தாற்செய்த நன்றிசிறிதெனினும்
ஞாலத்தில்மாணப் பெரிதெனுமாப் போலுஞ் 907

தடையின்றியுங்கள்மனஞ் சந்தோஷித்தீயுங்
கொடைதனையேகொள்வேன் குணமா யடைவோர்க் 908

கிடுக்கணுற்றபோதிலுவந் தியாதபேர்பின்
கொடுத்தென்கொடாமலென்ன கூறும் படித்தவரே 909

மாதயவுசெய்யுமென்று மாறுதுரைக்கவவன்
வேதனையாயுள்ள மிகவருந்தி யேதுநம்மைச் 910

சும்மாவிடான்புலவன் றெருந்தரவுக்கென்புரிவோம்
நம்மாலேயொன்று நடவாதே யிம்மாற்ற 911

மில்லவள்கண்டாலிவனை யேனழைத்துவந்தாயென்
றெல்லையறப்பேசி யிடிப்பாளே தொல்லைவினைக் 912

கென்செய்வோமென்றிங் கிருதலையாங்கொள்ளியிசிற்
றுன்பெய்திவாடுஞ் சுழலெறும்பாய்ப் பின்புமன 913

வூக்கமுடன்சென் றுமனை யுள்ளாட்கெதிரினின்று
நாக்குளறிமெல்ல நவிலுவான் பாக்யவதி 914

சேதுசமஸ்தானஞ் சிறந்திடுகவீசுரர்சங்
கீதசாயித்யகலைக் யானமுள்ளோர் ரோதும்ப்ர 915

பந்தமொன்றுபாடியதிற் பாவாயுன்பேரைநல்லாய்
முந்திவைத்தென்பேரை முகனைவைத்துத் தந்தியினாற் 916

றம்புருவைமீட்டிச் சரளியொடுபண்பலவுங்
கெம்பீரமாய்ப்படித்தார் கேட்டனையோ கொம்பனையாய் 917
ஏற்றமரியாதையவர்க் கியாதிருந்துவிட்டால்
மாற்றரியபொல்லா வசைபடிப்பார் போற்றுநம 918
தைஸ்வரியமெல்லா மழிந்துகெடுவதன்றி
மொய்குழலாயாளுக்கே மோசம்வருந் தெய்விக 919
வாதிசராம்பாவலர்கள் வாய்வசையினாலழிந்து
மேதினியிற்கெட்டார் மிகவுண்டே யேதேனுந் 920
தாவென்றுகெஞ்சவந்தச் சண்டாளனீலியவ
ளோவென்றுகூவி யுறத்தெழும்பி மாவலன்போல் 921
நீதமினிப்பேசவந்தாய் நீயுமோராண்பிள்ளையோ
கூதறையேயுன்னைக் கொடுப்பேனே சூதகமே 922
வாகுகெட்டசோதாயென் வாயில்நல்லாய்வந்துவிட்டுப்
போகுதெதிர்நில்லாய் புறத்தொதுங்கு மூகையொப்ப 923
நீட்டமுடக்கறியாய் நீகெட்டகேட்டுக்குப்
பாட்டொன்றோவென்ன பகுமானம் வீட்டு 924
வருத்தமறியாதகெடு மாடேயுனக்குக்
கருத்திலணுவுண்டோ கவலை பருத்ததன்றிப் 925
புத்தியில்லாநீவெளியே போபோவெனவிரைந்தங்
கெத்தனையோபேசி யெயிறதுக்கி நத்தியுன்பின் 926
போக்கற்றுவந்த புலவனெங்கேயெங்கேயென்
றுக்ரமித்துப்பேசி யதட்டினாள் தாக்கிப் 927
புலவனெங்கேயென்று புடைபுடைத்துச்சீறுங்
கலவரங்கேட்டுள்ளங் கலங்கி நிலைபெயர்ந்து 928
சட்டிவருமுன்னே தலைசாய்க்கவேண்டுமென
வொட்டிமுன்னோர்சொன்னமொழி யுண்மையே கிட்டியிங்கு 929
வந்தாலும்வந்திடுவள் வந்திடிலோர்வேளைநம்மைத்
தந்தாபந்தீருமட்டுந் தாக்குவளென் றிந்தவிதந் 930
சந்தேகமாய்ப்புலவர் தானோட்டங்கொள்வதற்கு
முந்தியுஷாராக முழித்திருந்தார் தந்தலைவன் 931

பெண்ணேயென்றாசைப் பெருக்கேமருக்குலவுங்
கண்ணேயெனக்கிசைந்த காதலியே பண்ணிவைத்த 932

பாயாசம்போலுநல்லாய்ப் பாடினவர்க்கேதேனு
மீயாதிருந்தா லிளப்பமன்றோ நீயே 933

புணர்ந்திடுவாயென் றுபல வோதவிவன்சொற்
கிணங்கியுளஞ்சற்றே யிளகிப் பிணங்குதலாய்ச் 934

சாலநெடுநேரந் தனித்ததிவிசாரமுற்றுக்
காலனுவிந்தாள் கடுகடுப்பாய் ஏனுமிதை 935

நற்கொடையென்றேமதித்து நாவலன்பாலெய்திநல்ல
லக்கனம்வந்தீரெனவு நண்பாடி மெய்க்கவவன் 936

கைத்தலத்தைப்பற்றியுள்ளங் கையில்வைத்துத்தன்கையினாற்
பொத்தியினிதாகப் புகலுவான் நத்தித் 937

தினைத்துணை நன்றி செயினும்பனைத்துணையாய்க்
கொள்வர்பயன்தெரிவ ராமென் றினிதுரைத்து 938

மெல்லவிவன்கையெடுக்க மெய்க்கொடைகண்டுட்கியிவ
னுல்லங்கனமா யுரைபகர்வான் நல்லவன்போ 939

லேன்காணுநீர்தா னிருந்திருந்துமிக்கொடையைத்
தாங்காதளிக்கத் தலைப்பட்டீர் போங்காணுங் 940

திட்டிபடப்போகுதுகாண் சேலையினால்மூடியதைத்
திட்டி சுற்றியாங்கே செலுத்திவிடுங் கட்டியெம்மூர் 941

செல்லும்வழிமார்க்கந் திருடர்பயமுண்டுகண்டீர்
நல்லதுணைக்கூட்டி நமையனுப்பும் வெல்லமன்ன 942

பேச்சைநம்பிநாமும்வெகு பேராசைகொண்டதெல்லா
மாச்சரியச்சொப்பனம்போ லானதுகாண் ராச்சியத்தில் 943

னும்மைப்போலும்ப்ரபுக்க ளுண்டோமூவேழுவள்ளல்
தம்மைத்தான்சொல்லத் தரம்ன்றோ அம்மம்மா 944

கீர்த்திவெகுகீர்த்தியென்று நிஷ்டூரமானசில
வார்த்தைபலபேசி மடமடத்தே யீர்த்து 945

வசைபாடுவோம்பயலே வாடாகொண்டாடா
யிசையுமெழுத்தாணி யெடடா பசையற்ற 946

மூடனுடபேஸா முதலெழுதடாமுதலிற் .
கிடென்றெழுத்தைக் கிறுக்கடா மாடேயுன் 947

கைவிரசுவேண்டாமா கற்றவர்க்கீயாதவிவன்
ஐசுவர்யமெல்லா மறிகிறேன் பொய்யோடா 948

யீரெட்டுநாளையிற்பா ரென்றுகடைவாய்நுரைக்கப்
போரிட்டுக்கத்தும் பொழுதிலவன் நேரிட்டே 949

யென்னகடிநாய்ப்புலவீ ரேதுபரிகாசமுடன்
சின்னமொழியாலிகழ்ச்சி செய்திட்டா யுன்னைத் 950

தலைமழுக்கம்பண்ணித் தகுந்தசிட்சைசெய்வேன்
புலவனென்றதாலே பொறுத்தேன் பலநூல்கள் 951

முற்றுணர்ந்தேமென்ன மொழிந்தாய்சபாசுனது
கற்றறிமோழைத்தனத்தைக் காட்டினாய் மற்றும்வசை 952

பாடுவோமென்னப் பயமுறுத்தினாயதுதான்
றேடியெனைவந்தென்ன செய்துவிடும் போடாபோ 953

சாவத்துணிந்தாற் சமுத்ரமுளங்காலாமுன்
பாவுக்குச்சற்றும் பயந்திடேன் நீவலியப் 954

பல்லைப்பிளந்துகவி பாடியிசைத்தாலுமினிச்
சல்லிக்காசொன்று தாமாட்டேன் நில்லாதே 955

யூராருடைமைகளை யூசாடிச்சுற்றுதற்குப்
பேராசைகொண்ட பெரும்பதரே யாராரை 956

யேமாத்திவந்தா யெவர்பொருளைக்கொள்ளையிட்டாய்
காமாட்டியுந்தன் கருத்தறிந்தே னுமாநீ 957

கொண்டிடுமவாவடங்கக் கோத்ததடிக்கம்புப்ர
சண்டுசெய்வேன்செய்வேன் றடையில்லைக் கண்டாயித் 958

தக்கமரியாதையுடன் றப்புவதேமெத்தநலங்
கெக்கலித்துநின்றாற் கெடுதிவரும் மிக்கணமே 959

செல்வாய்செல்வாயெனவே செப்பவிந்தபொய்ப்புலவ
னெல்காமற்பின்னு முளறிநிற்கப் புல்வாயை 960

மோதுபுலிபோற்சினந்து முன்னேநெருங்கிவரப்
பீதியுடனேபுலவர் பின்வாங்க வாதொடவன் 961

தாவிப்பிடிக்கவிவன் றப்பித்துலாகுகொண்டு
கூவியிருகாற்கதியைக் கூடினனே காவுலவு 962

மானோட்டமெத்த வலியில்லைவந்தகல்வி
மானோட்டமெத்த வலியுளதே தானே 963

யெசமானாய்வந்தவர்பா டிவ்விதமானாலோ
சிசுவெனுங்கற்றுச்சொலியென் செய்வான் · விஜையன்விடு 964

மஸ்திரமும்பின்னிட் டடங்கவவன்காற்கதியை
விஸ்தரித்துச்சொல்லவுந்தான் வேண்டுமோ மஸ்தளிகால் 965

செய்யமலர்விட்டுத் திரளாரளியினங்கள்
கைதைமலருற்றுக் கவலுதல்போல் வையகத்தில் 966

நல்லோர்பலரிருக்க நாடாதுலுத்தரெனும்
புல்லோரைச்சென்று புகழ்ந்துகவி சொல்லியுமோர் 967

நன்றியறியாதவராய் நானும்புலவனென்றே
கன்றியுழன்றார் கனபேர்கள் தொன்றுதொட்டுச் 968

## சோதிடன் சரித்திரம்.

சோதிடத்திலார்க்குந் துணிந்தமனப்பற்றுதலுண்
டாதலினானுமு மதைப்பகர்ந்து தீதனைய 969

காலத்தைத்தள்ளுவதே காரியமென்றெண்ணிமிக
மேலத்தாய்ப்பேசி வெளிப்பகட்டாய் நூல்முறையிற் 970

சார்ந்தபலகணித சாஸ்திரமதிலொன்றேனு
மோர்ந்தறியானெல்லா முணர்ந்தவன்போ லார்ந்தசெல்வர் 971

தன்சாதகமுந் தரித்ரகதியுற்றவர்க
ளின்சாதகமு மியல்பறிந்து முன்சார்ந்த 972

சாதகத்தைப்பார்த்து தகுந்தமகாயோகமுள்ள
சாதகமீதென்னத் தலையாட்டி யோதுபலன் 973

ருனறியானவ்வவர்கள் தன்னில்மகிழ்வோங்கவதின்
பான்மையின்றிநேர்ந்த படியுரைப்பான் ஆனஜன்மத் 974

| | | | |
|---|---|---|---|
| ராகு | | செ | |
| | இராசி சக்கரம். | | வி |
| சந் | | | |
| கு | பு | ல-சு. சனி. | கே |

தூக்கானலக்கினத்திற் சுங்கனுறச்சந்திரனு
மீக்கூர்நாலாமிடத்தில் மேவிநிற்கக் கோக்கிரக 975

முச்சநிலைபெற்றங் குலாமதியைப்பார்த்திடலா
லுச்சிதராஜாங்கசுப யோகமிதே யிச்சைதரும் 976

வாக்குத்தானத்தில் வளர்வித்யாகாரகனே
யூக்கமுற்றிரண்டுக் குடையவனை நோக்குதலு 977

நன்குறுபாக்யாதிபனு நற்றனபாவத்திலுறப்
பொன்கனிந்துபார்க்கும் பொருத்தமதால் மன்புகழும் 978

வித்தைப்ரசங்க விதரணநற்கேள்விநவ
ரத்தினம்பொன்னேத்ர நலமுமுண்டாஞ் சுத்தமுள்ள 979

மூன்றுமிடத்தில் முளரிப்பதிமருவ
வூன்றுமதற்குடையோ னுச்சமுற்றும் என்றிடுலா 980

பற்குரியநட்புறலாற் பண்புறுசகோதரர்பூண்
பொற்கலமுற்சாகம் பொருந்துமே யிற்குரிய 981

வாகனத்தானத்தில் மதிகேந்திரிக்கவதி
யோகனத்தானத்தனுமுச் சம்பெறலா லாகுநற்றேர் 982

வாம்பரிகற்கட்டு மனைபூமிபாற்பசுக்கள்
மேம்பநிட்சேப மிகப்பெருகு மோம்புமகத் 983

தானபதிகேந்த்ரமுற்றுச் சார்புறுசென்மாதிபனோ
டானுறவுகொண்டு மரசனையே மேனிவந்து 984

பார்த்திடுதலாலும் பலன்றருபாக்யாதிபதி
சீர்த்திதிகழ்நற்குடும்பஞ் சேர்தலா லார்த்தபுகழ் 985

மாதுலன்ப்ரபந்தகவி மந்திரங்குமாரர்கள்மூ
தாதையர்செய்புண்ணியமுஞ் சார்ந்திடுமால் மோதலுறு 986

சத்துருத்தானத்திற் றனித்தகருங்கோளுறலாற்
சத்துவமானூர்திகண்ட சர்ப்பம்போற் சத்துருக்க 987

ளஞ்சிப்பணியவிட மார்பணிதொடாமலுநோய்ச்
சஞ்சிதமுறு துசுகங் தான்பெருகும் விஞ்சுபுகழ் 988

நீடுகளத்ராதிபதி நேயவிடைமேலேறத்
தேடுபுகர்சொட்சேத் திரமுளனாய் நேடிவே 989

பூமிடத்தைப்பார்ப்பதினு லாயிழையுமாயிழையாய்
மாமருவுஞ்செல்விமனை வாய்ப்பதன்றிக் காமியசம் 990

போகமுயர்பாக்கியமும் பூபாலர்தந்தயவு
மாகனசற்கீர்த்தி வள்மருவும் வாகனட்ட 991

மாதிபதியாமமைக்கோ ளாட்சிமனைமேவமறை
யோதுதுருகர்க்கடகத் துச்சமுறச் சீதமதி 992

மர்னுனகேந்திரத்தின் மன்னிநிற்றலால்வயது
தானூறெனவுமெல்லச் சாற்றலா மானுலுஞ் 993

சன்மத்திலேசனியுஞ் சட்டாட்டமவியத்திற்
றின்மைதருபாம்புகளுஞ் சேயுறலாற் பின்மருவ 994

லாகுமிவர்தன்றிசையி லவ்வவர்கள்புத்தியிலு
ரோகமுறுங்கண்ட முயிர்க்குவரு மாகையினூற் 995

சார்ந்தநவக்கிரக சாந்தியொடுமந்த்ரவுருத்
தேர்ந்தரக்ஷாபந்தனமுஞ் செய்வித்தே நேர்ந்தாயு 996

ளோமம்புரிந்தா லுடனேவினைவிலகி
நேமியிற்றீர்க்காயுள் நிலவரமே பூமலியொன் 997

பான்பிதிர்த்தானுதி பரவுதன்மீதிருக்க
வானிரவிநின்ற மனைக்கதிபன் மேன்மையுடன் 998

தானுச்சம்பெற்றிடலாற் றந்தைநெடுங்காலமிருந்
தேநிஷ்டைகூடிச் சிவமடைவான் மேன்மக்க 999

ளோன்பதொன் றநாலுடையோ ரோங்குதம்மில்மித்திரா
யன்புருவவேந்தனுச்ச மானதினால் நன்குலவு 1000

தீக்கையுபதேசஞ் சிவபூசனைகுளமுண்
டாக்கல்மடங்கட்டுத லநேகமா மூக்கமிகும் 1001

பத்தெனுங்கர்மாதி பதிநான்கிலேபலமா
யொத்திருந்துதன் மனைநோக் குற்றதினா மத்தலையிற் 1002

றங்கியதாரபதிதா ராபதியோடும்புதனைச்
செங்கணுறலாலுமுயர் செய்தொழிலில் சங்க்ரகத்தில் 1003

சற்கருமகாரியத்திற் சார்ந்திடுமாலோசனையிற்
சொற்கணிதசாஸ்திரத்திற் றாயவனாய் மிக்கபுவி 1004

ராசர்கட்குமந்திரியாய் ராசரபிமானனுமாய்க்
காசினியில்நாளுங் களித்திருப்பான் வீசுபுகழ் 1005

மெச்சியலாபாதிபதி மேவுமனைக்காதிபனல்
லுச்சமொடுகேந்திரத்தி லொன்றுதலா லச்சசியை 1006

யண்டர்குருநோக்குதலா லண்டமெலாஞ்சுற் றுவன்கோ
தண்டமதையேந்தித் தழுவுதலால் மண்டுகுணக் 1007

குத்திசையின்மீதிருந்து கோடிபசும்பொன் றிரண்டு
மெத்தமெத்தலாப மிருந்துவரு முத்தமனே 1008

புத்தமுதமன்ன புதன்றிசைபோயிப்பொழுதி
லத்தறுகட்கேதுதிசை யாரம்ப மித்திசையிற் 1009

றக்கசுயபுத்தி சமபலனுந்தைமுதலிற்
சுக்ரபுத்தியாதி சுகபோக மொக்குமிந்தக் 1010

கேதுதிசைநீங்கினமேற் கீர்த்திப்ரதாபசுக்ர
மாதிசையுற்றாலோ மளமளப்பாந் தீதில்வியத் 1011

தானத்திற்கேதுறலாற் சார்ந்ததமநோக்குறலால்
மேன்மெத்தைமேன்மெத்தை மீந்திடினுந் தானத்தைத் 1012

தூக்கிச்சுருட்டியங்கே தூங்குமிவன் தூங்குவதும்
வீக்கியபுற்பாயலது வேறிலையே போக்குவியத் 1013

தோன்தனத்திலேமருவச் சோமனைமன்பார்த்திடச்சுன்
கோன்மிசைநின்றாற்றுங் குறிப்பினால் மாநிதிகள் 1014

வீணருக்குங்கள்வருக்கும் வேசையர்க்குமன்றியியல்
வாணருக்கொன்றீயமனம் வாராதே நீணிலத்துக் 1015

காகரமுற்றோங்கியமே லான்றோர்கள்சொற்கணித
சாகரத்தைநீந்துஞ் சமர்த்தனென்றே மாகவடன் 1016

பேசவுயிர்க்கண்டமென்ற பீதியினாற்சாதகனு
மேசறுநற்சாந்தி யியற்றுமென . விசுசிதி 1017

தானீயப்பெற்றுச் சமர்ப்பித்தோந்தீர்க்கமுற
லானீரனுக்ரகமுண் டாயினவென் றேநிகழ்த்திப் 1018

பின்னருறுசாதகத்தின் பெற்றியுரைப்பாமெனவுந்
தன்னருளில்லாதவர்க்குச் சாற்றுவான் மன்னுசன்ம 1019

லக்கினமேகாரிமனை நாடியதிற்சோமனுற
மிக்கவர்க்குப்பன்னொன்றில் வேந்தனிற்கச் சிக்குறவே 1020

தேங்குஜன்மகேந்த்ரத் திரிகோணத்தானமதி
னீங்கரியபாவர் நிகழ்ந்துறலா லாங்கதுவே 1021

கேமுத்ரயோகங் கிளர்ந்தூதரித்திரமுண்
டாமித்தையன்றியுமோ ரானியுறுந் தீமை 1022

தருங்குளிகனுபுட்டா னந்தனைப்பார்க்கின்றான்
கருங்கோளுங்கூடக் கலந்தான் வருங்கவற்சி 1023

யாகையினாலின்றே யதற்கடுத்தசாந்தியொன்று
வேகமுடன்செய்வீ ரெனமிரட்டி யோகையொடு 1024

கைப்பொருடந்தார்க்குக் கனராஜயோகமென்று
மப்பொருடாரார்க்கீ தபலமென்றும் பொய்ப்பறையா 1025

யாமென்றுசொன்னதுவு மாகாதாயாகாதே
போமென்றுசொன்னதுவும் போகாதாய்ப் பூமியெங்குஞ் 1026

சுற்றித்திரிந்துநல்ல ஜோசியர்நாமென்றுபொருள்
பற்றியலைந்தார் பலபேர்கள் . மற்றுமந்த 1027

## வேசையரியல்பு.

வெய்யபவமேயுருவாய் மேதினியில்வந்துதித்த
சையோகவேசையர்கள் தந்திரத்தை செய்யதமிழ்ச் 1028

சுப்ரதீபன்முகவைத் தொல்சரவணப்பெருமா
ளிப்புலவர்சொல்லிவிட்டா றென்செய்வேன் றப்பி 1029
நுழைதற்கிடமில்லையே யாயினும்நூல்கல்லா
மழலையேன்யானறிந்த மட்டிற் பழிமடவார் 1030
மைப்பகட்டுக்கண்ணால் மயக்கிப்பொருள்பறிக்கும்
பொய்ப்பகட்டிற்கொஞ்சம் புகலுவே னப்பரத்தை 1031
யார்கள்பணிபூண் டணிமுகத்தைக்காட்டியுடை
சோர்வுறயாள்மீட்டிச் சுருட்டிவிழிப் பார்வையினு 1032
லாடல்தருங்கையா லபிநயஞ்செய்வாள்போலோ
ராடவனையேய்த்தங் கருகிருத்தித் தேடுமவன் 1033
கையிருப்பையோர்ந்து கவர்ந்துவிடலாமெனவும்
மெய்யுருக்கங்கொண்டு மெலிந்தவள்போ லய்யாவும் 1034
மூரேதுபேரே துரைமீரென்சாமிமத
னுரேயென்கண்ணே யமிர்தமே நீர்முந்தா 1035
நாள்தனித்திவ்வீதிவந்தீர் நான்கண்டேனக்கணமென்
தோள்கனத்துவிம்மித் துவதனங்கள் வாளிணைத்த 1036
கண்ணொட்டாதிரிரவுங் காமசரத்தாலுடலம்
புண்பட்டேன்துன்பம் பொறுக்கிலேன் நண்புற்று 1037
வந்தீரென்றெய்வ வலதால்நான்கண்டகனு
வுந்தீர்க்கமாகிநல முற்றதே யுந்தமைநான் 1038
விட்டுப்பிரியேனும் மேலாணை நீருமெனைக்
கட்டித்தழுவிக் கலந்திடுவீர் கிட்டி 1039
யுமைப்பார்த்தகண்ணா லொருவர்முகம்பாரே
னிமைப்போதுநீங்கே னெனவுங் கமுக்கமொடு 1040
சாலமிட்டுப்பேசுந் தருணத்தில்வேறொருவன்
கோலமிட்டவாயிற் குறுகுதலும் ஆலமொத்த 1041
தாய்க்கிழவியுள்ளிலவன் சாராவிதமிருத்தல்
நோக்கியவன்யார்நீ நுவலென்னப் போக்கற்ற 1042
மட்டிப்படுவான் மதிகெட்டநாய்ப்பயல்வீண்
சட்டித்தலையன் தடிக்கழுதை வொட்டியபின் 1043

கள்ளருந்திநாளுங் கடைதோறுழல்மடையன்
விள்ளருந்தீயன்ன வெறியினான் உள்ளிவந்த 1044

தெற்றேவினவுகின்றே னிவ்வறைக்குணீர்பதுங்கிச்
சற்றிருமென்றன்னவனைச் சந்தித்தே யுற்றிருகை 1045

கூப்பியடியாள்மீது கோபமாசண்டாளப்
பாப்பியவள்சொன்ன படிப்பினையா வேப்பிலைபோ 1046

லானேனோசாமி யருமைத்துரையேயெங்
கோனேயெனக்கேற்ற குஞ்சரமே யானுமுளம் 1047

நாணாதுடல்மெலிந்து நாலைந்துநாளுமுமைக்
காணாதகண்ணுமொரு கண்ணாமோ ஊணுறக்க 1048

மற்றேனேயத்தானென் னாசைக்களஞ்சியமே
நற்றேனேமற்றவரை நத்தேனே சற்றே 1049

தழுவணையிற்சாய்ந்துமது தம்பலத்தையென்வாய்
மழுமழுப்புத்திர வழங்கீர் கிழவிசெய்த 1050

அக்ரமத்தைக்கேட்டீரா யாரோவொருவனிடங்
கைக்கடனாய்ப்பாத்ரக் கடைபுகுந்து தக்கவொரு 1051

கொப்பரையைவாங்கிவந்தாள் கூடாதெடுத்தெறியென்
றெப்படியோசொன்னே னிணங்காமல் முப்பகலாய் 1052

மாச்சரியமெத்த வளர்ந்திங்கவட்கெனக்கும்
பேச்சிலையென்சொல்வேன் பிரமாதம் ஆச்சுதந்தப் 1053

பாத்திரக்காரப் படுவானடிக்கடிவந்
தாத்திரமாய்ப்பேசி யலையிருன் பார்த்திருக்கக் 1054

கூடலையேயத்தைக் கொடுத்துத்தொலைத்துவிடுங்
கூடலையென்றெண்ணிமனங் கோணாதீர் நீடியுமை 1055

யன்றிப்புகலெனக்கிங் கார்சொல்வீரய்யாநீ
ரன்றிரவிற்கன்னி யழித்தமுதற் றன்றுநிதி 1056

தன்னைமதித்தேனா தாய்வார்த்தைகேட்டேனா
பின்னொருவராசை பிடித்தேனா மன்னவரே 1057

நீரேகெதியெனவு நேசித்தேனென்பதிந்த
வூரறியுந்தெய்வ வுளமறியும் நீரறிவீ 1058

றென்றுபலவாறு யியம்பித்தழுவுவள்போ
லன்றவன்கௌபீனத் தடக்கிவைத்த பொன்றுகையைக் 1059
கைப்பற்றிக்கொண்டு கனிந்தபொழுதாங்கவனை
வைப்புற்றேன்மெல்ல வரவவனை · யிப்பதிதன் 1060
யாரென்றான்கேளீ ரயலானெளியபிச்சைக்
காரனிலுமெத்தக் கடைகெட்டான் சீரழிந்த 1061
சூதாடிக்கள்வனிவன் சுத்தவிருதாப்பயற்கிங்
கேதேனுஞ்சோலியொன்று மில்லைகாண் காதலரே 1062
மின்றிகழுமேனி வெயர்த்துப்பயிர்ப்படைந்தே
னின்றிரவுமாலை யெழுமணிக்கு ளொன்றியா 1063
யிங்குறுவீரென்றவனை யெத்திவெளியேற்றிவிடுத்
தாங்கவன்பாலெய்தி யனப்போலும் பாங்குடையீர் 1064
நேற்றிரவோர்மணியும் நீர்வருவீரென்றுதனி
வீற்றுநெடுநேரம் விழித்திருந்தேன் காற்றிலலை 1065
பட்டகலம்போற் பழிகாரமன்மதனார்
தொட்டசரமெண்ணத் தொலையுமா வொட்டிமிக 1066
வாடுமெளியாள் மனதையறிந்துமென்னோ
டேற்புரித லுமக்கழகா நாடியுமை 1067
யன்றிமற்றோர்க்காசைப் படுவேனோவெய்யபுலி
கன்றிடினும்புல்லைக் கறிக்குமா யென்றுமுனைக் 1068
கைவிடேனென்றெனக்குக் கட்டுறுதிசொன்னதெல்லாம்
பொய்வசனந்தானோ புலையாட்டோ வையகத்தி 1069
லென்சோட்டுப்பெண்டுகளோ யெவ்வளவோகோடிபசும்
பொன்கேட்டுக்கொண்டு புகழ்படைத்தார் அன்பொடுமை 1070
நம்பியிருந்தேனே நட்டாற்றில்விட்டீரே
வம்பியர்களைச வசையாச்சே கொம்பிழந்த 1071
மந்திபோலாகி மறுகித்தவிக்கவுங்கள்
சிந்தையிரும்பா திரள்சிலையா சுந்தரவில் 1072

மன்னாவெனவிழிநீர் மார்பில்வழிந்தோடுதல்கண்
டன்னான்மெய்யென்ன வவளையணைத் தன்னமே 1073

கோணிமனம்வாடிக் குலையாதேயெந்தெய்வத்
தாணையுனைக்கைவிட் டகன்றிடேன் காணிகள்விற் 1074

றுன்பாலளிப்பே னெருக்காலுஞ்சொற்றவரே
னென்பாற்கவடுறுமென் றெண்ணாதே நம்புவையென் 1075

றேனவாய்ப்பேய னியம்புமொழிகேட்டுநகைத்
தானாறிஞ்சிமெல்லநயந் தோதுவாள் மானனையார் 1076

வன்னச்சரிகைப்பா வாடைத்துணிமணிகள்
என்னென்னமோகடன்கொண் டெய்தினா ரன்னகடைக் 1077

காரனவன்றுரந்தரவைக் கண்டுரைக்கப்போமோயெந்
நேரம்வருவானோ நிலையறியேன் நீரதனைத் 1078

தீர்த்துத்தொலைத்துவிடுஞ் செல்லத்துரையேயென்
றேய்த்தவன்கைப்பொன்னை யினிதுபற்றி ராத்திரியி 1079

லெட்டுமணிநேர மெழுந்துவருவீரெனவச்
சொட்டனையுமெத்தித் துரத்திவிட்டு முட்ட 1080

வயலரைக்குட்பட்ட வவனையுஞ்சோதித்துக்
கயிலிருந்ததெல்லாங் கவர்ந்து தயவுசெய்திக் 1081

கங்குலினீரெட்டுக் கடிகைதவறாமலுநீ
ரிங்குறுவீரென்னவுமே மாத்தியே சங்கையிலா 1082

திப்படியேயொவ்வொருவர்க் கிங்கிதங்கள்பேசியவர்
கைப்பொருளைமுற்றிலுந்தன் கைப்படுத்தி யப்படுவா 1083

ராங்குவருநேரமறிந் தாடைகளைந்தோர் துணியைப்
பாங்கறவேசுற்றிப் பயில்காட்டி யிங்கு 1084

விலக்கமுற்றேனென்ன விசனித்தாள்போலோ
ருலக்கையைநேரேகிடத்தி யோகோ விலக்கமுற் 1085

றைந்துநாளாகலையே யாங்குகருப்பன்குறையென்
றுந்தியகோடங்கிமுழக் கோசையிட்டு தந்திரங்கள் 1086

காட்டிப்பொருள்பறித்துக் காரிருளிற்சென்றுசுடு
காட்டிற்கழிப்புக் கழித்தானே வீட்டுமொரு 1087

மாந்திரிகனென்னெனமோ மாயவித்தைசெய்தவனோ
ரேந்திரத்தையென்கழுத்தி லிட்டானே தேர்ந்தபரி 1088

காரியொருவன்சூத கத்திரட்சியாமெனவோர்
சூரணத்தைநல்கவுநான் துய்த்தேனே காரியமொன் 1089

ருகலையேயென்கை யருமைப்பொருள்துலைந்துஞ்
தேகசொஸ்தமில்லாமற் சீர்கெட்டேன் மோகமுற்று 1090

வந்தீரேயுங்கள் மனம்போனடப்பதற்குச்
சந்தியிலிப்பேஷ்டை தடையாச்சே யந்தோநா 1091

னிச்சைமிகக்கொண்டேனே யீரிரண்டுநாளுமதன்
சச்சரவிற்பட்டுத் தவிப்பேனே இச்சனியன் 1092

நாளையுறலாகாதா நாசமற்றுப்போகாதா
கோளுறவென்பாவத்தைக் கொட்டிற்றே வேளையிது 1093

போனாலுமென்ன பொறுத்திருந்திங்கஞ்சாநாட்
டானேவருவீர் தடையிலையே கோனேயென் 1094

றெவ்வொருவருக்குமிற்றே யோதியவர்போனபின்னர்
கைவளமுற்றுங்குவருங் காளையரைத் துவ்வியணைந் 1095

திவ்விதமாய்மாய மியற்றித்தனங்கவரும்
மைவிழியார்செய்கை வழுத்தரிதே யொவ்வியெதிர் 1096

கண்டால்முகஸ்துதியுங் காணாவிடத்திழிவுந்
திண்டாடல்காட்டித் திரியுமிந்த லண்டியரை 1097

நோக்கிப்பொருளிழந்து நோய்கொண்டெளியவரா
யாக்கமற்றுக்கெட்டா ரநேகரே நீக்கரிய 1098

தத்தமனையாரைத் தனியிருத்திப்பற்பலர்போ
கத்தைநுகர்தோஷிக் கணிகையர்மேற் பத்திவைத்த 1099

காரணமீதென்னோவக் கன்னியரிடத்தினிலே
வாரியமுதத்தையுள்ளில் வைத்தனவோ சாரமுள்ள 1100

தேனைப்புகுத்தினவோ சீனிப்பாகாலுமதைத்
தானமைத்ததோவலது சர்க்கரையோ ஆனாலவு 1101

கற்கண்டைமுக்கனியைக் காய்ச்சிச்செலுத்தினவோ
யெற்கொன்றுந்தோன்றா தெழுமரம்போல் நிற்கின்றேன் 1102

அந்தோவென்சொல்வே னழிந்ததகையுடையார்க்
கெந்தவிதஞ்சொல்லினு * மள் ளேறுதே முந்துகன 1103

தேட்டிற்பெருமைபெற்றுத் தேசார்ந்தவேசையரும்
நாட்டிலுற்றபஞ்ச நலிவினுற் றேட்டிழுந்து 1104

மேனிமினுக்கொழிந்து மேலிற்றசைவறந்து
கூனல்மந்திபோலுமெழில் குன்றினரே மீனமுறத் 1105

தொற்றுவிபசாரத் தொழில்புரியுமாதர்களைப்
பற்றியிதில்முன்னும் பகர்ந்தனனுல் சுற்றுஞ் 1106

## ஜவுளிக்கடைக்காரர் சரித்திரம்.

ஜவளிக்கடையுடையார் தன்செயலுஞ்சற்றே
விவரித்துச்சொல்வேன் மெலுக்காய் எவருக்கு 1107

மர்னங்காப்பார்களென்ற வாய்மைமேயன்றியபி
மானங்காவாத வளமுடையார் தானங் 1108

குடல்குழையநெய்தோ ருடைகளைக்கொண்டன்ன
கடைகாரர்பாலதனைக் காட்ட வுடைமீதி 1109

விட்டசாமன்களையு மேழெட்டுநாளுமவர்
பட்டபிரயாசமொன்றும் பாராம விட்டமுடன் 1110

பாதிவிலைகேட்கப் பகிரென்றெழுந்தந்த
வீதியெலாஞ்சுற்றி மிகவலைந்தும் மாதியினிற் 1111

கேட்டவற்குங்கம்மிவிலை கேட்கமறுபோக்கிலராய்
மீட்டமுனஞ்சென்றகடை மேவியே நாட்டொடங்கி 1112

யற்றைப்பிழைப்புடையா ராகையாலன்றவர்கள்
சொற்றவிலைபெற்றுமணஞ் சோர்ந்தகலத் துற்றுஞ் 1113

ஜவுளிகளைச்சேர்த்தடுக்கிச் சார்ந்தவிலைதன்னை
யுவகையுறரெட்டித் துயர்த்திப் ப்வமுறுங்கைச் 1114

சாத்தெருதியுள்ளூர்ச் சரக்குகளுக்கோரரைக்கா
லேத்துதலைச்சரக்குக் கிரரைக்கால் வாய்த்திதுவே 1115

---

* அள் - காது.

லாபமென்றுமேதிலர்காண் கேலாவிலாசமொன்று
தீபகம்போலொவ்வொன்றிற் றீட்டுவார் சோபிதமாய் 1116

வந்தோர்க்கெழுந்து வணங்கியுபசரிப்பார்
முந்தவுந்தாம்பூலத்தை முன்வைப்பார் அந்தோரீர் 1117

மின்மருவுமேனி வெயர்த்தீரெனவெழுந்து
மென்விசிறிகொண்டுமெல்ல வீசுவா ரன்னியர்வந் 1118

தின்னார்கடையாங் ஙனமெனவுங்கேட்பவருக்
கன்னானென்றே யவம்புகல்வார் பன்னாளும் 1119

வீசுகடைவாயினின்று வேறுகடைக்கேகுவரை
யாசைமிகவூட்டி யழைத்திடுவார் பீசுகிஜக் 1120

கோல்கொண்டளந்து குறிக்கும்பொழுதழுக்கை
யெல்லையுறவைப்பா ரிரண்டிடத்தில் சேலைவிலை 1121

தன்னிலொருரூபாய்ச் சரக்கையரையாய்க்கொடுத்துப்
பின்னிரட்டிப்பாகப் பெரிதுகொள்வார் மன்னுகலைக் 1122

காங்குவருவார்கடம்பி லாள்நோக்கம்பார்த்துமகிழ்ந்
தீங்குவருவீரென் றிறைஞ்சியே தாங்களிங்கு 1123

வந்ததுவுமென்றவமே வர்த்தகசம்பாதனையிற்
சிந்தைவைத்தேனென்று * தெவிட்டாதீர் சந்ததமுந் 1124

தூக்கமதில்மூழ்கிச் சுழலாமலேபொழுது
போக்குதற்காய்வைத்ததிந்தப் போட்டியே யாக்கமுற்று 1125

* மோதமுறலுள்ளேன் முதற்குமுதற்கிடைத்தாற்
போதுமென்பதுள்ளப் பொருத்தமே யீதிற் 1126

கடைவைத்தநாள்முதலாய்க் காசினியோர்மற்றைக்
கடைகளைநாடாமற் கசந்தா ரிடையிற் 1127

கடைகாரர்கூடிவழி கட்டிமறித்தாலுந்
தடைமீறியென்கடையே சார்வார் கடைகாரர் 1128

தன்முகமேதாமரையா யென்முகமோர்சந்திரனாய்ப்
புன்மையழுக்காறடைந்தார் புந்தியிலார் தன்மனிவன் 1129

---

* தெவிட்டல்-நினைத்தல்
* மோதம்-சந்தோஷம்.

ஞமென்றன்பால்மருவு மன்னவரைவேறுகடை
போமென்றுநான்சொல்லப் போகுமா ஓமென்ற 1130

சத்தியமேவெல்லுந் தலைகாக்குந்தர்மமென
வத்தனுரைநீதி யறியீரா யெத்தனைதான் 1131

மேவுகினுங்கொண்ட விரதந்தனைமறந்து
பாவவழல்மூழ்கப் படலாமா தேவனடி 1132

யுள்ளியமெய்யன்பு ருகவாதருவருத்துத்
தள்ளியவீண்செல்வச் சவமன்றோ வெள்ளமெனப் 1133

பொங்குற்றவர்தனமும் பூபாலர்வாழ்க்கைகளும்
எங்குற்றதன்றோ வியம்புவீர் சங்கற்ப 1134

முன்னியநற்செல்வமுந்தாழ் வூர்ந்ததரித்திரமுந்
தன்னியற்பேரயதற்குச் சான்றாகுந் துன்னுமனப் 1135

பற்றிற்றபட்டினத்தார் பாவபுண்யமேயிரண்டும்
பற்றித்தொடருமென்றும் பாடினார் துற்றியெழு 1136

புற்புதமேயாகுமிந்தப் பொய்யாமுலகவியல்
சொற்பனமென்றுள்ளத் துணிபன்றோ வற்பநிதிக் 1137

காசைகொண்டுவீணே யலைந்துதிரிந்தோமினிநா
மீசனடிக்காளாவ தெக்காலம் பாசவினை 1138

வீட்டுப்பெரியோரருளால் வேதாந்தசாஸ்திரத்தில்
நாட்டமன்றிவேறொன்றை நாடிலேன் யீட்டுமுங்கள் 1139

சொந்தக்கடையிதன்றோ சூதாகவேற்றுமைகள்
புந்தியிற்சற்றேனும் பொருந்தாதீர் கந்தாநீ 1140

மேனடுத்தாவாரமதில் மேவும்புடவைகளைத்
தானெடுத்திங்கோடிவா சல்தியினில் கானடுக்க 1141

முற்றனையோபோடா வுதவாக்கழிகுறடே
சற்றுமறிவில்லாத் தடிப்பயலே மற்றுநல்ல 1142

சாமான்பலவிருக்கத் தாழ்ந்ததைநீகொண்டுவர
லாமாயிவரை யறியாயா சீமான்க 1143

ளானபெரியோரெனவு மற்பமனுஷாளெனவுந்
தானறிந்துகொள்ளத் தரமிலையே மானரெனக் 1144

இன்புள்ளநேச ரிவர்க்கிப்புடவைகளை
யன்பிலர்போலீத லழகலவே பின்பிவைகள் 1145

தானழுத்தமில்லைத் தனியோரிழைச்சரக்கு
மாநிறத்தசாயமிது மங்கிவிடும் ஆனதினு 1146

லிச்சவுளியெல்லா மெடுத்தவிடத்தடுக்கி
மச்சுவாசற்கு வடபுறத்தில் வைச்ச 1147

புடவைகளிற்றுனிருகற் பூவிறுகற்காயோ
டுமெறுதற்காய்ப்பூ வரும்பு படுமுடங்கற் 1148

பிஞ்சுமலர்தற்பழம்பூப் பின்குவிதற்காயரும்பு
எஞ்சும்விரிதற்கா யெழுதற்பூ பிஞ்சிணங்க 1149

விந்தவிலாசம்போட் டிலக்கும்புடவைகளை
மந்தமிலாதீண்டெடுத்து வாவென்ன அந்தமுழுப் 1150

பட்டிமகனுக்குற்ற பாவனைபோற்றுமதித்தம்
கெட்டியதையேகொடுவந் தெய்தலுமே இஷ்டமுள்ள 1151

தாட்டிகரேநல்ல தரமதிகநேத்தியிது
சேஷ்டராபீசுச் சிரஸ்ததார் வீட்டுக்குச் 1152

சொல்லிவரவழைத்த தூயகலைவர்க்கமன்றே
கல்வியீர்முற்றுமிதைக் கண்பாரும் பல்குமிது 1153

இன்னதினுசின்னவிலை யீழத்துப்பட்டுடைகள்
சென்னையிற்பேர்பெற்ற தினுசிதுகாண் சொர்ன 1154

நிதிக்குத்தகுந்த நிறைசரிகைபூட்டி
புதிப்புற்றுயர்ந்த வுருமால் சதுர்க்கிசைந்த 1155

சாதராவீதுநல்ல சால்வைபீதாம்பரம்பொய்ச்
சூதிராக்கண்டையிட்ட துப்பட்டா வீதுசெழும் 1156

பட்டுக்கரைச்சோமன் பார்வைக்கெப்போதுநிறம்
விட்டுக்காட்டாது மிகவழுத்தம் நெட்டையிது 1157

காஞ்சிபுரச்சோமனிது கன்னடதேசத்துமடி
நாஞ்சிநடுநாட்டிலுள நல்லுடைகள் தீஞ்சொல்மட 1158

மாதர்க்கிணங்குமணி வண்ணப்புடவைகளி
லோதற்கெளியனவோ வொவ்வொன்றும் சோதிதிகழ் 1159

முத்துவர்னம்சித்ரவர்னம் மோகவர்னம்மேகவர்னம்
நித்திலத்தார்பூண்ட நெளிவர்னம் மெய்த்தரவி 1160

காந்தம்நிலவார்ந்தசந்த்ர காந்தமுயர்மாமதன
காந்தமெழில்மேவுமிந்த்ர காந்தமிசை வாய்ந்திலகு 1161

திம்பட்டகஸ்தூரி சேலைகுறநாட்டுமணிப்
பூம்பட்டுநேர்கடலைப் புட்டாணி • யாம்பற்போ 1162

தன்னபந்தர்ச்சேலை யருகுமணிச்சேலையிது
வன்னமயிற்கண்சேலை வாணத்தார் மின்னுமிது 1163

கஞ்சத்துச்சல்லா கமழ்சந்த்ரகாவியிது
பஞ்சவர்னப்பூவிழைத்த பாவாடை மஞ்சுறுத்து 1164

மின்போலுஞ்சாயல் விளங்கிப்பளபளெனப்
பொன்போலிளங்கும் புதுத்தினுசே யன்புறநீர் 1165

மானித்தசாயமிது மங்காதுமங்கிடிலோ
நானுத்ரவாதியிது நம்பிக்கை தானிதைநீர் 1166

பார்த்தறிவீரென்சொற் பழுதுபடாதோர்காலும்
நேர்த்தியிதுவென்ன நினைந்துகொள்வீர் சேர்த்தியகைச் 1167

சாத்திதைநீர்பார்த்துத் தயவாயளிப்பதையுங்
காத்தெதிர்சொலாமலிரு கைக்கொள்வேன் வாய்த்த 1168

மனம்போனடப்பனென வாய்ப்புறரெட்டித்து
தனங்கவர்தலன்னோர் தரமே யினைந்து 1169

வகைதெரியாராங்கு வருவார்களாகிற்
பகிடியுறப்பேசிப் பகட்டி மிகநீண்ட 1170

காலங்கிடந்துநைந்த கட்டுக்கிடைகளையச்
சேலங்குடைந்தைத் தினுசெனவுஞ் சாலமுடன் 1171

காட்டிமுழநீட்டிநகை காட்டிரெட்டிப்பாகவிலை
போட்டவர்கள்கண்ணில்மண்ணைப் போடுவரால் கோட்டமொடு ()

முன்கணக்கிற்பாதிகலம் மோசமுறவிற்பனையிற்
பின்குறிப்பிற்பாதிகலம் பெற்றிடலாற் றன்கையிருந் 1173

தீட்டுமுதலொன்றும் மிலாபவரவிலொன்றுந்
தேட்டினைக்கண்டுள்ளஞ் செருக்குளராய் . வாட்டமின்றி 1174

எப்பொழுதுமிக்க வியல்பாய்ப்பொருள்கவர்ந்து
செப்படிவித்தைத்தொழிலே செய்கின்று ரிப்படியே 1175

யாக்ரமஞ்சேர்பொய்ய ரனேகரிருந்தாலுமதில்
யோக்கியர்களுஞ்சிலர்க ளுண்டன்றே லுக்குசிவ 1176

கங்கைநகரிற் கணிதனருணாசலமா
லிங்கிதகுமார னெழில்மாரன் அக்கணால 1177

கெங்குமிசைபெற்றோ னிராமாயணப்ரசங்க
துங்கன்முத்துக்கிர்ஷ்ட்ண துரைபூமான் பொங்கமிகுந் 1178

இம்பர்புகழ்சுந்தரமா லீன்றவருணாசலனய்
யம்பெருமானென்னு மவர்க்குமுன்னோன் உம்பர்பணி 1179

வெண்ணிமலைசெந்நிமலை மேவும்பொருட்குடையான்
வெண்ணிமலையென்னும் விதரணவான் மண்ணீன்ற 1180

வந்தரிதியானமுள்ளோ னாதிமூலேந்த்ரனருள்
சந்ததிநால்வர்க்குட் டலைமையான் புந்தியர்மேல் 1181

மாத்தயாவைத்து வளங்குநிதியுடையான்
காத்தயாவென்னுங் கருணைமால் சீர்த்திதிகழ் 1182

மூவர்கலைவர்த்கத்தில் மூவாமுயற்சியினோர்
பூவுலகோர்மெச்சும் புகழுடையார் யேவர்க்கும் 1183

ஈட்டுமுதலுக் கிலாபமோர்வீசமன்றி
நீட்டிவிலையேற்று நெறியுடையார் காட்டிலொரு 1184

சாரமற்றநீசர்முதற் சக்கரவர்த்தியானாலும்
பாரபக்ஷமில்லாத பண்பினரே பாரிற் 1185

பலசரக்குவிற்போர் பலகாரஞ்செய்வோர்
கலகலத்தபாத்ரக் கடையார் விலையுபர்த்த 1186

சீமைமுதலானபல தேசசாமான்கொணர்ந்து
காமுறுநற்ஷாப்புக் கடைகாரர் மாமருவு 1187

நெல்மண்டிக்காரர் நிறைதவசக்காரர்குறுங்
கல்மண்டரிசிக் கடைகாரர் நல்வளமாய்க் 1188

கூட்டுசட்டதர்க்கமெனக் கூறிவெறுங்கைதனைப
காட்டுகின்றசோற்றுக் கடைகாரர் கோட்டமொடு 1189

சாய்த்தளக்கும்வாணியர்கள் சாளிகைநெய்க்காரர்மிக
வாய்த்தநவதான்ய வகுப்புடையார் சேர்த்திணைக்குந் 1190
தையல்வேலைக்காரர் தையல்பலருக்குமதி
மையலுறப்பூட்டு வளைகாரர் செய்யபல 1191
காய்கறிசாமானிலைதேங் காய்பழம்பால்மோர்பெருகு
காய்தகரலந்தர்க் கடைமுதலாய் ஆயபல 1192
வெல்லாத்தொழில்களுமே மாற்றுதொழிலல்லதரு
தில்லாத்தொழிலொன்று மில்லையே தொல்லுலகோர் 1193

## தீபாவளிப்பண்டிகை வருதலைப்பற்றி

## நாயகிநாயகனிடங் கூறுதல்.

சித்தந்தெளியாமற் றேம்பியலமுறுங்காற்
சுத்தமிருந்த துலாமதியில் மெய்த்திடுதீ 1194
பாவளியென்றோர்பண் டிகையீங்குறுதலெனப்
பூவுளர்சொற்கேட்டவொரு பொற்கொடியா ளாவிதனுக் 1195
கென்புரிவேனென்ன விதயந்தளர்ந்தவளாய்த்
தன்புருடனோடுமெல்லச் சாற்றுவா ளம்புவியில் 1196
நீடியதன்வீட்டு நிருவாகமின்னணமென்
றூடவர்சற்றேனு மறிகில்லார் நாடியதை 1197
வாய்ச்சேதியாயுரைக்க வாயெடுக்குமுந்திமுழு
மூச்சாய்வெங்கோப முகடுமுட்டி யாச்சாவென் 1198
றுத்தரளுக்கேச்சுமவ ளப்பனுக்குமப்படியே
பார்த்தார்நகைக்கும் படிதூற்றிப் பாத்திரா 1199
பாத்திரமீதென்னப் பகுக்காதிகழ்ந்திடுதல்
வாய்த்தபுருஷாள்தன் வழக்கமே யாத்திரமாய் 1200
நாளையோநாளையின்றே நாசமற்றதீவாளி
மாளிகையைத்தேடி வருகிறதாங் கேளுமிதற் 1201
கேதுவொன்றுங்காணே னிதனையயலாரிலம்போ
யோதிலுமல்மத்தளத்தை யொக்குமே யீதுநெடுங் 1202

காலந்தவராமற் கருதிவருடத்தொருநாட்
சாலவிவண்போந்துவெகு சம்பமாய்க் . . கோலமிட்ட 1203

பட்டுப்புடவையென்றும் பாவுகண்டைச்சோமனென்றும்
மட்டுயர்பாவாடை வளையலென்றும் சட்டரசஞ் 1204

சேர்ந்தகறிவர்க்கமென்றுந் தீம்பாலடிசிலென்றும்
வார்ந்தபலகார வரிசையென்றுங் கூந்தலொடு 1205

துண்டுகிலுஞ்சோரமென்கை கொந்திடவிராமுழுதும்
பெண்டுகளையாட்டிவைக்கும் பேயன்றோ அண்டியண்டிக் 1206

தொன்றுதொட்டுநாளுந் தொடர்ந்துமனைபூந்துகன்றாய்த்
தின்றுருசிகண்டு செழித்ததன்றோ யின்றதனைச் 1207

சும்மாபோவென்று துரத்தியடித்தாலும்
தும்மாணைலேசி லொழியாதே செம்மையா 1208

யேல்லையுறமற்றவையி லாவிடினுஞ்செங்கெலிருந்
தாலதுகொண்டோர்வா றகற்றலாங் காலமுத 1209

லுப்புக்கிடையா திரியபுளிமிளகா
அப்படியேயெல்லா மவதியே கைப்பணவாம் 1210

நொய்யசிறுகேழ்வரகி னுண்ணியமாவாலும்ரொட்டி
செய்யவுமென்றாலுஞ் செயலிலையே கையினிதி 1211

யுள்ளவர்கள்வீட்டினிற்சிற் றுண்டிபலசெய்வர்கணம்
பிள்ளைகள்கண்டேங்கிப் பிதற்றுமே சள்ளையிதற் 1212

கென்னவகையென்றே யினைந்துநிலங்கீறி
நன்னெறிகளோதி நளினமாய் முன்னின்று 1213

மாதண்டிச்சொல்ல மணவாளன்கேட்டுவெகு
மூதண்டமாய்க்கோப முட்டியே யாதுசொன்னாய் 1214

மந்தரநேர்திண்புயத்தான் மால்துரைச்சிங்கேந்த்ரனன்று
தந்தரெண்டுவண்டிநெல்லுஞ் சாமானுஞ் சிந்தினையோ 1215

அஞ்சாறுவேளையின்ன மாகவிலையேமுழுக்க
மிஞ்சாமலேசெலவாய் விட்டதோ அஞ்சாவுன் 1216

நெஞ்சுவிறாய்தணிக்க நேரினிலாளில்லையென்றே
கொஞ்சிநீமஞ்சட் குளிக்கிறாய் வஞ்சமற 1217

விச்சையுடனுழுவோ னேழையானாலெருது
மச்சினங்கொண்டாடுமென்ற வாறுபோல் மெச்சியகங் 1218

கொண்டலவோசற்றுங் குறியாமற்பொல்லாத
வண்டனென்றுஞ்சிந்தை மதிக்காம லண்டிநின்று 1219

தில்லாயக்கட்டுமொழி செப்புகிறாய்வீட்டுநடப்
பெல்லாமறிவே னிருக்கட்டும் யில்லமதிற் 1220

றெண்டனையில்லாதாற் சிறுதேட்டுக்காகநெல்லைக்
கண்டுக்காணாமலெனைக் கண்மறைத்துக் கொண்டுபோய் 1221

பாதிக்குப்பாதிவிற்றுப் பாழ்த்தநகைசெய்வதுமச்
சேதியெனக்குத் தெரியுமடி பேதையிவ 1222

னாமாண்டியென்னநினைத் துப்பொடுகற்பூரமுதற்
சாமான்களெல்லாஞ் சருவகொள்ளை தீமைக்கு 1223

முந்துமயல்வீட்டுலண்டி முண்டைகளேயுட்களவுக்
கந்தரங்கமென்பதுவும் யானறிவேன் சந்ததமுஞ் 1224

சிந்தைமகிழ்தொம்பரையின் செங்நெல்முழுதுக்குமோ
ரந்தெனவுநீவந் தவதரித்தாய் சிந்தாம 1225

விற்பொருளைத்தன் னுயிர்போ லெண்ணியதைக்காப்பவளே
சற்புனிதையென் றுலகஞ் சாற்றுமால் தற்பொருளைக் 1226

காவந்துசெய்திருந்தாற் கஷ்டமுற்றவிக்காலங்
தாவந்தமென் னுஞ்சொற் றானுண்டோ பாவியேன் 1227

மெய்வருந்தியெவ்வளவோ மிக்கதொழில்கற்றிருந்துங்
கைவருமானங்களைக் காசில்லை யிவ்வருடம் 1228

வெள்ளாண்மையில்லை விளைவில்லையென்றறிந்தும்
பிள்ளைமதியுடைய பேதாயுன் னுள்ளமதிற் 1229

றைக்கவில்லையேபழகத் தக்ககிளிப்பிள்ளைதனக்
கொக்கும்விதம்போனா னுரைத்துவந்தும் அக்கறைசற் 1230

றேனுமிலையேயினிமே லெப்பவரும்புத்தியென்னா
லானமட்டும்சொல்லி யலுத்துவிட்டேன் மானே 1231

மனைத்தக்கமாண்புடைய ளாகித்தற்கொண்டான்
வனத்தக்காள்வாழ்க்கைத் துணையா மென்னப்பலவாய்ச் 1232

## நாயகனுக்கு நாயகி தட்டான்சங்கதி கூறுதல்.

சிறிவிழுந்து சினந்துரைக்குங்காலையிவள்
வேறுரையாதச்சத்தால் மெய்யொடுங்கி மீறுசின 1233
மாறியவன்சாந்த மடைந்தனகண்டுள்ளமலர்ந்
தூறியதேனென்னவும்பின் னோதுவாள் வீறியன்ற 1234
தேவரீரென்னைச் சிறுதேட்டுக்காரியெனக்
கூவியிரைந்துமிகக் கோபித்தீர் தேவறியுஞ் 1235
சத்தியமாயென்காற் றடத்தில்மிதித்தோர்க்குமந்தப்
புத்தியொருக்காலும் பொருந்தாதே தத்தைநல்லார் 1236
கைப்பிடித்தநாயகரைக் கண்கட்டியேசிறுதேட்
டெப்படியோசெய்வித் திழக்கின்றீ ரப்படியோர் 1237
நல்லகதைகேளீர் நகைக்காசைகொண்டுசெம்பொற்
கொல்லனிடமெல்லாங் கொடுத்திழந்து மெல்லனிச்சப் 1238
பூமாந்தினபோற் பொருமிப்பலமடவா
ரேமாந்துநின்றீ ரியம்புவேன் ஆமொருவன் 1239
கண்டிப்புக்காரன் கவுரிதிருமாளிகையோ
டண்டிப்பொருந்து மயல்மனையான் கொண்டவளை 1240
நம்பியொருகாசுகொடா னுடமிரவலர்மேற்
பம்பிமிகச்சீறும் பணியனையான் வம்பனவன் 1241
சித்ரமனையாட்டி சிறுதேட்டுச்செய்பவளென்
றெத்தினமுஞ்சண்டை யிரணகள மித்தையறிந் 1242
தாளைக்கணக்கிட் டரிசிசாமான்பலவு
நாளைக்கரைத்தரமாய் நல்குவா னீளநிதம் 1243
கண்டித்தபோதினுமக் கள்ளிசற்றுமஞ்சாமற்
றுண்டித்ததிலுமிகச் சோமாறிக் கொண்டதனைத் 1244
தந்திரமாய்விற்றுத் தகுந்தபொருளீடுகொண்டு
சந்தைவட்டிக்கீந்து சதமைந்தா யிந்தவிதந் 1245

தன்கையிருப்புள்ள தருக்காலகஞ்செருக்குற்
றென்செயலாமென்றிதயத் தெண்ணினுள் தன்பணிகள் 1246

யாவுமிதுகர்நா டகப்பணிகளானதிலும்
மேவரியமாற்று மிகக்குறைச்சல் தேவையுடன் 1247

பூண்டாலும்வெட்கம் புவியோர்நகைக்கின்றார்
வேண்டாதருக்கி வியன்புடத்திற் . றாண்டியொளி 1248

ரங்கமுறலாக்கி யதனோடுகைமுதற்குந்
தங்கமிகச்சேர்த்துத் தரந்தரமாய்த் தொங்கலிட்ட 1249

காதுக்குக்கைக்குக் கழுத்துக்கிசைந்தபடி
சோதிக்கிரணச் சுடரணியாய் வாதுக்குக் 1250

கூச்சமறப்பூண்டு குறிப்பாயெவர்களும்பொன்
காய்ச்சமரமென்று களிகூர நாச்சியார் 1251

போவிருந்துவாழ்வனெனப் பூரித்தாளக்கணமே
சாலனொருதட்டான் றனையழைத்தாள் மேலிலெனக் 1252

கிட்டநகையுடனு மேலத்தொகைதருவேன்
கட்டுரையான்சொல்லுங் கணக்குப்போற் றட்டாமற் 1253

கோலுநகைபண்ணிக் கொடுப்பாயோவல்லநெடுங்
காலமிழுத்துக் கடத்துவையோ பாலர்கட்கு 1254

மன்னரியகல்யாணமிந்த மாதங்கடைசியினில்
நன்முகூர்த்தமிட்டு நடக்குதுபா ரிந்நகையை 1255

நல்வர்னமாக நகாசிட்டழுத்தமுடன்
சல்திபண்ணிமுந்தித் தரவேணு மில்லுடையான் 1256

காழ்த்தகுணவானிடமென் கைமுதல்காட்டாமலுமிப்
பாழ்த்தநகையோடைம் பவுன்சேர்த்துத் தாழ்ச்சியறப் 1257

பூட்டுவீரென்றுமயல் பூண்டுவரும்போதாடல்
காட்டிநெடுநாட் கரைத்துவந்தேன் கேட்டுநகைத் 1258

தங்கவரும்பேதாயீ தார்சொன்னபேய்மதியைச்
செங்கொல்லர்செய்தி தெரியாயோ பைங்கமல 1259

மாவனையதேவி மணிச்சிலம்புவிற்கவந்த
கோவலனைமாட்டிக் கொலைபுரிந்தோர் தாவுபர 1260

காயப்ரவேசநிலே காட்டும்விக்ரமார்க்கனையு
மாயச்சதிபுரிந்த வஞ்சனையோர் வர்ய்மையினிற் 1261

பங்கமுறுஞ்சொல்லார் படுமோசக்கர்ரரென
வெங்கும்ப்ரஸ்தாபவசை யேற்றமே . யிங்குளனோர் 1262

மூப்புற்றதட்டான் முடிவுற்றநாள்மகனைக்
கூப்பிட்டுச்சொன்னபுத்தி கூறக்கேள் வாய்ப்புற்ற 1263

சேயேபவமணியே தேனர்க்கதிபதியே
மாயைபலவுந்தேர்ந்த மந்திரியே தாயகட்டில் 1264

முன்முளைத்துநீண்டு முளைகுழைந்தகாதினிலு
பின்முளைத்தகொம்பே பெலனலவா யென்னினுநீ 1265

கற்றுணர்ந்துதேறிக் கடைப்பிடித்தாயாயினுமென்
சொற்றிறனுந்தேர்ந்து சுவையறிவாய் நற்றவத்தால் 1266

வண்மையுடன்பெற்றெடுத்த மாதாபிதாவெனினு
முண்மைநம்மள்ஜாதிக் குதவாதே யுண்மையினிற் 1267

றக்கவரிச்சந்திரனுஞ் சத்தியத்தைப்பேணியந்தோ
மிக்கசெல்வந்தோற்று விலைப்பட்டா னிக்கலியில் 1268

மெய்யொழுக்கத்தார்களுக்கு மேன்மையொருநாளுமில்லைப்
பொய்யொழுக்கத்தார்க்கே பொருள்சேரும் பொய்யொருக்கா ()

லாதிசிவனும்புகன்று னம்புயனுமன்றுரைத்தான்
சீதரன்பொய்சொல்லித் திருடினு னுதலினற் 1270

செய்யசிறுமானிடராய்ச் சென்மித்தநாந்திருடிப்
பொய்யுரைத்தாற்போய்ச்சோ புகழ்மோசம் பொய்மகளா 1271

ராயத்திலேபிறந்தா னந்தணரிர்பால்குடித்தான்
மாயக்கண்மாதர் மனைவளர்ந்தான் தேயமுள்ள 1272

தெண்டிசையுஞ்சுற்றியலைந் தேருங்கடையில்நம்மை
யண்டியக்கசாலை யமர்ந்தனளாற் பண்டிவளே 1273

தெய்வநமக்காகுமவள் சேயாங்களவினையுங்
கைவிடவொண்ணாதுமுன்னோர் கற்பனையே வெய்யகொடுந் ()

தீயகள்வரோடுநம்மைச் சீர்தூக்கிப்பார்க்கிலந்தத்
தீயகள்வர்நம்மிற் சிறியரே தீயகள்வர் 1275

துஞ்சுதல்சோதித்திரவிற் சோரங்கள்செய்திடுவார்
நெஞ்சுதிடுக்கிட்டு நெடிதொளிப்பா ரஞ்சாநா 1276

மப்படியோபோடா மறிவுகெட்டபிள்ளாய்பட்
டப்பகலேயாரு மருகிருக்கச் செப்படிவித் 1277

தைத்தொழில்போலுந் திருடுந் தந்திரத்தைக்கண்டறிய
முத்தொழிலாளர்க்கு முடியாதே யத்தாகீ 1278

யோதரியதங்க முருக்கும்பொழுதுடையான்
ஏதுவுடனேரிருந்து மென்றெரிவான் ஊதழலிற் 1279

சிட்டைக்கரியையிட்டுத் தீப்பொறியைத்தாவவிடிற்
கிட்டவிருந்தோர்கள் கிளம்புவார் சட்டெனவே 1280

தங்கத்தைவவ்விச் சரியானவெள்ளிநிற
மங்கக்கரித்தடவி வைத்துக்கொண் டங்குருகக் 1281

காயுமுலைக்குக் கரியிடுதல்பேலுமதைத்
தீயிடுக்கியாலுஞ் செலுத்திவிடாய் ஆயதன்றி 1282

யின்னமொருதந்திரங்கே ளேழங்குலமளவா
மன்னகரித்துண்டி னடிப்புறத்திற் பின்னுருவச் 1283

சுற்றிவரச்சன்னத் துளையிட்டெவர்விழிக்கும்
பற்றுதலுறுமற் பதக்கமாய் மற்றதனை 1284

வெங்குகையிற்றங்க மெலிந்துருகக்கிண்டுவபோ
லங்கையினுற்சுற்றி யலசுவா யங்கதுவும் 1285

பற்றித்துளைவழியிற் பாய்ந்துள்ளடங்கியிடை
யுற்றிரண்டுமூன் றுவரை யொட்டுமே சற்றுமிந்தத் 1286

தந்தைவெளிகாட்டாயென் றந்தையெனக்காதியினில்
முந்தியுபதேசித்த மூலமந்த்ரம் அந்தோவென் 1287

தந்தையார்தன்சமர்த்துஞ் சாதுரியவார்த்தைகளும்
இந்திரசாலத்தி னியல்முறையும் சிந்தையினி 1288

லுன்னுசிற்பசாஸ்திர முணர்ந்துமதிநுட்பமொடு
மன்னுகருக்கட்டியுரு வார்ப்பதுவு மென்னுளத்தி 1289

லோர்போதெனையீன்ற வுத்தமனையானினைந்தால்
மாரோடுக்கண்ணீர் வழிந்தோடும் பார்மீதி 1290

லென்னரியகண்மணியே யென்றகப்பனேர்காலந்
தன்னிலவன்செய்ததொரு சங்கதிகேள் தென்குளந்தை 1291

யேந்தல்மூதாதையர்முன் னிஸ்திமுராரிச்சமீந்தார்
வாய்ந்தரசுசெய்து வருநாளில் லேய்ந்தவளந் 1292

தங்குதேவஸ்தானந் தன்னிலரனர்க்குநலம்
பொங்குமபிஷேகம் புரிதற்காய்த் தங்கருத்திற் 1293

தங்கக்குடமியற்றச் சந்தியவான்யாவனென
வெங்கணுமாராய்ந்துதெளிந் தெந்தைதனை யங்கழைத்துத் 1294

தாம்பூலநல்கித் தருந்தபடிசேர்க்கணக்காய்ச்
சாம்பூனதத்தைத் தனிநிறுத்தந் கேம்பலொடு 1295

பாலித்ததற்கேற்ற பாராவைத்தோரிடத்தில்
வேலைநடத்த விதித்தார்கள் மேலவர்க 1296

ளொப்பக்கருமுடித்தா னேங்குமதேபோனுமில்லிற்
செப்பமுடனேர்கருவுந் திட்டினன் அப்பொன்னுற் 1297

கொத்திலகவார்த்துக் குடமுடித்தானிக்கருவிற்
பித்தளைவார்த்தோர்குடமும் பேணினன் சுத்தமுறத் 1298

தங்கக்குடமதனைச் சாணைபிடித்தார்ந்தழகு
பொங்கவுநகாசு புரிந்திட்டான் னிங்கிதுபோற் 1299

பொய்க்குடத்தையுந்துலங்கப் பூசித்துத்தங்கமலாம்
மிக்கவதிற்பூசி மினுக்கினன் றக்கநல்ல 1300

நாட்பார்த்தங்கிசருக்கு நல்லபிஷேகம்புரியக்
கோட்பாடுடன்முகூர்த்தங் கொள்ளவிவன் வாய்ப்பாமென் 1301

சிந்தைமகிழ்காளிகா தேவிதனக்கென் கையினுல்
முக்கியபிஷேக முடித்தபின்னர் சுந்தரற்குத் 1302

தானபிஷேகம்புரிதல் சாஸ்திரவிதியாமெனமே
லானவதிகார ரதற்கிசைந்து நீநாளைக் 1303

காலைவழிபாடொடுநின் கன்மம்நிறைவேற்றுகெனச்
சாலவிடைபெற்றுத் தனதகம்போய் மேலெவருந் 1304

தாமறியாவண்ணந் தனியிருளிலக்குடத்தை
மாமடுவிலாழ்த்திமெல்ல வந்திவனும் நேமமுடன் 1305

காலையினிற்சென்று கனமுழக்கத்தோடெழுந்து
கோலமிட்டதங்கக் குடமெடுத்து ஞாலமுள்ளோர் 1306
சூழ்ந்துவரமுன்மடுவிற் றேய்ந்துகனகக்குடத்தைப்
பூந்துள்ளமிழ்த்திவிட்டுப் பொய்க்குடத்தை யேந்திநிறை 1307
நீர்பொதுள நூல்பொதிந்து நீள்மாங்குழைசெருகித்
தார்புரளத்தன்றலைமேற் றூங்கியே யூர்சுழன்று 1308
சன்னதங்கொண்டாடித் தனிவேலைசெய்தவிடத்
தன்னைமாகாளிக் கபிஷேகம் முன்னியற்றி 1309
யக்குடத்தைநல்கிவிட்டா னுயிரம்பேர்சூழ்ந்திருந்து
மிக்கவடஞ்சற்றுமறிந் தாரிலையே மிக்கபகற் 1310
போதகன்றநள்ளிரவிற் போந்ததனையிற்கொணர்ந்து
பாதுகாத்துவாழ்ந்து பரமுற்றான் ஈதையந்த 1311
வேந்தன்முதலானோர் வெகுநாட்கழிந்தனபின்
தேர்ந்தனரப்பால்நகையென் செய்யலாம் நாந்தகங்கொண்
டெத்தனைபேர்காவ லிருந்தாலுநாமவரை
யெத்திக்கவர்த லியற்கையன்றோ வைநத்த 1313
பழநகையெல்லாமுருக்கிப் பைம்பணிவேறாற்ற
வழிதுறையோமடங்கு வருவா ரிழையைச் 1314
சதுரமிசைவைத்தழுக்குத் தட்டுதல்போற்கொஞ்சஞ்
சிதறித்தரையில்விழச் செய்துப் மதையுமெல்லக் 1315
கண்ணோட்டமிட்டுக் கழிவறமீதத்தையொரு
மண்ணோட்டிலிட்டுருக வைக்குங்கால் நண்ணுமிய 1316
லோட்டினுக்குள்ளி யொழுகவிழுத்தாட்டிநகை
காட்டியுமுன்கைச்சமர்த்தைக் காட்டுவாய் தீட்டிநகை 1317
செய்வதற்குன்பாற்கொடுக்குஞ் செம்பொனிற்கால்வாசியெடுத்
தையமறத்துண்டா யடக்குவைநீ பெய்தெடுத்த 1318
தங்கமிடைகுன்றுமற் றண்சரிகைவெள்ளியைச்சேர்த்
தங்குருக்கிக்கொள்வைமன மஞ்சாதே தங்கம்பொன் 1319
னெப்பணியானாலு மிழிகருக்கன்வெள்ளியினிற்
செப்புப்பொடியதிகஞ் சேர்த்தூதி யப்பா 1320

கனின்றுலவரீபழுக்கக் காய்ச்சியெடுத்திந்த
வவன்கண்ணில்மண்ணை யடிப்பாய் தவிர்ந்திலகு 1321

வெள்ளிநகையாகில் வியன்செம்பினைக்கலந்து
தெள்ளும்பணிகளைச் செய்குவா யுள்ளதுபோற் 1322

றங்கம்பொன்வெள்ளிகளிற் றன்கலப்பிலாதுசெய்தா
லெங்குழந்தாயீ தினமக் கென்னமிஞ்சும் அங்கவர்கள் 1323

செட்டிகள்பாற்காட்டிலந்தச் செட்டிகட்குந்நம்மவர்க்கும்
மொட்டியவுட்பேச்சொன் றுளதலவா செட்டிதட்டா 1324

றொன்றேயொருவர்க் கொருவர்கோட்சொல்வதில்லை
யென்றேமுன்சத்தியமேற் பாடன்றோ அன்றிடுசூள் 1325

தன்னைமறைந்தெம்மியல்பைச் சற்றும்வெளிவிட்டுரையா
ரன்னவர்க்குநாமு மதுபோலாம் முன்னுதித்த 1326

கட்டுரையைமீறிக் கலகமிட்டாராகிலவர்
குட்டுகளைநாமுங் குலைச்சுடைப்போம் செட்டிகள்சூ 1327

துக்குமக்கசாலையர்சூ துக்குமிணைபார்த்திடினூற்
றுக்குறையொன்றிட்டாலு மொவ்வாதே சிக்குளர்மோ 1328

சத்தைவெளியாக்கித் தலைகுனியச்செய்திடுவே
னித்தருணஞ்சத்தியெனக் கில்லையே யித்தையறி 1329

யாமலுலகத்தவர்தட் டார்மோசக்காரரெனப்
பேய்மதியாற்றூற்றிப் பிதற்றுகிறார் நாமறியப் 1330

பாரமிறுகச்சுமந்து பட்டிமாரித்திரிந்த
சீருமிவர்வாழ்வுந் தெரியாதா பூருவத்திற் 1331

கட்டினதாலிக்குக் கடைமணியில்லாததுபோ
யெட்டிரண்டும்பூணாற் கிடமாச்சு மட்டரிய 1332

தங்கநகையார்ச்சுத் தருந்தமுதலாச்சுதெழு
மங்குல்படிமாட மனையாச்சுச் சங்கையுடன் 1333

ஊரவர்கொண்டாடியுற வோங்கவுமிப்போதுசெட்டி
யாரவர்களென்றொருபே ராச்சலவா பூரிவினை 1334

மாந்தர்களாலன்றோ மலிந்தநிதிபெற்றனமென்
றுய்ந்துவிசுவாச மனுவுண்டா போந்துபுரி 1335

நன்கயர்ந்தசெட்டிகட்கு நம்மாற்சகாயமில்லை
என்பதும்பின்சொல்வே ணிருக்கட்டும் பொன்பணிக 1336

* ளுற்கையினிற்காய்ச்சி யுருக்கித்தரோமெனவும்
விற்கநகைசெய்துகொடோ மீண்டெனவுந் தற்கமுடன் 1337

ரம்மவரொப்பந்தமிட்டு நண்ணுங்காற்பின்னிவர்கட்
கிம்மியுந்தேட்டெய்தற் கிடமுண்டா கம்மியர்கள் 1338

தன்குற்றமேயொழியத் தற்பேணுஞ்செட்டிகள்மே
லென்குற்றநம்புத்தி யீனமே * புன்கயர்க்குக் 1339

கூவென்றான்மீதிற் கொடும்பகையென்பாரதுபோல்
நாவொன்றிப்பேசுதலு நன்றலவே மாவணிகர் 1340

பொய்ச்செயல்நாமேதூற்றப் போமாமல்லாந்துபடுத்
தெச்சிலுமிழ்ந்தாலெங் கிழிந்துவிழும் மச்சுமண்ணிற் 1341

றானெடுத்தபொற்பணியின் றன்மையுணராதவர்நம்
பானடித்துக்காட்டியிதைப் பாரென்பார் நீநடுக்கு 1342

றாதவுரைகல்லில்மச்சு மாய்பவன்போலேமாத்திப்
பேதையேயீதுசுத்தப் பித்தளையென் றோதியதைத் 1343

தூரத்தேவிட்டெறிவாய் சூதற்றானுண்மையெனப்
பூரிப்பொழிந்தவனும் போய்விடுவான் ஊரிலவன் 1344

போனவுடனவ்விடத்தைப் பூர்த்தியுறத்தேடியெடுத்
தானதையுமுன்போ லதுக்குவாய் தானிதுபோ 1345

லார்நமக்குச்செய்திடுவா ரம்புவியோர்தம்பொருட்குப்
பார்வையிடினுமொரு பங்காளி சேர்வையிட்டுத் 1346

தேசுயர்த்தகற்பணிகள் சேரவொருசமயம்
மாசகற்றக்கொண்டு வருவர்கண்டா யேசார் 1347

வெடியுப்புவேண்டுமென மெல்லக்கடத்தி
யுடையான்மீண்டெய்துமதற் குள்ளா யெடுசிலகல் 1348

பற்றாதென்றாசைப் படாதேமடியறுத்துக்
கற்றான்பால்கொள்ளக் கருதுவரோ சொற்றபடி 1349

---

* உற்கை-தீ. * கையர்-திருடர்.

வேற்றுமையுறுத்தரிப்பு மிக்ககறைப்போக்குகளை
மாற்றியதில்மாட்டி மருவிவிடா யேற்றமுள்ள 1350

கூலிகொடுத்தாலுமந்தக் கூலியினால்நம்முடைய
காலக்ஷேபந்தனக்குக் கட்டாதே கோவிநா 1351

மிட்டதேசட்டமடா யாருமென்னசெய்வரிது
கட்டளைத்துரைத்தனத்தர் காலமே வெட்டவிடக் 1352

கர்த்தர்களானாலுமரைக் கால்வாசிதீட்டுநம்மை
யொத்தவணிகர்தந்தர் லோர்வீசம் எத்தலமுந் 1353

தற்புகழ்ச்சியோர்க்கு சருவத்ரபூஜிதராஞ்
சொற்புலவர்பொன்னிற் றெடாதேநீ யற்புகந்து 1354

நாடியிசைபாடி னலமுண்டாஞ்சீறியரம்
பாடிலுயிர்மாய்ந்து பவுசழியும் நீடிநமக் 1355

கூரருட்கண்வேணுமப்பா வுள்ளூர்ப்பெரியதனக்
காரருக்குமட்டுமெடு கால்வரிசை யூரினுள்ளுஞ் 1356

சொற்றிறவாயாடிகட்குந் தொல்லார்சிநேகருக்கு
மொற்றுமையாய்மூன்றி லொருவாரம் மற்றகுடி 1357

யானவர்க்குநம்மவர்க்கு மன்றேசெம்பாதியெனத்
தானெழுதிவைத்தனர்மு தாளரே யானலுங் 1358

காலமறிந்து கவர்வாயென்றேபுகலப்
பாலன்மகிழ்ந்து பணிவுதலாய்ப் போலியரா 1359

மேழைகளுக்கெவ்விதமென் றேவினவச்சீறியடா
பாழ்படுவாயன்னவர்க்குப் பங்கேது யேழைகள்சொத் 1360

தவ்வளவுநம்மதுவே யார்க்குந்தெரிந்ததன்றோ
வவ்வுதொழிற்கல்லா படப்பயலே யிவ்வுலகி 1361

லிப்படியாநீபிழைக்கப் போராயெனவுதைத்துப்
பொய்ப்படுவான்றன் னுயிரைப் போக்கினன் செப்புமுலை 1362

மாதேயவரைவெகு வாஞ்சையுறக்கொண்டிடினுஞ்
சூதேபுரியுந் தொழிலுடையார் கோதே 1363

நிறைந்தகனபுளுகர் நித்திரையிலேனு
மறந்துநிசமுரைக்க மாட்டா ரறந்தவாச் 1364

சூளுற்றவர்போலுஞ் சொற்சாதுரியமுட
னுளைப்பகட்டி யலமலத்தி மீள 1366

மடக்கிப்பொருளை வசப்படுத்திநாளைக்
கடத்துவதில்வல்லாள கண்டர் புடத்தெடுத்தங் 1367

காய்ந்தபுவிமன்ன' ரரண்மனையிற்பட்டரைவைத்
தியந்திடும்பொன்சோர்வுக் கிடமிலதாய் வேந்தரன்று 1368

செங்கையில்வாளீந்திரண்டு சேவுகர்பாராகியமித்
தங்குறிப்பத்தட்டான் கண்டையமீ றிங்கு 1369

கறையூர்ந்தகத்தி கரம்பிடித்தவாறே
தறைவீரென்றேத அரேபாய் நிறைதீர்ந்த 1370

விப்பொன்னிலெட்டுணையே னுங்கவரிலுஞ்சிரசைத்
தொப்பென்றுவீழத் துணிப்பமெனச் செப்பலுங்கைப் 1371

போதடக்குஞ்செம்பொனையாத் தேதலைபோமேயெனவாய்
மீதடிப்பான்போலும் விழுங்கிவிட்டான் சூதடர்த்திச் 1372

செம்புருக்கியுள்ளே செலுத்திநிறைகாட்டுமந்த
வம்பர்கள் தன்சூதறிய வல்லவரா ரிம்பர்தனிற் 1373

றன்னகத்தைக்கொண்டதட்டார் சங்கடத்துக்கஞ்சியன்றே
பன்னகத்தைப்பூண்டான் பரமசிவ னின்னவர்பாற் 1374

றேறுமலீந்து தொடர்ந்துதொடர்ந்துநிதம்
வீறுயலைந்து மெலிவதினும் பேணுமுத 1375

லத்தனையுமோர்மறையோ னங்கையிட்டுநீர்வார்த்துத்
தத்தமதுசெய்தாலுந் தர்மமே யெத்துவழி 1376

வண்டப்பிரட்டர்நய வாக்குறுதியில்லாதார்
கண்டித்துக்கேட்பதற்குங் காலமில்லைத் தெண்டிக்கத் 1377

தக்கவதிகாரிகளுந் தந்தநகைவாங்குதற்கு
முக்கமட்டும்பார்த்து முடியாமல் வெட்கமுற்றுப் 1378

பேசாதிருந்துவிட்டார் பேதாய்நமக்கடங்கி
யாசாரிசற்று மசைவானோ நேசமுள்ள 1379

வர்த்தகர்பானன்னகைபாய் வாங்கிப்புனைந்திதனைப்
பர்த்திசெய்வேன்சற்றே பதறுதே கர்த்தரெனும் 1380

ஐவிதப்ரமாவெனுந்தே வாமிஷையாற்பூமிசையும்
றுய்விசுவகோத்ர முடையாரால் வையமிசை 1381

மின்னுலவுகோவில்குள மேலாலயப்ரதிஷ்டை
மண்ணியபூண்தேர்களுயர் வாகனங்கள் பின்னுமுள 1382

வெல்லாச்சிறப்புகளு மெய்திகலம்பெற்றிடுதல்
வல்லாரவர்தொழிலின் மாக்ஷியன்றோ வல்லாரில் 1383

ஆற்றலுறுநூற்றொருவ ராயிரத்திலேயொருவ
ரேற்றமுளநல்லோரிருக்கிறார் தோற்றமிகுந் 1384

தென் மதுரைமாநகரிற் றெற்குலவும் வீதியினிற்
றன்மதுரைபோலுந் தழைத்திருப்போன் பன்மலர்க்காக் ()

கந்தவழுங்கானூர்க் கணபதியாசாரிதிரு
மைந்தர்களிலாறுமுக மாலென்றும் செந்திருவைச் 1386

சார்ந்தசிவகெங்கைச் சமஸ்தானராசர்மெய்க்கத்
தேர்ந்தநயவேலைத் திறமையினான் சேர்ந்தொளிருங் 1387

கற்புரநூல்மார்பன் கணபதியாசாரியருள்
சற்புனிதவான்ராம சாமியென்றும் அற்புதமாய்த் 1388

தெள்ளித்தெளிந்தபுகழ்த் தென்னுகையாகுசேன்
பள்ளித்தெருவிற் பயில்கனவான் ஒள்ளியசீர்த் 1389

தஞ்சைநகர்வாழ்ராம சாமியாசாரிதவ
மஞ்சனெனவர்துதித்த வாய்மையினான் விஞ்சுதமிழ்க் 1390

கல்விப்ரசங்கமுள்ளான் கற்றோர்க்கமுதமன்னன்
நல்விற்பனனுலக நாதனென்றும் பல்குசுவை 1391

முத்தமிழ்போல்முப்பொர்றிபோல் முக்கனிமுப்பால்போலு
மொத்துலகில்வந்துதித்த வுத்தமர்கள் சுத்தமுறக் 1392

கோலமணிகுயிற்றுங் குந்தனவேலைத்தொழிலுஞ்
சாலவுநகாசியற்றுந் தாடாளர் வேலையினிற் 1393

கள்ளங்கவடறியார் கன்மஷஞ்சற்றேனுமில்லா
ருள்ளும்புறம்புமொத்த வுண்மையார் வள்ளலென 1394

மெய்த்தபுவிமன்னர்களும் மேன்மைப்ரபுக்களுந்தஞ்
சித்தமதிற்கொண்டாடுஞ் சீர்த்தியினா ரித்தலத்தின் 1395

தான்செறிந்துமேவுமக்க சாலையரநேகரிலும்
நானறிந்தமட்டிலிவர் நாணயர்கள் தானுமெனக் 1396

கந்தரங்கபத்தியுளா ரன்னவர்பாலெய்தியிளம்
பைந்தோடிநீசொன்ன படிமுடித்துச் சிந்தையினி 1397

லன்புருகயானே யணிந்தழகுபார்ப்பேனென்
றின்புறவெந்நாளுமெனை யேய்க்கிறார் பொன்புனைபல் 1393

சேரவெடுத்தாலுமவர் செய்பார்நோணயமாய்த்
தாரதுண்மையானுற் றருகிறேன் ஊரிலெனைச் 1399

சிந்திநகைக்கத் தெருவிலலையவிட்டுப்
பாந்திநின்றுவேடிக்கை பாராதே காந்தனே 1400

பொல்லானின்றின்ன புகல்போதுடல்குழையப்
பல்லாடிமெத்தப் பயந்தவன்போல் நல்லாய்நீ 1401

றென்னமொழிசொன்னீ ரிருசெவினுபாசந்
துன்னியபோற்றேகந் துடிக்குதே நன்னயமுப் 1402

பட்டணத்திலேமூவர் பண்புடையரென்றுமற்றோர்
கெட்டெணத்தைக்கொண்ட கெறுவரென்றுந் தொட்டணைத்த ()

நாயகன்சொற்கேட்டு நடுங்காதெனைப்பார்த்து
வாய்கொள்ளாவார்த்தை வழங்கினீர் தீயதொழிற் 1404

சின்னமொறுக்காத் திருட்டுப்பயல்களைப்போ
லென்னையொருக்காலுமனத் தெண்ணுதீர். கன்னக்கோல் 1405

சாத்துமிடமென்றுஞ் சாத்தாவிடமென்றுஞ்
சித்துவமிதார்க்குந் தெரியாதோ ஆத்தாடி 1406

மற்றவரைப்போலினைத்து மாதாபிதாவிடத்துங்
கற்றவித்தைகாட்டுங் கருத்துண்டோ சுற்றிமெல்ல 1407

யேய்க்கின்றகூத்திக் கிடுமருந்தையன்றுபெற்ற
தாய்க்கிடுவருண்டோ சரசமாய்ப் போக்கிரிக 1408

ளீனத்துவத்தா லிழுக்கேயென்போலனைய
மானஸ்தர்க்கெல்லாம் வசையாச்சே ஞானத்திற் 1409

றேற்றமிலானுன்கணவன் சீசீயெவரிடத்துந்
இற்றிலுநம்பிக்கை கிடையாதே மாற்றலரும் 1410

போற்றுபுகழ்நல்லதுக்கோர் பொல்லாதுபோலுமுமக்
கேற்றமணவாள னிவனுமோ · · சிற்றக் 1411

கடுஞ்செட்டுக்காரனிதைக் கண்டிடிலப்பாடா
குடும்பத்தினேருங் குழப்பம் நெடுக்காலம் 1412

பேச்சுவிளைந்து பிணக்காயிருவருக்கும்
மாச்சரியச்சண்டை வளருமே மூச்சுவிட்டால் 1413

வம்புவருமேவெளிக்கு வாராவிதமிதனை
யெம்பிறர்க்குங்காட்டா தியற்றியே ரெம்பவுநாள் 1414

மிச்சமிலையஞ்சாறு வேலையிற்காதுங்காதும்
வைச்சதுபோற்றுரேன் மகனுனை யச்சமற்றுச் 1415

சும்மாகொடுப்பீருஞ் சொற்படியேநற்பணியா
யெம்மாலோரட்டியிலா தீந்திடுவே னும்மவர்க 1416

ளற்புதசீராடையிலோ டாணிகழன் றுபல
கற்பணிபோச்சென்னக் கவலையுற்றுர் சிற்பவிதிச் 1417

சூத்திரத்தாலன்றிச் சுழலாத்திறுகணியாய்
வார்த்துவலுவாயிருக்கி மாட்டுவேன் நேர்த்தியுள்ள 1418

மாதிரியைக்கண்டு மடவார்பொருமையுற்றுக்
காதலனைப்போட்டுக் கசக்குவர்கள் சோதனையில் 1419

மின்றிகழ்மாற்றென்பதுக்கு மேலிருக்குஞ்சேதாரங்
குன்றியிடையேனுங் குறைவுபடா தென்றைக்கும் 1420

கட்டுக்குலையாது கண்காரச்செட்டிகள்பால்
வட்டமறக்காட்டி மதிப்பிடுவீர் மட்டுமலர் 1421

மாதாவனைய மயிலேயும தழகுக்
கேதாபணிதி யிகையுருக்கிப் போதுமிடை 1422

யிக்கணமேதாரே னிதுபோகக்கையிருப்பு
ரொக்கமுள்ளதெல்லா மூதவுவீர் லக்கினநல் 1423

வேலையிதேதங்கம் விரைவாகவாங்கிவந்து
நாளைமுதல்வேலை நடத்துவேன் கேளம்மா 1424

வீட்டுக்குமெத்த விருந்தினர்வந்தார்களிதற்
கீட்டியவெற்கூலியினி லேதேனு நீட்டுமென்று 1425

சாலமிட்டுச்சொல்லவிவள் தன்னினைச்சமூப்பாலே
மாலையிட்டோர்க்கஞ்சாத மாநீலி யோலமிட்டுக் 1426

கொல்புலியாத்தோல்போர்த்த கொள்கையான் றன்னைமெத்த
நல்லனிவனென்றே நனிமதித்துச் சொல்லரிய 1427

பொற்குவளையலோடுபல பூஷணமுநல்கிவிட்டாள்
மற்கடத்தையொத்த மதியில்லாள் சிக்கி 1428

யுருவியகோலானு ளுபர்சகடயோக்ஞ்
சருவியதாமெனவுந் தட்டான் விரைவுடன்றன் 1429

வீட்டிற்புகுந்துரிய மெல்லியற்குக்காட்டியவள்
வாட்டமுற்றகண்ணீரை மாற்றினான் நீட்டியநற் 1430

றண்டுலமுங்காய்கறிகள் சாமான்பதார்த்தமெல்லாங்
கொண்டுவந்துமாளிகையிற் கொட்டினான் கண்டையிட்ட 1431

சோமன்வயிரக்கடுக்கன் சோதிதிகழ்மோதிரத்தில்
மாமணியுந்தீட்டி வளைந்திட்டா னாமுடையாட் 1432

கத்தவளைவிட்டா னலங்காரப்பட்டெடுத்தான்
மெத்தநகைபூட்டி மினுக்கிவிட்டான் நத்துங் 1433

குழந்தைகளுக்கேற்ற குறும்பணிகள்பூட்டி
வழங்கவுளமீது மகிழ்ந்தான் கிழம்படுதாய் 1434

சாடையிலேபார்த்துமகன் றன்பாநெருங்கியிந்த
வாடையிலேநான்கிடந்து வாடையிலே லேடியவ 1435

ளஞ்சனமைக்காரி யதிபசப்புக்காரிமகா
பஞ்சரிப்புக்காரி பயில்காரிக் கஞ்சியந்த 1436

நாச்சியாளுக்குமட்டு நல்கினையோநானிருக்குங்
காட்சியைநீகண்ணாரக் காண்கிலையோ வாயச்சநெடுங் 1437

காலமகவில்லாமற் கன்றியுனதத்தனொடு
சாலவும்யானேகித் தலங்கள்சுற்றி மேலெனவுங் 1438

கண்டகண்டகோவிலுக்குங் காணிக்கைதான்செலுத்தி
யண்டரியதீர்த்தங்க ளாடிவந்துந் தொண்டர்களா 1439

மாண்டிபரதேசிகளுக் கன்னம்படைத்துமிக
நீண்டவரசுக்குநித நீர்வார்த்துந் தேண்டரிய 1440

தீக்கையுபதேசமுற்றுஞ் சேனைவிரதம்புரிந்தும்
ஊக்கரியகெற்ப முறலானேன் ஆக்கையினிற் 1441

பச்சைநரம்பெய்தமதி பத்துஞ்சுமந்துநிறைந்
தொச்சமறப்பெற்றே னுனைமணிபோற் செச்சைநறு 1442

நீராட்டித்தாராட்டி நீடம்புலிகாட்டிப்
பாராட்டிச்சீராட்டிப் பாதுற்றேன் ஓர்வேலை 1443

நோயணுகக்காணில்மன நோனுதெர்ருமருந்துக்
காயடவிதோறு மலைந்துழல்வே னேயாம 1444

லெத்திறத்தும்பட்டே னிராப்பகலோர்போதினுங்கண்
ணித்திரைசற்றுண்டா நினைவுண்டா முத்தனையாய் 1445

நீபிறந்தோராண்டு நிறைவுறுமுன் னுந்தை
தீபறந்தகாட்டினிடைச் சென்றெரிந்தான் சோபமுற்று 1446

வண்ணக்கலையிழந்த மான்போலொளிமழுங்கி
மண்ணிற்படிந்த மணியேபோல் பெண்மைக் 1447

குரியநிறைதவறு தாழியதிற்புக்குண்
டரியபாலகஷ்ட மடைந்தேன் இருநிலத்தி 1448

லுற்றாருக்குற்றா ருறவேமற்றல்லதுகை
யற்றார்க்குதவியு மன்புண்டோ பெற்றா 1449

ரிருந்தும்பயனிலவா லெவ்வுயிருங்காக்கும்
பரம்பொருளேதஞ்சமெனப் பற்றி வருந்தியுனைப் 1450

பொன்னாலலங்கரித்துப் போஷித்தருகிருந்து
மன்னர்மக்கள்போலும் வளர்த்தேனே தென்மொழியுஞ் 1451

சாதித்தொழிலும்மெ. கு தந்திரமுமந்திரமும்
போதித்துவைத்தனர்நம் புண்ணியர்கள் காதலநீ 1452

யெண்ணாறஞ்சிறுபருவத் தேநன்மணமுடித்துக்
கண்ணாற்கழித்துக் கதிபெறுவா னெண்ணியெண்ணி 1453

யெத்தனையோபெண்ணமைந்து மென்னுளமொப்பாமலுஞ்சொந்
தத்திலிவள்நாத்திமக ளாதலால் மொத்தையிரு 1454

நான்குவருடஞ்சமைந்து நாற்றமெடுத்துக்கிடந்தாள்
நீங்கரியமூளி நிறங்கெட்டாள் யான்கருத்துற் 1455

றன்னேபெண்பாவமிவட் காதாரம்வேறிலைநம்
சொன்னபடிகேட்குஞ் சுகிர்த்துமுண்டாம் பின்னடியிற் 1456

பெண்ணடியில்லாநமக்குப் பின்றளர்ந்தகாலமதி
லுண்ணொடியாதொட்டு முதவுமென்றும் பெண்ணீ 1457

ரணை கடந்தநீலிக் கழகில்லாதேனுங்
குணமிருந்தாற்போதுமெனக் கோரித் துணிபுறநான் 1458

வேணுமென்றுகொண்டுவந்த வெங்கஞ்சிறுக்கிமக
ளாணவமாயென்னை யவமதித்தாள் கோணிமன 1459

நாணித்தலைகவிழ நாவெடுத்துப்பேசவொட்டா
தாணித்தரமா யடக்கிவிட்டாள் வீணிலவச்1460

சேட்டையுறப்பேசித் தெருவிலுள்ளபேர்கடமைக்
கூட்டமிட்டென்குட்டைக் குலைக்கிறாள் கோட்டிகொண்ட 1461

நரியினுங்கேடானேனோர் நாளேனுமத்தையென்று
வாய்குளிரச்சொன்ன வசனமுண்டோ பேயுமஞ்சக் 1462

காத்திரநீலிக்கோலங் கட்டியவளாடுகின்ற
கூத்துக்குமத்தளநீ கொட்டுகிறா யர்த்தாளென் 1463

னன்புடையாட்கேளீ யடங்கிநடந்தாயிலையென்
றென்பொடியத்திட்டவுன்னா லேலாதே வன்புரையா 1464

யேண்டியகங்காரமுனக் கிவ்வளவாவென்றுபுடைத்
தாண்டடக்கினாலலவோ அஞ்சுவாள் ஈண்டெதிர்நீ 1465

பார்த்திருக்கப்பேசும் பழிப்புரையைக்கேட்டுமொரு
வார்த்தைகண்டிப்பாய்ச்சொலவும் வாயிலையே சேர்த்த 1466

மனையாளைமஞ்சத்தில் மைந்தனைநெஞ்சத்தில்
வினையாளை வேலைமுடிவில் லெனமுதியோர் 1467

தக்கவுரைதேர்ந்துஞ் சரணஞ்சரணமென்றே
விக்கியவள்காலடியில் வீழ்கின்றா யெக்குலத்தி 1468

லானாலுமுன்போ லறிவிலரைக்காணேனீ
தானாபெண்கொண்டாய் தரணியினில் மேனாளோர் 1469

வண்ணாரப்பையல் மனையாடனைக்குறித்தன்
றெண்ணாதிராமனையங் கென்சொன்னான் கண்ணுறுக்கும் 1470

நாட்டமவள்கண்டு நடுநடுங்கவேண்டாமா
ஒட்டையெனக்கால்வழிநீ ரோடாதா சேட்டைபண்ணித் 1471

தாங்குவதனாலுன் றலையில்மிளகாயரைத்துத்
திங்கரியசட்டஞ் செலுத்துகிறாள் · · சங்கிவள்தன் 1472

னாக்கையிழுத்து நருக்கினாலன்றோவென்
தீர்க்கவயிராக்ய சினந்தீரும் யேற்கையினி 1473

சன்னதங்கொண்டாடத் தலையணையின்மந்திரத்தா
லென்னவிதஞ்சொல்லியுரு வேற்றினளோ பொன்னினுநற் 1474

றுயலவாவென் றுபக்ஷாத் தாபமின்றிநேற்றுவந்தாள்
மாயையிலேவீழ்ந்து மயங்கினையே தீயர்களு 1475

மேசயிடங்கொடுத்தா யென்செய்வாயானுமதைப்
பேசுவதிலென்ன பெறப்போரேன் பிசிலுனக் 1476

காறுமுழந்தான்பெரிதோ வப்பாநீநல்கிலெனக்
காறுமுழந்தானென்று ளாங்கெழுந்து சீறியொரு 1477

## மாமிக்கும் மருமகளுக்குஞ் சண்டை.

வன்புலிபோற்பாய்ந்து மருமகள்தன்மாமிமுன்னின்
றென்புகன்றாயின்ன மியம்புவாய் முன்னமிரு 1478

நாலுவருடஞ்சமைந்து நாற்றமெடுத்தாளென்றும்
மேலழகில்லாமூளி வேசையென்றும் ஞாலமதிற் 1479

சிந்துவாரற்றுத் திரிந்தவளைக்கொண்டுவந்து
வாய்ந்தநடுமனையில் வைத்தனென்றுங் காந்தனிடஞ் 1480

சொல்விப்பரிசழித்த தோஷிக்குரங்கேயுன்
பல்லைப்பிடுங்கவொரு பல்லிலையே யல்ல 1481

தடக்கற்றநெஞ்சைவகிர்ந் தாறுகூறாக்கித்
தொடக்குற்றநாவைத் துணிப்பேன் விடக்கெடுத்த 1482

வங்குபற்றிப்பேய்நாயே வாயிலிடும்பாணாயே
சங்கைகெட்டுப்போனாயே தானாயே பங்கமுற்ற 1483

வெங்கங்கழுதாய் விருதா * வெறுங்கழுதா
யெங்கெங்கழுதா யிரப்புணியே பொங்கும்பா 1484

லூட்டிவளர்த்தாலு முயிர்தீர்விடமளிக்கும்
மோட்டரவையொத்த முழுநீலி நாட்டிலுனை 1485

* வெறுங்கழுது—வெறும்பசாசு.

நல்லவளென் றுருரைப்பார் நாறச்சவமேயுன்
சில்வாயைப்பேர்த்துத் திருப்பட்டா வல்லிருளிற் 1486

பூசவிடுபேய்க்கணமே போழ்வாய்க்கிழட்டோரி
பேசுவதைப்பாரப்பா பெப்பப்பே மாசுபட்ட 1487

வாருகோலாலுடலை வாட்டியெடுப்பேனுனக்கிங்
கார்சவிகைசொல்வா யறையிறேன் பாரெனவே 1488

காறியுமிழ்ந்தாளிவளுங் காறியுமிழ்ந்தாள்மருகி
தூறியிறைந்தாளிவளுந் தூறினாள் மீறி 1489

பிடித்தாள்மருமகளங் கிண்டெழுந்துமாமி
கடித்தாளொருகரத்திற் கவ்வித் துடித்தவளும் 1490

பற்றிமயிரைப்பிடித்தாள் பாழ்ங்கிழவிவவ்வால்போற்
றொற்றிமயிரைப்பிடித்துத் தொங்கினாள் சிற்றிடையிற் 1491

றுத்தாரிப்பட்டுமெல்லச் சோர்ந்துநழுவியந்த
வித்தாரிகால்சறுக்கி வீழ்ந்திட்டா ளத்தருணம் 1492

மாலேறிக்கொண்ட மருமகளைப்போட்டமுக்கி
மேலேறிக்கொண்டாள் விசைக்கிழவி கோலியமூ 1493

தாட்டியானாலுந் தயங்குசமயத்தினல்ல
வேட்டைவந்துவாய்த்தால் விடுவளோ ஆட்டமெல்லாங் 1494

கண்டுவிலக்கியவன் காதலியைச்சீர்திருத்தி
நண்டுகளைநீக்கி நொசிவகற்றிப் பண்டுபெற்ற 1495

## தட்டான் தாயைக்கோபித்தல்.

வன்னைமேற்கோப மதிகரிக்கப்பின்னுமன்னை
தன்வதனநோக்கியிவை சாற்றுவான் யென்னிருகண் 1496

ணாட்டியுடனீசரியோ அஞ்சாக்கிழப்பதரே
போட்டிபண்ணிச்சிரழிஞ்சு போகாதே தாட்டுறுத்தும் 1497

பாதுகைபோலொத்துப் படிந்தநடவாவிடிலென்
பேதையவளைப்படித்தான் பேசுவாள் வாதுபடு 1498

பேயிறைஞ்சுநீர்மையினாள் பேசியெனைத்தூஷணமா
யாயிரம்வைதாலுமெனக் கானந்தம் வாயிற் 1499

றிருகிருந்தசொல்லாற் சிலர்புறணிபேசி
யருகிருந்தாற்போதுமெனக் கன்பே யிருள்செறிந்த 1500

பாதகமலம்படிந்த பாவியேன்மீதிலவள்
பாதகமலம்படிலென் பாவம்போம் கோதி 1501

லவளேயென்றெய்வ மவளேயென்செல்வ
மவளேயென்கல்விநிறை யாஸ்தி யவட்கினமுந் 1502

தங்கப்பணியிடுவேன் தாவுகுழற்பூமுடிப்பேன்
குங்குமப்பொட்டிட்டுமுத்தங் கொஞ்சுவேன் செங்கையினால் 1503

மஞ்சளரைத்துங்கொடுப்பேன் வண்ணமலர்க்கால்பிடிப்பேன்
இன்சொற்படிநடப்பே னென்னிஷ்டம் னெஞ்சிலுனக் 1504

கேண்டிபொறுமையிதற் கேனோவயிற்றெரிச்ச
லாண்டான்கிடைத்தவ ளதிர்ஷ்டம் வேண்டியொற்றைக் 1505

கால்மேற்றவமிருந்து கற்பமுற்றுப்பெற்றாளாம்
வால்தலையைக்கிள்ளி வளர்த்தாளாம் பாலப் 1506

பருவமணஞ்சூட்டியெனைப் பார்த்தாளாமுள்ளத்
தருமைபுறக்கொண்டாடி னாளாம் மருமகளை 1507

வைத்தவரிசைக்கு மதியாதிவளையவ
ளத்தையென்றுசொல்லி யழைக்கலையாம் மெத்தமெத்தத் 1508

தோதலித்துப்பேசுஞ் சுணைகெட்டமூளியுனக்
கேதமைத்தான்கினியொன் றேனுமே காதகியுன் 1509

கோலவுடல்கூனிக் குறுகித்தளர்ந்துமின்னஞ்
சாலவகங்காரந் தளர்ந்திலவே வாலிபரா 1510

யெண்ணரியபேர்மடிந்தா ரியாதோவுன்வல்லுடலை
மண்ணரியுங்காலம் வரவிலையே திண்ணியவெங் 1511

கூற்றுவனுமுன் னுயிரைக் கொள்ளாதகலநின்று
னாற்றரியநின்கொடுமைக் கஞ்சியன்றோ வேற்றுருவ 1512

நீலியெனவந்துதித்தாய் நீதொலைந்துபோமளவு<br>
மோலமிட்டபூச லொழியாதே வாலொடுக்கிப் 1513

பேசாதேபோவெளியிற் பேயேயெனச்சினந்து<br>
கூசாதேபூதிக் கொடைகொடுத்தான் நேச 1514

மருமகனையன்று மருவீடழைத்தான்<br>
பரிசனமற்றியார்க்கும் பகர்ந்தான் மருகனுக்கு 1515

நற்சரிகைக்கட்டுவர்க்க நல்கினான் றன்மகட்குப்<br>
பொற்சரிகைப்பூண்பலவும் பூட்டினான் பற்பலகாற் 1516

பந்திவிருந்திட்டான் பலகாரவர்க்கமிட்டான்<br>
புந்திமகிழ்சிருதவிப் போக்கினான் சந்ததமும் 1517

வாதாட்டுவேசையர்கள் மாயப்படுகுழிக்குஞ்<br>
சூதாட்டுங்கோலித் தொடர்புற்றான் காதாட்டிச் 1518

செல்லநகைபூணச் சிறுதேட்டுச்செல்வியன்னாள்<br>
நல்கும்பொருளனைத்தும் நாசமாய் வல்விலங்கிற் 1519

## நகைசெய்யக் கொடுத்தவள் தட்டானைக் கேட்குதல்.

காட்டானையுண்கனிபோற் கையிலொருகாசுமில்லா<br>
தோட்டாண்டியானா னொடுங்கினான் சூட்டு 1520

நகைபுடிந்ததாவெனவு நங்கைவரிலெல்லா<br>
நகைமுடிந்ததென்ன நடித்துப் பகலிரவும் 1521

பட்டரைவைத்தேவேலை பார்க்கிறதபோலுமொன்றைத்<br>
தட்டுவதுஞ்செம்புருக்கிச் சாய்ப்பதுவு மட்டழலிற் 1522

பித்தளையைக்காய்ச்சியிந்தப் பேதைசெவிவிடைக்கச்<br>
சுத்தியல்கொண்டெத்தித் துவைக்கிறதும் செய்த்திடுமுன் 1523

றேட்டில்நகைவையாதே சின்னாளிலிப்படியே<br>
நீட்டுவள்பாரென் றுகம்பி நீட்டுவதும் மீட்டிவளை 1524

யேறிட்டுப்பாராம லேந்தியபின்னற்கொடியை<br>
யேறிட்டிருப்பவன்போ லேய்க்கிறதுஞ் சீறியதைக் 1525

காட்டென் றுரைக்கிற் கடுகடுத்துப்பேசிவே
காட்டமுடனோர்தகட்டைக் காட்டுவதுங். . திட்டிநகை 1526

வேலையெலாந்தீர்ந்ததினி மேலிரண்டுநாட்பிடிக்குங்
கூலியினிற்சொச்சங் கொடாததேன் எல்லையொடு 1527

திட்டவட்டமாயொழுங்காய்ச் சேர்மானமாக்கியதை
யொட்டியபின்றேனு முருப்படியாய்க் கிட்டுமெனச் 1528

சொல்லிவெகுநாட்கடத்தித் தோகையினிலேசில்விடாள்
மெல்லவிதைவிட்டு வெளியேறிச் செல்லுவதே 1529

## தட்டான் ஊர்விட்டோடுதல்.

போளப்பென்றோர்ந்தவன்பெண் டீர்க்குமட்டும்வற்புறுத்திக்
கோளத்தைநோக்கிவைச்சுக் கிண்ணினனே பாரியதன் 1530

## நகைக்காரி புலம்பல்

பொன்னிழுந்தமங்கையிந்தப் போக்காளிபோனவிடந்
தன்னையறியாமற் றடுமாறி யென்முதலைத் 1531

தட்டானென்றெண்ணியல்லோ சாதித்தேன்கட்புலனிற்
றுட்டானுயெங்குநின்று சாதித்தா யெட்டாநாட் 1532

போட்டுவிடுவேனெனவும் போதித்தசொற்போலும்
போட்டிபண்ணிவாயில்மண்ணைப் போட்டனையோ வீட்டிலுந்தன்

மங்கையுனக்காணனென்று மாரீசம்பண்ணுகிறு
ளெங்கேபறந்தா யிடந்தெரியேன் சிங்கலுற்ற 1534

கொள்ளைக்கழிச்சலுனைக் கொண்டுபோய்விட்டனவோ
துள்ளத்துடிக்கச் சுருண்டாயோ கள்ளரவம் 1535

பற்றிப்பிடிங்கினவோ பாரச்சடாமுனிதா
னெற்றியுனைப்பாய்ந்தெங் கெறிந்தனவோ வெற்றியுன் 1537

மீதுவிழுந்தனவோ வெந்துகரிந்துகவிப்
போதியமனூரிற் புகுந்தனையோ ஆதிநகை 1538

முற்றுங்கவர்ந்துவெறு மூளியாக்கினையே
பற்றியெறிபுதடா பாழாவாய் பெற்றமகன் 1538

தன்றலையின்மீதடித்துச் சத்தியமுஞ்செய்தனையே
நன்றுடையானென்றலவோ நம்பினேன் என்றலைவன் 1539

புற்றுக்குரைத்தது போதித்தபுத்தியெல்லாஞ்
சற்றுமதியாதுவிட்டேன் சண்டாளி மற்றுமிந்த 1540

வூரிலுள்ளபாவிகளு முண்மையுரைத்தாரிலையே
யாருஞ்சத்ராதியெனக் காணாரே போராடிப் 1541

பற்பலநாளென்கணவன் பல்லைக்கடித்தீந்த
சொற்பச்சாமானதிலுஞ் சோமாறி யற்பகலா 1542

யீயாயெறும்பா யிருகாலந்தேடியதைப்
பேயாங்குகாத்திருந்த பெற்றிபோற் றேயாமற் 1543

ஐபயடக்கமாகப் பவுன்பவுனாய்வைத்திருந்த
கையடக்கமெல்லாங் கவிழ்த்தேனே வையமதிற் 1544

நீதறவீயார்பொருளைத் தீயார்கொள்வாரெனவு
நீதிமொழியென்னி னிசமாச்சே காதலனே 1545

வேற்கையிலேசும்மா விரானேபொருனேமுன்
மூர்க்கனவன்பொல்லா முரடனே தோற்குமிதைக் 1546

கேட்டானேயாகிற் கிடுகிடுக்கவேனையப்
போட்டுத்தடியால் புடைப்பானே மூட்டிவசை 1547

மாற்றமுறப்பேசியெந்தன் வங்கிஷத்திலுள்ளவர்க்கு
மேற்றமட்டுமேற்றி யிறக்குவனே தூற்றிமொத்தி 1548

வாயிலவனேர்ந்தபடி வைதாலுமென்னையன்றி
தாய்தந்தையாவர்க்கும் சாற்றுவனே னோயென்ப 1549

தெத்தனையுற்றாலுமருந் தேயுண்பதில்லையிச்சா
பத்தியத்துக்கல்லோ பயந்துநா னித்யாதி 1550

பொன்னுக்குப் பொன்னிழந்து போகசுகமிழந்திங்
கென்னத்துக்காய்நா னிருக்கிறேன் அன்னன்னே 1551

சுற்றத்தார்க்கீந்தேனே சூழ்கருப்பாலாதார
மற்றவர்க்கேதேனு மளித்தேனே மற்றமடங் 1552

கோவில்குளமுண்டுபண்ணிக் கோடிபலன்பெற்றேனு
பாவியிலும்பாவியெனப் பட்டேனே தீவினையே 1553

னென்செய்வேனென்செய்வே னென்றுருகிக்கன்றியவள்
பன்மூன்றுநாளாய் பரிதபித்துப் பின்னிதனைக் 1554

கொண்டவர்க்குச்சொல்லமுனங் கூசிப்பயந்தூமை
கண்டகனுப்போலுங் கலங்கினளே மண்டலத்தி 1555

லிப்படியேமாத ரெழிலார்ந்தமுற்பணியுங்
கைப்பொருளுந்தோற்றுக் கழிந்தவரா யெப்பொழுதும் 1556

பொற்பிழந்துசித்தப் புலனிழந்தங்கூணிழந்து
பற்பிளந்துகூவிப் பதைத்தனராற் சற்புருடர் 1557

சீருயர்ந்தாரேனுந் திகழ்பணியிற்சிந்தையுண்டோ
நாரிகட்கேனிந்த நகைமயக்கம் நாரியர்கள் 1558

நாணமடமச்சம் பயிர்ப்பென்னுநால்வகையாம்
பூணேயணியாய்ப் புனைந்தறனைப் பேணியுந்தன் 1559

கற்பியல்வழாமற் கடிமனையைச்சுத்தமிட்டுப்
பொற்புடனுடோறும் புனலாடி யிற்புகுந்து 1560

சட்டரசவுண்டி தயாரித்தவர்கணவற்
கிஷ்டமுடனூட்ட லியல்பன்றிச் செட்டிதட்டான் 1561

வீடேகெதியாய் மெனக்கெட்டலைந்துசுடு
காடேபோமட்டுங் கலன்கலனென் றுடவரை 1562

மோதுப்பிடாரிகளை முற்றுந்துறந்துவன
மீதுறையும்வாழ்க்கை மிகநன்றே தோதகஞ்செய் 1563

மாதர்மனேமிதியேன் வாயுறவுஞ்செய்தறியேன்
காதலனைப்பேணுங் கவலையன்றி யாதுங் 1564

குறியேன்கொடுங்கூற் றுயிர்கொண்டுபோம்போ
தறனன்றிவேறுதுணை யாமோ திறமையுணர்ங் 1565

தில்லுக்கிசைந்தொழுகா ளேற்றமிகுகூற்றமெனுஞ்
சொல்லுக்கிடம்படுத்திச் சோராமல் நெல்லுக் 1566

குமியேபோலாதர முற்றும்மிதயமேற்கத்
தமியேநடாத்திவருந் தன்மை கமைசான்ற 1567

சித்தமறிவீரிதுநாட் டராக்குடும்பபா
ரத்தையும்மிலேற்றி யழித்தாம லத்தனையும் 1568

யானேபொறுத்துநின்றே னல்லதுவேறும்மிடையா
தேனுமொருதொந்தரவுஞ் செய்திரேன் மாநிலத்தோர் 1569

சித்தமகிழ்ந்தியற்றுந் தீபாவளிப்பெருநா
ளித்தலத்தினுளையிரா வெய்தலா லத்தையிவர் 1570

மேனலஞ்செய்யாது மிகச்சுருக்கிச்செய்தனரென்
றீனமெவர்சொல்வர்நம திஷ்டமே யானதினு 1571

லுள்ளதுகொண்டேபுரிகு வோமென்றிவளுரைக்க
வுள்ளமகிழ்ந்தன்னவனு மோதுவான் றுள்ளி 1572

நரகாசுரன்மடிந்த நாளிற்பெருமான்
சரணும்புயமலரிற் றாழ்ந்து மரணமுறு 1573

மிந்நாளைநன்னாளா யெங்குங்கொண்டாடவரந்
தன்னாற்படைத்திருக்குந் தன்மையால் இன்னநல 1574

மன்னுபுண்யகால மருவுபலனைப்பெறநா
னென்னவகைசெய்வே னிளமயிலே பொன்னுடையாந் 1575

## நாயகன்நாயகிக்கு லேவாதேவி விஷயங்கூறல்.

தன்பாற்கடன்வாங்கித் தான்புரிவோமென்னிலது
வன்பாய்விளைந்துவருங்கெடுதி பொன்கேட்பாற் 1576

கெவ்வளவுசொத்திருக்கு மென்பதையாருய்ந்துநன்றாய்
யொவ்வியசொத்தாயிரத்துக் கோர்நூறே வவ்வுதற்குப் 1577

போதுமெனக்கொண்டுமக்கிப் போதுதொகைநல்குதற்கிங்
கியா துமிலையாகி லிருந்தாலும் ஓதுமொரு 1578

நூற்றுக்குக்குன்றாது நோக்கப்படிகொடுப்பேன்
ஏற்றமில்லைநூற்றுக் கிரண்டரையாம் போற்றுமதை 1579

யாறுமாசக்கெடுவி லாய்ந்துசெலுத்தாதுவிடி
லூறில்கடன்பத்திரமுற் பத்திமுத லீறுவரை 1580

ஐந்துவட்டியாகவுமவ் வாறுமாத்தைக்கொருக்கால்
முந்தைமுதலோடு முதலாக்கி யிந்தவித 1581

மாச்செலுத்தவேண்டுமீ தன்றிமருபேச்சிலையென்
றார்ச்சிதமாய்ச்சொல்லவவ னொப்பியே வாய்ச்சபடி 1582

பத்திரமுமீடுகண்டு பாங்காய்ரிஜிஸ்தர்செய்து
மத்தொகையிற்கால்வாசி யாமுசிதம் பத்திரத்தின் 1583

கொள்கிரையம்நெட்டெழுத்துக் கூலிரிஜிஸ்தர்ச்செலவோ
டெள்ளரியசேவகர்க்கி னும்செலவு துள்ளுவண்டி 1584

வாடகைமற்றின்னசெல வாமென் றுந்தள்ளிமிச்சம்
கூடியதைக்கையிற் கொடுத்தபின்னர் நீடிநாட் 1585

கோளாதுவிட்டுக் கெணிதவட்டியேறுமட்டுப்
வாளாவிருந்தந்த வாயிதா நாளோர்ந்து 1586

சேர்ந்தமுதலத்தனைக்குஞ் சிவில்வழக்கிட்டுமிகத்
தேர்ந்தசெலவோடுமதைத் தீர்ப்பாக்கி யாந்தரங்க 1587

மாகச்சபுத்தி வாரண்டுப்பியோனொடுதன்
பாகத்திருவர்களைப் பாலித்து வேகமுடன் 1588

சென்றிடர்சித்திபெறச் செய்வீரென்றேவவவர்
பின்றிடரென்றுவிழும் பேரிடிபோ லன்றுபுகுந் 1589

தாடுகளைமாடுகளை யாஸ்திகளைவீடுநுழைந்
தோடியுப்புச்சட்டிவறை யோடுமுதல் நீடுமனை 1590

காணிகரையாவுங் கவர்ந்துகுடியோட்டிவிட்டார்
கேணியவன்குடும்பங் கெட்டனவே நீணிலத்தி 1591.

லிப்படியேயல்லா ரிவர்பாற்கடனேற்றுத்
துப்புரவாய்க்கெட்டார் சொலவரிதே ஒப்பரிய 1592

பாளையப்பட்டுத்துரைகள் பால்வலியச்சென்றுசிலர்
நீளுமனேவர்த்தி நிகழ்செலவுக் காள்வினையாய் 1593

நாங்கள் தருவோமீங்கு நல்குமுதலுக்குவட்டி
தாங்களென்னபோட்டாலுஞ் சம்மதமே யோங்குப்பணங் 1594

காசுபெரிதல்ல கனமுள்ள தங்கள்சித்த
நேசமதேகோடி நிதியாகும் வீசுமுதல் 1595

நூற்றுக்கரைவீதம் நோட்டெழுதித்தந்திடில்யா
மேற்றமிகுந்ததுகை யிகுவேம் தோற்றமுள்ள 1596

மாமதுரைசென்னை மருவும்பினுங்கிரங்கோன்
பாமருவுபம்பையுபர் பங்காளம் க்ஷேமமிகு 1597

நாகப்பூர்சிங்கப்பூர் நாஞ்கதிருநெல்வேலி
வாகொட்புகொச்சி மலையாளம் மாகொழும்பு 1598

தில்லிஐதிராபாத்து சித்தூர்கடப்பைமுத
லெல்லுலவுதேசமெல்லா மெம்புழக்கத் தொல்லுலகி 1599

லெவ்விடத்துக்காணுலும் யாங்கள்தருமுண்டியலே
யவ்விடமெல்லாஞ்செல்லு மாகைபாற் செவ்வியசற் 1600

சித்தம்போல்யாங்கள் திறம்பாதொழுகுவமென்
றெத்தியிவர்சொல்லு மிழுக்குரையை நத்திநித 1601

மல்காமற்சொற்பசொற்ப மாகத்தொகைவாங்கிப்
பல்காலும்நோட்டெழுதிப் பாவிக்கப் பில்குசிறு 1602

தூறல்பெருவெள்ளமெனத் தொக்கிப்படர்ந்தனபோ
லூறிலக்ஷலக்ஷமா யோங்கினவே மாறியிவ 1603

ரீட்டுதலைவட்டி யிரண்டரையிப்போதுறலாற்
காட்டுமரைவட்டியினிக் கட்டாது நோட்டுகளை 1604

யொன்றாய்த்திரட்டி யொரேபத்திரமாக்கிப்
பொன்றுதிரண்டேனும் போடுங்கள் துன்றுவள 1605

மேந்துசமுத்திரத்துக் கேறல்குறைவில்லெனபோல்
வேந்தர்களுக்கிதோர் விஷயமா ஆய்ந்துசித்தம் 1606

மாமகிழ்ச்சிகூர்ந்து மறுபத்திரமெழுதித்
தாமதமில்லாது தருகிறெனப் மாமுகடும் 1607

நீள்சிலைப்பேனு நிமிண்டிக்கறிப்பனபோற்
சூளிலர்விடாமற் றொடர்ந்துபற்றக் கேளிரென 1608

வின்னவர்கணம்பா வியம்பிநின்றகட்டுரையும்
பின்னதற்குமாறுபட்ட பேதகமுந் தன்னுளத்திற் 1609

கண்டுணர்ந்துமற்றிவர்சங் காத்தமினிப்போதுமெனக்
கொண்டெழுகால்வட்டி குறிப்பிட்டுத் தண்டமிழிற் 1610

தீர்க்கமுடையான் சிவகங்கைவாழ்சுலா
வார்க்கமதிநின்ற வரன்முறையான் கார்க்கடல்சூழ் 1611

வையம்புகழு மகம்மதிசுமால்நெடுநாட்
செய்யுந்தவத்தில்வந்த சீராளன் துய்யநெறிச் 1612

செல்வத்துரைத்தனத்தார் செய்தசட்டப்லாக்கள்முற்றுங்
கல்விற்பொதிந்த களஞ்சியவான் பல்குபல 1613

பத்திரங்கள்சாசனங்கள் பாகசுவிகாரமுயில்
எத்தனையோலாவுக் கிசைந்தபடி சித்தமொத்து 1614

முற்றீட்டலேயசலாய் முன்னிமுடிக்குந்திறவான்
சுற்றீட்டமேவுந் தொடர்பினன் கொற்றமிகு 1615

மன்னவர்கொண்டாடு மதாருசிக்கந்தரெனு
மின்னிசையான்றன்னை யினிதழைத்தே யன்னவனுற் 1616

பத்திரமுந்தீட்டிப் பயில்ரிஜிஸ்தர்செய்துநல்கச்
சித்திபெற்றேமென்னுஞ் செழிப்புளராய் தத்தமூர் 1617

சென்றிருந்தார் செலும்வாயிதாப்படுமுன்
மன்றேறிக்கோர்ட்டில் வழக்கிட்டே வென்றுபெரு 1618

மான்கனென்றுமெண்ணுமல் வன்ஜபுத்திக்கட்டளைகொண்
டாங்குபுகுந்தேறி யரண்மனையைப் பாங்கொடுசூழ்ந் 1619

தேற்றவிலைபெற்றபொருள் யாவுங்கவர்ந்துகொடுங்
கூற்றமெனக்கோர்ட்டிற் கொடுபோகி மாற்றவின்றி 1620

பின்னிதவேலத்தில்விட்டும் பெட்புறுஜமீன்சிலதைச்
சின்னபின்னமாக்கிச் சிதறிவிட்டா ரின்னவர்கள் 1621

புன்மையுலகத்தவர்மேற் புல்லுருவியென்றறிந்தும்
நன்மதியுண்டாவதொரு நாளுமில்லை மென்சிறையாட் 1622

## முதலாளியை வஞ்சித்துகடன்வாங்குதல்.

காட்டிகலையாதுமுட்டை தானெடுப்பான்காற்செருப்பை
மீட்டொருவன்முன்கவர்ந்த விந்தைபோல் நாட்டவரை 1623

யெத்திமுதல்சேர்த்தவனை யெத்தத்துணிந்துகடஞ்
சித்தனொருவன்சிறந்த செல்வனெப்பாய்த் தத்திமிகத் 1624

தூண்டிபரியேறிச் சுடர்வேகடப்பணிகள்
பூண்டிருவரேவல் புரிந்துவர வீண்டிமுத 1625

லாளிதனைக்கண்ணுற் றளாவிப்புகழ்ந்துமையிந்
நாளிலுறவுற்றது நற்றவமே கேளுநமக் 1626

காஸ்தியளவிலையா னலுமிதுநற்சமயம்
பூஸ்திதியாங்கொள்ளும் பொருட்டுற்றேன் தீர்த்தபதி 1627

யாயிரத்திற்பாதிநம்மா லானமற்றப்பாதியை நீ
ரீயுமுசிதங்கால்சேர்த் தெண்ணம்போ லாயவட்டி 1628

கூட்டியொரேமொத்தங் குறித்ததினத்தினம
தாட்டலைவர்தன்பா லனுப்புவோம் மீட்டுகெடுத் 1629

தாண்டினொற்பதாஞ் சனித்தமுதலுடையார்
வேண்டும்போதைந்துவட்டி வீதமா யாண்டுதொறும் 1630

வட்டிக்குவட்டியிட்டு வாஜீபியாய்ச்செலுத்தக்
கட்டுப்பாடுற்றேன் கருத்திலெனப் பொட்டிமகன் 1631

வீசங்காசேனும்விடா மேலழுத்தமுள்ளவனை
யாசையெனும்பம்பரத்தி லாட்டியே மாசுமுன்று 1632

மத்துப்பிடித்திருக்க மாயமென்னசெய்தானோ
சொக்குப்பொடிமருந்தைத் தூவினனோ சிக்கிமுழுக் 1633

கல்லானநெஞ்சும் கரைந்துமெழுகாயுருகிப்
பொல்லாதகாலப் புணர்ப்பினை லொல்கியவன் 1634

சொத்தொன் றும்பாராமற் றொல்லீடுங்காட்டாமற்
பத்திரமுந்தீட்டிப் பணமீய வித்தொகையிற் 1635

கால்நஷ்டியாமெனக்குக் கைமேலுமக்கிதில்முக்
கால்நஷ்டியாமெனவுங் கைகாட்டி மேலுமினி 1636

யுன்னாலியன்றதுபா ரோகோவெனவுளத்துந்
றன்னானார்புக்கா ணகமகிழ்ந்தே பின்னரிழி 1637

வாணகெடுரூதுவிளை யாடல்விலைமாதர்மது
பானமதில்மூழ்கிப் பணமுழுதுக் தானிழந்து 1638

வீணாளாயுற்றவனை மிக்கமுதலாளிதினம்
வீணாளாயுற்று வெறிதலைந்து நாணமுறக் 1639

கெஞ்சிபடிக்கடிபோய்க் கேட்டவுடனேயவனும்
வெஞ்சமுறச்சீறி வெகுமுடுக்காய் வஞ்சகநீ 1640

## முதலாளியைத் தூஷணமாய் திட்டுதல்.

யெப்பத்தொகைகொடுத்தா யேதுமுழுமோசமிது
பொய்ப்பத்திரமோ புதிப்பித்தாய் தப்பிலியென் 1641

கையெழுத்தேபோலுமிது கற்பனைபாரிப்படியா
வையகத்தையெத்தி மயக்கினாய் செய்திடுமிப் 1642

போர்ஜரியின் குற்றமிதே போதுமுன்னைலேசில்விடேன்
வேர்வொழுகமாட்டி விலங்கிட்டுச் சார்ஜ்பண்ணித் 1643

தீட்டியோரேழ்வருடந் தெண்டிப்பேன்ட்யாம்பகர்நம்
வீட்டுளேன்வந்தாய் வெளியேநில் கோட்டுக்குப் 1644

போய்வழக்குச்செய்வையாங்குப் போந்துநெஞ்சையீர்ந்துனது
வாயில்மண்ணைப்போட்டு வருகிறேன் றேயமதிற் 1645

செங்கோற்றுரைத்தனத்தார் செய்தசட்டதிட்டமெலா
மங்கோர்ந்தேன்முற்று மவதானம் இங்கிலீஷிற் 1646

பீயேபீயேமுதலாய்ப் பேர்பெரியதேர்ச்சியுற்றி
ராயபகதுரெனும்பே ரெய்தினேன் நேயமுள்ள 1647

லாயர்களென்பாலணுகி லாய்ப்பயிண்டின்றாற்பரியத்
தாயபொருடோர்ந்தனர்களாதலால் நீயோ 1648

விழுக்குடையசுத்தமுட்டா ளென்னுடன்வாதித்து
வழக்கைச்செயிக்கவோ வல்லாய் பழக்கத்தா 1649

வின்னபாரிஸ்டருனக் கேற்பட்டுவந்தாலுஞ்
சின்னபின்னமாக்கியதைச் சேதிப்பே னிந்நிலத்தில் 1650

முந்தியதாம்பூல முதல்நிம்பரென்றுலகி
லெந்திறமைநீகேட்ட தில்லையோ யிந்தவித்தை 1651

யெங்கேபடித்தா யெவருனக்குப்புத்திசொன்னா
ரங்கேபோய்ச்செய்வா யதுபலிக்கும் வெங்கொல்லர் 1652

வீதிதனிலூசிவிலை விற்றால்விலைப்போமோ
யேதெனைநீமற்றவர்போ லெண்ணியோ சோதித்தா 1653

யப்படியாசெய்திநல்ல தாகட்டும்பார்சமத்தைத்
தப்படியிம்மட்டா சதிமோசங் * கப்படியாற் 1654

கொட்டினாற்றேளின் குணமறிவாரிக்கலியிற்
கட்டுரைசேர்நல்லதற்குக் காலமில்லை துட்டமித்ர 1655

பேதத்தாலுன்மதியைப் பேதிக்கச்சூதுவித்தை
போதித்தார்தம்மைப் புகன்றிடா யேதவனைச் 1656

சும்மாவிடேன்வலுவிற் றாண்டில்மீனைப்பவிழுந்
தம்மாவென்றேங்கி யலறியழப் பம்முதலா 1657

யேவுதற்குற்றத்திற் கிருகால்விலங்கடியா
தேவிடிலென்றீரமிருந் தென்னபயன் மாவலிய 1658

றெல்லோருமென்னோ டெதிர்த்துமுடியாதுகடற்
கல்லோலமென்னக் கலக்கமுற்றார் வெல்லுமெனப் 1659

¶ பாறொருத்தன்மேற்பாயும் பான்மையெனவந்தாய்நீ
வேறொருத்தனானால் விடுவேனோ தேறவுநீ 1660

* கப்படி-கொடுக்கு. ¶ பாறு-பருந்து ஒருத்தல்-யானை

யற்பனமக்கிடிலனென் றந்தோதயவுவைத்து
வற்புறுத்தல்பண்ணாது மன்னித்தேன் சற்பனையாய்த் 1661

தொட்டிலையுமாட்டித் துடையினிலுங்கிள்ளுகின்ற
பட்டிமக்களூரிற் பலருளரால் கெட்டவர்கள் 1662

சொல்வார்த்தைகேட்டுச் சுகமிழந்துபோகாதே
நல்வார்த்தையாகுமென்சொல் நம்புவாய் செல்போகக் 1663

கையிருப்பையார்க்குங் கடனுடன்கொடாமலினிப்
பையிருப்பிற்கட்டிப் பதுக்குவாய் பொய்யிலையான் 1964

செப்பியநன்மார்க்கந் தெரிந்தனவோநீயிங்கு
கப்புச்சிப்பெண்றுசத்தங் காட்டாம லப்புறம்போ 1665

வென்றுபலவாறு யெடுத்தேறிப்பேசமனங்
கன்றிமுதலாளியிரு கானடுங்க நின்றுருகி 1666

## முதலாளி மனம்வருந்துதல்.

எண்ணாதுமெண்ணியிடைந் திப்பொருளைக்கூட்டுதற்குப்
பண்ணாதசெட்டுகளைப் பண்ணிமனம் புண்ணாய்த் 1667

துலைதூரதேசமெல்லாஞ் சுற்றித்திரிந்தங்
கலைவாய்க்கடற்கு ளமிழ்ந்திப் பலதொல்லைப் 1668

பட்டேனுழன்றேன் பரதவிக்கப்பெண்டிர்பிள்ளை
விட்டேனலைந்தேன் மெலிந்துநான் கஷ்டமுட 1669

னுண்ணாதிரவலர்வந் தூணென்றுற்குட்டியிட்ட
பெண்ணைப்போற்சீறிப் பிதற்றியே மண்ணிற் 1670

படைத்தமுதலையிந்தப் பாவிதனக்கேயொப்
படைத்துமுதலைநொந்தே னந்தோ கிடைக்கரிய 1671

இஷ்டரரைவட்டிக்கங் கீயுமெனக்கேட்டவர்க்கா
கட்டுமென்றுநாளைக் கடத்தியே ¶ தட்டல்வட்டிப் 1672

பேராசைபூண்டு பெருத்ததொகையிழந்த
சீராளனென்போற் றெளிஞ்ஞரார் பார்மீது 1673

---

¶ தட்டல்—ஐந்து

நீதவட்டிக்கியாத நீதவட்டிக்கிந்தமுத
லாதல்போற்றேன்றி யழியுமென வேதனா 1674

லாய்த்திருந்துமர்சைக் களவில்லையென்பனபோ
லோய்ந்துமதிகெட்டே னுணங்கினேன் வாய்ந்தவிசும் 1675

## முதலாளி தெய்வபிரார்த்தனை செய்தல்.

பிந்திரனீடேற வெழுபாரறமீறக்
கொந்தளிக்குமன்பர் குறைதீர வந்துதித்த 1676

பன்னிருகைவேலா பழிக்கஞ்சுதேவேமீ
னன்னவிழியாய்கூட லம்பிகாய் முன்னை 1677

வடங்காரலைத்துயிலு மாலேசீரிந்தக்
கடன்காரன்நெஞ்சைக் கரைத்துக் கொடுஞ்சனியன் 1678

வட்டியொன்றும்வேண்டாமுன் வாரிக்கொடுத்தமுதல்
மட்டும்வந்தாற்போதும் வழக்கிலையே நஷ்டத்தாற் 1679

¶ றேலிக்கையுற்றிடுபென் செங்கைவசமாக்குதிரேல்
நாலத்தோர்பங்குமக்கு நல்குவேன் மேலுற்ற 1680

பொன்னாபரணம் புயங்காபரணமுடன்
சொன்னாபிஷேகமிட்டுச் சூட்டுவேன் முன்னேர்ந்த 1681

காணிக்கைக்கெல்லாங் கணக்கிட்டுவட்டியுடன்
பேணிச்செலுத்திப் பெருக்குவேன் வேணியினில் 1682

திங்களணிமாரியற்குத் திட்டிக்கிடாயும்வெட்டிப்
பொங்கலிட்டுங்கோயிற் புதுக்குவே னெங்குடியைக் 1683

## முதலாளி கோர்ட்டில் வழக்கிடுதல்.

காப்பாற்றுமென்று கனதெய்வம்போற்றியுயர்
தாப்பானஞாய ஸ்தலம்புகுந்து தீர்ப்பாக்குஞ் 1684

சாரந்தெரிந்தவக்கில் தம்மையெடுத்துண்மையிலோர்
வாரமதிற்கோட்டில் வழக்கிட்டா னேர்பிரதி 1685

---

¶ தேலிக்கை—கனக்குறைவு.

வாதிக்கறிக்கைமுந்தி வந்ததுகண்டேங்கியிதற்
கேதுசெய்வோமென்றிவனு மெண்ணியே சூதுங் 1686

## பிரதிவாதி சாக்ஷியேற்படுத்தல்.

திருட்டுமுருட்டுமிகத் தேர்ந்தகசவஞ்சப்
பிரட்டரிடமடுத்துப்பேசி மிரட்டுமிதி 1687
லென்தரப்புச்சாக்ஷிகளா யெண்ணியுமைக்கோருகிறேன்
றன்றிறமையோடிதுபோற் சாற்றுவீர் முன்பவர்கள் 1688
கற்பனையாயிப்பத்திரங் கணித்ததேதியினி
லப்பீல்விஷயமொன்றை யாலோசித் திப்பிரதி 1689
வாதியுடன்யாங்கள்சென்னை வைகியதெதார்த்தமந்த
வீதியிலுள்ளார்க்கும் விசிதமா மோதுமிவன் 1690
பொன்னுடையானல்ல புகழ்திரசுத்தமுள்ளான்
பன்னுமறமுள்ளான் படிறுரையான் இன்ன 1691
கடன்வாங்கலுண்மையென்றுங் கட்டுரைப்பாடான
படுமோசத்தாவியற்றும் பண்பே யுடையதென 1692
நீவிரிவருந்தா னிச்சயமாயச்சமற்றங்
கேவறாற்சாக்ஷி யியம்புவீர் சீவில்முன்ஸீபம் 1693
பூதத்துக்கொல்காமற் பொய்யையொரேமொழியாய்ச்
சாதித்தாலெவ்வழக்குந் தள்ளலாஞ் சூதற்ற 1694
வாதிவக்கீலும்மை மருள்படக்கிராசுபண்ணிப்
பேதிக்கச்செய்து பிரட்டுவான் ! போதிலுளங் 1695
கன்றியுணர்ச்சிகெட்டுக் கைமறந்துமெய்மறந்தங்
கொன்றுகிடக்கொன்றை யுளறிவிட்டு நின்று 1696
விழியாதிர்மெத்த விழிப்பாய்நான்சொன்ன
மொழிபோலுஞ்சாக்ஷி மொழிவீர் வழுவிதென 1697
நீரஞ்சவேண்டாம் நிகழ்சிமைலாயர்களை
யீரங்கிபேச விழுக்கிறேன் நேரே 1698
மனுவாதிவக்கீல் தனக்கும்வாய்பூசி
யனுசரித்துக்கொள்வோ மடக்கி மனசார 1699

வாஸ்தவமாயுந்தமக்கோர் மாசெய்தாதெய்தினுமென்
னுஸ்திமுற்றும்பாரா தழித்திடுவேன் தூத்தேரி 1700
யாட்டுமுடந்தனக்கோ ரானைப்பலிகொடுப்பேன்
வாட்டமினியேனோ மருளாதீர் கேட்டீரா 1701
யிவ்வழக்கைப்பற்றிநமக் கிஷ்டரொடுபேசியகால்
மைவளைக்கைமாதர் மருணீங்க மெய்வளர்த்து 1702

## சாக்ஷிகளுக்கு குலதெய்வம்வந்து சொன்னதாய் தைரியங்கூறல்.

நம்புகுலதெய்வமின்று நாடியருள்கூர்ந்தெனது
தம்பிதுரைச்சாமிதன்மேற் சன்னதமாய்த் தும்பிகொட்டி 1703
மூதண்டமாயிறங்கி மோதியெனைப்பார்த்துநமித்
தீதண்டுஞ்செய்கை தெரிந்தாயா நீதம்பி 1704
யேண்டாயெனைமறந்தா யித்தனையுஞ்செய்தவனுன்
தாண்டாயென்பூசை தவிர்ப்பனவோ மூண்டவுன்பந் 1705
காளியுடன்சண்டையிட்டஞ் சாறுண்டளவுமென்னை
யேளிதமாய்த்தேடா திருந்துவிட்டாய் நீளியவுன் 1706
முன்னவர்கள்பூசை முறைதவறுதெஞ்ஞான்றும்
நன்னயமாய்க்கொண்டாடி நண்புற்று ரன்னவர்கள் 1707
பூமியினிலிட்டவித்தும் பொன்னுய்விளையவிஷ்ட
காமியங்களெல்லாங் கதித்தோங்க மாமகிழ்ச்சி 1708
யாவர்க்குநானே யருகிருந்துவேண்டியச
காயமுறச்செய்துகாப் பாடிவந்தேன் நீயொருத்தன் 1709
நல்லகுடிக்கு நடுநாயகம்போலுஞ்
செல்லமகன்வந்து செனித்திட்டாய் தொல்லுலகிற் 1710
றெய்வமிகமேலா லயந்தொழுகைசெய்யநன்றென்
றவ்வைநூல்கற்று மலைக்கழித்தாய் கவ்வையினுல் 1711
நைந்தவுனக்கின்றுவரும் நாளைவரும்புத்தியென்று
புந்தியிலிந்நாளும் பொறுத்திருந்தேன் வந்துவந்து 1712
பன்னுட்கனவிற் பகர்ந்துமிகழ்ந்தாயினிமே
லென்னாற்பொறுக்க வியலாது தன்னகத்தால் 1713

விஞ்சுசுடர்கான் றிடுதன் வீட்டுவிளக்கென் றுமுத்தங்
கொஞ்சிடிற்சுடாமற் குளிருமோ நெஞ்சினிலன் 1714

புற்றவனீயானாலு முள்ளரிவுகாட்டிவைத்தேன்
மற்றுனக்கிப்போதுபுத்தி வந்தனவா முற்றும் 1715

பொறுத்தேன்பிழையனைத்தும் புண்படவுன்சிந்தை
வெறுத்துக்கவலைகொள்ள வேண்டா முருக்கித் 1716

துயர்ந்தவெதிரிதனைத் தோற்கடித்துன்பக்ஷம்
ஜெயந்தந்தேனென் றுகரந் தீட்டி நயந்திடவென் 1717

கைமேலடித்துன் கருத்துநிறைவேறியபின்
னையப்படாமலெந்த னாலயத்தில் மெய்யாய்நீ 1718

சொல்லியசொற்போலுந் துலங்கியபூங்கப்பரையாம்
நல்லபெரும்பூசை நடத்துவையென் றெல்லவர்க்கும் 1719

நின்றுபரிபூரணமாய் நேர்ந்தபலகேள்விசொல்லி
யன்றுமலையேறி யமர்ந்ததே நன்றொடறங் 1720

காதுகலிகாலமிதிற் கண்கண்டதெய்வமிதைக்
கோதுகுறைசொன்னார் குடிகெடுமே ஓதிலெங்கள் 1721

தெய்வத்தைப்போலுமொரு தேவுண்டோவாய்திறந்தாற்
கைமேற்பலிக்குமந்தக் காரியமும் உய்தலினிப் 1722

பெற்றேன்பயமொழிந்தேன் பேச்சுப்போலுந்தமக்குச்
சொற்றவருவண்ணந் தொகைகொடுப்பேன் முற்றறிந்து 1723

பாருமெனச்சொல்லியவப் பாசாங்குப்பேச்சைநம்பி
நேர்பட்டாரிந்த நிருமூடர் கோருமிரு 1724

## சாக்ஷிகளிலொருவன் கூடாதெனல்.

சாக்ஷிகளிலேயொருவன் தற்கிப்பானீதில்நமக்
கேச்சுவருமன்றிநல மெய்தாதே வீச்சனபொய்ச் 1725

சாக்ஷியுரைத்தோரும்லஞ்சந் தான்வாங்கினோருமந்த
மாச்செயிலிலாகுமுக்கால் வாசிப்பேர் சீச்சியவன் 1726

ஆயிரந்தந்தாலுமொப்ப லாகாதேயொப்பிடில்நம்
வாயிலேமண்விழுந்து மானம்போக் தூயமனு 1727

நீதியிற்கோரட்டார் நியாயவதிகாரிகளென்
றோதியிந்தலோகமெல்லா மோசையரய்ச் சூதுகொண்டு 1728

தப்புப்பிரியாதுபண்ணல் தஸ்தவேசுப்பிரட்டுச்
செப்பருபொய்ச்சாக்ஷி திருட்டுகடை கைப்படுத்து 1729

நம்பிக்கைமோசமன நாணுவிபசாரங்
கும்பிட்டகொள்ளை கொலைமுதலாம் வம்புகளைத் 1730

தீர்க்கவிசாரித்துத் தெளிவாயவரவர்க்குத்
தாக்குகுற்றங்கண்டு தகுந்தபடி தூக்குடனே 1731

பங்கோற்பயிண்டு பருவிலங்குமாட்டியிரு
செங்கால்தளரச் சிறைப்படுத்தல் பங்கவப 1732

ராதந்தனைவிதித்தல் நாட்டுகின்றவம்பினிலே
வேதனையாய்க்கட்டி மிகவடித்தல் ஈதான 1733

தெண்டனைகளெல்லாந் திரணபக்ஷபாதமின்றிக்
கண்டினைகள்செய்யுமிந்தக் காலத்தில் கொண்ட 1734

பொருட்காசைபூண்டுநாம் பொய்சொன்னுலென்ன
திருக்காய்வருமோ தெரியோந் தருக்கமிடும் 1735

நாளைக்கோரட்டினிலே நம்மைப்பிடித்தபொல்லா
வேளையென்னவந்து விடியுமோ கோளெனவும் 1736

## மறுத்துஞ் சம்மதித்தல்.

விம்மியுரைத்தான்மறுத்து மிக்கபணத்தாசையினுல்
மம்மரடைந்து மதிகேடாய்ச் சம்மதித்துக் 1737

கோரட்டுவாயற் குறுகியுபயகட்சிக்
காரர்களுமெய்தியங்கு காத்திருக்கப் பார்புரக்கும் 1738

## கோர்ட்டார் தீர்மானம்.

வல்லகோரட்டார் மனுவுபயவாதிகள்தன்
சொல்லுரையும்பத்திரத்தின் சூழ்ச்சியையும் நல்குபல 1739

சாக்ஷிகளின்வாய்மொழியுஞ் சாராமிஷைகளெல்லாம்
ஊர்ச்சிதமாயாலோசித் துண்மைதனை மாட்சிமையோ 1740

டாய்த்துவாதிக்கே யனுகூலத்தீர்ப்புரைத்து
மாந்துமெதிர்வாதிகுற்ற மன்னித்தே யேந்துமர 1741

சாட்சியர்முன்னச்சமின்றி யப்பிரமாணம்புகன்ற
சாக்ஷிகளாம்ரெண்டு தடியருக்கும் மாய்ச்சலுறக் 1742

கோரவிலங்கிட்டு கொழுத்ததலைமண்சுமக்கத்
தீர்மானமேழ்வருடஞ் செய்தனரே நேரிலிதைக் 1743

## தெண்டனைபெற்ற சாக்ஷிகள்வருந்தல்.

கேட்டவுடனன்னோர் கெடியாலிடியடர்த்து
வீட்டுதருவெனவும் விழ்ந்தலறி மீட்டுமொரு 1744

வர்க்கொருவர்தன்கழுத்தை வாவிப்பிடித்தினைய
சொற்கள்பலபண்ணித் துடித்தழுவார் தற்குணத்தால் 1745

முன்னாலேகெட்டவர்கள் மூவரென்றுசொல்வர்கள்நாம்
தன்னாலேகெட்டோஞ் சதைக்கொழுப்பால் நன்மனையாள் 1746

போகாதேபோகாதே பொல்லாதஜட்சியென்று
சாகுருவிபோலுந் தடுத்தாளே ஆகெடுவான் 1747

மல்லாரிபெற்றமகன் மாயத்துக்குள்ளாகி
பெல்லாநலமு மிழந்தோமே செல்லமகன் 1748

றம்பிதுரைச்சாமிதன்மேற் சாமிவந்துதாம்பயலை
மொய்ம்புறக்கோபித்து முறுகினதாம் பின்புமுனக் 1749

கேஜெயமுண்டாக்குவனென் றேறகவலக்கைகொடுத்துப்
பூஜையப்பாற்போடென்றும் போயினதாந் தோசியவன் 1750

எத்தனையோதந்திரமா யேமாத்திநம்மிருவர்
புத்திமயக்கமுறப்போதித்தே யெத்திமெல்லக் 1751

கொண்டுவந்துமாட்டிக் குடியைக்கெடுத்துநம்மைத்
தெண்டனைக்காளாகவிட்டான் சிற்றப்பா பண்டைநல 1752

மெண்ணுமடையனுக் கேதேனுந்தந்தானோ
கண்ணூணானறியேன் கால்க்காசு மண்ணுவான் 1753

வாயாலேயேய்த்து வகைமடிப்புச்செய்துவெறி
நாயாயலைத்து நலியவிட்டான் ஓயாமல் 1754

நாடியிவன்சொல்மொழியை நம்பாதேநம்புவதிற்
கேடுவருமென்றேனீ கேட்டிலையே நீடுமக்கோர் 1755

தாழ்வுவரிலாஸ்திமுற்றுஞ் சாதிப்பேனென்றுரைத்த
பாழுறுவானெங்கோ பறந்துவிட்டான் வாழ்வுகந்து 1756

மேலில்வெயிற்பட்டறியோம் வேலையொன்றுஞ்செய்தறியோம்
எல்லைநலத்தோடிருந்தோ மென்செய்வோம் காலில்விலங் 1757

கிட்டொருவன்வன்ஜெயிலி லேவுபலகஷ்டமுற்றும்
பட்டுவந்தோன்சொன்னான் படிப்படியாய்க் கட்டைவெட்டச் ()

சொல்வாராஞ்சாடிமூக்கச் சொல்வாராஞ்செக்கிழுக்கச்
சொல்வாராமண்சுமக்கச் சொல்வாராம் பல்வேலை 1759

செய்துமுடித்துஞ்சிறிது செய்யமுடியாதுவிடில்
வைதுவெய்யிற்போட்டு வதக்குவராம் ஐயையோ 1760

காலாலுதைப்பாராங் கையாலிடிப்பாராங்
கோலால்நற்பூசை கொடுப்பாராம் ஒலிடவெங் 1761

காவல்வசப்பட்டுக் கழிவதினுமச்செயிலின்
சேவகர்நிர்ப்பந்தமோ செப்பரிதாங்; தூவன்னம் 1762

கிஞ்சித்துங்கிட்டாதாங் கேப்பைச்சுடுகளியாம்
பஞ்சொத்தகாற்கிரட்டைப் பாடகமாம் அஞ்சுற்ற 1763

இன்னவிதமாஞ்ஜெயிலி லேழ்வரிடமுந்தரித்தங்
கென்னவிதமாகவுமீ டேறுவோம் அன்னமய 1764

வூணிழந்துபேணு முடலிழந்துநெஞ்சநிறை
யேணிழந்துகீர்த்தி யிழந்தாலும் நாணிழந்து 1765

தன்னீர்க்கலசமொன்று தாங்கியுயிர்கொண்டுலவல்
நன்னீர்மைத்தன்றே நடைப்பிணமே முன்னேற்று 1766

தென்னபவஞ்செய்தனமோ.யேழ்வருடமுந்தொலைந்த
பின்னலவோபெண்சாதி பிள்ளைமுகந் தன்னைநாம் 1767

கர்ஊவமோவல்ல கடவுள்செயலெப்படியோ
நீணிலத்திலாயுளென்ன நிச்சயமா வீணன்முழுப் 1768

பாவியிலுஞ்சண்டாளப் பாவிநமக்கெங்கிருந்தான்
தாவியட்டமத்துச் சனிபோலே தேவியுடன் 1769

மக்களுநின்றேங்கி மயங்குவரேமம்பகைவர்
செக்கலிகொட்டிப்புரிவர் கேளிக்கை யக்கோவென் 1770

றையநெடுஞ்சிந்தையரா யாண்டுவிலங்கிட்டவர்கள்
தெய்வமதைநொந்து செயலழிந்தார் பொய்யனெனும் 1771

## பிரதிவாதி ஊர்க்குச்சென்று சொத்துகளை மறைத்தல்.

அப்பிரதிவாதி யயர்ந்துநான்தெண்டனைக்குத்
தப்பினதேமுன்னோர்கள் தர்மமென்றும் வெப்புறவே 1772

சாறிவரும்போதுகண்டோர் தான்வினவுங்காலையிவன்
மாறுறவோர்பேர்க்காய் வழுத்துவான் தேறவக்கீல் 1773

சாக்ஷிகளுக்கெவ்வளவோ சாதனையைப்பற்பலகால்
கூச்சமறச்சொல்லிக் கொடுத்திருந்தும் பேச்சைமறந் 1774

தீரங்கிக்காலத்தி லெக்கசக்கமாயுளறிப்
பாரெங்குந்தூற்றப் பழியடைந்தார் பேர்மங்கிக் 1775

கெட்டாரெனையுங் கெடுத்தாற்கடுஞ்சுழலிற்
பட்டாழ்கலம்போற் பயனிழந்தேன் கெட்டியாய் 1776

ஆனைவால்பற்றினவ ராறுகடந்துய்வர்சிறு
பூனைவால்பற்றினவர் போலானேன் ஆனாலும் 1777

கோரட்டார்செய்த கொடுமைகொடுமைதிரி
யூரட்டார்செய்கைவலி யூழென்றுங் கோரட்டார் 1778

மீதிலதிகோபமாய் வேகமுடனூர்புகுந்து
மூதியதன்சொத்து முழுவதையும் பேதமில்லா 1779

மற்றவிடத்தேபதுக்கி வாதியினிமேலிதனைப்
பற்றிமுடிந்தமட்டும் பார்க்கட்டுஞ் சற்றுந் 1780

திவலைவிடமாட்டேன் திரிந்துபடிகட்டிக்
கவலையுற்றுவீழ்வான் கயவன் அவலமுற்ற 1781

மப்பினிலோர்வேளையந்த வாரண்டிற்சிக்கிவிட்டாற்
றப்பிவெளியேறுதற்குந் தந்திரமுண் டிப்படிவாய்ச் 1782

சட்டதிட்டங்காட்டிச் சமர்த்தாகப்பேசினும்வெண்
சட்டைகண்டாற்கால்கள் தரியாதே கஷ்டமுற்ற 1783

## வாதியின் சங்கதி.

வாதிகளிகூர்ந்து வலியிஜயம்பெற்றேமென்
றோதரியவேமாப் புடையனுய் ஆதியெனும் 1784
மீனுக்ஷீசுந்தரற்கு மிக்கவபிஷேகமுதற்
றூனுக்ஷியாகச் சமர்ப்பித்தே யானல்நான் 1785
நன்மையேசெய்திருக்க நாடுமெதிர்வாதியெனைத்
தின்மையுறப்பேசிமெத்தச் சீறினன் அன்னவனை 1786
ஊரார்சிரிக்க வொருநாளைக்காணுலும்
பாராச்செயிலில்வைத்துப் பார்ப்பேனுன் பாருமென 1787

## வாதிவாரண் டெழுப்பல்.

நட்டணைகள்பேசி நயந்துபிடிவாரண்டுக்
கட்டளைக்காகப்படியுங் கட்டியே சட்டெனவே 1788
வாரண்டுச்சேவகனை வல்லையுறக்கூட்டிவந்தே
யூரண்டிவைத்தங் குசாவியே நேரலனேர் 1789
தாவளத்திற்பக்கமாய்த் தங்குதல்துப்பாலுமறிந்
தாவசித்துக்கண்டுபிடித் தக்கணமே சேவகன்பாற் 1790
காட்டியவனேகவிவன் காலயெமபாசமெனத்
தீண்டியவாரண்டைச் செலுத்தவே யாட்டமுற்று 1791

## வாரண்டிலகப்பட்டபிரதிவாதி சேவகனை உறவு கொண்டாட்டல்.

வந்தீரேஅண்ணு வளர்குழந்தைகுட்டிகளுஞ்
சிந்தனையில்லாதெவருஞ் க்ஷேமமா முந்திநா 1792
னண்டியகோரட்டி லனேகந்தடவையும்மைக்
கண்டிருப்பேன்பேசிக் கலந்திலேன் பண்டுங்கள் 1793
கீர்த்திநெடுநாளளவுங் கேட்டிருப்பேன் தங்களைநான்
பார்த்துவரவென்றூற் பலசோலி யார்த்த 1794

சிரஸ்தேதார்மற்றுமுள்ள சேவகருத்தியோகர்
பரிக்ஷையுண்டெல்லாரும் பழக்கஞ் . சிரஸ்ததார் 1795

என்பாற்பிரியமவ ரேதோவிசேடமென
வன்பாற்கடித மனுப்பினுர் நன்பாலா 1796

நெய்தயிர்பால்காய்கரிக ணேர்ந்தபழவர்க்கமிரும்
பைதவழ்தேனின்னம் பலசாமா னெய்துமதைச் 1797

சேகரித்துநாளைநின்று செவ்வாய்க்கிழமையங்கு
மோகரித்துநான்வருவேன் முந்திநீ யேகுவையென் 1798

றுதரவுஞ்செய்தங் கனப்பினேனீருமந்தக்
காதர்கான்றன்னையெதிர் கண்டிருப்பி ரீதுநிற்கத் 1799

தூண்டுமிந்தவாதிக்கோர் துட்டளவில்யான்கொடுக்க
வேண்டியதேயில்லை வெகுமோசம் மூண்டவெனக் 1800

காகாவிரோதிகளு மக்ரவாதிப்பயலும்
வாகாகச்சேர்ந்து மறைவுதலா யூகித்துக் 1801

கற்பனையதாயோர் கடன்பத்திரமமைத்துச்
சற்பனைவிரோதிகளே சாக்ஷியாய்ச் சொற்பயிற்றி 1802

மட்டிவழக்கிட்டான் மறுதலிக்குங்கேள்விகட்குத்
தட்டியெதிர்சொல்லத் தாமுண்டோ சட்டமுள்ள 1803

கோரட்டில்நேரே குறித்திடும் விசாரணையிற்
சீரிட்டென்பக்ஷஞ் செயமிருக்கப் பாரிஷ்ட 1804

ரோதியநியாய முணராதஜட்சியசல்
வாதிபக்ஷந்தீர்ப்பை வழுத்தினு ரீதைநா 1805

னப்பீலில்மாற்றி யடிப்பேனதாற்பெரிய
தப்பிதமனேகருக்குஞ் சள்ளையுண்டென் றப்புறமும் 1806

நன்றிசெய்தலாலே நமக்கோர்குறைவும்வரா
தென்றெண்ணிப்பேசா திருந்துவிட்டேன் பொன்றுகையை ()

யாயிரத்தோடின்னமுமை யாயிரமானுலுமற்றப்
பேயரைப்போற்சற்றுமனம் பேதியேன் ஞாயமின்றித் 1808

தொந்தமுள்ளதீர்ப்புத் தொகையைச்சிலவுடனே
சந்தேகநீங்கச் சரிக்கட்டி முந்தாநாட் 1809

செம்மடையன் றன்பாற் செலுத்திவரும்படியாய்
நம்முடையகாரியஸ்தர் நாகுவையர் தம்மிடையே 1810
கையுறக்கமாகக் கடுகியஜவாரியுடன்
பையுறக்கக்கட்டிப் பணமனுப்ப வையரந்த 1811
வாதிபாற்சென் றுமக்கு வாஸ்தவமாயுள்ள தொகைக்
கேதுமறுபேச்சுக் கிடமில்லை யீதுடன்கோ 1812
ரட்டுச்செலவி லரைவாசியல்லதும
திஷ்டம்போற்றள்ளி யிணக்கமாய்க் கட்டுமிதை 1813
வாங்குவீரென் றுவெகு வாய்நயந்துசொன்னாரா
மாங்கவனெப்பாதா லடமீறி யிங்கு 1814
மறுபடியுங்கொண்டுவந்தார் வந்ததொகையைக்
கறுவிமுகர்ப்போட்டி றுக்கிக் கட்டி யுறுதியுடன் 1815
கோரட்டில்காலைக் குசாலாய்த்தொகைசெலுத்திச்
சீரிட்டுவாரதென் று சிந்தித்துச் சாரட்டு 1816
வண்டியுந்தயார்ப்படுத்தி வைத்திருக்குங்காலையுமைக்
கண்டேனிதயங் களிகூர்ந்தேன் பண்டுபுரி 1817
மாதவத்தாலும்மை வரப்பெற்றேனுமிருவர்
பேதமில்லைநீரென் பிறவியே பூதலத்தில் 1818
நல்லார்சிநேகமதை நாடுவதேயன் றிநிலை
நில்லாப்பொருள்தா னிலைவரமோ நல்லோரே 1819

### வாரண்டுச்சேவகனை பிரதிவாதி வீட்டுக்கழைத்து வருகுதல்.

வாசனைசேரென்மனையில் வந்திருந்தங்கோர்வேளை
போஜனஞ்செய்தப்பாற் புறப்படுவோம் யோசனையேன் 1820
வாருமண்ணாவென் றுபல வார்த்தைகளைப்பேசவிந்தக்
கூறுகெட்டவேனவாய்க் கூதறையன் நேருடனே 1821
மெய்ப்படுசொல்லென் றுநம்பி வேகமுடனெழுந்தான்
கைப்படுசந்தோஷங்கவடுகொண்டே பொய்ப்புளுகன் 1822

## மனைவியிடத்திற் சொல்லுதல்.

நண்ணுமனையினிற்போய் நாயகியைக்கூவியென்ற
னண்ணுத்தைவந்தா ரறிபாயா நண்ணு 1823
யிருந்ததடிபாவா யிவர்நமக்குமெத்தப்
பரிந்திடுசிநேகசம் பந்தம் வருந்திநீ 1824
யாரென் றிராதே யிவருனக்குமச்சானும்
பூருவத்திற்செய்திருந்த புண்ணியமே யோருருவாய் 1825
வந்தாரிவற்கு வரிசையுபசாரமிட்டு
விந்தையுடன்பேசா விருந்திடுவோஞ் சந்ததமும் 1826
நம்மனையிலேபசுக்கள் நானுழியோகறக்கும்
அம்மனைத்தானல்விருந்துக் கஞ்சுவனே கம்மலிலே 1827
நித்தியமுந்தப்பாம னீகடைந்தவெண்ணெய்தனைப்
புத்துருக்குநெய்போற் புனிதமாய் வைத்துமலர்த் 1828
தாதுலவுஞ்சாடிகளிற் றுனிருக்குமேயதனைப்
பூதிச்செலவுபண்ணிப் போடாதே போதுமென்ற 1829

## பலகாரவர்க்கம் கூறுதல்.

பச்சரிசிமுக்குறுணி பற்றுதுபற்றலையென்
றச்சமயமூக்கா லழுகாதே பச்சரிசி 1830
யின்னம்பதக்கிட்டா லேராளம்நீயென்ன
சின்னஞ்சிறுசோ தெரியாதா பின்னுங்கேள் 1831
பச்சைக்கடலை பசும்பயறுகோதும்பை
மொச்சையுளுந்து முளைத்துவரை யிச்சையொடு 1832
பந்திநிறைசாரப் பருப்புவாதாம்பருப்பு
வந்தனவீதெல்லாம் வகைவகையா யந்திரத்தில் 1833
மாவரைத்துத்தெள்ளி மதுரம்புகட்டியதை
நீவளமாய்ச்சேர்ப்பாய் நிமிடத்தில் நாவினிய 1834
சீனிச்சருக்கரையுந் தேனுங்குடகுடமாய்ப்
பானிச்சணமழைத்து நல்குவேன் மானேதண் 1835

பூமலிவெண்பூந்தி பொலிவுறுசிலேப்பிலட்டு
மாதுமதுரமிக்க மதுர்பேணி · சோமாசா 1836

பாதுமல்வாகெய்யு நன்டை பாலடைரவாலாடு
தாதுவிர்த்திசெய்திடுகுஞ் சர்லாடு மோதுமொக்கல் 1837

பால்கோவாசேவு பணியாரந்தோசைமன
மால்மேவுபோளி வடைசுசியம் · நால்விதமாம் 1838

அப்பளம்தேம்பாகோ டதிரசஞ்சீராபருப்பி
முப்பழஞ்சேரல்வா முதலாக விட்டுவிபி 1839

லென்னபலகாரமுண்டோ யாவுமுன்கைப்பக்குவத்தால்
நன்னயமாய்முந்தி நடக்கட்டும் மன்னுசுவை 1840

## விருந்துவளப்பம் கூறுதல்.

காட்டுவிருந்தினுக்குக் காய்கறிசாமான்கள்பல
தேட்டமறக்கொண்டுவந்து சேர்க்கிறேன் நீட்டுசிறு 1841

சன்னச்சம்பாவரிசிச் சாதத்தைப்போதமுல்லை
மன்னுமலர்போலாய் மலர்த்தியே யின்சுவையிற் 1842

கூட்டுக்கறிகள் குழைக்கறிகள்நெய்த்துவட்டல்
பாட்டிசைநேர்பச்சடிபொற் பாளிதங்கள் வேட்டருந்து 1843

மோர்குழம்பைச்சற்று முதிரவிடாமலுந்தீம்
பாற்குழம்பைமெத்தப் பசுந்துசெய்வா யேற்கும் 1844

பருப்பிரசமுன்கையினுற் பக்குவமானலோ
கருப்பிரசம்போலினிக்குங் கண்டாய் விருப்புபெருங் 1845

கர்யமதைக்கொஞ்சங் கனமாகச்சேர்த்திடுவை
வாயுவைக்கண்டிக்கு மலநகர்த்தும் ஆய 1846

கறிவகையில்மிச்சங் கடுகையிடாயத்தா
விறுகுமலங்காங்கை யெழுமே நறியசெழும் 1847

பாயசத்துக்காகப் பழுதறுகோதும்பைரவ்வை
யாயதிற்றீம்பாலை யளந்துவிட்டுத் தூயபன்னீர் 1848

சுக்குச்சாதிக்காய் துடிசேர்கிராம்புடனே
பக்கரசம்வாதாம் பருப்புநெய்யு மொக்கநலஞ் 1849

சேருங்கற்கண்டொடுநற் சீனியுமொன்றாய்க்கலந்து
சாரந்தெளிவுபடத் தாளித்து மாரஞ் 1850
சிதமுறவும்பக்குவமாய்ச் செய்தாலண்ணாவுக்
கதுபிரியமாயிருக்கு மன்றே புதுமலரிற் 1851
றேமதுரம்போலுந் திரட்டுப்பால்பண்ணுவதை
நீமறந்திடாதே நினைவில்வைப்பா யாமிதிற்றப் 1852

## விருந்து வளப்பம்.

பாதுபலகாரவர்க்கம் பாதிசெலவாகமற்றப்
பாதியைச்சூதானப் படுத்துவாய் ஓதுமிவர் 1853
கூடவேசென்றந்தக் கோட்டிற்றுகைசெலுத்தி
மாடிதிகழண்ணா மனைபுகுந்து நாடியண்ண 1854
தேவியார்மற்றும்வளர் செல்வரையும்பார்த்தவர்க்கு
நாவினியபட்சணமு நல்கியே மாவிலையி 1855
லண்ணியர்க்கோர்பட்டு மருமைக்குழந்தைகட்கு
வண்ணச்சிற்றாடை வழங்குவே ளண்ணுறவுக் 1856
கூடாப்பெரிய சரிகைப்புருமால்கொடுப்பே
னீதெனக்கோர்லெட்சயந்தா னில்லையே மீதி 1857
யிறுப்புத்துகையி லிவர்க்கியன்றமட்டுங்
குறிப்பறிந்துபின்னுங் கொடுப்பேன் மறுத்துநீ 1858
வேண்டாமென்றோதி வெகுவாய்த்தடுத்தாலும்
நீண்டகைகொடாதினிமே னிற்குமோ வீண்டுலகி 1859
லிவ்வயதுக்குள்ளாய்நா னெவ்வளவோதேடியபொன்
னவ்வளவுமேவிறைய மாக்கினேன் மெய்வருந்து 1860
தீனர்களுக்கியாமற் றேடும்பொருளவர்பின்
போனதனுவுண்டோ புகலுங்காற் றானகுணம் 1861
மன்னியதோர்மூவேழு வள்ளலெனக்கீர்த்திபெற்றா
ரன்னவர்களீகையினா லல்லவோ வென்னண்ணா 1862
வெந்தாகமீறவந்தோ வெய்யிலிடைநடந்து
வந்தார்பசிமொறுக்க மாட்டிலா ரெந்தோகா 1863

யற்றத்தரித்திரமென் னப்பளத்தைவாட்டியிந்த
வற்றலைநீநன்றாய் வதக்கியே பற்றித் 1864

தொழவுரியமாற்றுத் துவையலிட்டோர்குத்துப்
பழையதுவைப்பாய்முன் பசித்துக் குழைவுறவே 1865

வாய்க்குருசியாய் வளமாய்க்கறிவகையுஞ்
சீக்கிரமாகட்டுஞ் செழுஞ்சமைய லாக்கர்கடை 1866

மாடுலவுஷாப்பிற்சா மான்கொஞ்சம்வேண்டுமதை
யோடியிதோவாங்கி யொருமினிட்டில் நாடிமிக 1867

## பிரதிவாதி வாரண்டுச் சேவகனுக்குத்

## தப்பியோடுதல்.

வாரேன்வாரேனெனவும் வாரண்டுச்சேவகனைக்
காரியம்போலெத்திக் கடும்புளுகன் பாரி 1868

யளப்பிதுவேயாமென் றதுபோக்காயோடி
யொளித்திடவச்சேவகனு முள்ளங் களித்து 1869

வருவான்வருவானென் றெண்ணிவழிபார்த்து
மொருநாளுங்காணு னுணங்கி மருவிநம்மை 1870

## சேவகன் மனம்வருந்தல்

மோசமேசெய்ததிலோர் மோசமிலையேமிகப்பே
ராசையெனக்கூட்டி யலமலத்தித் தோசியிவ 1871

னெத்தனையோவார்த்தை யிதமாயுரைத்தமொழி
யத்தனையுமெய்யென்றே யானிருந்தே னித்தரமாய் 1872

வஞ்சிப்பானென் றுகிஞ்ச மாத்ரமறிந்தாலிவனை
மிஞ்சிப்பறக்க விடுவேனோ கொஞ்சியுல 1873

கேத்துகொடையாளியைப்போ லென்னென்னமோபயல்தான்
பூத்தானங்காட்டிப் புளுகினனே தூத்தேரி, 1874

நல்லவிருந்தாம்வீட்டில் நானுழிப்பாலுளதாம்
அல்லவுநெய்ச்சாடி யளவில்லையாம் வெல்லமிட்ட 1875

கூட்டுக்கறியாங் குளக்கறியாம்நற்பாகைப்
போட்டுச்சமைத்த புளிக்கறியா மூட்டுகின்ற 1876

பச்சடியாம்நெய்யாம் பருப்பாமதிரசமாக்
கிச்சடியாம்வைச்சடிச்சுக் கிண்ணுவனும் பட்சணமாம் 1877

நற்றிரட்டுப்பாலாமென் னுபகிக்கப்பட்டுடையா
முற்றவெனக்கோ ருருமாலுஞ் சொற்றகொடைக் 1878

கன்னுவதிரக் கடும்புலிபாம்பாவர்தடை
சொன்னுலும்வாரிச் சொரிவானும் இன்னபல 1879

வார்த்தைகளாலேமாத்தி மாயமாய்த்தப்பிபசங்
காத்திமகன்போனவழி காணேனே யாத்தாடி 1880

யாடெடுத்தகள்ளனுக்கிவ் காக்கிபிட்டகள்ளியிவட்
கிடொருவருண்டோவென் றிவ்விதமாய் வாடியவ 1881

னுங்காழ்குபார்ப்பா னயர்ந்துமனங்குழைவா
னேங்காமலேங்கி யெழுந்திருப்பா னீங்கிவனும் 1882

ஆஜரில்லையென் றுசொல்லி யத்தாட்சிவாங்கவென்று
லோசரியாய்வாதியவ னெப்பானே நீசகன்செய் 1883

மோசமதையுள்ளபடி முற்றுமொழிந்தாலுமந்த
நாஸரெந்தன்சொல்மொழியை நம்பானே பேசியநா 1884

ளோரெட்டிற்சேவகன்பா லொப்பித்தேனென் றுசொல்லிக்
கோரட்டில்வாதிமனுக் கோருவனே நேரிட்ட 1885

குற்றமதைக்கண் டுணர்ந்து கோரட்டார்சேவகத்தைப்
பற்றறவுநீக்கிவிடப் பார்ப்பாரே நற்றயவா 1886

யாதியிலென்பாட்ட னதன்பேரிலென்தகப்பன்
பாதிகொண்டுயானும் பரம்பரையாய் மேதையுடன் 1887

சாலவெண்பத்தேழ் வருடச் சார்வீசேயாருமிக்க
வேலையிழந்துவிடுவேனே தோலாண்டி 1888

வேடம்பூண்டாலும் வெய்யனைநான்கண்டுபிடித்
தேடைரிபோட்டவனைத் தெண்டிக்கக் கோடறிய 1889

நாடிவருவேனெனவு நாளுமிவன்போற்சிலருந்
தேடியலைந்தோடித் தியங்கினரால் நீடுகடற் 1890

பேரண்டந்தன்னில்வெகு பேர்கள்பயங்கொண்டுபொல்லா
வாரண்டெட்வேளை வருமோவென் தீரற் 1891

கருகியதுவேநினைவாய்க் கண்கலங்கிநாளு
மருவுகின்றபோழ்து வழிமே லொருவனங்கு 1892

தாவுசட்டைபூண்டவனாய்த் தன்போக்காய்ப்பாதைவரச்
சேவகனோவென்று திகிற்பிடித்து நாவிதனாற் 1893

பாதித்தலைசிரைத்தும் பாதிசிரையாதிருக்கும்
போதுபறிபட்டுப் புளக்கடையாய் மோதுபெருங் 1894

காடுகளிலேபுகுந்துங் காணாமலைப்புடம்புந்
தேடியொளிவார் சிலபேர்கள் நீடுலகி 1895

## மற்றும் பிரதிவாதிகள் வாதியைக்கண்டு கேலிபண்ணுதல்

லார்ப்பரித்துநாளு மரசுபுரிகோரட்டார்
தீர்ப்புரைத்தபின்னுஞ் செலுத்தாமல் சூர்ப்புறத்தன் 1896

மாவளஞ்சேராஸ்தியெல்லா மற்றவர்க்குவிட்டுவிட்ட
பாவனைபோற்பத்திரமுற் பத்திபண்ணிக் கூவிக் 1897

கருதுமசல்வாதிதனைக் கண்டவுடனோங்கிச்
செருமிநின்றுமீசை திருத்தி மருவுஜெயீற் 1898

கெல்லாரைப்போலு மினியபடிகட்டவிதி
யில்லாப்பயற்கே னிறுமாப்புத் தொல்லைமுடை 1899

நாறுஞ்ஜெயில்தனையு நானறிவேனென்றுசொல்லிச்
சிறித்திரிவார் சிலபேர்கள் யீறுகின்ற 1900

## முதலாளிகள் ஒப்பந்தப்செய்தல்

வாணிபர்கள்கைப்பணத்தை வட்டிக்காயிச்சைகொண்டு
நாணயமிலாதவர்க்கு நல்கியே வீணிற் 1901

றெருத்தெருக்கடோறுந் திரிந்தலைந்துசிந்தை
வருத்தமிகக்கொண்டு ப றுகால் ஒருத்தருக்குஞ் 1902

செப்புக்காசேனுஞ் செலவிடல்கூடாதெனவே
யொப்பந்தம்பேசி யொழித்துவிட்டா ரிப்பரிசால் 1903

வானிடுவிற்போன்றநுதல் மானேவெறுங்கைமுழக்
தானிடுவதுண்டோநீ சாற்றுவா யானாலும் 1904
நன்கார்ந்தபண்டிகையை நாமுஞ்செய்வாமெனச்சீ
வன்போலும்பூண்டிருந்த மங்கலத்தை முன்போலுங் 1905
கொண்டோடிவிற்றுக் குலாவியதீபாவளியை
யுண்டாடல்காட்டி யொழித்தனரே மண்டலத்தோர் 1906
இவ்விதமாய்ப்பஞ்சத் திடர்மருவுகாலையினிற்
றெய்வபலத்தாலுமிதைத் தீர்ப்பமெனச் செவ்வியல்சேர் 1907

## மஹாநாட்டார் பஞ்சநிவர்த்திசெய்யச்
## சங்கங்கூடுதல்.

நானுதலத்துதித்த நாட்டுத்தலைவர்களும்
மானுபிமானமுள்ள மாந்தர்களும் ஞானவளம் 1908
பொங்குமதுரைப் புதுமண்டபத்தில்மகா
சங்கமெனச்சேர்ந்து சபைகூடி யிங்குநாம் 1909
ஆண்டவனிலாத வடிமையோகம்மைவழி
பூண்டகுலதெய்வமென்ன பொய்த்ததோ யீண்டியகங் 1910
கைக்குள்வெண்ணெய்க்கட்டி கனமாகவைத்திருந்தும்
நெய்க்கலைவார்போலு நினைவயர்ந்தோம் பொய்க்கலியாற் 1911
சங்கரனுமய்யமெடுத் துண்டான்றடங்கடலின்
மங்கையுடன்காடுறைந்தான் மாலென்றுஞ் சங்கமதில் 1912
அவ்வைசொன்ன நீதி யறியோமோநாமினிமேற்
றெய்வசன்னிதானமதிற் செப்புவோம் பவ்வமெழுந் 1913
சூரியனைக்கண்டபனி தோன்றுதகல்வனபோற்
பாரில்வினையெல்லாம் பறந்துவிடும் வாருமென்று 1914

## சோமசுந்தரக்கடவுள் சன்னிதானத்தில்
## நாட்டார்கள் முறையீடு

பற்றுத்தொடரும் பவந்தொலைத்துமுத்திதரும்
பொற்றாமரையின் புனலாடி முற்றுரிய 1915

சத்திசிவமாகிநிறை தற்போதசிற்பரமாஞ்
சித்திவிக்கினேஸ்வரனைத் தெண்டனிட்டு மொய்த்தலவு 1916

கங்கெழுகதம்பகவ னந்திகழ்மதங்கியுமை
பூங்கபமணங்கமழ் பதந்தொழுது பங்கமர் 1917

சதாசிவசுதாகர சடாதரசபாநட
னிதாகிதமிலாதவ னிராசத னதீநிய 1918

னிராகரனிராமயனி ராகிர்தனிராகுல
சராசரபராபர தயாபர னராவணிகொள் 1919

வேதாந்தவேதியனை வேதனுமால்காணரிய
நாதாந்தமோன நவமணியை ஆதார 1920

மேவுகருணாலயனை வீரியப்ரபாகரனை
மூவுலகுந்தானா முதற்பொருளைத் தேவாதி 1921

தேவசகநாயகனைத் தேசோன்மயப்பொருளைப்
பாவனைக்குமெட்டாப் பராஞ்சுடரை யாவிதொழு 1922

வெள்ளுக்குளெண்ணெய்போ லெங்குநிறைகின்றவனை
யுள்ளுக்குளுள்ளா யுறைபவனைத் துள்ளிவரு 1923

தந்தியதள்பூண்டவனைச் சச்சிதானந்தனைப்பொன்
னந்திவண்ணம்போலொளிரு மற்புதனை சுந்தரற்குத் 1924

தூதுசென்றமாமுதலைச் சூலாயுதக்கரனை
யாதிசருவேச்சுரவ னுமையனைச் சோதிநவம் 1925

பங்கயக்கண்ணாற்குப் பருதிவட்டந்தந்தானை
அங்கயற்கண்பாக மமர்ந்தானை யெங்கள்சிவ 1926

சொக்கேசரென்னுஞ் சுடர்தனைக்கண்டானந்த
நெக்குருகிநெக்குருகி நெக்குருகி யக்கணமே 1927

நாட்டாரனைவர்களும் நாடியகண்ணீரரும்பச்
சாஷ்டாங்கதண்டன் சமர்ப்பித்தே நாட்டமுடன் 1928

வானாதிபூதமுதல் மற்றும்பொருளெவையுந்
தானாய்நிறைந்த தயாபரனே மேனாளி 1929

லம்புயனுமாலுமுடன் முற்றுமிகல்மாற்றுதற்குத்
தம்பவழலாகிநின்ற தாணுவே நம்புபஞ்ச 1930

வன்படையாலன்றிறந்த மாயவராகக்குருளைக்
கன்படைந்துபாலருத்து மப்பனே மின்சால் 1931

உலகந்தனைப்படைத்தீ ரோதரியசீவர்
பலவுமினிதாகப் படைத்தீர் உலவுமதற் 1932

காதரமாய்மண்ணும்விண்ணு மாதாரமாக்கிமலை
வேதமுருதெவ்வுயிரும் ரெக்ஷித்தீ ரோதுமிந்நாள் 1933

அவ்விரண்டையுஞ்சுருக்கி லந்தோவான்மாக்களினி
யெவ்விதமுய்தற்கியலு மென்செய்வோம் செவ்வே 1934

பருவகாலத்தில்மழை பார்மீதுபெய்யா
தரியவிளைவில்லா தருகிப் பரவுயிரும் 1935

வாடுவதுஞாயமதோ மாமறையினுட்பொருளே
தேடக்கிடையாச் செழுங்குன்றே நீடுகடைக் 1936

கண்பார்த்தடியார் கலக்கந்தவிருமென்று
பண்பாய்த்துதிகள் பலபகர்ந்து நண்பொடெதிர் 1937

நின்றுநெடுநேர நிகழ்த்துமொழிகேட்டய்யன்
கன்றுகண்டவாப்போற் கனிந்திரங்கி யொன்றுக்கும் 1938

## சோமசுந்தரக்கடவுள் திருவாய்மலர்தல்.

அஞ்சாதீருங்கடமை யாதரிப்போநீவிரினிக்
கொஞ்சமேனுங்கவலை கொள்ளாதீர் பஞ்சமிங்கு 1939

நேர்ந்தவிதமெம்மை நினையாதிகழ்ந்ததினாற்
கார்ந்திவிளையாடல்சற்றே காண்பித்தோ மாய்ந்திடுங்கா 1940

லுள்ளத்துக்குற்ற மொருகோடியானாலும்
பிள்ளைக்குந்தாய்க்கும் பிணக்குண்டோ வள்ளலென்று 1941

நம்மிடம்வந்தன்பா னயந்துமொழிந்தீர்களுங்க
டம்மனம்போலேசகல சம்பத்தும் ரம்மியமுடன் 1942

நீங்கள்பெற்றுப்பூவுலகி னீடுழிவாழ்ந்திருக்கப்
பாங்காயுமக்குவரம் பாலித்தோ மோங்குலகில் 1943

இன்றுமுதல்வான மிறங்கிவருஷிக்குமிகு
நன்றிகளுண்டாகுமினி நாடோறும் வென்றிபொரு 1944

வேகவதிமுதலாய் மிக்கநதிதோறும்ப்ர
வாகமலிந்து வளம்பெருகும் நாகுலவு 1945

வாவிதடாகங்களெல்லாம் மல்கும்புனல்சிறந்து
மேவுசென்னென்முப்பூ விளைவோங்கும் பாவமறம் 1946

வஞ்சங்கெட்டோடுமினி வாய்மையறங்காருண்யங்
கொஞ்சிக்கலந்து குடியிருக்குங் கஞ்சமலர்ச் 1947

செந்திருவும்வீற்றிருப்பள் தேவாலயங்களெல்லாஞ்
சந்ததமும்பூஜை தழைத்தோங்கு மந்த்ரிகளுஞ் 1948

சேனைராசாங்கமொடு செங்கோல்தழைத்தோங்குந்
தானதவமெல்லாந் தலையெடுக்குங் கானக் 1949

கராசலமாமாதி கடையெறும்பென்றோதுஞ்
சராசரங்கள்யாவுந் தழைக்கும் நிராகுலமாய் 1950

வீரியத்தைப்பெற்று மிகவாழ்வீராகிலுநன்
மாரிபொழிந்தவுடன் மாநிலத்திற் சேருறவே 1951

யுந்தமக்கோநாளை யுழுமெருதுகட்குமுயர்
விந்தைபொருந்துவிதை வித்துகட்கும் முந்து 1952

தசகூலிமற்றதற்குந் தாட்டியாய்க்கையிற்
பசையில்லாதென்செய்வீர் பாவம் மிசைவாகத் 1953

தீர்க்கமுடனிதனைத் தேடிவிவசாயமதை
யேற்கையுடனீவி ரியற்றுகினு மேற்கனவே 1954

முந்தும்பலன்கள்வா மூன்றுதிங்கள்செல்லுமிப்போ
துந்தும்பசித்துயரை யோட்டுமோ வந்தோ 1955

சிசுக்கள்முதலாய்த் தியங்கவருத்தும்
பசித்துயர்கேட்டுள்ளம் பரிந்தேன் வசித்துநீ 1956

ராறுதலையுள்ளவனென் றன்பாகவந்தவுமக்
காறுதலையென்சொல்லி யாற்றுவேன் கூறியுங்கள் 1957

## சோமசுந்தரக்கடவுள் தம்துசரித்திரங்கூறுதல்

தன்பாடுமுற் றுமென்பாற் சாற்றினீருங்களிட
மென்பாடுஞ்சற்றே யியம்புவே னன்கார்ந்து 1958

வாழ்வுயர்பொன்வெள்ளி மலையாயிருந்தெனக்குத்
தாழ்குடிலப்பஞ்சத் தலைப்பாரஞ் சூழுமுனி 1959

வோர்கள்பன்னியார்நகைக்க லூன்மண்டையோடேந்திப்
பாரிலையமேற்றதுவுஞ் பண்டறிவீர் ¶ பார்வைக்கு 1960

யாருமறியா தவனா * யங்கமெடுத்தேன்பவத்தை
யிருமடியாருக் கெளியனான் யாருமற்றான் 1961

அன்னைபிதாவில்லாவ னாதியிவனென்னுமொழி
கன்னமுறவஞ்சிநெடுங் காடுற்றேன் பின்னுமோர் 1962

கம்பத்தில்ரெண்டானை கட்டியதனாலடைந்த
சம்பவங்கள்போதாந் தலைமுறைக்கும் வம்பியரா 1963

யுற்றமனையாட்டிகளி லோர்குமிளையாளொருத்தி
யெற்றிமிதித்தென் றலையி லேறினாள் மற்றொருத்தி 1964

யண்டாதநீவி யடங்காப்பிடாரிமணங்
கொண்டேற்கு மஞ்சாக்கொடுஞ்சூரி மண்டமரில் 1965

விற்ணாட்டுந்திக்கு விஜயமதிலென்படையைப்
பற்காட்டியோடும் படியடித்தா விற்குரிய 1966

மாதிவளோ §பொல்லாத ?வம்பியினாலன்றோநான்
பாதியுடலானதையும் பாருங்கா னாதிமுத 1967

லஞ்சுதலையாகிநின்றே னங்கமெல்லாஞ் ‡ சூடுபட்டேன்
கொஞ்சவிதியா ¶ னடுக்கங் கொண்டுநின்றே னஞ்சபையி 1968

---

¶ பார்வைமதி—ஆதவன். * அக்கம்—எலும்பு.
§ பொல்லாத பொள்ளாத வம்பி—வாசனையுடையவள்
‡ சூடு——அக்கினிமயம்
¶ நடுக்கம்—நடுத்தலை
விதியான்—பிர்மன்

லாட்டிவிட்டுக்கோட்டிகொண்டா ளந்தோவிதையுரைக்கி
னாட்டி லுள்ளார்பின்னு நகைப்பரே பீட்டுமந்தக் 1969

கட்டழகிசொல்வார்த்தை 0 கண்டு—பயந்தேனென்று
பட்டம்வைச்சுத்தேவர் பழிச்சார்கள் நட்டணையாய்ப் 1970

பிட்டுக்குமண்சுமந்தேன் பின்னிடையன்கைவாளால்
வெட்டுண்டேன்மேனி மிகச்சிவந்தேன் செட்டியெனக் 1971

கோதில்வளைகள்விற்றேன் கொள்ளாவிறகுவிற்றேன்
சாதிகெட்டவேடனெச்சில் தானுண்டேன் மாதுணிவாய்ச் 1972

சென்றண்டர்காத்திருந்த தில்லையினிலாடெடுத்தே
னென்றென்னையம்பலத்தி லேற்றினா ரன்றொருநாள் 1973

மாவகத்தைக்கொண்டவஞ்சர் வாழ்புரத்தைநானெரித்த
சேவகத்தைக்கேட்டாற் சிரிப்பாகும் பூவில்மறு 1974

போக்கில்லானென்றுமுழுப் பூச்சாண்டியென்று * மண்டங்
காக்கையென்றும்பொல்லாக் o கசடனென்றும் கோக்கரிய 1975

கள்ளன்மழுமாறியென்றுங் ‡ கஞ்சாக்குடியனென்றும்
பிள்ளைதின்னிப்பேயனென்றும் பித்தனென்றும் முள்ளடிய 1976

0 ஈனமுள்ளானென்று மிருகாலுஞ் || சந்துமிகப்
போனவிவனென்றும் * புழுக்கையென்று மானமட்டு 1977

§ மெய்யில்லானென்றும்வடி வேலருட [] மாமிதனைக்
கைகலந்தான் * போகிக் கடையனென்றுஞ் செய்யதங்கை 1978

மேலனலைமூட்டிவிட்ட விம்பனென்றுமென்பேர்கொண்
னாலெவர்க்குந் ═ கேவலமுண் டாமென்றும் நால்முனிவர் 1979

---

0 கண்டு கற்கண்டு - பயம் பால்
* அண்டங்காக்கை-உலகங்காக்குங் கடவுள்
o கசடன்-கசத்தைஅடஞ்செய்தவன்
‡ கஞ்சாக்குடியன்-மேலான குடும்பம்
0 ஈனமுள்ளான்-குற்றம்நினையாதவன்
சந்து-தூது-புழுக்கை-உஷ்டணமுள்ளகடவுள்
§ மெய்யில்லான்-சரீரமில்லான்
[] வேலன் மாமி-மான்
* போகிக்கடையன்-நாககங்கணன்
═ கேவலம்-மோக்கம்

பத்தினிமார்கற்பைப் பரிந்தழித்தவம்பனென்றுந்
துத்தியமாய்ப்பேசியலர் தூற்றினார் உத்தமரே 1980

கற்பறம்புமீதொருவன் காற்செருப்பினாலுதைத்தான்
முற்பிரம்புகொண்டொருவன் மோதினான் வற்புறுத்திக் 1981

கல்லாலொருவன் கடிதெறிந்தான் மற்றொருவன்
வில்லாலுமாட்டி விரைந்திழுத்தான் செல்வரெனப் 1982

பற்றிப்புனையும் பணியோபணியிடையிற்
றொற்றித்திரிவதுவுந் தோலாடை யுற்றிடுமிக் 1983

கேவலத்தினாலல்லவோ கேசவற்குப்பெண்ணழித்துத்
தாவுகடனஞ்செனக்குத் தந்ததுகாண் மாவளஞ்சேர் 1984

இன்னகருளானொருவ னென்பூசனைக்குரியார்
தன்னில்மிகநல்லன் றருமியென்போன் சொன்ன 1985

மிடியால்வருந்து மெலிவதனை மாற்றும்
படியான்பொருளமைத்துப் பாடித் தொடைவருசீர்க் 1986

கோங்குதேர்வாழ்க்கையெனக் கூறுந்திருமுகமொன்
றங்கவன்பாற்றீட்டி யனுப்பினேன் சங்கத்தி 1987

லீட்டுதமிழ்க்கீரனென்போ னென்கவியிலோர்குற்றங்
காட்டிப்பரிசைக் கடத்திவிட்டான் மீட்டுநீர் 1988

நெற்றிக்கண்காட்டியெனை நீற்றிடினுமிக்கவியிற்
குற்றமேகுற்றமென் றுங் கூறினான் முற்றவுநீ 1989

ரென்பிழைப்பைக்கேட்டா லெவர்க்குநகைப்பாமிகவும்
புன்பசியால்வந்தீர் புதல்வர்கா ளன்புறனு 1990

னுங்களுக்கேதேனு முதவிசெய்வோமென்றாலென்
செங்கையில்வேறேதுமுண்டோ செப்புவீர் பொங்கமுறப் 1991

பூருவமாயானும் பொருந்திவசித்திடுமோ
ரூருண்டவ்வூரதுவு மொற்றியே கார்வளஞ்சேர் 1992

பெற்றிதிகழின்னகரோ பெண்வழியிற்சீதனமாத்
தொற்றிவந்ததாலெனக்குச் சொந்தமில்லை நற்றொனிவால் 1993

வண்டார்ந்தகையான் வழங்குமொற்றைமாடுண்டு
கண்டீரதற்குமொரு கானுடக்கந் துண்டா 1994

யடகுவைத்துக்கொள்வீரென் றுபரணந்தந்தாற்
படையுநடுநடுங்கும் பர்ம்பாங் கடமேவு 1995

மும்பல்மெய்த்தோ ளுக்கு முடையாயணிந்திருக்கு
மம்புலித்தோ லுக்கும்விலை யார்கொடுப்பார் பம்புமுடை 1996

யாசுசவெண்பை யளிக்கிலதைக்கண்டவர்கள்
சீசீயென்றேசியுமைச் சீறுவார் மாசார்ந்த 1997

வக்குமணியைக்கொடுத்தா லார்சேர்துவார்கள்வெறுஞ்
சக்கையெருக்கூமத்தாற் சாரமுண்டோ கைக்குட் 1998

டருக்குற்றசூலமதைத் தந்தாலோர்துண்டுக்
கருப்பட்டியீவான் கடையில் லிருக்கின்ற 1999

வீடோமயானமந்த வெட்கக்கேடென்னசொல்வே
னோடன்றிக்கையினில்வே றொன்றுமில்லை நாடிக் 2000

கனமாய்நினைப்பீரென் காரியத்தைநீவிர்
வினவியுற்றால்வெட்ட வெளியா மனையவோ 2001

## விஷ்ணு சரித்திரங்கூறுதல்.

ரெத்தகைமையாவுமிசைத் தேனென்மைத்துனனார்
தந்தகைமையிற்சிறிது சாற்றுவேன் மைந்தனுடன் 2002

காதலுறப்போராடிக் காற்பங்குக்காய்நிலத்தை
வாதிலுமுதானென வாயனாய் மோதல் 2003

முதிருங்களத்திலுள்ளார் மொய்த்திருக்கப்போரிற்
கதிரையொளித்துவைத்த கள்வ னதுவுமன்றிப் 2004

பாடியிடைமாதருரிப் பாறயிர்மோர்வெண்ணெயெலா
மோடிநிதங்காணும லுண்ணுதல்கண் டாடியவர் 2005

நின்றன்னை தன்பா லிகழ்த்தவர்லோடுபெற்றிக்
கன்றணையுக்தாம்பாற் கடிதுகட்டி யின்றுமுதல் 2006

வெண்ணெய்திருடாதேநீ மெல்லியரைமானபங்கம்
பண்ணாதேசேஷ்டைகளைப்பண்ணாதே மண்ணையள்ளி 2007

யுண்ணாதேயென்ன வுறுக்கிப்பயமுறுத்தித்
தண்ணார்ந்தகைசிவக்கத் தானடித்தாள் கண்ணனிந்தப் 2008

பாடுபட்டபின்னும் பதுங்கிவெட்கமற்றொருநா
ளாடைகளவாண்ட தறியீரா தேடியவென் 2009
கண்ணேவருகவெனக் கையாலணைத்துமுலை
யுண்ணவளித்தா ளுயிர்குடித்தான் பண்ணிசைத்துக் 2010
காலிகளைமேய்த்தான் கலைகொணர்ந்தங்கேகியவே
காலிவிழுமாய்த்தான் கரத்தினாற் காலசரா 2011
சந்தனுக்காயஞ்சித் தனிமதுரைதன்னைவிட்டு
வந்துதுவரைக்குள்மறைந் தெய்தினான் முந்தியுமோ 2012
ரம்மானைக்கொன்றா னதுவன்றிப்பிந்தியுமோ
ரம்மானைக்கொன்றா னுடல்பிருத்து வெம்மையினா 2013
லாயாங்குரைத்தபடி யாண்டுபதினான்கலரா
ளோயா § வனவாச முற்றிருப்போன் நேயமுட 2014
னாபவொருமோகினிப்பெண் ணாகியெனையேமாற்றி
மாளைபதனில்வீழ்த்தி மயக்கிவிட்டான் றாயவெள்ளை 2015
வாரணனுக்காற்றும் வருடப்பலிதவிர்த்துப்
பாரணமாய்த்தான்றானே பப்பினான் போரிலபி 2016
மன்னுதளர்காலைபுரி வண்டொலியைத்தந்தையிரு
கன்னமுறுதார்த்த கபடனவன் றன்னுகடற் 2017
பூபாரந்தீர்க்கும் பொருட்டுலகில்வந்துதித்து
மாபாரதமுடித்த வஞ்சகனே யாபாசத் 2018
தக்கன்மகமீடழிக்கச் சார்ந்தவரைக்காட்டிவிட்டுப்
பக்கமதிலோடிப் பதுங்கினான் மிக்குலகோ 2019
ரேற்றசந்துபோனவனென் றென்னையிகழ்ந்தாரவனும்
போற்றுமொருகாற்சந்து போனவனே யாற்றலொடு 2020
சீராருமண்டஞ் செழிக்கப்படியளந்த
பூராயச்சொல்லிதவோர் * பூத்தானங் தாரணிமின் 2021
ளுங்கமுடியாதுவிட்ட தன்மையாலேபயங்கொண்
டோங்குகடலேகெதியென் றோடியே தேங்குதலா 2022

---

§ வனவாசம்—துழாய்மணம்
* பூத்தானம்—பூமிதானம்

யார்த்தவொருபள்ளியின்மே லாசைகொண்டுகூடினனிவ்
வார்த்தைவெளிவிடவும் மார்க்கமோ தீர்த்தனிவன் 2023

பன்னுசெயல்கூறிலொரு பாரதமதாய்விளையு
முன்னியதைச்சொல்ல முடியாதே யெங்கிலமும் 2024

விண்டுவென்றுநாமமுற்ற மேற்பகட்டேயன்றிவற்கும்
பண்டுரியகைப்பொருளும் * பஞ்சமே · கொண்டணிந்த 2025

பீதாம்பரகௌத்வம் பின்னைக்குரியதிந்தச்
சூதாம்பரனுக்கோ சொந்தமில்லை மீதூரு 2026

மைவசங்குமேலான் வடபத்ரசாயியிவன்
கைவசம்வேறுஸ்திதியொன்றுங் கண்டிலே னய்ய 2027

## பிர்மாவின் சரித்திரங்கூறுதல்.

னரியவுந்திமீதுற் றருள்பிரமனென்போன்
திரிமூர்த்தியிலிவனுஞ் சேர்க்கை பெருகியவோ 2028

ரீரேழுலகமெல்லா மியாமேபடைத்தனமென்
றோராவகங்கார முன்னினான் பேரான 2029

தாதையுடனெதிர்த்தான் றனுவழல்மாமுடியைப்
போதரவிற்கண்டனென்றும் பொய்சொன்னான் போதித்துத் ()

தாழைமடல்தனையுந் தான்கெடுத்தான்பூவுலகில்
வாழிடமில்லாமல் மறுகினான் வேழமொழித் 2031

தெய்வமணியாந் திலோத்தமையென்பாள்பொருட்டா
லெய்துதலையொன்றை யினிதிழந்தா னுய்வுறசீர் 2032

துய்யகலைவேதமதைச் சோமுகாசுரனிட
கையிற்பறிகொடுத்துக் கன்றினான் மெய்யிற் 2033

0 கழங்குறுநானேசிருஷ்டி கர்த்தனென்றுனென்னு
விழந்ததலைபடைக்க வேலான் குழந்தைச் 2034

சிறுவனுரைகேட்கத் தெரியாமல்மாழ்கி
வெறுவிலிபோனின்று விழித்தான் கறுவியவன் 2035

---

* பஞ்சாயுதம்   0 கழங்கு-அபிஷேகம்

ஞேங்கித்தலைதகர வோர்குட்டுவைத்திவனைத்
தாங்குசிறையிலங்கு தானிட்டான் வாங்கலுறு 2036

மைச்சலதிப்பாருலகில் மானிடர்கள்யாவரையு
மச்செல்லாமொன்று யமைவித்துப் பக்ஷமுடன் 2037

வாழ்ந்திருக்கவுஞ்சிலரை மாவறுமையாலிடைந்து
தாழ்ந்திருக்கவும்பலரைத் தாபித்தான் வாழ்ந்தவரி 2038

லாசுகவிநாவலர்க ளாய்ந்துதமிழ்ப்பாடினுமோர்
காசுதவாலுத்தக் கயவராய் மாசுளராய் 2039

ஸல்விற்பனமிலராய் நாணுப்பழியினராய்ச்
செல்வநிலையென்ற செருக்குளராய்க் கல்வி 2040

யருமைதெரியாமுட்டா ளாய்ப்படைத்துவிட்டான்
பரவுசத்தமுட்டாட் பதுமன் மருவுமிவன் 2041

செங்கரத்திற்றண்டுமண்டை திட்டும்படைதவிரப்
பொங்கமுறவேறு பொருளுமில்லைத் தங்குதற்கிங் 2042

காலயமுமில்லை யருள்பூசனையுமில்லை
யேலுமிவன்செய்தி யிருக்கட்டுஞ் சால்புறுமென் 2043

## குமரவேல் சரித்திரங்கூறுதல்.

மைந்தர்களிற்பின்னவனும் வைவேற்குமரனென்பான்
செந்திருமான்மெச்சுந் திருமருகன் முந்துகுரு 2044

வன்னவயன்று னரியோம்பிரணவத்தின்
றன்னுரையேசொல்லத் தறுகிடினும் பொன்னம்மான் 2045

பாலனென்றுசற்றும்பச் சரத்தாபமின்றியிரு
காலில்விலங்கிட்டடைத்த கன்னெஞ்சன் மேலுறையுந் 2046

தேவருக்கெல்லாமதிபன் றேவேந்திரன்மகளார்
பாவைதெய்வகுஞ்சரிதன் பாலிருக்கக் கேவலமாய்க் 2047

கோட்காரநாரதன்சொற் கொண்டுவனத்தூடுபுக்கி
வேட்காதுரமிருப்ப வேடனுய்த் தூக்குகிழப் 2048

பண்டாரமாகிப் பருவேங்கையுமாகிக்
கொண்டார்நகைக்கக் குறம்பாடி வண்டாரம் 2049

வந்திக்குமாரலினுள் வள்ளியின்மேலாசைகொண்டு
முந்துகுலதர்ம முறைமைதப்பிச் சிந்தையினில் 2050

நாணுதலுமின்றியந்த நாறக்குறக்குலத்தில்
வேணுமென்றேசம்மந்த மேவினன் நீணிலத்திற் 2051

பின்னையொருமாமிதனைப் பெற்றவள்மேலாசைவைத்து
மன்னுமதன்வேலையுற மாட்டினன் பொன்போலும் 2052

பெற்றோர்கடங்குமென்பர் பிள்ளையிவனெனக்குச்
சற்றுமடங்கான்றகப்பன் சாமியே தொற்றுவனைச் 2053

செட்டியிவன்வேடுவர்கள் சேர்க்கையினலன்றொருநாட்
* சட்டியிலே 0 கொக்கவித்துச் சாப்பிட்டான் மட்டடங்காக் ()

கோழிபிடிக்கியென்றுங் கூருலகிற்பேரெடுத்தான்
வாழ்வணிகமூகையென வந்துதித்தான் சூழுமலைக் 2055

குன்றுகடோறுந்திரிந்து கூத்தாடியானதல்லா
லன்றவனுக்கேதேனு மாஸ்தியுண்டோ வென்றுஞ் 2056

## விநாயகர் சரித்திரம் கூறல்.

செழித்தபுகழ்மூத்தமகன் செய்திசொல்லக்கேளீர்
பழிச்சுலகோர்நாளும் பழிக்க வழிக்கரையில் 2057

மேவித்தனியிருந்து வேற்றுருவந்தானுகி
மூவாதமெய்த்தூங்கல் மூஞ்சியா யோவெனவே 2058

மூன்வாய்ப்பல்லொன்றுடைந்து மூக்குங்கிடையாமல்
நன்வாயொன்றில்லாம னல்வாயாய்ப் பொன்வாய்ந்த 2059

கண்ணுஞ்சுருங்கியிரு காதுமுறமாகியயன்
பண்ணிவைத்தகாலுஞ்சப் பாணியாய்த் தண்ணீரின் 2060

சாலதனையொப்பாய்ச் சரிந்துமகோதரம்போல்
மேலும்பெருவயிறு வீங்கியே சூலைரணம் 2061

---

* சட்டி—ஆறுவதுதிதி 0 கொக்கு - மாவானசூரன்

போதுமுடல்மூவிடத்திற் பொத்துமிகச்சீழ்வடிந்து
மூலத்திலேவிழுந்து முற்றினதும் . . பாலகனைப் 2062
பற்றியொருவீட்டெலியும் பாய்ந்துகொடுபோமென்றாற்
பெற்றமனம்பித்தலவோ பேசுங்கால் சற்றுமிதைக் 2063
கண்டுமனந்தாழாமற் காலவிடமென்னுநஞ்சை
யுண்டேனொடுங்கி யுடன்மெலிந்தேன் விண்டுவெனும் 2064
மாமனார்தன்வாயில் மண்போட்டரைந்துகொண்டு
சேமவுடல்கறுத்துத் தேங்கினான் பூமலரோ 2065
னின்னமறைவா யிருந்துதொழிலையர்ந்தங்
கன்னமிறங்காம லலையிறான் மன்மதனுஞ் 2066
சீற்றவனலால்வெதும்பித் தேடுமெந்தன்கூர்விழிக்குத்
தோற்றான்பிர்மாதிகட்குந் தோற்றானே யாற்றுகுகன் 2067
தன்பிறவிக்குள்ளஞ் சலித்துமனங்கசிந்து
பின்புகண்ணீராய்ப் பெருகியே முன்பிலய்ய 2068
மீறுகின்றசத்தி மிகவேயதிகரித்துக்
கூறும் * பிணிமுகத்திற் கொண்டுநின்றான் மாறாது 2069
கண்ணோடுகண்ணையொருக் காலும்பொருந்தாமல்
விண்ணோர்களெல்லா விழித்திருந்தா ரெண்ணுமெங்கள் 2070
காரியநிர்வாகமெல்லாங் கண்டீரேர் விண்ணமுமுண்
டாராலுஞ்சொல்ல வடங்காதே நேர்மொழிந்த 2071
விச்சரிதங்கேட்டுமன மேங்காதீரெவ்விதமும்
பட்சமுடனுங்களைக்காப் பாற்றுவே னிச்சயங்கா 2072
ணின்னதாரித்ர மெவராலொழியுமென்றே
யுன்னிப்பலவா யுசாவினேன் அன்னவனைச் 2073

## சிவபெருமான் பாட்டுடைத்தலைவரை யறிவித்தல்.

சித்தத்திற்கண்டேனச் சேரமானுக்குமிவன்
பத்தத்தனையதிக பண்பினா னித்தலத்தில் 2074
மங்களமென்மேலும் வளரமனுவிக்யானச்
செங்கோல்செலுத்துந் திறலுடையான் செங்கமலப் 2075

* பிணிமுகம் — மயில்.

பூமானுரத்தான் புகழுடையனோங்கிரநற்
கோமானளித்த குலக்கொழுந்து ஓமெனவு 2076

மூவடியாய்நின் றுலகில் முத்தொழினடாத்துமெந்தன்
சேவடியையுள்ளிருத்துஞ் சிந்தையான் மாவளஞ்சேர் 2077

திண்ணியவான் முந்தியவோர் ஜென்மாந்திரத்திலவன்
பண்ணியதபோபலத்தின் பான்மையால் . மண்ணுலகை 2078

யாளப்பிறந்தா னவனேமனுகுலத்தி
னீளச்சிறந்த நிலைமையினான் வேளைப் 2079

பொருந்துமெழிலான் புலவர்கள்கொண்டாடித்
திருந்துகவிமாலைபுனை சீமான் பரிந்தெனது 2080

பாங்குரியதோழனையொப் பானகனபாக்கியவா
னோங்குவலக்கண்ணா முயர்குலத்தா னன்குமறை 2081

யாய்ந்தவர்க்குநாவலர்க்கு மாதலர்க்குமிக்கபொரு
ளீந்துசிவந்த விருகரத்தான் றாழ்ந்துமிகப் 2082

பொன்மலர்கொண்டேத்துசிவ பூஜாதுரந்தரன்மா
தன்மபூபாலன் சவுரியவான் அன்னமரி 2083

யாரணமுங்காண வறியாநமதருளைப்
பூரணமாய்ப்பெற்ற புகழ்வேந்தன் வீரசிவ 2084

கங்கைநகர்க்காதின காவலவன்பாவலர்மேற்
றக்குமபிமானமுள்ள சற்குணவான் வெங்கயந்தேர் 2085

கூந்தலணிமாவுகைக்குங் கோமானுயர்துரைச்சிங்
கேந்த்ரனுக்கிப்போழ்தி விதமுறநா னுய்ந்தெழுதி 2086

யேந்துதிருமுகமொன் றீவேனதையவன்பாற்
போந்துநல்குமெல்லைமனம் பூரித்துச் சாந்தகுண 2087

விற்பனவானுந்தமக்கு வேண்டுவனவெவ்வளவோ
பற்பலசம்பத்துகளும் பாலிப்பான் முற்பாண 2088

பத்திரனென்பானொருவன் பாரிலிலம்பாடடைந்த
கஸ்திதனைநீக்கக் கருதியே பத்திதனி 2089

லன்பன்மலைநாட்டுக் கதிபனந்தச்சேரமான்
தன்பாலனுப்பத் தருந்தபடி பொன்பரிசு 2090

செஞ்ஞானவனிலுமித் தேர்வேந்தனீ கையினிற்
கைதானென்சொல்வேனக் கற்பகமே மெய்யுரையீ 2091

## சிவபெருமான் பாட்டுடைத்தலைவற்கு திருமுகங் கொடுத்தல்.

தாளைகயினுளீவீ ரனைவர்களுமிக்கணமே
யேகியக்தப்பூபதியா லெய்தியே மாகனமாய்த் 2092

தேக்குபொருள்பெற்றுச் செழித்துவாழ்வீர்களென்ற
வாக்குக்கடங்கா மகிழ்ச்சிகொண்டு னோக்கரிய 2093

சீலர்மதுரேசரையுந் தேவிகயற்கண்பதமுஞ்
சாலவணங்கித் தமிழ்ப்பாடி யாலயத்தை 2094

முக்கால்வலம்புரிந்து மூர்த்திதிருமுகம்பெற்
றக்கோயில்வாய லாணீங்கிச் செக்கர்வண்ணக் 2095

## திருமுகம்பெற்றுப் பிரபுவின் சமுகத்துக்கேகுதல்.

கோகனகமாதுகுடி கொண்டசிவகங்கைநகர்க்
கோலையுடனேகவா ருமித்தோம் காகங்கள் 2096

கூவிவலமாகிவரக் கோலக்கருடனிடம்
தாவியரிகீர்த் தனமிசைப்ப யாவுமினிக் 2097

கைகூடிவந்ததெனக் காதலுடனெய்தியுயர்
மெய்கூடிவாழ்நகரை மேவினேக் தெய்வீகத் 2098

## சிவகங்கை நகரச்சிறப்பு.

தேரோடுவீதிகளுஞ் செம்பொனெடுமாமதிலுங்
காரோடுலாவு கவிக்கொடியுஞ் சீரார் 2099

வனசத்திரள்மலிந்த வாவிகளும்வந்தோர்க்
கனசத்திரமுதவு மன்புங் தினமுமறை 2100

யாய்ந்துநெறிதிறம்பா வந்தணர்கள்வீதிகளும்
வாய்ந்தவணிகர் மணிமறுகும் வேந்தருக்கு 2101

மாவசியமாக மகுடமுடிசூட்டநல்கும்
பூவைசியர்வாழும் பொலன்மறுகுங் கோவைசியர் 2102

வீதிகளுமிந்த்ரகுல வீரமணிவீதிகளுஞ்
சாதிபலவர்னத்தார் தன்றெருவு மோதுசனக் 2103

கூட்டமுடனே தினமுங் கொள்ளல்விற்றல்செய்துலங்
காட்டியொழுங்கான கடைத்தெருவுந் தீட்டியொளிர் 2104

மாசுதைகள்தீற்றி வயங்குமேன்மாடிதிகழ்
ராசபந்துக்க ளியல்மறுகுந் தேசலவு 2105

மன்னகரத்தி னலங்காரமத்தனையு
மென்மேலும்பார்த்து வியப்பூறிப் பின்னுமந்த 2106

## அரண்மனைச் சிறப்பு.

மாநகரமென்னு மதாணிப்பதக்கமிசை
யானநடுநா யகமணிபோல் வானளவிச் 2107

சிங்காரமாகச் சிறந்தமகாமேருவென
மங்காதவாசல் மணிமுகப்புந் தங்கவுதா 2108

மாடிகளுஞ்சுற்றி வளைந்தநெடுமதிலும்
மேடைகளும்பந்தடிக்கு மேடைகளும் நீடுதமிழ் 2109

தேரிங்கிலீஷ்முதற் றேகபலமாஞ்சிலம்பஞ்
சார்வுறமேலோங்குகல்விச் சாலைகளும் பேர்பெரிய 2110

கோபுரமுஞ்சொர்னக் குடங்கள்பதித்திலங்கு
தாபரமும்வெள்ளைச் சயடாலுந் தூபியினில் 2111

மங்குல்படிந்துலவும் வண்மையெல்லாங்கண்டிதுவே
யெங்கோனரண்மனையென் றெய்தினோந் திங்கள்மணி 2112

நற்படிகத்தாலமைத்த நல்லசபாமண்டபமும்
பொற்பணியினுலிழைத்த போதிகையு முற்படுதே 2113

வஸ்தானசத்திரதர் மாசனமுஞ்சிமையய
னத்தொடுதேர்பார்புரியா பீசுகளு மொய்த்தஜனக் 2114

கூட்டமிடும்பேரொலியுங் கூரியபியோன்கணின்று
க்யாட்டுடன்பாராக்கொடுக்குங் காவல்களும் நாட்டரசர் 2115

நாடித்திறைசெலுத்த நற்சமயங்கிட்டாமற்
கூடிக்குலாவுசதிர்க் கொட்டகையும் நீடுமத 2116

வாரணத்தினாலயமும் வாம்பரியின்சாலைகளும்
பூரணகும்பங்களிட்ட பொன்முடியும் வீரர்களை 2117

வேங்கையுடனேபொருத விட்டுவிளையாடல்புரி
தாங்குமிருகாசயத்தின் சாலைகளும் பாங்கான 2118

பூஷணநல்லாடை பொருந்துநிதிபொக்கிஷமும்
மாசகலுக்ராணமணி மண்டபமும் வாசமனோ 2119

விர்த்தியாபீசுமிக்க மேதினிக்காதாரமுள்ள
வர்த்தனைரிக்காரட்டு மால்களுமெய்ப் பத்தியுட 2120

னிம்பர்தனைக்காக்கு ஸ்ரீராஜராஜேஸ்வரியா
மம்பிகையாள்வீற்றிருக்கு மாலயமு மம்புவியாள் 2121

மாபோஜராஜேந்த்ரன் வந்துதினஞ்சேவைபுரி
தேபூஜைக்கோயிற் றிருப்பணியும் ராஜகுல 2122

வன்னநடைமின்னார்க ளார்ந்துஜலக்கிரீடைசெய்யும்
வன்னமணிநீராவி மண்டபமும் அன்னவதில் 2123

வாழைகொலுமிச்சை வளர்மாதளைகமுகு
சூழுமலர்வாசமிகு சோலைகளுங் கேழ்கிரணத் 2124

திங்கள்மணியாவிழைத்துச் சேருஞ்சிகரமதிற்
றங்கக்கலசங் தனைநாட்டிப் பொங்கு 2125

மவிரொளியம்பாரிபுனைக் தஷ்டகஜந்தாங்குஞ்
சவுமியவிலாசச் சபையுங் கவினுறவே 2126

தங்கத்தகடழுத்தித் தாமமணிகுயிற்றி
யெங்கும்பளீரென் றிளங்கதிர்போ லெங்கள் 2127

சவுரியவான்மேவிச் சபைவீற்றிருக்குங்
கவுரிவிலாசத்தின் கதிப்பும் நவமுலவு 2128

செம்பொனணிமேனிலமுஞ் சித்ரமணிமேடையும்பொற்
கம்பமிகநாட்டுபல கட்டிடமு மம்பவளத் 2129

தூண்கணிறுத்தித் துலங்குகருங்கற்சவுக்கை
மாண்புகளும்ரத்ன மணியரங்குங் காண்கரிய 2130

வித்தையெல்லாங்கண்டு வியப்புற்றிமையவர்கோ
னுந்துமணிமாலுமிதற் கொவ்வாதென் றந்தமுடன் 2131

சிந்தைமகிழ்ந்து ஜெயஜெயவென்றார்ந்தஜனச்
சந்தடியுட்சிக்கித் தகையாறி விந்தைவளர் 2132

மன்பானெருங்கி வருகாரியக்காரர்
தன்பானெருங்கிமெல்லச் சாற்றினை மென்சார்ந்த 2133

நீவிர்கள்யாரென்றார் நிகழ்ந்ததையெல்லாம்புகல
வாவலுடன்கேட்டவரு மன்புற்றுத் தேவபிரான் 2134

வாய்மைதருநல்ல மகிழ்ச்சிச்சமயமிதே
போய்வாருமென் றுள்ளே போகவிட்டார் தூயமணி 2135

பத்திபத்தியாகப் பதித்தகவுரிவிலா
சத்திலிலங்குந் தனிமுகப்பிற் கத்தனங்கு 2136

பீதாம்பரமுடுத்திப் பின்னுநிலையங்கிதொட்டு
மீதார்ந்தசால்வையதின் மேலணிந்து ஆதியடி 2137

சேருமுடிமீதிற் றிகழ்ந்தமகுடமகா
மேருவிடைத்தோன் றும் வெயில்நிகர்ப்பச் சாருமிரு 2138

காதில்வயிரக் கடுக்கனொடுமுருகுஞ்
சோதிப்ரகாசச் சுடர்விரிக்கச் சாதிமணி 2139

யங்கதகேயூர வணிகண்டிவாகுவலை
யங்கள்புயத்தி லழகார்ப்பச் செங்கமலை 2140

மார்பினில்முத்தார மதாணிப்பதக்கமுடன்
றூர்பொருந்துபூணூற் சரமிலங்க நேர்காத்திற் 2141

கைக்கடகக்தோடாக் கணையாழிமோதிரங்கள்
மிக்கவெழில்காட்டி மினுமினுக்க வுக்கமதிற் 2142

திங்கமுகப்பிட்டுச் சிறந்தநவரத்னமணித்
தங்கவரைஞானுந் தகதகென வெங்களத்திற் 2143

சத்துருக்களாவி தனையறுந் துங்குற்றுடைவாள்
வைத்திடையிற்சேர்த்து வரிந்துகட்டிக் கத்துகடல் 2144

## பிரபுவின் கொலுச்சிறப்பு.

மாநிலமெலாம்புரக்கு மால்கவுரிவல்லவனெங்
கோன்துரைச்சிங்கேந்த்ரன் கொலுவாகத் தானே 2145

ஜெயமாதுநின்ற ஜெயம்ஜெயமென்றோதிப்
புயமேனடனம் புரியச் சயமதிய 2146

மாமுகத்தைத்தன்னுடைய மாளிகையென்றேமதித்துப்
பூமலராள்மேவிப் பொலிந்தோங்கப் பூமா 2147

பராக்குபலவீமா பராக்குரெகுராமா
பராக்கென்றுகட்டியர்கள் பாட விராக்கதிர்போற் 2148

கொங்குலவுபூச்சக்ர வாளக்குடைநிழற்ற
மங்கையர்கள்வெண்சா மரையிரட்டப் பொங்குவியம் 2149

பூவாடைபோலுமிகப் பொம்மென்றொலிக்காட்டைப்
பாவாடைகுஞ்சம் பணிமாற மாவீணை 2150

மத்தளங்கைந்தாளசுர மண்டலம்புல்லாங்குழலோ
டொத்திசைக்கராக வொலிமுழங்கத் தத்தைநிக 2151

ரன்னவிலைமாத ரபிநயங்கள்பாராட்டி
நன்னயஞ்சேரின்ப நடம்புரிய பொன்னன்ன 2152

எம்ப்ரஸ்மகாராணி யார்கவர்னர்யாவர்களு
நம்பியுளமதிக்கு நற்கணவான் தென்புமிகுந் 2153

தண்டுசிவகங்கைக் கரசுநிலைநாட்டிவைத்து
விண்டலத்துங்கீர்த்திபெற்ற மேன்மையான் தண்டுளவ 2154

நாராயணாய நமவென்றனுதினமும்
நேராய்த்துதித்துவரு நேர்மையான் சீரார்ந்த 2155

தொன்மதுரைமீனாக்ஷி சோமசுந்தரேசரிரு
பொன்மலர்த்தாள்போற்றும் புனிதவான் நன்மைதிகழ் 2156

மங்களமல்லேனிகுல வானழகர்சரமிதரு
சிங்கமெனவந்துதித்த செல்வவான் பொங்கு 2157

சகலகலைவலவனய ஜனகாமணியநிபுண
னகிலமுழுதிசைபரவ மகிழ்தருண ஞருதருண 2158

வுசிதமுகிலனையகொடை [ வுதவுகரதலனிலகு
சசிவதனவபயஜெய தரபுனிதன் வசியமிர்க 2159

மதமெழுதுபுயசயில வனசதளநயனகெறு
விதகரடசமரகரி மிசையுதையன் மதனதுரை 2160

யண்டலர்தண்ட மடாங்குசெயக்கொடு
வண்டடர்தும்பை வணங்கிசை கொண்டிடு 2161

தந்திரகன்சது ரங்கதளஞ்செறி
மித்திரனென்றுல கின்புற . . . வந்துபுகழ் 2162

மன்னுஜமீன்ஏஜண்டு மால்வேங்கடசாமி
மன்னனருகில் மகிழ்ந்திருக்கப் பின்னனுயர் 2163

காரியவான்மானேஜர் காசிவிஸ்வநாதமுகில்
நேரிருந்துசிமையக வானிகழ்த்தப் பாரிலா 2164

தாயஞ்செலவுஞ் ஜகராஜர்கப்பபடதா
லாயவரவு மதன்பெருக்கும் நேயமனோ 2165

விர்த்திச்சிரஸ்தேதார் மிக்ககருணீகர்களும்
வர்த்தனைமிகுங்கணக்கு வாசிக்கச் சித்தமகி 2166

வாய்ந்தவவதான வக்கணைகள்சோர்வுபடா
தாய்ந்தெழுதுகல்ராய சகாரர் வேந்தர்விடும் 2167

அர்ஜியைவாசித்தங் கவர்க்கெழுதுமுத்தாவிற்
சற்சமயங்கண்டு சயன்வாங்கச் சொற்சிறந்த 2168

பார்வேந்தர்சூழ்ந்து பணிந்துமனுக்கேட்ப
யேர்வேந்தர்தந்த மியல்கூற வீரியத்தைச் 2169

சார்ந்ததளகர்த்தர்களு தானபதிகளுங்கற்
றோர்ந்தமனுசாஸ்திர வுசிதர்களுந் தேர்ந்திடமன் 2170

னீதிபுகழ்ந்தோத நெடுகாட்சிறையிலுற்றோர்
பாதமதில்விழ்ந்து பணிந்துகெஞ்சப் பாதத்திற் 2171

சூட்டியகண்டாமணியுஞ் சோமத்தலைவிருதும்
நீட்டுசுடர்காட்டி நிகழ்ச்சியுறத் தோட்டுமல 2172

ரானனமாந்தெள்ளமுத வம்புலியின்சோதிகண்டு
மானவர்கட்காவி மலரவிழச் சேனைதிகழ் 2173

ராணுவக்கூட்டங்க ளிடைந்துநெருங்கவலி
யானவஞ்சேர்தந்திகிள்ளை யார்ப்பரிக்க நீணிலத்தில் 2174

மாவளமுற்றோங்கி வளர்குவளைவேலிநகர்ச்
சீவிதம்பெற்றோங்குகன செல்வத்தார் மேவுகன 2175

ராஜாக்கூட்டங்க ளிதஞ்சேரொழுங்காக
நேசமுடன்சூழ்ந்து நிறைந்துநிற்கப் பேசுபுளி 2176

யங்குளத்தில்வாழ்வோ ரரியகுலகர்த்தாக்கள்
வங்கிசத்தில்வந்த மரபுடையார் பொங்குபட்டை 2177

நாமநுதலிற்றுலங்க நாய்க்கமார்வாளேந்தி
மாமடங்கல்போலு மருங்குநிற்ப வாய்மைமிகு 2178

சேருவைக்கூட்டங்கள் சினத்தவடிவாள்பிடித்துப்
போரெங்கேயென்று புயம்புடைக்க நேர்கையினிற் 2179

றங்கமடற்கொண்டுநலஞ் சார்வெள்ளிலைச்சுருளீந்
தங்கடப்பக்கார ரடுத்துநிற்கத் தங்கமொரு 2180

பாரமிட்டுவேலைப் பணிதிகழ்பொற்காளாஞ்சிக்
காரர்கையிலேந்திக் கதித்துநிற்க வாரமணி 2181

சுற்றிலங்கச்சாலர்தைத்துச் சோடினைச்சிற்றாலவட்ட
வெற்றிவிசிறிக்காரர் வீசிநிற்க முற்றலிலுங் 2182

கள்ளற்கஞ்சாதகுடைக் காரரிருபாலுநின்று
வெள்ளித்தீவட்டி மிகப்பிடிக்கத் தெள்ளும்வடி 2183

வேலாட்கள்மொய்த்த வெடிக்காரர்மற்றுமுள்ள
காலாட்கள்கைகட்டிக் காத்துநிற்கச் சூலார்ந்த 2184

கார்க்குலங்கள்போலுங் கருங்கிடாயொன்றொடொன்று
மூர்க்கமுடன்றாக்கி முனைபொருதப் போர்க்குவரக் 2185

கூவிநிபமின்றிக் குரோகித்தமர்பொருதுஞ்
சேவலொலிச்சத்தஞ் செவிடுமண்ட மேவுசெவற் 2186

காடைகவுதாரி கருங்கொண்டலாத்திகளுஞ்
சாடியொன்றோடொன்று சமராடச் சோடியவஸ் 2187

தாதுகளுமல்லர்களுந் தந்தொழிலைக்காட்டிநல
மீதுயர்வேடிக்கை மிகவிளைக்கச் சோதிடத்தி 2188

லஞ்சாததீர ரண்மனைப்புரோகிதாள்
பஞ்சாங்கமோதிப் பலனுரைக்கக் கஞ்சமலர்க் 21,89

கோவணங்குதேபூஜைக் கோயிற்குருக்கள்மார்
தேவப்ரசாதந் தினமுதவ மேவிதுபோற் 2190

றட்டிலிட்டுமற்றத் தலத்தார்களீந்துபரி
வட்டமதுகட்டி மலர்சூட்டச் சிட்டரெனு 2191

மாகனவித்வான்களிசை வாழ்த்தியருகிருக்கப்
பாகவதாள்சங்கிதப் பாட்டுரைக்கப் பூகம்வினை 2192

கேழ்மணிசேர்கொட்டகுடி க்ராமமகாஜெனமும்
வாழ்வுயர்வேம்பத்தூர் மகாஜெனமுஞ் சூழ்பிரம 2193

னூர்வாழ்மகாஜெனமு மோதருவேதாங்கமதைப்
பார்வையினிற்றேர்ந்தகன பாடியளும் பூரணமாய்ப் 2194

போதகெறியாகம புராணமுணர்சாஸ்திரிகளு
மாதிமறைவைதிகநூ லத்தணரும் நீதிபரன் 2195

மாசிர்பொருந்தி மகிமீதில்வாழ்ந்திடவென்
றாசிர்வதித்தக்ஷதைவழங்கப் பூசிதனும் 2196

மன்னர்களிற்கிர்த்திபெற்ற மாவுக்ரபாண்டியென்போன்
மின்னியசிங்காதனத்தில் வீற்றிருந்தா னன்முகிலைக் 2197

கண்டமயிலீட்டமெனக் காமுற்றிறைஞ்சியெங்கோன்
கொண்டகருணைக் குறிப்பறிந்து மண்டலிகர் 2198

## மகாநாட்டார் பிரபுவைக்கண்டு புகழ்தல்.

மன்னுவிஜயவிக்ர மார்க்காசிலாக்கியசம்
பன்னுகுளந்தைநகர்ப் பாண்டியா கன்னுவ 2199

தாராதளவமலர்த் தாராவெளியவர்க்கா
தாராவுதாரா சவுந்தரா தீரரண 2200

வீராகெம்பீரா விநோதரசகல்வியலங்
காராசிங்காரா கண்டீரவா ஆரமுத 2201

சோமரகல்லன்னசத்ர சோமாசிறந்தஜெய
பூமாவிற்காமா புரந்தரா தாமபல 2202

விமாசங்க்ராமா விவேகப்ரதாபபல
ராமாசிராமா நரேந்திரா மாமதகோ 2203

தண்டாவுத்தண்டா சமரகோலாகலத்தோர்த்
தண்டாதிதண்டாத சற்குண தண்டமிழிற் 2204

நேர்ச்சிப்பெருங்கடலே தேமாபிமானமதி
லூர்ச்சிதமுற்றோங்கு முடையானே . மார்ச்சரியங் 2205

காட்டுமிகலார் கருவறுத்தன்னார்ப்பதியைத்
தீட்டுபுலவோர்க்களிக்குஞ் செம்மலே நாட்டமொடு 2206

சொற்றவருவள்ளல் துரையுடையனேந்திரமால்
நற்றவத்தால்வந்த நவமணியே கற்றவரைக் 2207

காக்கும்பெருமானே கண்ணகன்றஞாலமதி
லோர்க்கும்பெரிய வரசனே தேக்குபுகழ் 2208

போஜராஜேந்த்ரா புவனபரிபாலமகா
ராஜராஜேந்த்ரஜன ரக்ஷகா வீசியன்னாள் 2209

மான்சிறமற்றோய வடியாசுகங்தொடுத்த
கோன்றுரைச்சிங்கேந்த்ரவெங்கள் கோமானே மானிலத்திற் 2210

ருங்கரியபஞ்சமதிற் றுனலேந்துவாடினதுந்
தேங்குமதுரைச்சிவன்பாற் செப்பியது மாங்கவருந் 2211

தேவரீர்க்காகத் திருமுகந்தந்தாரெனவு
மாவலுடன்கூறி யருகுநின்றோம் காவலனுந் 2212

## பிரபு சிவபெருமானைத் துதித்தல்.

தென்மதுரையீசரென்ற தெள்ளமிர்தமாமொழிகேட்
டின்பமுறப்பூரித் திருதோளும் நன்கைத் 2213

திருமுகத்தைவாங்கித் திருவிழியிலொற்றிப்
பரவில்பலதரமும் பார்த்துக் கருணைபுரி 2214

மங்கையுமைபாகா மனோகராமான்மழுவுஞ்
செங்கைதனிலேந்துஞ் செயதரா கங்கைச் 2215

சடாதராவெள்ளிச் சபைதனிலன்றுமுடு
நடாகராவெள்ளிமலை நாதா கடாசலத்தின் 2216

போர்வையுடையா புராந்தகாவின்மதனைப்
பார்வையினிற்காய்ந்திடு பராபரா காரணைய 2217

கண்டாவகண்டா காராசங்கராவடியர்
கொண்டாடிவாழ்த்துங் குருபரா மண்டுயிர்கட் 2218

காவியனேயர் யரகாசம்போமகா
தேவாவென்றேத்தியுட் டியானித்துக் கூவியெம்மை 2219
வாருமெனவழைத்து மன்னியவிப்பஞ்சமதிற்
சார்வின் றிநின்றே தயங்கினீர் பாரிலுங்கட் 2220
கன்பாகயாமிருக்க வையோகீரிற்றிறவரை
யென்பாலென்வாரா திடைந்தீர்கள் என்பாரம் 2221
பூண்டானெனேயும் பொருளாய்மதித்தனரோ
ஆண்டரென்மேற்கருணை யானவோ தேண்டியன்றுள் 2222
வேதனுமால்காணுத வேதாந்தமூர்த்திபரஞ்
சோதிதிருவாய்மலர்ந்த சொற்போலும் போதுகன 2223
பாக்கியங்கள் நல்கியுங்கள் பஞ்சமதைநீக்கிநிதி
தேக்களகையானெனவுஞ் செய்வனெனக் கோக்குவடு 2224

## பிரபுநாட்டாருக்குவெகுமதி செய்தமைகூறல்.

மேங்கவுயக்தோ ரிறையாயிரக்கலங்கொண்
டோங்குகளஞ்சியத்தி லோர்தினுசாய்ப் பாங்குளசம் 2225
பாவுரியநெல்லிற் பதினுயிரக்கலமும்
பாவுகின்றவித்துமதிற் பாதியாய்த் தாவியமுன் 2226
னேர்க்குத்தவங்கா வெருதுக்குழாங்களோடு
பார்க்குட்பலுகப் பசுநிறையுங் கார்க்களிற்றைப் 2227
பார்த்துநகைக்கும் பரம்புக்கடாக்கள்வயற்
சேர்த்துக்கிடைமறிக்கச் செம்மறியு மார்த்தலுறத் 2228
தக்கபலபூஷணமுஞ் சார்ந்தபலதினுசும்
றொக்கத்திலோரிலக்ஷ ரூபாயு மிக்கவுள்ளத் 2229
தேவையவாநீங்கச் சிறப்புகளுஞ்செய்தபின்னர்
மேவித்திருமுகவி லாசமதைப் பூவுலகிற் 2230

## இப்பிரபந்தவித்துவானுக்கு சம்மானஞ்செய்தல்.

சீர்த்தியுறப்பாடித் திகழவரங்கேற்றிவைத்த
மூர்த்திமுடிக்கங்கை முதுகுலத்தான் பார்த்திபர்கொண் 2231
டாடுமமிர்த கவிவில்லியப்பனுக்கு
நாடுடையான்சிந்தை நனிகூர்ந்து நீடுமணி 2232

முத்துவயிரக்கடுக்கன் மோகனப்பொன்மாலையொளிர்
கொத்துச்சரப்பணிதங் கக்கொலுசுஞ் சித்ரமணிக் 2233

கைக்கடகந்தோடா கணையாழிபொற்பதக்க
மிக்கரத்னக்குண்டலங்கண் மேன்முருகு சொக்கமணிக் 2234

கண்டசரம்பாதரசங் கல்லிழைத்தயோதிரம்பொற்
றண்டையரைஞாண் சலங்கையுடன் கண்டைரெட்டைச் 2235

சாலுவைபீதாம்பரங்கள் தக்கநிலையங்கிவண்ணச்
சேலைகண்டைச்சோமன் சிரப்பாகு மேல்வையுட 2236

னையாயிரம்பொன்னு மன்புறவேநல்கியென்றும்
வையமதிற்றன்பேர் வளர்ந்தோங்கக் கைமேலாய்ச் 2237

சாசுவதமாகத் தருந்தகிராமமொன்று
சாசனமுஞ்செய்துமிகத் தானல்கி வாசமெத்தை 2238

விடுகட்டித்தந்தான் வியன்குடைபல்லக்கிபமாச்
சோடினையாய்த்தந்தான் சுகந்தந்தான் நீடுதினம் 2239

மேன்மைவளரேஜண்டு வேங்கடசுவாமிமுகில்
தான்மகிழ்ச்சிகொண்டுயர்ந்த சாலுவையும் நானூறு 2240

பொன்னுந்தருந்தபல பூஷணமும்பூஸ்திதியும்
நன்னயமதாய்த்தமிழ்க்கு நல்கினான் பொன்னுலவும் 2241

காசிவிஸ்வநாத தனவான்மகிழ்ந்துமணித்
தூசொடுபொற்கண்டிகையுஞ் சூட்டினான் நேசமுள்ளா 2242

ரெல்லாருமிக்கநிதி யீந்தாருயர்குளந்தை
வல்லான்றுரைச்சிங்க மாலேந்த்ரன் கல்வியுணர் 2243

நேசத்தமிழ்ப்புலவ னீடுலகில்வேறிடம்போ
யாசிக்காவண்ண மருள்கூர்ந்து ராசிக் 2244

கனகாபிஷேகங் களிப்புறவுஞ்செய்தான்
றனதான்யசம்பத்துந் தந்தான் இனிய 2245

வமிர்தகவிச்சிங்கமிவ னும்மனவுங்கூறிச்
சமுகவித்துவானெனப்பேர் தந்தான், சமுகமுடன் 2246

சீர்தந்தான்செல்வத் திறந்தந்தானெண்டிசைக்கும்
பேர்தந்தான்பேசப் பெலன்றந்தான் நேர்தந்திப் 2247

பார்மன்னன்செய்திடுமிப் பாரவுபகாரம்போ
லார்முன்னஞ்செய்தார்சொல் லஞ்சுகமே சீர்மன்னு 2248

மண்ணுலகையாளவந்த மால்துரைச்சிங்கேந்த்ரதுரை
யண்ணலியநாட்டாரை யருகழைத்து வண்மையுளீர் 2249

சிந்தையுடனீ விரினித் தேவையுள்ளகாரியத்துக்
கெந்தலிடம்வாரு மினிதளிப்பே னுந்தமூர் 2250

சென்றளகையான்போற் சிறந்துமிகவாழ்ந்திருப்பீ
ரென்றுவிடைதந்தா னிறையவனும், வென்றிதிகழ் 2251

மாமாறன்றன்னையுளம் வந்தித்திறைஞ்சியந்தக்
கோமான்புகழைமிகக் கொண்டாடிக் காமுற் 2252

றடர்ந்துஜனம்நெருங்கு மாஸ்தானவாசற்
கடந்துவெளிமாலிற் கலந்து மடங்கலன்னான் 2253

## நாட்டார்கள் தங்களூர்சேர்ந்து வாழ்தல்.

தந்தபொருளெல்லாந் தகுஞ்சகடமீதேற்றி
விந்தையுள்ளவாகனங்கண் மேலிவர்ந்து சிந்தைதனி 2254

லொவ்விப்பொருள்பகிர்ந்தங் குண்மையுறவாடிமகிழ்ந்
தவ்வவர்களூர்புகுந்தா ரப்பொழுதே தவ்வியிதைக் 2255

கண்டமடமாதர்களுங் காதலரும்பூதலருங்
கொண்டுடல்பூரித்துக் குதித்தெழும்பிக் கண்டமட்டு 2256

முண்டார்களித்தா ருகந்தார்செருக்கடைந்து
கொண்டானடித்தார் குலாவினார் மண்டுகுழற் 2257

கற்றைச்சடைப்பிடித்த கட்டறுத்துச்சீவிமலர்ச்
சுற்றுச்சிரவணியுஞ் சூட்டினார் மற்றுமுள்ள 2258

பீதாம்பரமணிந்தார் பேராபரணமெல்லாம்
பாதாதிகேசம்வரை பண்ணிட்டார் மாதிரதி 2259

போலரூபெற்றார் புருடர்களுமவ்வாறே
சீலமதனைப்பாய்த் திருந்தினரே சேல்விழியார்க் 2260

கொட்டியவெள்வாற்போ லுலர்ந்ததனங்கள்விம்மிப்
பொட்டெனப்பூரித்துப் புடைத்ததுகண் டிஷ்டமற்றங் 2261

காமையப்பர்போலு மடங்கிமிகவேகிடந்த
காமயநாயக்கர் கதித்தெழும்பி யேமமென்றுஞ் 2262

சாமமென்றும்பாராமற் சந்ததமதேதொழிலாய்க்
காமவிளையாட்டிற் கதித்தனரே பூமிசையில் 2263

## மழைவருஷித்துப் பஞ்சம்நீங்குதல்.

மன்னுயிர்கடோறு மருவுசிவசொக்கேசர்
தன்னருள்பூரித்த தயவறிந்து மின்னுதிரி 2264

வானநவக்ரகங்க ளவ்வவர்கடக்களே தாஸ்
தானங்கடன்னில்வந்து சார்ந்திடவும் வானுறும்பி 2265

யன்னுளிராத்திரியே யார்த்தசப்தமேகமதின்
முன்னுமாவர்த்த முகில்களம்பி மின்னலுடன் 2266

விற்போட்டிரைந்திருட்டி மேவுமழைக்காலூன்றிப்
பொற்போனன்மாரி பொழிந்தனவே யற்புகலா 2267

யெட்டுநாளாக யிடைவிடாதெங்குமழை
சட்டமுடன்பெய்திடவித் தாரணியோர் மட்டடங்கா 2268

வானந்தவாரியினி லாழ்ந்திமனப்பூர்த்தியுறத்
தானந்தவமிரண்டுந் தானெய்த மீனுந்து 2269

வேகவதியேமுதலாய் வெள்ளங்கரைபுரண்டு
மாகனநீர்வாவியெங்கு மல்கினவே சேகரமாய்த் 2270

தேண்டுபசுக்கூட்டமுடன் செம்மறிகளுங்கொடுகி
யாண்டதெய்வசன்னதம்போ லாடிநிற்க மூண்டவெயில் 2271

கிட்டப்பொறுத கிளெருமைக்கூட்டமட்டுஞ்
சட்டைபண்ணுமற்கனைத்துத் தாவிநிற்க முட்டநின்ற 2272

கோட்டைசுவர்களெல்லாங் கோடையிடிபோன்முழங்கி
நீட்டிநிமிர்ந்து நிலம்படுப்பச் சூட்டாலே 2273

## சராசரங்களெல்லாஞ் செழித்தல்.

தீய்ந்துகருகிச் செறிந்ததருக்களெல்லாஞ்
சோர்ந்துதழைத்தோங்கி நிழல்கொடுக்கச் சோர்ந்துமிக்க 2274

கண்ணிலுங்காணுமற் கரிந்தபுல்லும்பூடுகளுந்
தண்ணிலைகளோடு தலைநீட்ட நண்மையொடு 2275

தூங்கலாயன்றிடைந்த தும்பிக்குழாங்கள்மத
மோங்கியிறுமாந்தங் குரத்துநிற்கத் தேங்குதுகள் 2276

மண்பறியத்தாளெறிந்த மாக்குலங்கண் மீறியெழு
விண்பரியைப்பார்த்து மிகநகைக்கப் பண்புறுகல் 2277
லானிரைகள்கன் றுகளீன் றுதாமுற்றேகாம
தேனுவெனப்பால்சொரிந்து தேக்கமுற மாநிலத்தி 2278
லெய்தியசராசரங்க ளெல்லாஞ்செழித்துயிர்க
ளுய்தலைப்பெற்றானந்த மோங்கினவே; செய்கனில்வங் 2279
தேருழவரோசைகளு மேய்வித்துனர்களிப்பும்
நாரியர்நென்னாற்று நடுமொலியும் பார்முழுது 2280
நன்னீர்மையந்தணர்க ணான்மறையுணோசைகளு
மூந்நீர்த்தொனிபோன் முழங்கினவே பன்மலரிற் 2281
மீறிவருதேனொழுக்கும் பேரினியமுக்கனியின்
சாறுமோராறாய்த் தலைப்பெய்தி மீறிவயல் 2282
விந்தையுடன் பாய்தலினால் விஞ்சுசெழுஞ்சாலிவளர்ந்
துந்திவெளிவான்முகட்டை யொட்டியதே முந்திவிளை 2283
செந்நெலரிந்துசுமை சேர்த்துக்களங்கொடுபோய்ப்
பொன்னசலமன்னபல போர்வைத்துப் பின்னை 2284
வலிபகடுபூட்டி வழுதகற்றிப்பாடிப்
பொலிபொலியென்றோதிப் புகழ்ந்து கலியகற்றும் 2285
புண்ணியனும்பூதலத்தைப் போஷிக்கும்நெல்லையப்ப
வண்ணலைக்கண்டானந்த மாகினோம் விண்ணிவர்ந்து 2286
காணுந்தலைமேற் கணபதியைத்தாங்கியருள்
பூணுமலைபோற்பொலிந்த பூசகனைப் பேணிச் 2287
சுகந்தழைக்கவந்தருளுந் தூய்மணியைக்கையான்
முகந்துகண்ணிலொற்றி முத்தமிட்டுச் செகம்புரக்கு 2288
மன்னர்க்குச்சேர்கடமை வாரந்தனைச்செலுத்திப்
பின்னர்குடிவாரப் பெருக்கமதைக் கொன்மருவு 2289
மைப்பகடுபூட்டியுயர் வையங்கண்மீதேற்றிச்
செப்பரியநன்மனையிற் சேர்த்தினோ மெய்ப்புகழ்சேர் 2290

## செல்வம்பெற்று வாழ்தல்.

தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கறானென்றாங்
கைம்புலத்தாறோம்ப றலையென்று முன்புலமை 2291

வள்ளுவனாரன் றுரைத்த வாக்கியத்தையுள்ளிருத்தித்
தெள்ளிமையாய்மிக்க சிரத்தையுட னொள்ளியநான் 2292
மாமறையோர்போஜனங்கண் மாகேசுரபூஜை
க்ஷேமமுடனாடோறுஞ் செய்வித்து நேமமுடன் 2293
சூழ்ந்தவிருந்தோடருந்திச் சொற்கலைநூலாய்ந்துநலம்
வாய்ந்தசெல்வந்துய்த்தினிதாய் வாழ்கின்றோம் வேந்தன்வடி ()
வேலுடையான்முத்து விஜயரெகுநாதனெனு
மால்துரைச்சிங்கேந்த்ர வரனருளாற் சூல்முதிர்ந்து 2295
திங்கடொறுமங்குல் சிறந்துபொழிந்திடவு
மங்கலகுபேரரென வர்த்தித்துப் பொங்கமுடன் 2296
றக்கவதிகாரந் தனைச்சார்ந்தநல்லடிமை
மக்கள்சுற்றம்பொன்மணிநெல் வாகனங்கள் மெய்க்குமிந்த ()
வைசுவர்யமெட்டு மடங்காவுவகைதர
வையகத்திற்பெற்றினிதாய் வாழ்கின்றோம் செய்யமலர்ச் 2298
செந்திருவேயெங்களுடை செய்திமுற்றுமாதியோ
டந்தமாயுன்பா லறிவித்தேன் சந்ததமும் 2299
நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால்வழியோடிப்
புல்லுக்குமாங்கே புசிதல்போற் றொல்லுலக 2300

வாழி.

மெங்குஞ்செழிப்புற் றிசையும்புவியரசர்
செங்கோல்தழைத்துச் செயமோங்கித் தங்கிமலர்ச் 2301
செங்கமலைவாழ்கச் செகமீதறம்பெருகி
மங்களமென்மேலு மிகவாழி. 2302

திருமுகவிலாசம்.

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# NEW CATALOGUE OF BOOKS.

# புதிய புத்தக கேட்லாக்.

## இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்

புத்தகஷாப் புதுமண்டபம், மதுரை.

---

## பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

# சித்தவைத்திய அகராதி.

( இது ஓர்பெரிய வைத்திய அகராதி. )

இதில் பச்சிலை, கடைச் சரக்கு, பஞ்சபூதச் சரக்கு, உபரசச் சரக்கு, 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், வகாரம், செந்தூரம், செய்ய சரக்குகளின் உருக்கின சத்துரு மித்துருவையும், புளியாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், 64 பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும் விபரமாய்க் கூறியுள்ளது. சித்தர் நூல்கள் ஆராய்ச்சி செய்வோர்களும், வைத்தியஞ் செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பார்த்து இதினுண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோருகிறேன் 280 பக்கங்கள் கொண்டது.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

## அகத்தியர் பரிபாஷை 300.

ஓலை யேட்டுச் சுவடியிலிருந்து இப்பொழுது புதிதாய் வெளி வந்தது (அகஸ்தியர் பரிபாஷைத் திரட்டு 500) என்று ஒரு நூல் இருந்து வருகிறது இது புதிதாக இப்பொழுது அச்சிட்டது,

புத்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

# திருவள்ளுவர் கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100, கற்பக் குருநூல் 50, முப்பூ சூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100, ஆக 7 சாஸ்திரங்கள் அடங்கியது திருவள்ளுவர் பாடிய ஞான வெட்டி 1500, க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும் இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அமுர்த தாரணையின் தட்பமும் முப்பூ விபரமும், வழலை மார்க்கமும் தெளிவாகக் கூறியுள்ளது.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 0—14—0

# யூகிமுனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகமாயிருப்பினும் ஒவ்வொரு நூல்களும் ஒவ்வொருவர் கைவசமாய் வெளிவராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள்மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், முப்பூ விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

# அகத்தியர் சௌமதி நூல்

இந்த சாஸ்திரம் இதுவரை வெளி வராமல் ஏட்டுப் பிரதியாக ஒரு சுவாமியாரிடமிருந்தது அவர் இதை தன்னனுபவத்தில் வைத்துக் கையாண்டு வந்ததை வாங்கி அதைப் பிரதி பண்ணி யாவரும் பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் வைத்தியம், வாதம் மார்க்கிரீகம் முதலான பாகங்கள் சுருக்க முறைகளாகத் தெளிவாகச் சொல்லியுள்ள அருமையான சாஸ்திரம்.

புத்தகம் 1க்கு விலை அணா 0—12—0

இதுவரை எட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

# அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் ஞானம், யோகம், இன்னதென்று அவரவர்களே எளிதாகத் தெரிந்து கொள்வதோடு தன்னைத்தானறிந்து ஞான யோக சாதனையடையும் மார்க்கமும், கற்பதேகி யாகவும், அநேக வைத்தியம், வாதம், சத்துரு மித்துரு விபரங்களும் சொல்லியுள்ளது.

கலிக்கோ பயிண்டு விலை ரூ 2—0—0

அகத்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமான

# பன்னிருகாண்டம் 200.

இது அகத்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிரு காண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம் 1-வது வைத்திய காண்டம், 2-வது வாத காண்டம், 3-வது சுண்ணக்காண்டம், 4-வது செந்தூரக் காண்டம், 5-வது பற்பகாண்டம், 6-வது தைலக்காண்டம், 7-வது கற்ப காண்டம், 8-வது யோக ஞான காண்டம், 9-வது தீட்சாவிதி காண்டம், 10-வது சாபநிவர்த்தி காண்டம், 11-வது ஜாலகாண்டம், 12-வது மந்திர காண்டம், ஆக பன்னிருகாண்டமாயுள்ளது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

# கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள முக்காண்டம் 1500ல் கடைக்காண்டம் 500 கிடைத்ததை மாத்திரம் வெகுநாளாக அச்சிட்டு விற்பனையாகி வருவது யாவருக்குந் தெரிந்தவிஷயம். பாக்கியுள்ள முதல்காண்டம் 500ம், நடுக்காண்டம் 500ம் வெகுகாலமாகக் கிடைக்காம லிருந்து இப்பொழுது ஒரு எட்டுப்பிரதி நடுக்காண்டம் 500 மாத்திரம் கிடைத்து. அதை அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. அநேக கனவான்கள் பார்க்கவேணுமென்று எதிர்பார்த்திருந்த அரிய சாஸ்திரங் களில் இதுவும் ஒன்றேயாகும். புத்தகம். 1-க்கு விலைஅணு 0—10—0

குரு. இராமசாமிக் கோன், புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

## அகத்தியர் கற்ப முப்புக் குருநூல் .

இதில் கற்ப விதிகளும், முப்பூ முடிக்கும் விபரமும், பற்பம் செந்தூர கைபாகஞ் செய்பாகமுறைகளும், சுண்ணம் மெழுகு தைலம் வாலை பூசை நாற்பத்தி முக்கோணச் சக்கரத்தின் பூஜா விதிகளும், கற்ப தீட்சை முறைகளும், தெளிவாகச் சொல்லி யுள்ள சாஸ்திரம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

## இராமதேவர் வைத்திய காவியம் 1000.

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைல முறைகளும், வைத்திய முறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கருமான விபரங்களும், பஞ்ச பூதங்களின் விபரமும், பற்பம் செந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், முறையோடு விபரமாய்க் கூறியிருக்கிறது.

புஸ்தகம் 1க்கு விலை 1—0—0

ஷையார் சிவயோகம் 200 புத்தகம் 1-க்கு அணு 0 6 0

## விஷவைத்தியமென்னும்

# "ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பதுவிஷ ஆரூடசாஸ்திரங்களைச் சேர்த்து ஒரே புத்தகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காலி, பூரான், செய்யான், வண்டு, அரணை, எலி, நாய்,குரங்கு, பூனை, முதலானவைகள் கடித்து விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளாலும், விஷத்தை நீக்குவதற்குஇலகுவான முறைகளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது எமது மூதாதைகள் கையாண்டு அநுபவித்துவந்த உண்மையான சாஸ்திரம். சுத்தப்பதிப்பு 392-பக்கங்கள் கொண்ட கலிக்கோ பயிண்டு

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 2...0...0

# புலஸ்தியர் கற்பம் 300.

இதில் கற்பசாதனைகளின் விபரங்களையும், யோக ஞான மார்க்கத்தையும், அகார உகார விபரங்களையும், வாசி யோகஞ் செய்யும் முறைகளையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தெளிவாகக் கூறியுள்ளது ஓலை யேட்டுப் பிரிதியிலிருந்து புதிதாய் அச்சிட்டது.

புத்தகம் 1 க்கு விலை அணு 0—8—0

## புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300.

இந்தச் சாஸ்திரத்தில் ரசவாதத்துக்குறிய செம்பு வேதை, செம்புச் செந்தூரவேதை, தருசுச்செம்பு எடுக்கும் விதம், கெந்தக தைலம் நாகரச கெந்தி தைலத்தின் பெருமையும் அதினால் மாற்று உயரும் முறையும் தங்க உரம், வெள்ளி உரம் செய்யும் முறைகளும் சரக்கு கட்டுவகைகளும், செந்தூரம், பஸ்பம், சுண்ணம், இவைகளை அநுபோக முறைகளாய்ச் செய்து கொடுத்து குணமாகும் வியாதிகளை ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

## தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200,

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷெயாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்து கொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணு 0—8—0

## கருவூரார் வாதகாவியம் நொண்டி 700.

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோகமுதலிய பாகங்களை நொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானைப் பர்வாகவும், சிந்தாகவும் பலமாதிரி சந்தங்களாய் விநோதமாகச் சூட்சமாய்ச் சொல்லிய சாஸ்திரம்.

புஸ்தகம் 1 க்கு விலை ரூபாய் 0—14—0

# போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடும் விதமும், அதை எந்தவிதத்தில் முரித்துச் சாப்பிடுகிறது என்பதும், அதை எப்படி உபயோகிப்ப தென்பதும் கற்பம் சாப்பிடுங் காலத்தில் ஏற்படக்கூடிய சூடு சோப தாபங்களுக்கு வேண்டிய சிஷாயங்களும் அதுசமயம் ஸ்நானம் செய் யும் முறையும், கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடாதென்பதின் காரணமும், அக்குற்றங்க ளேற்பட்டால் அதற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும், கற்ப மூலிகை விபரங் களும், கருந்துளசி கருநெல்லி கருநொச்சி இவைகளை நாமே பயிர் பண்ணிக் கொள்ளவேண்டிய முறையும், வாத முறைகளுக்குத் தைல வகைகளும், சுத்தி முறைகளும், சிதம்பரத்தில் தங்க விக்கிரகஞ் செய்த விபரமும், சொல்லியுள்ள புதிய சாஸ்திரம்.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—10—0

## அகத்தியர் ஐந்து சாஸ்திரங்கள்.

மணக்கோலம் 200, கனக மணி 100, வைத்தியக் கோவை 125, வைத்தியத் திரட்டு 81, கிருக்கு நூல் என்னும் கிரிகை 18 க்கும், குணமும் நிவர்த்தி செய்யும் மருந்து பாகங்களும். அடங்கியது. ஆக 5 சாஸ்திரங்கள்.)

இதில் வயித்திய பாகங்கள் பாஷாணங்களில்லாது கடைச் சரக்கு களைக்கொண்டு எளிய முறையாகச் செய்து கொடுத்து சகல ரோய்க ளையும், தீர்க்கு வண்ணம், கைபாகஞ் செய்பாகம், முறையோடு சொல்லி யிருப்பதோடு, மானிடர்க்கு, வாத பித்த சிலேற்பனத்தால் ஏற்படும், 18 விதமான கிறுக்குகளின் குணமும், அதை நிவர்த்திக்க மூலிகை களினால் மருந்தும், கலிக்க வகைகளும், நசிய வகை களும், துவாலை வகைகளும், தெளிவாய்க் கூறியுள்ள அரிய பெரிய சாஸ்திரம் இப்புத்தகம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய தவசியம் அவர வர்களே மருந்துகள் செய்து கொடுத்து வியாதியை குணப்படுத்திக் கொள்ளும் முறைகளாய் அடக்கியுள்ள சாஸ்திரம்.

புத்தகம் 1-க்கு விலை அணா 0--12—0

# காகபுசுண்டர் 1000.

சித்தர்களில் ஒருவராகிய புசுண்ட மகாரிஷி என்பவர் பிரளய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலமும் பார்த்துவந்தவர். இவர் அநேகசாஸ்திரம் பாடியிருக்கிறார். ஆனால் இது வரை சில சாஸ்திரங்கள் மட்டும் அச்சுக்கு வந்திருக்கிறது. மேற்படியாரால் பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இது வரை ஏட்டுப்பிரதியாயிருந்து இப்பொழுது புதிதாக அச்சிட்டிருக்கிறது. இதில் யோகம். ஞானம் அமுததாரணை வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரம் முதலிய இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250-பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புஸ்தகம் விலை ரூ 2—0—0

## அகத்தியர் தற்க சாஸ்திரம்.

இது அகத்திய முனிவரால் புலத்தியருக்கு உபதேசஞ் செய்தது. இதில் பதினெண் சித்தர்களாலும் பாடிய வைத்திய வாத யோகஞான நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அநேக மர்மமான பதங்களுக்குத் தாத்பரியங்களையும் விபரமாகக் கூறியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை அணா 0—10—0

## 17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற
# யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவ ரிஷியாக இருந்துபின்பு மக்காவுக்கு சென்று நபிமார்களுடன் பேசி அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர்கொடுத்தார்கள். பின்பு யூனானிமுறைகளையும், தமிழ் முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோகமுறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்திகளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர் வாங்கி ரெம்ப அநுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரமும் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் 17 சாஸ்திரங்களையும் 12 புஸ்தகங்களாகப் பயிண்டு செய்திருப்பதால் தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## நந்தீஸ்வரர் நிகண்டு 300.

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதினால் வகாரம் முடியுமென்றும்; மூலிகை யென்ற சரக்குகளின் விபரமும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும் இன்னும் அநேக பரிபாஷைகளெல்லாம் விபரமாகச் சொல்லி யிருக்கிறது.

புத்தகம் 1 க்கு விலை அணு 0—8—0

## உரோமரிஷி பரிபாஷை 300.

இதில் பரிபாஷைப் பெயர்களை விளக்கிக் கூறியிருக்கிறது, இவர் பாடிய நூல்கள் அநேக மிருப்பினும், வைத்தியம் 500 என்றநூல் மட்டுந்தான் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது இன்னும், கூடியசீக்கிரத்தில், இவரால் பாடிய சாஸ்திரங்கள் அச்சிட்டு வெளிவரும்; இப்பொழுது இந்த பரிபாஷை 300 அச்சிட்டு தயாரிலிருக்கிறது.

புத்தகம் 1 க்கு விலை அணு 0—8—0

## அகஸ்தியர் பூஜா விதி 200.
## ஞான சைதன்யம் 51ம் சேர்ந்தது.

இதில் சிதம்பரச் சக்கரமும் சிதம்பர பூசையும் அஷ்டகன்ம பூஜா விபரங்களும் தேவி பூஜா மார்க்கமும் மவுன யோக ஞான சாதன விபரங்களும் தெளிவாய்க் கூறியுள்ளது. விலை ரூ 0—8—0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

3639 பெரிய கந்தரனுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.

புஸ்தகம் 1-க்கு விலை அணு 0—3—0